சிவாஜி

ஸ்ரீ

# சிவாஜி

(சித்திரப்படங்கள் கூடியது)



ஜயம் கம்பனியார்
நுங்கம்பாக்கம்
சென்னை

 1930 [விலை 15 அணா

## இந்நூலுக்கு உதவியாகவிருந்த ஆங்கில நூல்கள்

1. The Life of Shivaji Maharaj, by N. S Takakhav, M.A.
2. Shivaji and His Times, by Jadunath Sarkar, M.A
3. A History of the Maratha People, by C. A Kincaid I.C.S.
4. The Rise of the Maratha Power, by Ranade.
5. History of the Mahrattas, by Grant Duff.
6. Travels, by Bernier.
7. Hindu—Pad—Padashahi, by V. D. Savarkar.
8. Rajasthan, by Col. Tod.
9. History of Aurangzib, by Sarkar.




சிவாஜி

# முன்னுரை

"Sivaji" the great"

வில்லுக்கு விஜயன், விறலுக்கு வீமன், விரகினுக்குக் கண்ணன், கொடைக்குக் கன்னன் என்பர் பெரியோர். அப் பெரும் புருஷரின் சரிதங் கேட்டு, அவர்தம் அடிச் சுவடுகளைப் பின்பற்றி, அரும்பேரும் பெருங்கீர்த்தியும் வாய்க்கப் பெற்றவன் சிவாஜி வேந்தன். இச் சரித்திரத் தலைவனான சிவாஜி, புராதன காலத்து வீரனு மல்லன்; நவீன காலத்தில் அவதரித்த ஆண்மையாளனும் ஆகான்; பாரத தேசமும் தர்மமும் தவித்துநின்ற இடைக்காலத்தின் முடிவில் தோன்றிய அரிய ஏந்தலாவன்.

தன்னலங் கருதாமல், பிற நலமே கருதி, அப் பெருமான் ஆயுள் அளவும் போர் முனையிலேயே காலங் கழித்தான்; தன்னந் தனியே நின்று, தாளாண்மையும் வாளாண்மையும் கொண்டு, தனியரசு கண்டான்; தேசத்தையும் தர்மத்தையும் காக்கத் தலைகொடுத்து நனி சிறந்தான். அன்பின் மிகுதியினால் அவனைத் தெய்வப் பிறவி என்று புகழ்வர் ஒரு சாரார்; வேறு சிலரோ அவ் வேந்தனது மெய்ச் சரிதையை உணராமல், இலேசாகப் பேசுவர். சிவாஜி சத்திரபதி நம்மைப்போல் ஒரு மனிதனாகப் பிறந்து, மனிதனாக வாழ்ந்து, மகிமை வாய்ந்தவன். அவனிடம் அளவிலா ஆற்றலும் இணையிலா வீரமும் நிரம்பியிருந்தன; விழுமிய விவேகமும் ஆழ்ந்த தேச பக்தியும் அவனிடம் குடிகொண்டிருந்தன. அவன் இராஜ தந்திரத்தில் கைவந்தவன்; அரசியலில் அதிசமர்த்தன்; ஆதலின் மாணவரனைவரும் அப்பெருமகன் சரிதம்படித்து உயர்போதங் கொள்ளக்கூடும் என்று கருதியே இந் நூல் வெளி வந்துளது.

ஜயம் கம்பனியார்

## நூல் அடக்கம்

ஸ்ரீ:

# சிவாஜி

## 1. குல சரிதம்

பாரதபூமியின் பெருவளத்தில் கண்வைத்து இத்தேசத்தில் வந்து குடியேறிய ஆப்கானியரும் பட்டாணியரும் இந்திரப் பிரஸ்தம் எனப்படும் டில்லி நகரிலே அரியணை ஏறி அரசுசெய்யத் தலைப்பட்ட அந்நாள், வடஇந்தியாவிலே தனியரசுகொண்டு திகழ்ந்த பாரதவீரரும் வேந்தரும் அவ் வயலரசுடன் வாளமர் முறுக்கிவந்தனர். போர்முனையில் புறங்கொடாமல் வீரசுவர்க்கம் புகும் பாக்கியம் படையாத பலர் அவ் வேற்றரசருக்குத் தலைவணங்கினராயினும், சித்தூர் வேந்தரோ சிறிதும் பணிவுகாட்டவில்லை. பதின்மூன்ருவது நூற்ருண்டின் இறுதியிலே மகாராணு இலட்சுமண சிம்மன் என்பான் அச் சித்தூர் நாட்டு மக்களின் மகிபனுக விளங்கிவந்தான்.

அவனது சிறிய தந்தையாம் பீமசிம்மனுக்கு அழகின் வடிவான பத்மினி என்னும் பெண்மணி வாழ்க்கைத் துணையாக வாய்த்தனள். டில்லிமாநகரில் அரசுபுரிந்த அலாவுதீன் என்பான் பத்மினியின் பெருவனப்பைக் கேள்வியுற்று, மனம் மாறுபட்டு, இலட்சுமண சிம்மன்மீது போருக்கெழுந்து, சித்தூர்க்கோட்டையை நான்கு திசையிலும் வளைந்துகொண்டான். கோட்டைக்குள்ளிருந்த இராஜபுத்திர வீரர், கூண்டினுள் சிக்கிய சிங்கம்

போல் சீறி நின்று வீராவேசங்கொண்டு பன்னீராண்டு அருஞ்சமர் ஆற்றினர்; ஆற்றியும் அவர்களால் அலாவுதீனைப் புறங்காண இயலவில்லை. இனி, வேறுவகை இல்லையாதலால், இரணகளத்தில் ஆவி துறந்து வீரசுவர்க்கம் புகுவதே தகுதியென அன்னவர் தீர்மானித்தனர். ஆனால், மகாராணுவோ சீரிய சித்தூர் இராஜவமிசம் வழியற்றுப் போகுமே என மறுகி, தனது இளைய மைந்தன் அஜயசிம்மனை அழைத்து, "என் செல்வமே! நீ எங்ஙனமேனும் தப்பியோடி உயிர்பிழைத்துச் சமயம் பார்த்துப் பழிவாங்குக," என்று ஆணையிட் டனுப்பலானான். அஜய சிம்மனும் அவ்விதமே ஆரும் அறியாவண்ணம், அண்ணன் மகன் அமரசிம்மனையும் உடன்கொண்டு, அலாவுதீனது சேனை வெள்ளத்தைக் கடந்து சென்றான். பின்னர் இலட்சுமண சிம்மனும் சித்தூர்வீரரும் சிங்கநாதத்துடன் கோட்டையைவிட்டுக் கிளம்பி, சமர பூமியிற் குதித்து, அரும் போர் விளைத்து, ஆவி நீத்து, வீரசுவர்க்கம் சேர்ந்தனர். குலமாதர்க ளனைவரும் கற்பினையும் குடிப் பெருமையினையும் காக்கக் கருதி, தீக்குழியில் குளித்து அழியாப் புகழ் பெற்றனர்.

சித்தூரினின்றும் வெளிக்கிளம்பிய அஜய சிம்மனும் அமரசிம்மனும் புதிய நாடுகளை வசப்படுத்தி, இராஜ நகரம் என்னும் கோட்டையைக் கட்டி, அதனையே தலைநகராகக் கொண்டு தமது பழம்பதியை மீட்கக் கருதிக் காலம் பார்த்திருந்தனர். அக் கருத்து முற்றுவதற்குள் அஜயசிம்மன் பரகதி எய்தினன்; அவன் மைந்தன் சுஜனசிம்மன் தாயபாகம் விரும்பி, வீணே அமரசிம்மனுடன் மாறுபட மனமில்லாது தோளிரண்டுமே துணையெனக்கொண்டு, தென்திசை சேர்

ந்து, சாந்தவாடி என்னும் நாட்டை ஜயித்து, நல்லரசுகொண்டனன். அவனது வழிமுறையில் வந்த தேவராஜன் என்பான் அரியாசனத்தில் அமர்ந்தகாலையிலே, தக்காணத்தில் விஜயபுரி, ஆமதுநகர் முதலிய முகம்மதிய சிற்றரசுகள் தலையெடுத்தன. அவ்வரசுகளின் முன்னே தலைநிமிர்ந்து நிற்க வகைகாணாத தேவராஜன், இன்னும் தெற்கே சென்று, சிங்கணபுரம் என்னும் சிற்றூருக்குத் தலைவனாயினன். தேவராஜனது சந்ததியில் தோன்றிய பாபாஜி என்பானுக்கு மாலவன், விதலன் என்ற மைந்தர் இருவர் பிறந்தனர்.

வயது வந்தவுடனே அவ்விரு புதல்வரும் தமது மரபிற்கேற்ற மேன்மையுறும் தொழில் ஒன்றினை நாடித் தாயகம் துறந்து ஆமதுநகரம் சேர்ந்தனர். தேவகிரியிலே முன்னம் வழிவழியாக அரசுசெலுத்திய யாதவ குலத்தைச் சேர்ந்த யாதவராவ் அப்பொழுது ஆமது நகர அரசிலே பன்னீராயிரம் பரிவீரருக்குத் தலைவனாக விளங்கினான். அந்த யாதவராவினிடம், மாலவனும் விதலனும் முதலில் காலாளாக அமர்ந்தனர். ஆதியில் இருவருக்கும் திங்கள் தோறும் ஐந்து வராகன் சம்பளமே கிடைத்தது. நாளடைவிலே அவ்விருவரும் தமது புஜபல பராக்கிரமத்தினால் சேனையிலே பெரும்பதவி எய்தினர். விதலனுக்கு எண்மர் புதல்வர் பிறக்க, மாலவனுக்கோ மகப்பேறு கிட்டவில்லை. ஆதலான், மாலவன் மனைவியாகும் தீபாபாய் ஆங்குள்ள நகரி எனும் நகரில் சமாதிகொண்டிருந்த பீர்ஷா என்னும் இஸ்லாமிய மகானை வணங்கி, புத்திரபாக்கியம் வேண்டினாள். ஆண்டவன் அருளால் அம் மாதினுக்கு 1594-ஆம் ஆண்டிலே ஓர் ஆண்மகவு பிறந்தது. அப் பெரியாரின் பேரருளினால் உண்டாகிய அக் குழந்தைக்கு ஷாஜி என்று

பெற்றோர் நாமகரணம் செய்தனர். அப் பாலன் அழகும் அறிவும் ஒருங்கே வாய்க்கப் பெற்று, பிறை மதிபோல் வளர்ந்து வருகையில், அவனது நடையும் நலமும் அனைவரையும் கவர்ந்தன. சேனாதிபதியான யாதவராவின் குமாரி ஜீஜாபாயும் ஷாஜியும் இளம்பருவந் தொடங்கி ஒன்றாக வளர்ந்து விளையாடிவரவே, அவ்விருவருக்கும் இடையில் அன்பும் நேசமும் தளிர்விடலாயின.

அரங்கபஞ்சமி பண்டிகை நாளில் யாதவராவ், தனது தோழர் பலரையும் விருந்திணுக்கு அழைத்தான். மாலவன், விதலன் உள்ளிட்ட அனைவரும் அவ்விருந்திற்குச் சென்று, அறுசுவை கலந்த உண்டி கொண்ட பின்னர் அத்தாணி மண்டபத்தே அமர்ந்து, தாம்பூலம் தரித்து, உல்லாசமாக உரையாடி யிருந்தனர். அச் சமயம் யாதவராவின் மகளான ஜீஜாபாய் விரைந்தோடிவந்து தந்தையின் மடிமீது அமர, அதுகண்ட ஷாஜியும் மலர்ந்த முகத்துடன் கடுகிச் சென்று, ராவின் மடிமீதே ஜீஜாபாயின் பக்கலில் வீற்றிருக்கலானான். ஒத்த அழகும் அன்பும் அறிவும் நலனும் கொண்டு குலவிய அவ்விரு குழந்தைகளின் கோலத்தைக் கண்டு விருந்தினர் அனைவரும் விருப்பமுடன் ஆசி கூறினர். அத் தருணம் யாதவராவ் தனது மகளை நோக்கி, "என் கண்ணே! ஷாஜிக்கு மணமாலை சூட்ட உனக்கு மனமுளதோ?" என்று விளையாட்டாக வினவலானான். உடனே ஜீஜாபாய் தனதருகே யிருந்த தங்கத் தட்டினின்றும் வாசனைச் சுண்ணத்தை வாரியெடுத்து, ஷாஜியின் மீது வீசினாள். ஷாஜியும் கஸ்தூரி கலந்த செம்பஞ்சுக் குழம்பை அள்ளி, ஜீஜாபாயின்மீது தெளித்துக் களித்தனன். அவையிலிருந்த அனைவரும் அதுகண்டு

யாதவராவின் வார்த்தை பொய்யாகாதெனப் பகர்ந்து, அக் குழந்தைகட்கு ஆசி கூறித் தத்தம் இல்லம் ஏகினர்.

விவாகத்தைக் குறித்து யாதவராவ் விளையாட்டாக விளம்பியதை மாலவன் விளையாட்டென மதியாமல், மறு நாள் மணத்தூது விடுத்தனன். இச்செய்தி யாதவராவின் தேவிக்குத் தெரிந்தது. அவள் தனது நாதனை நோக்கி, "ஈதென்ன விந்தை! வேடிக்கையாக வினவிய வார்த்தையினால் வந்த விபரீதம் வெகு நன்று! நமது அரிய குழந்தையை மாலவன் மகனுக்கு எங்ஙனம் மணஞ்செய்து கொடுப்பது? நம்மிலும் தாழ்ந்தோரிடம் சம்பந்தம் செய்யின், ஊரார் எள்ளி நகையாரோ?" என்று கடிந்து கூறினள். உடனே யாதவராவ், மாலவனையும் விதலனையும் வரவழைத்து, இருவர் கணக்குவழக்குக்களைத் தீர்த்து, அக்கணமே மூட்டை முடிச்சுடன் ஊரைவிட்டுப்போமாறு உத்தரவு இட்டான்.

சோதரர் இருவரும், பிள்ளைவரம் கேட்கப்போய்ப் புருஷனையே பறிகொடுத்த கதைஆயினதே தமதுநிலையெனப் பெரிதும் மனமாழ்கினர். பின்னர், அவர்கள் தம் ஊர்சென்று, உழவுத்தொழிலில் அமர்ந்து வாழலாயினர். மாலவனோ எங்ஙனமேனும் ஜீஜாபாயை மருமகளாகக் கொள்ளவேண்டும் என்று கருதி, அம்பிகையைக் குறித்து வரங்கிடந்தனன். ஒருநாள் மாலவன் நள்ளிரவிலே தனது புலத்தில் அயர்ந்திருக்கையில், அம்மை பவானி அவன் கனவில் தோன்றி, "அன்ப! கண் கலங்குவது ஏன்? அயலில் உள்ள பாம்புப்புற்றில் பெரும்புதையல் உளது; அதனை வெட்டி எடுத்து நீ நல்வாழ்வு பெறுவாயாக; உனது மரபி

னர் இருபத்தெழுவர் இப்பூமியிலே அரச சின்னத்துடன் துலங்குவர்,'' என்றருளி மறைந்து போயினள்.

மறுநாள் மாலவன் அப் புற்றைச் சோதிக்கவே, பொன்னும் மணியும் மிகுதியாகக் கிடைத்தன. மாலவன் அப் பெருநிதியைக் கொண்டு, ஓராயிரம் பரிகளை வாங்கி, ஈராயிரம் வீரரை வேலைக் கமர்த்தி, ஏற்றமும் புகழும் ஒருங்கே எய்தலானன்; மேலும் அம்மை அருளிய பொருள் பலருக்கும் பயன்படவேண்டி, அப் புற்றிருந்த பூமியில் ஆலய மொன்று சமைத்து வைத்தான். சதாரா ஜில்லாவிலே உள்ள மகாதேவரின் கோயிலில் ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் வந்துகூடும் ஐந்துலட்சம் ஜனங்கள் பருக நீரின்றிப் பெரிதும் வருந்துவதை அறிந்த அம்மாலவன், அவ்விடத்தே அழகிய நீர்நிலை யொன்று அமைத்து வைத்தான்; ஆயிரக்கணக்கில் அந்தணர்களுக்கும் பக்கிரிகளுக்கும் பெருவிருந்து செய்தான்; சுற்றுப் புறங்களிலே இடிந்து கிடந்த கோயில்களைப் புதுப்பித்தான். இப்புண்ணிய வினைகளைக் கண்டு அனைவரும் அவனைப் போற்றிப் புகழலாயினர்.

இங்ஙனம் மாலவன் பெயரும் புகழும் பெற்றபோதும், யாதவராவ் தனது மகளை ஷாஜிக்குக் கொடுக்க மனமொப்பவில்லை. உடனே மாலவன் தனது வீரரின் துணைகொண்டு, யாதவராவின் ஜாகீரைக் கொள்ளையாடினன். பின்னர் இரு சோதரரும் தௌலதாபாத் நகரம் சென்று, இரண்டுபன்றிகளைக் கொன்று, மசூதியில் கட்டித் தொங்கவிட்டு, தங்களது மனக்கருத்தை ஆமதுநகர அரசனுக்கு அறிவிக்கலாயினர். பன்றி என்ற சொல் கேட்பினும் இஸ்லாமியர் உறுத்தெழுவர். ஆயினும் அவ்வேளை தட்சிண முகம்மதிய

வரசுகளை முறியடிக்க, டில்லி மொகலாய வல்லரசு முனைந்து நின்றமையால், ஆமது நகர வேந்தன் தனது நாட்டுப் படைத்தலைவரைப் பகைத்துக்கொள்ளவோ, அவர்களுக்குள் பிணக்கினை உண்டாக்கவோ சிறிதும் விரும்பாது, யாதவராவை அழைத்து உண்மையை வினவினன். "தாழ்ந்த நிலையிலுள்ள மாலவன் மகனுக்கு என் பெண்ணைக் கொடுக்க மனமில்லை. இக் காரணமாகவே இது நிகழ்ந்துளது," என்றனன் யாதவராவ். அதுகேட்ட அரசன் மாலவனை உடனே வருவித்து, அவனுக்கு யாதவராவினும் உயர்ந்த பதவியளித்து, 'இராஜா' என்ற பட்டமும் வழங்கி, பூனா, சூபா முதலிய பகுதிகளுக்கு அதிபனாகவும் ஆக்கினன். அப்பால் ஷாஜிக்கும் ஜீஜாபாய்க்கும் வெகு சிறப்பாக விவாகம் நடந்தேறியது. ஆமதுநகர சுல்தான் தனது பரிவாரங்களுடன் அம் மணவினைக்கு வந்து, பட்டாடையும் பொன்னணியும் அத் தம்பதிகளுக்குப் பரிந்தளித்துப் போயினன். மாலவனும் நன்றி மறவாது, அவ்வரசனிடம் உள்ளன்பும் ஊக்கமுங்கொண்டு பெரிதும் உழைத்து வரலானன். ஆமதுநகர அரசிலே அன்றுமுதல் மாலவனது நிலை உயர்ந்து வரலாயிற்று. மாலவன் அரசவைக்குச் செல்லும்போதெல்லாம், மைந்தன் ஷாஜியை உடன் கூட்டிச் செல்வது வழக்கம். அச் சமயங்களிலே அங்கு நடைபெறும் அரசியலைக் கூர்ந்து நோக்கி, ஷாஜி நுண்ணறிவு கொள்ளலானன். ஷாஜியினது ஆன்ற அறிவினையும் பேராண்மையினையும் அனைவரும் கண்டு களித்து உவந்து வந்தனர். வஞ்சகம் ஏதும் இலாது உழைத்துவந்த மாலவன் காலகதியடையவே, ஆமதுநகர வேந்தன் ஷாஜியை வரவழைத்து, தந்தைக்குரிய ஜாகீரில் அவனை அமர்த்தி, 'இராஜா' என்ற

பட்டமும் வழங்கி, அவ்வாலிபனிடம் அன்பும் ஆதரவும் காட்டுவானுனன்.

நாள் சில சென்றதும், ஆமது நகர அரசு பேராபத்துக்கு இலக்காயிற்று. உள்நாட்டுக் கலகம் ஒருபுறம் அரசைச் சீர்குலைக்க, மற்றொரு புறம் மொகலாயரும் டில்லியிலிருந்து படையெடுத்து வந்தனர். முதன் மந்திரியான மலிக் ஆம்பர் என்னும் உயர் வீரன் ஒருவன், உட்பகையை ஒருவா று அடக்கி, மொகலாய வீரரை முறியடித்தான். டில்லி பாதுஷாவான ஜிஹாங்கீர் அதுகேட்டுக் கடுஞ்சினங் கொண்டு, தனது மைந்தன் ஷாஜஹானைப் பெரும்படையுடன் அனுப்பினன். ஆமதுநகர அரசின் பெருஞ்சீரைக் குலைக்கவே, அம் மொகலாய வீரர் கடுஞ்சமர் புரிந்தனர். அச் சண்டையில் ஷாஜி காட்டிய போர்த்திறத்தையும் தீரத்தையுங் கண்டு, ஒருபுறம் ஷாஜஹானும், மற்றொரு புறம் மலிக் ஆம்பரும் வியந்து புகழ்ந்தனர்.

ஷாஜியையும் யாதவராவையும் போன்ற படைத்தலைவர் பக்கபலமாக நிற்கும் வரையில், ஆமதுநகர அரசை அசைக்க முடியாதெனக் கண்டுகொண்டான் ஷாஜஹான். ஆதலின், சாம தான பேத உபாயங்களை அவ்விளவரசன் கையாளவே, யாதவராவ் பலவீரரோடு டில்லியரசுடன் சேர்ந்துவிட்டனன். ஆபத்துக் காலத்தில் ஆமது நகரையும் மலிக்ஆம்பரையும் கைவிடாது காத்துநின்ற மகாராஷ்டிரப் பெருந்தலைவன் இராஜா ஷாஜி ஒருவனேயாம். தனது படையின் பலம் குன்றுவதைக் கண்ட மலிக் ஆம்பர் வேறுவகையின்றி நாட்டின் பெரும்பாகத்தை நல்கி, மொகலாயரின் பகையை ஒருவாறு போக்கிக்கொண்டனன். ஆயினும் சின்னுட்களுக்கெல்லாம் மலிக் ஆம்பர்

ஆவி துறக்கவே, அதுகேட்ட ஷாஜஹான் அந் நாடனைத்தையும் வசஞ்செய்துகொள்ள எண்ணி, ஒரு பெரும்படையுடன் வந்தான். யாதவராவும் அம் மொகலாயப் படையுடன் வந்து, ஆமது நகர அரசன் தங்கியிருந்த கோட்டையை முற்றுகை போட்டனன். இராஜா ஷாஜி, ஆறு மாதகாலம் வீராவேசத்துடன் அக்கோட்டையைக் காத்து நின்றும், மொகலாயரை முதுகு காண முடியவில்லை. எனினும் அம் மாற்றரசனுக்கு அவன் பணியவுமில்லை. அதுகண்டு யாதவராவ் சூழ்ச்சி புரியத் தொடங்கினன். அதன் விளைவாக, ஆமதுநகர அரசியோ ஷாஜியின்மீதும் ஐயங் கொள்ளலானுள்; ஆமது நகர அரசனும் மானபிமானமற்று, மொகலாயரிடம் சரணடைந்துவிடக் கருதி நின்றனன். அதுகண்ட ஷாஜியின் மனம் சலித்தது. அந்நிலையில் வீணே தனது படையைப் பறிகொடுக்க மனமிலாத ஷாஜி, யாரு மறியாவண்ணம் மனைவி ஜீஜாபாயையும் மூன்றே வயதுள்ள முதல்மைந்தன் சாம்பாஜியையும் மற்றுஞ்சில துணைவரையும் உடன்கொண்டு அந் நகரை விட்டு அகன்றனன். தேவி ஜீஜாபாயோ அச் சமயம் வீர சிங்க சிவாஜியைக் கருக்கொண்டிருந்தனள்.

ஷாஜி தப்பியோடுவதை உணர்ந்த யாதவராவ், தனது வீரருடன் அவனைத் தொடர்ந்து துரத்தலானுன். கருப்பவதியை நீண்டதூரம் குதிரைமீது கடுவேகமாய் அழைத்துச் செல்ல ஷாஜிக்கு மனமில்லை. ஆதலின் அவளைச் சிவநேரி என்னும் கோட்டையில் தனது தோழன் ஸ்ரீனிவாஸராவினிடம் அடைக்கலமாக வைத்து விட்டு, யாதவராவினுக்கு ஒருபக்கம் போக்குக் காட்டி, வேறொரு மார்க்கமாக ஷாஜி விரைந்துசென்றனன். அஃது

றிந்த யாதவராவ் மொகலாயரைக் களிப்பிக்கவேண்டி, ஷாஜியின் மனைவியைச் சிறைசெய்தனன். அருகிலிருந்த வீரர் அனைவரும், "தலைவ! ஷாஜியின்மீது நமக்குப் பகைமை உளது என்பது மெய்யே! அவ் வீரனது மனைவியை, மேலும் பூரண கருப்பவதியை, எல்லாவற்றிற்கும் மேலாக உமது அருமை மகளைச் சிறைசெய்தலும் அழகாமோ?" என்று இடித்துக் கூறினர். யாதவராவ் அதுகேட்டு அறிவுதலைப்பட்டு ஜீஜாபாயைக் காணச் சென்றனன். அவ் வீரமாது தனது தந்தையை நோக்கி, "எந்தாய்! பெண்ணென்றால் பேயும் இரங்கும். நீரோ பெண்ணைச் சிறை செய்துளீர்! மருகனை அகப்படுத்த இயலாது மகளாகிய என்னை மடக்கிவிட்டீர்! இது நமது மரபுக்குரிய வீரம் போலும்! எனது பதியைப் பழிவாங்குவதினும் அபலையாம் என்னைக் கொன்று ஆறுதல் அடையும். அன்று செஞ்சோற்றுக் கடன்கழிக்கவேண்டி, கன்னன் தனது சோதரருடன் போர் புரிந்தான் என்பர். இன்று சுற்றமும் துணையும் நோக்காது, நீர் சமர் புரிவது எக்கடன் கழிக்கவோ?" என்று சுடச்சுடக் கூறினள். அம்மொழி கேட்டு யாதவராவ் தனது மதியீனத்தை உணர்ந்து தலைகுனிந்து, "என் செய்வேன்! எல்லாம் ஈசன் செயல்," என்று கூறித் தனது நகருக்குத் தன்மகளை வருமாறு பெரிதும் வேண்டி அழைத்தனன். அவ் வீராங்கனை அவ் வேண்டுகோளைச் சிறிதும் பொருளாக எண்ணுமல் மறுத்திடலும், யாதவராவ் மதியும் வாயு மிழந்து வந்தவழியே போயினன். பதிவிடுத்த அப் பதியிலேயே வாழவிரும்பிய அத் தேவி, தனது ஆயுள் உள்ளளவும் பிறந்தகம் போனதில்லை. ஆமது நகரை விட்டுச் சென்ற இராஜா ஷாஜி

விஜயபுரி அடையவே, ஆங்கு அரசு செலுத்திவந்த அடில் ஷா சுல்தான் அன்பும் பரிவுங் காட்டி ஷாஜியை வரவேற்று உபசரித்தான்.

## 2. சிவாஜியின் பிறப்பும் வளர்ப்பும்

அச் சமயத்திலே தக்காணமெங்கும் படையெடுப்பும், பெரும்போரும் நிகழா நின்றமை கண்ட ஜீஜாபாய் பெரிதும் மனங்கலங்கி, "அம்மை பவானியே! அகிலாண்ட ஈசுவரியே! எனது நாதனையும், மூத்த மைந்தன் சாம்பாஜியையும் காப்பது உனது கடன். அன்றியும் எனது மனமும் வயிறுங் குளிர, இப் பூமியும் நலம் பெற, எனது கரு ஓர் ஆண்மகவாயுதிக்குமாயின், அதற்கு ஈசனது பெயரையே சூட்டி, என்றும் உன்னைத் துதியாநிற்பேன்," என்று மனத்தகத்தே மாதேவியை வழுத்தி வந்தாள். அங்ஙனமே மகாராஷ்டிர ராஜ்யத்தை நிறுவிய வீரப்புதல்வன் 1627-ஆம் ஆண்டு அவனியில் அவதரித்தனன். தான் துதித்தவண்ணமே 'சிவாஜி' என்று அக்குழவிக்குப் பெயரிட்டனள் ஜீஜாபாய். சிவாஜி பிறந்த இடத்திலே உள்ள சுவரிலே, "இது சிவாஜி மன்னன் பிறந்த தலம்" என்று பொறிக்கப்பட்ட சலவைக் கல்லொன்றை இன்றும் காணலாம்.

பாலன் பிறந்த செய்தி கேட்டு ஊரார் வந்து உவகை கூற, அன்னார் அனைவருக்கும் தானதருமங்களும் பரிசுகளும் வழங்கப்பெற்றன. விஜயபுரியிலிருந்த ஷாஜிக்கும் திருமுகம் விடுக்க, அவனும் அத் தூதனுக்குக் காசும் தூசும் கனிவுடன் அளித்துக் களித்தனன். ஜீஜாபாய் கணவனையும்

முதற்குமாரன் சாம்பாஜியையும் விட்டுப் பிரிய நேர்ந்த துக்கத்தை ஒருவாறு குழந்தை சிவாஜியின் முகத்தைப் பார்த்து மறக்க முயன்று, அக்குழந்தையைத் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி வந்தாள். குழந்தையும் தவழ்ந்து விளையாடியும், தளர்நடை பயின்றும், குதலைச் சொற்கள் மொழிந்தும், அன்னையைக் களிப்பித்து வந்தது.

ஷாஜி ஆமது நகர அரசைவிட்டு நீங்கி வெளிவந்த பிறகு, மந்திரிகளுள் கலகம் ஒருபுறம், பஞ்சம் மற்றொரு புறம், டில்லி சக்கரவர்த்தியின் படையெடுப்பு வேறொரு புறம் தோன்றி அந்நாட்டைச் சீர்குலைத்தன. இடையில் ஆமது நகர சுல்தான், யாதவராவையும் அவனது மைந்தனையும் வஞ்சகமாக அரண்மனைக்கு அழைத்துப் படுகொலை புரிந்தான். பெண்கொடுத்த மாமனது கொலை கேட்டு ஷாஜி உளம் கொதித்தனன். உதிரம் உறவறியும் என்பது உண்மையன்றோ? எனினும் ஆமது நகர அரசு, டில்லி வல்லரசினால் தாக்குண்டு திக்கற்ற நிலைமையிலிருந்தமையால், ஷாஜி தன்னாலானமட்டும் மொகலாயரை எதிர்த்துப் போராடினன். அத் தருணம் மொகலாய தண்டநாயகனாக விளங்கிய முகபத்கான் பழிவாங்கக் கருதி ஷாஜியைச் சிறைசெய்ய முயன்றும், அது பயன்படவில்லை. கடைசியில் அவன் ஷாஜியின் மனைவி ஜீஜாபாயைச் சிறைசெய்து வருமாறு ஒரு தளகர்த்தனை விடுத்தனன். அங்ஙனமே அத் தளகர்த்தன் சென்று, ஜீஜாபாயைச் சிறைசெய்து, மொகலாயரின் பாசறைக்குக் கொணரலானான். அப்பொழுது குழந்தை சிவாஜிக்கு வயது மூன்று. டில்லியரசில் சேவகம் புரிந்து நின்ற யாதவராவின் சோதரனொருவன் ஜீஜாப்பாயின் நிலை கண்டு,

மனம் பொருது, மரபின் மானத்தைக் காக்கக் கருதி, "வீர! ஷாஜியின் மனைவியைச் சிறைசெய்து யாது பயன்? ஷாஜியோ சில ஆண்டுகளுக்கு முன்பே ஜீஜாபாயைக் கைவிடுத்து, துகாபாய் என்பாளை மணந்து வாழ்கின்றனன். ஆனதுபற்றி ஜீஜாபாயைச் சிறைசெய்வதனுல், வீணே பெண்பாவம் நேருமேயன்றி வேறுபயன் ஏதும் இல்லை. அன்றியும் இம் மங்கையோ எங்கள் குலத்தில் உதித்தவள். தான் ஆடாவிடினும் தன் சதை ஆடுமன்றோ?" என்று கூறி, அப் படைத்தலைவனுடன் வாதாடினன். உடனே ஜீஜாபாய் விடுதலை பெற்றுத் தன் மைந்தனுடன் சென்று சிவநேரிக் கோட்டையில் வதிந்து வருவாளாயினள்.

ஈதிங்ஙனமிருக்க, விஜயபுரி வேந்தனிடத்தில் வேலைக்கமர்ந்த ஷாஜியினிடம் முதன் மந்திரியான முராரிபந்தன் பேராதரவு காட்டலாயினன். எனவே ஷாஜியின் வாழ்வும் வீரமும் விஜயபுரி யெங்கும் பரவின. அப்பொழுது ஷாஜி, தனது மனைவி ஜீஜாபாயையும் மைந்தன் சிவாஜியையும் விஜயபுரிக்கு வரவழைத்துக் கொண்டான்.

முராரிபந்தன் சூரிய கிரஹணந்தோறும் அளவிலா தானதருமம் செய்வது வழக்கம். தான் ஏறிச்செல்லும் குஞ்சரத்தை எடைபோட்டு, அதற்கு ஈடான பொருளை அந்தணர்க்கு வழங்க அவன் விரும்பினுன். யானையை எடைபோடுதல் எங்ஙனம்? அருகேயிருந்த அனைவரும் வகைகாணுது விழித்தனர். ஷாஜியோ அக் குஞ்சரத்தை ஒரு படகில் ஏற்றி, அப் படகு நீரில் அமிழும் அளவை அறிந்துகொண்டு, அப்பால் யானைக்குப் பதிலாக அந்த அளவுக்குப் படகிலே கற்களை நிரப்பி, மீண்டும் அக் கற்களை எடைபோட்டு யானையின் எடையை உணர்த்தினன்.

அதுகண்ட அனைவரும் ஷாஜியின் மதிவன்மையைப் புகழ்ந்தனர்; முராரிபந்தனும் ஷாஜியினிடம் முன்னையி னும் பன்மடங்கு அன்புகாட்டுவானானன்.

அப்பால் விஜயபுரிவேந்தன் கர்நாடகதேசத்திலே ஏகபோகவாழ்வுகொண்டிருந்த பாளையக்காரரை அடக்கித் தன் அரசைப் பெருக்க ஆவல்கொண்டு, ஷாஜியை ஒரு பெரும்படையுடன் ஆங்கே அனுப்பினன். ஷாஜி கர்நாட கத்தின் மீது தண்டுகொண்டு சென்றகாலையில், தாதாஜி காண்டதேவன் என்னும் வேதியனிடம், தனது ஜாகீரை யும், ஜீஜாபாய், சிவாஜி ஆகிய இருவரையும் ஒப்படைத்துப் போகலானான்.

ஆதலின் பாலப் பருவத்திலே சிவாஜிக்குக் கல்வியறி வும் கேள்வியறிவும் புகட்டும் பொறுப்பு ஜீஜாபாய்க்கும் வேதியனுக்குமே வாய்த்தது. தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சீலை என்பர். சிவாஜிக்கு வீரப்பால் ஊட்டி வளர்த்துவந்த பெருமை தேவி ஜீஜாபாய்க்கே உரித்தா கும். அவளது முன்னோர்கள் தேவகிரியைத் தலைநகராகக் கொண்டு, தனியரசு செலுத்திவந்த வீரவேந்தராவர். ஷாஜியோ அஞ்சா நெஞ்சும், அளவிலா ஆற்றலும், இணை யிலாவீரமும் படைத்த இராஜபுத்திர வழிமுறையில் வந்த வன் ஆவன். தேவகிரி அரசு இஸ்லாமியரால் சீர் குலை ந்து போக, அங்கே அரசுசெலுத்திய யாதவகுலத்தினர் படைத்தலைவராகவும், வீரராகவும் இஸ்லாமியச் சேனையில் சேர்ந்து வாழ்ந்து வந்தனர். எனினும் தங்கள் குலச்சிறப் பையும், அது குன்றிய விதத்தையும் அன்னார் மறக்கவில்லை. மீண்டும் தனியரசு கொள்ளல் வேண்டும் என்பதே அன்னா ரின் ஆவலாக இருந்தது. அத்தகைய குலமாதின் வயிற்றில்

பிறந்த பாலன் பரம்பரை வாசனையினால் பெருவீரங்கொள் ளுதல் இயற்கை அன்றோ ?

சிவாஜி கருவிலிருந்த காலையிலேயே ஒரு முறை மொகலாயரிடம் சிறைப்பட்டனன். மீண்டும் மூன்று மாண்டிலே மொகலாயரின் கையில் அவனும் தாயும் சிக்கிக்கொள்ள நேர்ந்தது. ஆதலின் அப் பாலகனுக்குக் கருவிலேயே அடிமைவாழ்வில் வெறுப்புத் தோன்றி வளர்ந் தது போலும்! பிறந்த காலந்தொட்டுப் பதினறு வயது வரையில் தக்காணமெங்கும் இஸ்லாமியரின் படையெடுப் பும் போர் நிகழ்ச்சிகளும் நிரம்பி நின்றமையின், அவ்வீர மகனுக்கு வேற்றரசில் கசப்பு முதிர்ந்து, வீரமும் வெற்றி யும் கொண்டு வாழவேண்டும் எனும் விருப்பம் வளர்ந் தோங்கியதில் வியப்பேதும் இல்லையன்றோ?

சிவநேரி நகரில் முன்னம் ஷாஜியைவிட்டுப் பிரிந்தது முதல், ஜீஜாபாயின் கருத்தனைத்தையும் கவர்ந்துநின்றவன் சிவாஜியே. ஷாஜியின் நிலையைக் கண்ட ஜீஜாபாயோ, "இனி இக்குழந்தையே எனக்குக் கதி மோக்ஷம்," என்று கருதி, அம்மைந்தனை எவ்வகையிலும் ஏற்றமுடையவனுக்க அல்லும் பகலும் அரும்பாடு பட்டனள். கண்ணன், சுபத் திரையின் கருவிலிருந்த அபிமன்யுவுக்கு மாபாரதப் போரைக் கூறி வீரம் வளர்த்தான் என்பர் பெரியோர். ஜீஜாபாயோ சிவாஜிக்குப் பால்கொடுக்கத் தலைப்பட்டது முதல், இராமாயணம் மகாபாரதம் முதலிய பெருங்கதை களையும், தேச சரித்திரத்தையும், தங்குல சரிதத்தையும் வரன்முறையாகப் போதித்து வீரம் ஊட்டிவந்தாள். வீர சிகாமணிகளின் கதைகள் சிவாஜியின் சிந்தைக்கும் செவிக் கும் இன்னமுதாயின. இயற்கையிலேயே அறிவும் ஆற்ற

லுங்கொண்ட அப்பாலன், பார்த்தன் சரிதையைக் கேட்கும் காலையில் பரவசங்கொள்வான்; கன்னன் கதையைச் செவிமடுக்கையில் சித்தம் களிப்பான்; கண்ணனது தந்திரங்களைக் கனிவுடன்கேட்டுக் கர்ஞானந்த மடைவன்; பலராமனது பராக்கிரமத்தை உணருங்காலையில், பேரானந்தங் கொள்வன்; இராகவனது வீரம் கேட்டு இன்ப மெய்துவன்; அநுமானது ஆற்றலையும் அன்பையும் ஆர்வமுடன் பருகி அகங்களிப்பன். வீரசரிதம் ஒவ்வொன்றும் அவன் மனத்திலே பசுமரத்தாணிபோல் பதிந்தது. தானும் அவ் வீரரைப்போல் வரிசையும், வாழ்வும், வீறும், வெற்றியும் விரைவில் பெறுதல்வேண்டும் என்பதே அவனது பேராவலாயிற்று. வீர உணர்ச்சியுடன், அவனுக்கு அடிமைவாழ்வில் அருவருப்பும், ஆண்மையுடன் வாழ்வதில் விருப்பமும் கொழுந்து விடலாயின. மறம் அடக்கி, அறம் வளர்க்கவே அவதாரங்கள் உண்டாயின என்பதே புராணங்களின் சாரமாதலின், அப் புராணங்களைக் கேட்டுணர்ந்த சிவாஜியும், பாரதபூமியின் தீமைபோக்கி நன்மை பெருக்கவே இச்சைகொண்டான். ஆருக்கும் தலைவணங்காத் தனியரசு காணவேண்டுமென்னும் அவா அவனுள்ளத்தில் வேரூன்றியது. புத்திரனது பேரறிவையும் பெருமிதத்தையும் கூர்ந்தறிந்த ஜீஜாபாய், "நாளடைவிலே நன்மகன் நல்லரசு கொள்வான்," என்றெண்ணி ஈசனை வழிபட்டு வந்தனள்.

சிவாஜியை வளர்த்துவந்த தாதாஜி அந்தணர் குலத்தில் உதித்தவன்; அகன்றஅறிவும், பரந்த நோக்கமும், அர்த்தசாஸ்திரப் பயிற்சியும் நிரம்பியவன். அத் திறமை கண்டே அவனிடம் ஷாஜி தனது மகனையும் ஜாகீரையும்

ஒப்படைக்கலானான். ஷாஜியின் ஜாகிரில் அடங்கிய பூனா, சூபா, பாராமதி, இந்துபுரம் ஆகிய பிரதேசங்கள் அந் நாளில் வெறுங் கல்லாங்காடுகளா யிருந்தன. சுற்றிலும் மலைகள் நிரம்பியிருந்தமையால் புலி, கரடி, ஓநாய்முதலிய வனவிலங்குகளின் தொல்லையும் அங்கு மிகுதி. தாதாஜி அத்தகைய நாட்டினை வளம்படுத்தவேண்டி, அருகே யிருந்த மாவலர் என்னும் வகுப்பினரைக் குடியேற்றி, நிலவளம் கொழிக்கும் வரையில் பகுதி தேவையில்லை யென்று விவசாயத்தில் அமர்த்தினன். பலரும் பயிர்த் தொழிலில் பேரூக்கங்கொள்ளவே, அப் பிரதேசமெங்கும் வேளாண்மை பெருகிவந்தது. பயிர்பச்சைகளை அழிக்க வரும் வனவிலங்குகளை வேட்டையாடி வதைப்பதற்குரிய பலவித ஆயுதங்களைத் தேடித்தந்தும், வேடருக்கு வெகு மதி கொடுத்தும் வந்ததனால், அவ்விலங்குகளின் அல்லல் அடங்கலாயிற்று. தரிசாய்க் கிடந்த நிலங்களில் தானிய மணிகள் தலைசாய்ந்து நிற்கக் கண்ட கள்வர், மறவர் முதலி யோர் கொள்ளைகொள்ள வருவாராயினர். தாதாஜி அது கண்டு, சில மாவலரையும் மலைநாட்டினரையும் காவலாள ராக அமைத்து, விவசாயிகளுக்குப் பேருதவி புரிந்தனன். அப்பால், பகுதியாக வரும் பணத்தைக்கொண்டு அவ் வேதியன் பூனாவுக் கருகே பலவகைப் பழமரங்களைப் பயிர் பண்ணி, சிவாஜியின் பெயரால் கிராமமொன்றும் கண்ட னன். இன்றும் அவ்விடம் 'சிவபுரம்' என வழங்கி வருவ தைக் காணலாம்.

தாதாஜியின் நேர்மையை உணர்த்தச் சீரிய கதை யொன்றுளது. ஒருதினம் பிற்பகலிலே தாதாஜியும் சிவாஜியும் குதிரைசவாரி போயினர். அருங்கோடை யாத

லின், தாதாஜிக்குத் தாகவிடாய் மிகுதியும் உண்டாயது. உடனே தாதாஜி அருகிலிருந்த மரத்திலிருந்து மாங்கனி யொன்றைப் பறித்தனன். ஆனால் அதனை அருந்தப் போகு முன் அவன், 'அந்தோ! இத் தோட்டம் நமது தலைவ னுடையதன்றே? தலைவனது சம்மதமின்றி இக்கனி யைப் பறித்துப் புசித்தல் தவறேயாம். ஆய்ந்தறியாது பழம்பறித்த இக்கையைத் துண்டித்தலே தகுதி,'' என்று நினைந்து, உடைவாளை இடக்கரத்தில் வாங்கி வலக்கரத் தைச் சேதிக்கப்போயினன். அவ்வளவில் அருகே நின்ற சிவாஜி தடுத்திராவிடின், தாதாஜியின் வலக்கரம் வெட் டுண்டு வீழ்ந்திருக்கும். சிவாஜி யாது சொல்லியும் கேளாது தன் கையிழைத்த தவறுக்குத் தக்க தண்டனை வேண்டு மென்று தாதாஜி துணிந்து, தான் அணியும் சட்டை யிலே வலக்கையைக் குட்டையாகவே வைத்து நெடுங் காலம் தரித்திருந்தனன். அஃதறிந்த ஷாஜி, தாதாஜியின் நேர்மைக்கு மெச்சி, எழுநூறு வராகன் வெகுமதியளித்து, அவனை வழக்கம்போல் சட்டை அணியச் செய்தான்.

அர்த்தசாஸ்திரத்தில் தாதாஜி நிபுணன் ஆதலின், குடிமக்களுக்குச் சிறிதும் வருத்தமின்றி இறைப் பணத் தைப் பெருக்குவானானன்; பணியாளருக்கு மனக்கசப்பு உண்டாகாவாறு, இரட்டிப்பு வேலை வாங்குவதில் அவன் வெகு சமர்த்தன்; இன்சொல்லே இயம்பும் நீர்மையன்; குடிமக்களுக்குள் வழக்கு வந்துவிடின், துலைக்கோல்போல் நின்று நீதி வழங்குவன். அவ்வேளைகளில் சிவாஜி அருகே யிருந்து, நிர்வாக நேர்மையை உய்த்துணரத் தவறுவ தில்லை. ஐயம், திரிபு உண்டாகும் காலத்தில், தாதாஜி யுடன் தர்க்கம் பண்ணி, உண்மையை உணரவும் அவன்

பின்னிடான். சில சமயங்களில் அந்தரங்கமான கருமங்களைத் தனிமையில் தாதாஜி ஆற்றுவதுண்டு. சிவாஜி அது கண்டு, “ ஐய ! இளைஞனென என்னை ஒதுக்கிவைத்து, அந்தரங்கத்தில் சிற்சில கருமங்கள் புரிவது அழகோ? எவ்வகையாலும் எனக்குப் பிதாவும், போஷகனும், ஆசிரியனும் தாங்கள் அன்றோ? மைந்தனை என்னை அந்தரங்க கருமங்களிலும் அறிமுகப்படுத்தினால் அன்றி, அடியேன் ஆரறிவு கொள்வது எங்ஙனம்?” என்று ஆவலுடன் வினவுவன். வாலிபனது ஆவல் கண்ட தாதாஜி அதுமுதல், ஜாகிரின் நிர்வாக காரியங்களில் சிவாஜியைக் கலந்து கொள்ளாமலிருப்பதில்லை. விவசாயிகளுக்குள் சிக்கலான வழக்குகள் வருங்காலையில், தீர்ப்பளிக்கும் வண்ணம் சிவாஜிக்குத் தாதாஜி அறிவித்து, அவனைப் பயிற்றுவிப்பான். இளமையிலேயே இங்ஙனம் சிவாஜி பயிற்சி பெற, அது முதுமையிலே அவனுக்குப் பெரும்பலன் தரலாயிற்று.

வயது ஆக ஆக, சிவாஜிக்கு முகம்மதிய அரசினிடம் வெறுப்பும், சுயவரசில் நாட்டமும் வளர்ந்தோங்கலாயின. அதுகண்ட தாதாஜி கவலைகொண்டு, அவனது மனப்போக்கை மாற்றவேண்டி, ஜாகீரில் உள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் அவனை அழைத்துச் செல்வான்; ஆங்காங்கே பகுதி விதிக்கும் முறை, வாங்கும் வகை, இவைகளை விளக்குவான்; காவலுக்காக அமைத்துள்ள கோட்டை கொத்தளங்களின் நிலையையும் உணர்த்துவான்; நிர்வாகத்தின் உட்பொருளையும் உளம் பதிய உரைப்பான். அதனால் ஜாகீரின் எல்லை, அதனை நிர்வகிக்கும் முறை, அதில் வேலை பார்க்கும் வினையாளரின் தகுதி, இவைகளை அக் குமரன் இளமையிலே கண்கூடாக அறிந்து, நிரம்பிய அறிவு

கொள்ள இடமுண்டாயிற்று. பழைய சரித்திர ஆசிரியரில் பலரும் சிவாஜிக்குக் கேள்வியறிவு உண்டே யொழியக் கல்வியறிவு கிடையாது என்று சாதிப்பர். முகம்மதிய அரசின் காலமாதலின், உருது, பாரசிகம் ஆகிய பாஷைகள் அந்நாளிலே பிரபலமாயிருந்தன. அவ்விரண்டிலும் சிவாஜி தக்க பயிற்சி பெற்றிருந்தனன் என்பது திண்ணம்; வடமொழியிலும் அவனுக்கு நல்ல ஞானமுண்டு. அக்காலத்திலிருந்த வாமந பண்டிதர், துகாராம்,இராமதாஸ் முதலிய பெரியாருக்கும் சிவாஜிக்கும் கடிதப்போக்குவரவு இருந்து வந்தது. அவுரங்கசிப் மன்னனுக்கு ஒருசமயம் சிவாஜி விடுத்த கடிதம் அவ்வீரனது உயர்விவேகத்தையும், பேரறிவையும் வலியுறுத்தும். கேள்வியறிவும் விவேகமும் மிதமிஞ்சிநின்ற குமாரனிடம் கல்வியறிவு இல்லாதிருக்கவும் இயலுமோ? வீரவாழ்வுக்குரிய குதிரையேற்றம், வில்வித்தை, வாட்பயிற்சி முதலியவற்றிலும் அவன் கைதேர்ந்தவன்.

இராஜாஷாஜி கர்நாடகத்தி லிருந்து விஜயபுரிக்குத் திரும்பியதும், விஜயபுரியில் தனது மகனுக்கு மணம்புரிவிக்க விரும்பினான். சிவாஜி அதுகேட்டு, "விஜயபுரியோ புறசமயத்தினர் நிறைந்த இடமாகும். வேதமார்க்கத்திற்குப் பங்கமின்றி விவாகம் நடத்தப் பூனாநகரே ஏற்ற இடம்," என்று கூறினன். அவ்வாறே 1640-ஆம் ஆண்டிலே பூனாநகரில் சிவாஜிக்கு மணவினை நடந்தேறியது. அவ்வீரனுக்கு வாழ்க்கைத் துணையாக வாய்த்த மாதின் பெயர் சாயாபாய். அடுத்த ஆண்டிலே தாயும் பிள்ளையும் விஜயபுரி சென்று ஷாஜியுடன் வாழ்ந்து வரலாயினர். அப்போது சிவாஜிக்கு வயது பதினான்கு; அதற்குள் அம்மைந்தன்

விற்போரிலும், மற்போரிலும், வாட்போரிலும் நற்பயிற்சி பெற்றிருந்தனன். அவனது முகவிலாசமும் சரீர அமைப்பும் காண்போரின் கண்ணைக் கவரா நின்றன. எப்பொருளையும் ஊடுருவி நோக்கும் உயரிய ஊக்கமும், அறிவிலும் ஆண்மையிலும் வயதிலும் வாழ்விலும் முதிர்ந்துள்ள பெரியாரிடம் பக்தி விசுவாசம் காட்டும் பெருங்குணமும் அவனிடம் நிரம்பியிருந்தன. அகந்தையும் ஆடம்பரமும் அகல நின்று, அடக்கமும் அமரிக்கையும் அவனுக்கு ஏவல் புரியா நின்றன. கூரிய மதியும் சீரிய நடையும் அவனது குண விசேஷங்கள் ஆயின. விளையும் பயிர் முளையிலேயே தெரியுமன்றோ? அம் மைந்தனது நெறியும் நேர்மையும் கண்டு, அவனைப் புகழாதார் இல்லை. அதுகேட்டு விஜயபுரி வேந்தன் அவ் வீர வாலிபனைக் காண விரும்பினன்.

ஈதிங்ஙனமிருக்க, அந்நகரில் இஸ்லாமிய ஆட்சியின் எடுப்பையும், புறசமயக் கடுப்பையும் காணக்காண சிவாஜியின் மனத்தகத்தே கோபக்கனல் கொழுந்து விடலாயிற்று. வீதிகளிலே பசுவதை நடப்பது கண்டு, அவனது உள்ளம் பதைக்கும்; இறைச்சிக் கடைகளைக் கண்டு அவனுக்கு இரத்தம் கொதிக்கும். வேதியருக்கு நேரும் இழிவினை கண்டு, அவன் மனத்தில் வைரம் பெருகும். சுருங்கச்சொல்லின், வேற்றரசை வேரறுக்கும் நன்னாள் எந்நாளோ என்பதே சிவாஜியின் சிந்தையாக இருந்தது. அவ்வேளை தந்தை ஷாஜி தனது தனயனை அரசவைக்கு வருமாறு வேண்டினன். சிவாஜி அதுகேட்டு, “எந்தாய்! நமது சமயத்தையும் சாதியையும் அவமதிக்கும் அரசவை புக எனக்கு மனமில்லை. ஆங்குச் செல்லின், அரசனுக்கு மண்டியிட்டுச் சலாம் செய்யவேண்டுமே; அக் கருமத்திற்கு

யான் உடன்படேன்,'' என்று பணிவுடன் புகன்றனன். ஷாஜி, "மகனே! முகம்மதிய ஆட்சி கண்டு நான் மோகம் கொண்டுவிடவில்லை. காலத்தில் கிடைப்பதைக் கொண்டு மகிழ்வதே மதியாகும். மாற்றரசை முறித்துத் தள்ளி, சுய வரசு கொள்வதாயின், இடமும் காலமும் கருதி இருப்ப தன்றோ கற்றறிந்தோர் கடமை?'' என்று கூறி மைந்தனைக் கொற்றவைக்கு அழைத்துச் சென்றனன். அத்தாணி மண் டபம் சேர்ந்ததும், அடிதண்டம் போடுவதுபோல் வணங்க மனமில்லாத வீரமைந்தன் வெறும் சலாம் செய்து வீற் றிருக்கலானான். வேந்தனோ ஷாஜியை நோக்கி, "அருகே அமர்ந்திருக்கும் பாலன் யாவன்?'' என்று வினவினன். ஷாஜி, "அரசே! இப் பாலன் எனது மைந்தன். இவன் முன்பின் தர்பாருக்கு வந்து போகாதவன். அன்றியும் அறியாப் பாலன்,'' என்று கூறினன். உடனே அம்மன்ன வன் வீரவாலிபனது வடிவையும் தோற்றத்தையும் வியந்து நோக்கி, உளம் பூரித்து, அவனுக்கு ஆடையும் ஆபரணமும் அளித்து அன்பு காட்டினன். சிவாஜியோ வீடு சென்றதும், அவ் ஆடை அணிகளைக் களைந்தெறிந்து அசுத்தம் நீங்க நன்கு நீராடினன்.

அப்பால் அவ்வாலிபன் அரசவைக்குச் செல்ல நேரும் போதெல்லாம் மண்டியிடாது, சலாம் செய்வதுபோல் சைகை காட்டிவிட்டு, உரிய ஆசனத்தில் அமர்வது வழக் கம். சுல்தான் அஃதறிந்து ஒருசமயம் சிவாஜியைத் தனியே அழைத்துச் சென்று, "எல்லோரும் வணங்குவது போல் நீ ஏன் வணங்குவதில்லை?'' என்று வினவினன். அறிவு நிரம்பிய சிவாஜி, "அரசே! அரசவைக்குச் சென்றதும், மண்டியிட்டுச் சலாம் செய்ய வேண்டுமென அடிக்

கடி எனது தந்தை உரைப்பதுண்டு. ஆயினும் யாது காரணமோ, மறதி வந்து என்னைச் சூழ்ந்துகொள்ளுகின்றது. மேலும் நான் வேந்தனையும் தந்தையையும் வேறாக எண்ணுவதில்லை,'' என்று வெகு சாதுர்யமாகச் சாற்றினன். அம் மறுமொழி கேட்டு முகம்மதிய மன்னவனது மனம் மகிழ்பூத்துச் சாந்திகொண்டது.

சிவாஜி அரசவைக்குச் செல்லுகையில், ஆங்குள்ள குதிரைச்சாலை, ஆயுதசாலை முதலியவற்றை நோக்கி, அவற்றின் நுணுக்கங்களை யுணர்வான்; அரசின் பற்பல அங்கங்களையும் ஆய்ந்தறிவான்; அரசியலைக் குறித்து ஷாஜியும் இதர பிரதானிகளும் பேசுங்காலையில், அதனை உள்ளத்தில் கொண்டு சிந்தை செய்வான்; ஒரு விநாடி நேரத்தைக்கூட அவ்வாலிபன் வீணே போக்குவதில்லை. ஒருசமயம் வீதியிலே சிவாஜி சவாரிபோகையில், மாடறுப்பானொருவன் பசுவொன்றை வதைசெய்துகொண்டிருந்தான். அவ்வளவில் சிவாஜி அவன்மீது படபடப்புடன் பாய்ந்து, பசுவை விடுவித்து, அவனை நையப் புடைத்தனன். மற்றொரு தருணம், விஜயபுரியின் கோட்டை வாயிலருகே, கோமாமிசக் கடையொன்றைக் கண்டதும், சிவாஜியின் வீரவாள் கணப்பொழுதிற்குள் அக் கடைக்காரனது சிரத்தைக் கீழேவீழ்த்தியது. அம்மனிதன் மனைவி, இறைவனிடஞ் சென்று முறையிடலானாள். இஸ்லாமியரில் சிலர், ''ஈதென்ன கோபம்! இங்கு நடப்பது இஸ்லாமிய அரசா? அல்லது மகாராஷ்டிரரின் அட்டகாசமா?'' என்று கடுகடுத்துப் பேசினின்றனர். போதாக்குறைக்கு சிவாஜியோ, ''விஜயபுரியில் பசுக்கொலை நடக்கும் வரையில் அரசவைக்குச் செல்வதில்லை,'' எனவும் உறுதிகொண்டான். இராஜா ஷாஜியின் நிலை பல

வகையிலும் மிக்க சஞ்சலத்திற்கு இடமாயிற்று. அரசிலே பெரும்பதவி வகித்திருப்பினும், ஷாஜியின்மீது முகம்மதிரிலே சிலருக்கு வெறுப்புண்டாகியது. முகம்மதிய அரசென்றும் பாராமல், மூர்க்கச் செயல்புரியும் வீரமைந்தனை வழிப்படுத்த வேண்டின், இனிய சொல்லே ஏற்ற உபாயமெனக் கொண்ட ஷாஜி, தன் புதல்வனை அழைத்து, "அப்பனே! உனக்கு இன்னும் வயது பதினாறு நிரம்பவில்லை. ஆகவே உலக அனுபவம் போதாது. திடீரென உள்ளக் கிளர்ச்சியும், கொதிப்புங்கொண்டு அதிக்கிரமம் புரிதல் அடாது. முகம்மதிய அரசின்கீழ் நாம் வாழவேண்டியிருப்பதால், அதன் பலாபலன் நம்மைப் பற்றியே நிற்கும். உன்னைப்போல் கண்மூடித்தனமாகக் கருமம் புரிந்திருப்பின், நான் இந்த உயர்பதவி பெற்றிருக்க இயலுமோ? ஆமது நகர அரசில் அளவற்ற அல்லலுக்கு ஆளாகிய பின்னரே, விஜயபுரி வேந்தில் மேன்மை பெறலானேன். தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடத்தல் தநயன் கடமையன்றோ? கோபமும் தாபமும் ஏன்? வேந்தன் சீறின் ஆந்துணையில்லை என்பதை எண்ணிப்பார். கொற்றவைக்கு ஒரு கொழுகொம்புபோ லிருப்பின், நாம் நலமும் பலமும் பெறலாம்," என்று பலவாறு புத்திகூறினன். பிதாவின் வாசகம் முற்றிலும் கேட்ட சிவாஜி தனது வாய்திறந்து வார்த்தை எதுவும் விளம்பவில்லை. ஷாஜி அதுகண்டு, தேவி ஜீஜாபாயைக் கொண்டும் போதம் புகட்டினன். அதற்கு வீரசிவாஜி, "இனிய தாய் தந்தையர்காள்! தாங்கள் உரைக்கும் வசனத்தைத் தட்டி நடத்தல் பெருமையன்று; ஆயினும் எனது உள்ளமோ அன்னிய அரசினுக்கு உட்பட்டுழைக்க ஒருப்படவில்லை. நமது சமயத்துக்குப்

பங்கம் நேருவதுகண்டு, யான் எங்ஙனம் சகிக்க இயலும்? ஆண்டவன் சித்தம் எங்ஙனமாயினும், முகம்மதிய அரசின் உப்பைத் தின்று, உடலை வளர்க்க எனது உள்ளம் ஒவ்வாது. இங்ஙிலையில் அடியேனை வேறிடத்திற்குஅனுப்பி விடுதலேமேலாகும். அவ்விதம் செய்யின், நீங்கள் நிம்மதி பெறுவீர்கள். இவ்வாறு யான் உரைக்குங்காலையில், மாதா பிதாக்களின் மொழிகளை யான் மீறி நடப்பதாக நீங்கள் எண்ணுதல் கூடாது; நீவிர் இருவரும் எனக்கு ஆசி பல கூறி அருள்புரிய வேண்டும்,'' என்று புகன்றனன்.

இங்ஙிலையில் இராஜா ஷாஜி தனது பிரிய தோழன் மீர் ஜம்லா என்பானுடன் கலந்துபேச, அவ்விருவரும் சமயம் பார்த்துச் சுல்தான் சமுகம் சென்றனர். மீர் ஜம்லா அங் நரபதியை நோக்கி, "அரசே! தாங்கள் நம் குடிமக்களுக் குத் தாயும் தந்தையும் ஆவீர். இந்துக்களே நமது மக்க ளில் பெரும் பகுதியினர். பசுவதையும் கோமாம்சக் கடைகளும் இந்துக்களைப் பெரிதும் புண்படுத்துகின்றன. உதாரணமாக, பசுவதையைக் கண்டு பேசாமலிருப்பதா என்று சிவாஜி தனது தந்தையின்மீது பிணங்கி, நமது அர சவைக்கு வரவும் மறுக்கின்றான்,''என்று நயம்பட உரைத் தான். சுல்தான் அதுகேட்டு, "இனி நகர எல்லைக்குள்ளே பசுவதையும் கோமாமிச விற்பனையும்கூடா,'' என்று கட் டளை பிறப்பித்தனன். உடனே மாமிசக்கடைகள் அனைத் தும் நகரைவிட்டு வெளியே போய்விட்டன. சிவாஜி அச் செய்தி அறிந்து, அரசவைக்குச் செல்ல உடன்பட்டான். எனினும் சிவாஜியின் போக்கையும் நோக்கையும் கண்டு ஷாஜி, ஜீஜாபாய்ஆகிய இருவரும் அவனைப் பூனாநகருக்கு அனுப்பிவிடுவதே நலம் என்று உறுதிகொண்டனர். அவ்

வாறே சிவாஜி தனது தாயுடன் பூனாநகரம் போக ஏற்பாடாயிற்று. அஃதறிந்த சுல்தான் ஒருதினம் சிவாஜியின் மணவினையைக் குறித்து ஷாஜியுடன் பேசினான். பூனாநகரில் முன்னதாகவே விவாகம் நடந்துவிட்டதாக ஷாஜி சொல்ல, சுல்தான், "நன்று! நன்று! வடிவழகுடைய அவ்வாலிபனுக்கு மணவினை நடந்ததை நானும் காணவில்லை; நீயும் கண்ணாரக்கண்டு களிக்கவில்லை. ஆதலின், மீண்டும் ஒரு குமரியை அவன் நமது நகரில் மணத்தல் வேண்டும். நாமிருவரும் அதனை நடத்திவைத்து ஆனந்தம் கொள்வோம்," என்று அன்பு ததும்பப் பேசினன். இராஜா ஷாஜி அதற்கு இசைய, சிவாஜிக்கு மீண்டுமொரு விவாகம் விஜயபுரியில் விமரிசையாக நடந்தேறியது. சிவாஜிக்கு மறுமனைவியாக வாய்த்தவள் சூரியாபாய். அவ்விவாகம் நடந்த பின்னர், சிவாஜியும் அவன் தாயும் பூனா நகரம்போய் வசித்துவரலாயினர். அச் சமயம் சிவாஜிக்கு வயது பதினாறு.

பதினாறாண்டு நிரம்பி நின்றதும், எத்தகைய வாழ்வு கொள்வதென அவ் வீரமகனுக்குச் சிந்தை பிறந்தது. தந்தை தேடிவைத்துள்ள ஜாகீரில் சுகமே யுண்டு, இன்பத்தில் புகுந்து, இனிமையாக வாழ்வை நடத்த ஷாஜியின் மைந்தன், மாலவனது பேரன், மனம் ஒப்புவனோ? தாதாஜி சொல்லி வந்தவண்ணம், விஜயபுரி வேந்திலே படைத்தலைமை வகித்து, பராக்கிரமம் காட்டிப் பெருமை பெறவும் அவனது மனம் இடம்தரவில்லை. டில்லியரசிலே பதவிபெற்றுப் பெருவாழ்வு எய்தவும் சிவாஜி விரும்பவில்லை. மகாராஷ்டிரர் அனைவரையும் ஒன்றுதிரட்டி, வீரம் ஊட்டி, மன்னவனாக வேண்டுமென்னும் எண்ணமே அம் மைந்தனிடம்,

குடிகொண்டிருந்தது. சிவாஜியின் மனநிலை கண்டதும் தாதாஜி நடுக்கங்கொண்டனன். வீரமகனுக்கு வரவிருக்கும் பெருவாழ்வினை அத் தாதாஜி கூர்ந்தறியவில்லை. உள்ளது கொண்டு உள்ளங் குளிர்வோம் என்னும் தன்மை வாய்ந்த தாதாஜி யாது செய்வான்? உடனே சிவாஜியின் நினைவைக் குறித்து ஷாஜிக்கு எழுதியனுப்பினன். ஈசன் எண்ணியவண்ணமே எதுவும் நடக்குமென நவின்று, ஷாஜியும் வாளாவிருந்துவிட்டான். முகம்மதிய அரசின் நட்பை நாடி வாழ்வதே நலமாகும் என்று தாதாஜி செப்பியதற்கு, சிவாஜி, "அருமை ஐய! வேற்றரசில் வேலைபெற்று வாழ, யான் விரும்பேன். அயலரசில் சேவகம் புரிந்து, தந்தை கொண்ட ஜாகிரில் சுகித்திருக்கவும் சம்மதியேன். எனது தோள் வலிகொண்டு தனியரசு காண முயலாநிற்பேன். ஆண்மைகொண்டு வாழாவாழ்வு என்ன வாழ்வு? மாற்றரசின் விளைவாக இந்து சமயமும், சாதியும் சீர்குலைந்துவிட்டன. தேசமும் சமூகமும் தக்க நாதனைவேண்டி ஓலமிடுங் காலையில், அடியேன் வாளாவிருப்பதோ? ஆண்டவனது அருள்கொண்டு, பிற்காலத்தில் பெருமிதங்கொள்ள முயலுதலே எனது ஆவல்," என்று துணிவுபடக் கூறினன். அதன் பின்னர் தாதாஜி ஏதும் பேச வில்லை.

சிவாஜி தனது தோழருடன் அடிக்கடி ஜாகிரில் சென்று பற்பல இடங்களைப் பார்வையிட்டனன். அக் காலையில் அவன் ஆங்குள்ள பாதைகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், அரண்கள், கோட்டைகள் இவற்றை உற்றுநோக்குவான்; பூமியின் இயற்கை நிலையை எண்ணிப் பார்ப்பான்; மலையுச்சியாயினும், விரைவில் ஏறி நான்கு திசைகளையும் நோக்கி யுணர்வான். அங்ஙனம் இரவும் பகலுமாக ஓயாது

எங்கும் திரியும் சிவாஜியைக் கண்டு அங்குள்ள மக்கள் அனைவரும் களிப்புடன் விரைந்து வந்து அவனை வணங்குவர்; அப்பொழுது சிவாஜி மலர்ந்த முகமும் இனிய சொல்லும்கொண்டு வார்த்தையாடி, அவர்களது மனத்தைக் கவர்வான். இளவரசின் வடிவழகையும் தோற்றத்தையும் கண்டு, அவர்கள் அவனிடம் பக்தி விசுவாசம் கொள்ளத் தலைப்படுவர். தன்னை வந்து காணும் மக்களில் ஏழை எளியவருக்கும் அதிகார ஊழியர்களுக்கும், சிவாஜி தான தருமமும் சம்மானமும் செய்வது வழக்கம். அதனால் செலவு மிதமிஞ்சி வளர்ந்து வரவே, தாதாஜி முணுமுணுத்தனன். சிவாஜியோ, "என் ஐயனே! உமக்கேன் கவலை? யான் என் தந்தையின் அநுமதி பெற்றுத்தருவேன். நீவிர் நிம்மதி கொள்க," என்றனன். அவ்வுரை கேட்டதும், வேதிய தாதாஜி மோனம் பூண்டு முணுமுணுக்கவும் இல்லை. சிவாஜியின் நடையும் உடையும் கண்டு பெரிதும் பரவசங்கொண்டனர் மாவலர் என்னும் வகுப்பினர். நாளடைவில் அன்னார் சிவாஜியைத் தெய்வம் போல் கொண்டாடத் தலைப்பட்டுவிட்டனர். அவ் வகுப்பினரிலே ஈசாஜி, தாணுஜி, பாஜி ஆகிய மூவரும் சிவாஜியின் உயிர்த்தோழராகவும் உற்ற துணைவராகவும் ஆயினர். சிவாஜிகொண்டுள்ள கருத்தில் தாதாஜி ஈடுபடவில்லையாயினும், ஜாகீரில் வேலைபார்க்கும் அதிகாரிகளும், ஊழியர்களும் முழுமனதுடன் ஈடுபட்டுவிட்டனர். ஆங்காங்கு நிலவரி தண்டுவோர் அதனைக் கொணர்ந்து தாதாஜியிடம் ஒப்படைக்குங் காலையில், அன்னாரை சிவாஜி தனிமையில் அழைத்துச் சென்று, தனது கருத்தை உணர்த்துவான்; தந்தையின் ஜாகீரை நன்குணர்ந்து அங்குள்ள அதிகாரிகளை

வசஞ்செய்துகொண்ட பின்னர், தன் மதிகொண்டு அயல் ஜாகிர்களின் நிலையையும் வலியையும் கூர்ந்தறிந்து கொண்டனன். இங்ஙனம் பலவகையாலும் தனியரசுக்கு அவன் அடிகோலி வருவதைப் பலர் உணரவில்லை. ஆயினும் சிலரோ அவனது கருத்தை ஒரு சிறிதுணர்ந்து, அவன் ஏவின வேலையைப் பொறுப்புடன் ஆற்றக்காத்துநின்றனர்.

## 3. சிவாஜியின் எழுச்சி

ஷாஜியின் ஜாகீரைச் சுற்றியுள்ள நாடுகளில் முகம்மதிய ஆட்சி பரவிநின்ற போதிலும் அஃது இன்னும் நன்கு வேரூன்றவில்லை என்பதையும், அயலகத்தேயுள்ள கோட்டைகளையும் மலைநாடுகளையும் கைப்பற்றுதல் எளிது என்பதையும், சிவாஜி அறிந்துகொண்டனன். அக்கோட்டைகளும் காவற்படைகளால் தக்கபடி பாதுகாக்கப்படவில்லை என்பதும் வேவுகாரர் மூலம் சிவாஜிக்குத் தெரிந்தது. பூனா நகருக்கு இருபது மைல் தூரத்தில் தோரணம் என்னும் கோட்டை ஒன்றுண்டு. அக் கோட்டையின் காவலர் மழை நாளிலே கோட்டையில் தங்கியிராமல், மலைச்சரிவில் வசித்துவந்தனர். சிவாஜி, சமயம் பார்த்து, உயிர்த்தோழரான ஈசாஜி, தானாஜி, பாஜி ஆகியமூவரையும் அனுப்பி, சண்டை சச்சரவின்றித் தந்திரமாக அக்கோட்டையை எளிதிற் கைப்பற்றிக் கொண்டனன். அஃதறிந்த கோட்டைக் காவலரிலே சிலர் கோபங்கொண்டெழுந்தனர். சிவாஜியோ காசை வீசியெறிந்தும், அன்னார் சினந் தவிர்ந்து சினேகமாயினர்; பின்னர், "அரசின் நலத்தைக் கருதியே யான் இக்கோட்டையை வசஞ்செய்து

கொள்ள நேர்ந்தது; இன்றளவும் கிடைத்த இறைப்பணத்தினும் சிறிதுகூட்டித்தரவும் சம்மதமே,'' என்று விஜயபுரி வேந்தனுக்குச் சிவாஜி ஓலை போக்கினன். இதற்கிடையில் அக்கோட்டையைப் பழுதுபார்க்கும் வேலை செவ்வனே நடைபெற்றது. அப்போது பூமியைத் தோண்டுகையில் பாக்கிய வசத்தால் பெரும்புதையல் ஒன்று அகப்பட்டது. அம்மை பவானியின் அருளால் அத் திரவியம் கிடைத்ததென அவ்வீரன் களித்து, படைக்கலங்கள் பலவும் வாங்கி வைத்தான்; அக்கோட்டையைப் புதுப்பித்துப் பிரசண்ட கோட்டை என்று அதற்கு வேறு பெயரிட்டான். அக்கோட்டைக்கு அருகே, துர்க்கதேவி என்னும் ஒரு குன்றிருந்தது. போர்நிகழுங் காலங்களிலே அது தக்க தற்காப்பினுக்கு உரிய நல்லிடமாகும். அதுகண்ட சிவாஜி, அவ்விடத்திலே புதிதாக ஒரு கோட்டை கட்டி, அதற்கு இராஜ கோட்டை எனப் பெயர் சூட்டினன். பலர் அங்கே வந்து குடியேறத் தலைப்பட்டனர். சிவாஜியின் சீரிய வீரச் செயல் கண்ட வாலிபரிலே பலர் வியப்பெய்தி அவனது படைவகுப்பில் சேர்ந்து கொண்டனர். அன்னவரில் அந்தண குமரர் அதிகம். விஜயபுரி அரசின் பிரதேசங்களை வீரசிவாஜி கைப்பற்றுவது கண்டு, தாதாஜி தடுமாற்றங் கொண்டு, "மகனே! எண்ணித் துணியாது கருமம் புரிந்துளாய். விஜயபுரி வேந்தன் வாளா விரான். தந்தை ஷாஜிக்கும் எனக்கும் கடுந்தண்டனை நேருவது திண்ணம். இளங்கன்று பயமறியாது என்று கருமம் புரிவதோ?'' என்று கடுத்துக் கூறினன்.

சிவாஜி அதுகேட்டுச் சிறிதும் சிந்தை திரியவில்லை; வாயும் திறக்கவில்லை. தாதாஜிக்கு அதுவே வியாகூலமா



வா லப ஆ




சிவாஜியும் இராமதாஸனும்

யிற்று. அவ்வந்தணன் அன்றுமுதல் சிவாஜியினிடம் ஜாகீரின் நிர்வாகத்தை விட்டுவிட்டனன். வீரமகனது படபடப்பைக் கண்ட தாதாஜிக்கு மனநோய் வளர உடலும் நோய் கொண்டது. சிவாஜி இரவுபகலாக உடனிருந்து தக்க பணிவிடை புரிந்தனன். ஜீஜாபாயோ அரிய மருத்துவரை வரவழைத்து வைத்தியம் செய்வித்தாள். எனினும் நோய் முற்றியது; அந்தியகாலமும் கிட்டிற்று; அப்பொழுது தாதாஜி தன் அருகே இருந்த சிவாஜியை அழைத்து, ஆசி கூறி, பிற அதிகாரிகளையும் விளித்து, "இன்றுமுதல் சிவாஜியே உங்கள் தலைவன். அவனிடம் ஜாகீரை ஒப்படைத்துவிட்டேன். அவனிடம் அன்பும் அடக்கமும் காட்டிவருதல் உங்கள் கடன்," என்று கூறிச் சிவாஜியைக் கட்டியணைத்து, "என் குழந்தாய்! சுகமாயிரு. வீறும் வாழ்வுங்கொண்டு வெற்றியே பெறுக; நாடும் நம்மவரும் நலம் பெறுக," என்று கூறி, எழுபதாம் ஆண்டில் கண்மூடிவிட்டான். தந்தையினும் அரிய தாதாஜியின் குடும்பத்திற்கு அன்றுமுதல் கொழு கொம்புபோல் ஆயினன் சிவாஜி.

தாதாஜி காலகதியான பின்னர், சிவாஜியே சர்வாதிகாரியாயினன். ஜாகீரிலே ஒரு பகுதிக்கு ஷாஜியின் இரண்டாம் மனைவியின் சகோதரன் சாம்பாஜி என்பவன் தலைவனாக இருந்தனன். அகந்தையும் அசூயையும் அச் சாம்பாஜியிடம் குடிகொண்டிருந்தன. அப் பகுதியின் கணக்கு வழக்குடன் வந்து தன்னைக்காணவேண்டுமென்று சிவாஜி அவனுக்கு ஆள் போக்கினன். சாம்பாஜி அதைப் பொருட்படுத்தவில்லை. மேலும் அவன், "ஷாஜி உயிருடன் இருக்கையில் சிவாஜி தலைவனாதல் எங்ஙனம்? தலையிருக்க வால் ஆடுவதோ? ஆண்மை யிருந்தால் விஜயபுரியின் நாடு

களைக் கைவசஞ் செய்துகொண்டு களிக்கலாம்! ஆயினும் அப்பழி ஷாஜியின் தலையிலன்றோ சாரும்? அறியாப் பிள்ளையின் அவல வாழ்வு நன்று நன்று!" என்று பழித்துப் பேசினன். அச்சொல்லைக் கேட்டதும் சிவாஜியின் உதிரம் கொதித்துப் பொங்கியது. உடனே அவன் இருநூறு மாவல வீரருடன் புறப்பட்டு, நள்ளிரவிலேயே சென்று சாம்பாஜியைச் சிறை செய்து, ஆங்கிருந்த பொன்னையும் மணியையும் தன் கைவசம் செய்துகொண்டான். எனினும் சாம்பாஜியை நகைத்து எள்ளிப்பேசி இகழாமல், அவனது பதவிக்குரிய மரியாதை காட்டித் தனக்குத் துணையாமாறு பெரிதும் வேண்டிக்கொண்டான். சாம்பாஜி அதற்குச் சம்மதியாதுபோகவே, அவனைத் தக்க பாதுகாப்புடன் ஷாஜியிடம் அனுப்பிவிட்டான். தாய் மாமனென்றும் பாராது, கண்ணோட்டமின்றி நடந்துகொண்ட குமாரனது துணிவு கண்ட மக்கள் பலரும், சிவாஜியிடம் அடக்கமும் பணிவும் ஆர்வமும் அன்பும் கொள்ளலாயினர்.

பூனா நகருக்கு மிக அருகேயிருந்த கோண்டணா என்னும் கோட்டை விஜயபுரி அரசருக்குச் சொந்தம். அதனைக் கைப்பற்றுவிடில், சிவாஜியின் ஜாகீருக்கு விஜயபுரியரசால் பேராபத்து நேரக்கூடும். முகம்மதியனொருவன் அக் கோட்டையின் அதிபதியாக இருந்தான். வாள்முனையில் அக்கோட்டையைக் கைப்பற்ற சிவாஜி விரும்பவில்லை; ஆதலால் பணத்தை யள்ளிக் கொடுத்து அம்முகம்மதியனை இணங்கச் செய்து கொண்டான். பின்னர் அக்கோட்டை வசமானதும், அதனைச் சீர்திருத்தி, சிம்மகோட்டை என்று அதற்குச் சிவாஜி பெயரிட்டனன்.

புனுவுக்கு அப்பால் மிகவும் பிரபலமான கோட்டை புரந்தரம். அது முன்னம் ஆமதுநகர அரசினுக்குச் சொந்தமாயிருந்தது. அவ்வரசு தடுமாறி நின்றகாலையிலே, வேதிய வகுப்பைச் சேர்ந்த நீலகண்டன் அதனை ஏகபோகமாக அனுபவித்து வந்தான். அவன் காலகதியானதும், அவனது மூத்தமைந்தன் நீலபந்தன் அதற்கு அதிபனாயினன். தனது இளைய சோதரர் இருவருக்கும் உரிய தாயபாகம் கொடுக்க அவன் விரும்பவில்லை; அவர்களைக் காப்பாற்றவும் அவன் மறுத்துவிட்டனன். ஆதலின், சோதரருக்குள்ளே சச்சரவு தோன்றியது. அதன் விளைவாக, அக்கோட்டை அயலார் வசப்பட்டு விடுமாயின், சிவாஜியின் ஜாகீருக்கு அனர்த்தம் விளையும். ஆதலால், அதனை வசஞ் செய்துகொள்ள வேண்டுமென்று சிவாஜி பெரிதும் விரும்பியிருந்த நிலையில், இளைய சோதரர் இருவரும் சிவாஜியிடம் வந்து முறையிட்டுக் கொண்டனர்; மூத்தவனும் அங்கு வந்து, தனது கட்சியை எடுத்துரைத்தனன். தீரவிசாரித்துத் தீர்ப்பு அளிப்பதாக அவர்களிடம் சிவாஜி கூறி, நல் உபாய மொன்றை நாடி யிருந்தனன்.

தீபாவளிப் பண்டிகை நாளன்று அம்மூவரும் சிவாஜியைப் புரந்தர நகரத்துக்கு அழைத்தனர். அங்ஙனமே சிவாஜி முந்நூறு மாவலவீரருடன் அங்குப் போய்ச் சேர்ந்தான். மூவரையும் முதலில் சமாதானஞ் செய்யக்கருதி, சிவாஜி முயன்று பார்த்தான். மூத்தவன் ஒரு வழிக்கும் உடன்படவில்லை. அந்நால்வரும் ஒருநாளிரவு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்த பின்னர், நீலபந்தன்மட்டில் நித்திரைக் கெழுந்து போகவே, சிவாஜி இளைஞர் இருவரையும் நோக்கி, “வீரர்காள்! இனி யான் செய்யக்கிடப்பது யாது

மில்லை. எதற்கும் இணங்கிவராத தமையனைச் சிறைசெய் தலே மேல்,'' என்று கூறினன். அவ்வளவில் இளைஞர் இருவரும் சென்று, மூத்தவனை மஞ்சத்திலேயே சிறைசெய்து விட்டனர். அதிகாலையிலே புரந்தரப் பிரதேசத்தை மூவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, கோட்டையைமட்டும் சிவாஜி வைத்துக்கொண்டனன். நாளடைவில் அம்மூன்று சோதரரும் சிவாஜியின் அரசிலே பெரும் பதவிபெற்றுப் பெருமையுற்றனர்.

விஜயபுரிக்குச் சொந்தமான மற்றொரு கோட்டை வைசாபுரமாகும். அதன் தலைவனை முகம்மதியன் ஷாஜியின் ஆப்த நண்பன். சாம பேத தானத்தினுல் அவனை வசஞ்செய்யச் சிவாஜி மிக முயன்றனன். முகம்மதியனே அதற்கு இணங்காமல், "தந்தைக்கு அடங்காப் பிள்ளையிடம் ஒருநாளும் தோழமை கொள்ளேன். தறுதலையான சிவாஜியிடம் சேவைபுரிய யான் இணங்குவனே?'' என்று ஏளனமாகப் பேசினன். சிவாஜி அது கேட்டுச் சிறிதும் சினங்கொள்ளாது, தனது துணைவன் ஒருவனைப் படைகளுடன் அனுப்ப, வைசாபுரம் இலகுவில் சிவாஜியின் வசமாயிற்று; உடனே சிவாஜி அம் முகம்மதியனைச் சிறை செய்யாமல், இழிவுங் காணுமல், பதவிக்குரிய பெருமையுடன் அவனை ஷாஜியிடம் அனுப்பிவிட்டனன்.

இங்ஙனம் விஜயபுரியின் கோட்டைகள் ஒவ்வொன்றையும் சிவாஜி கைப்பற்றிவர, அவ்வரசோ வாளாவிருந்தது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. சிவாஜியின் தந்தையான ஷாஜி கர்நாடக தேசத்திற் புகுந்து, அதன் பலபாகங்களைக் கைப்பற்றி, விஜயபுரியுடன் சேர்த்திருக்க, அவன் மைந்தனை சிவாஜியுடன் மாறுகொள்ள

அவ் வரசுக்கு மனமில்லை. சிவாஜியுடன் மாறுபடின், ஷாஜியின் அரிய உதவியை இழக்க நேரும். மேலும் அச் சமயம் விஜயபுரி வேந்தனாயிருந்த முகம்மது அடில்ஷா என்பான் சித்திரவேலைப்பாடான மாடமாளிகையும் கூட கோபுரமும் சமைத்துச் சிங்காரங் கொள்வதிலேயே சிந்தை கொண்டிருந்தனன். அன்றியும், சிவாஜியோ தனியரசு கொள்ளும் கருத்தை உள்ளடக்கி, விஜயபுரியின் நலத்தை நாடியே இங்ஙனம் நடப்பதாகப் பாசாங்கு பண்ணித் தனது எண்ணத்தில் கண்ணாயிருந்தனன்.

தன் வசமான ஒவ்வொரு கோட்டையையும் சிவாஜி பழுதுபார்த்து, முன்யோசனையுடன் நன்கு பாதுகாத்து வரத் திட்டம் செய்தான்; தாதாஜி வகுத்துப்போன வகையிலேயே வேளாளரிடமிருந்து பகுதிப்பணம் வசூலித்து வந்தான். எங்கும் நிலவளத்தைப் பெருக்க அவ்விளமகன் கொண்ட சிரத்தை கண்டு, அனைவரும் அவனிடம் ஆர்வங் கொள்ளலாயினர். அதிகாரிகள் அனைவரும் அவனது விரிந்த அறிவும் பரந்த ஞானமும் கண்டு வியந்தனர்; தமது ஆருயிரை அவனுக்காக வழங்கவும் துணிந்து நின்றனர். சிவாஜி நேர்மையுடன் ஜாகீரைப் பரிபாலித்து வந்தது ஒருபுற மிருக்க, விவேகமும் வீரதீரமும் விசுவாசமும் நம்பிக்கையுங் கொண்ட பலரைத் தன் வேலையில் அமர்த்திக்கொண்டான். சிவாஜியிடம் சேவிப்பதே பெருமையென எல்லாரும் எண்ணலாயினர். அவரவர் தகுதி கண்டு, ஏற்ற பதவியிலிருத்தவும், இனிய வெகுமதியளிக்கவும் சிவாஜி பின்வாங்கவில்லை. இவ்வித நற்குண நற்செய்கைகளால் கொஞ்சநாளிலே சிவாஜியின் சேனையில் பதினாயிரம் மாவல வீரரும் மூவாயிரம் குதிரை வீரரும் சேர

லாயினர். தந்தை தந்த ஜாகீரையும், தான் கைக்கொண்ட கோட்டைகளையும், தான் பின்பு காணப்போகும் தனியரசினுக்கு அடிப்படையாகக் கொண்டான் சிவாஜி. தனது தோழரின் உள்ளத்திலும் அவ்வுயரிய எண்ணம் உறுதி பெற, சாமராஜ நீலகண்டனை முதன் மந்திரியாக அவன் நியமித்தனன். பாலகிருஷ்ண தீட்சிதர் தனதிகாரியாக நியமனம் பெற்றார். இரகுநாத வல்லாளன் சம்பளந்தரும் அதிகாரியாயினன். இங்ஙனம் சிவாஜி ஒரு சிறிய சுயஅரசு வகுக்கலாயினன். ஆண்டில் இளைஞனாயினும், அறிவில் அவன் முதிர்ந்திருப்பதை அனைவரும் கண்டு களிகொண்டு, நற்றுணைபுரிய நாட்டங் கொண்டனர்.

ஒன்றன்பின் ஒன்றாகப் பல கோட்டைகள் சிவாஜியின் கையில் சிக்கின. அதுகண்டு அண்டையிலுள்ள ஜாகீர்தார்களிற் சிலர் சிவாஜியின்மீது அசூயை கொண்டனர். வேறு சிலரோ அச்சங்கொண்டு அடங்கி யொடுங்குவாராயினர். யூகம் மிகுந்த சிவாஜி பலதிசைகளிலும் தனது தோழரை ஏவி, ஆங்காங்கே விஜயபுரிக்கு உட்பட்டு ஒடுங்கி வாழும் மகாராஷ்டிர ஜாகீர்தார்களையும் தலைவர்களையும் வசஞ்செய்துகொள்ள முயன்றனன். சிவாஜியின்சேனை பெருகிவிடவே, ஜாகீரிலிருந்து கிடைத்த வருமானம் போதவில்லை. ஆதலின் தனவந்தர்களிடம் முதலில் கடன் கொண்டு, சேனையைக் காத்துவந்தனன். எனினும், சேனையின் மிகுதிக்கு ஏற்ப வருமானம் பெருகாதது கண்ட சிவாஜி சிந்தாகுலம் கொண்டான். இந்நிலையில் கல்யாணி மாகாணத் தலைவனான ஆமது முல்லனா என்பான் தான் செலுத்தவேண்டிய அரசிறையை விஜயபுரிக்கு அனுப்பும் செய்தி சிவாஜிக்கு எட்டியது. முப்பது பரி



பிறமாதர் பெற்ற தாயாவர்

வீரருடனும், பல காலாளருடனும் சிவாஜி சென்று வழி மறித்து அப்பணத்தைப் பறித்தனன். இதன் விளைவாக, சிவாஜிக்கும் முல்லனுவுக்கும் போர்மூண்டது. சிவாஜியின் படைத்தலைவனுன அப்பாஜி ஒரு பெரும்படையுடன் சென்று, கல்யாணிநகரைத் தாக்கி, முல்லனுவைச் சிறை செய்துவிட்டனன். சிவாஜி அச்செய்தி உணர்ந்து, நேரில் கல்யாணி நகரம் சென்று, முல்லனுவைச் சிறைவிடுத்து, பதவிக்குரிய மரியாதையுடன் அவனை விஜயபுரிக்கு விடுத்தனன்.

கல்யாணக் கோட்டையை அப்பாஜி முற்றுகையிட்டுத் தகர்த்தபொழுது, பதினறு வயது வாய்ந்து வடிவழகு கொண்ட முல்லனுவின் மருமகள் சிறையாயினள். அந்தப்புரத்திற்கு ஏற்ற அழகிய மங்கையொருத்தியைச் சிறைசெய்திருப்பதாக அப்பாஜி வெகு களிப்புடன் சிவாஜியிடம் கூறினன். வனப்புமிக்க அவ்வுத்தமியைச் சிவாஜி கண்டதும், "ஈசா! எனது அன்னையும் இவ்வம்மையை ஒப்ப வடிவழகுட னிருந்திருப்பின், யான் பேரழகுள்ள மைந்தனுகப் பிறந்திருப்பே னன்ருே?" என்று கூறி, மேலும், "தோழர்காள்! உண்மை வீரமுள்ளவன், பிற மகளிரை உடன்பிறப்பெனவும் தாயெனவும் கொள்ளலே கடமையாம். இவ் வுண்மையை அறியாமையினு லன்ருே இலங்காதிபனுன இராவணேசுவரன் குலத்தோடு மடிந்தனன். வாலியும் வல்லரக்கரும் நெறிதவறியதினுல் உயிரைப் பறிகொடுத்தனர். மானிடராகிய நாம் இதனை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டாமோ? அரசனுவான் அனைவரையும் தனது மக்களாகப் பாவிக்கவேண்டும். இன்றேல் அவன் தன் கிளையோடு நாசமுறுவான்," என்று கூறினன்.

சபையோரின் மனத்திலே அச்சொல் பசுமரத்தாணிபோல் பதியலாயிற்று. சிவாஜியிடம் சேவை செய்வதாயின், நன்னெறியினின்று இம்மியளவும் பிறழலாகாது எனவும் அவர்கள் அறிந்து, விவேகமும் ஜாக்கிரதையும் கொண்டனர். அப்பால், சிவாஜி அம் மாதைத் தனது சோதரியாகக் கருதி, ஆடையும் ஆபரணமும் அளித்து, வீரரை உதவியாக அனுப்பி அவளது மாமனிடம் சேர்ப்பித்தான்.

'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பதுபோல், சிவாஜி பெருமிதமான வெற்றிகொள்ளப் போவதற்கு அந்நிகழ்ச்சி ஓர் அறிகுறியாயிற்று. கலியாண கோட்டை வீழ்ந்தவுடன், ஏனைய கோட்டைகளும் எளிதில் அவன் கைவசமாயின. சதுர்வித உபாயத்தையும் சிவாஜி கையாண்டு வந்தனன். பணங்கண்டு இணங்கா வீரர் சிலர் இராஜதந்திர வலையில் படலாயினர். பகைவனது கோட்டைக்குள்ளே புகும்வகை யெதுவுமில்லையாயின், சிவாஜியின் மாவல வீரர் பரிகளுக்குப் புல்லுக்கட்டு சுமந்துசெல்லும் பணியாளர்போல் உள்ளே புகுந்து, புற்சுமைக்குள்ளிருந்த வீரவாளை உருவி, அக்கோட்டையின் காவலரைத் திடுக்கிடச் செய்து வெற்றிமாலை சூடுவர். இவ்விதம் தந்திரத்தால் பலகோட்டைகள் கைப்பற்றப்பட்டன. அதுகண்டு ஆங்காங்கு இருந்த இந்துமக்கள், இந்துக்களின் ஆட்சி ஓங்கப் போகின்றதென உள்ளங் களியாநின்றனர்.

சிவாஜியின் கைவசமான கோட்டைகளில் ஒன்று இலிங்கணு ஆகும். அதனைப் பழுது பார்த்தபின்னர், அதற்கு இராயகோட்டை என்று பெயர் சூட்டப்பட்டது. அந்நகரிலே ஆலயதரிசனம் செய்துவிட்டுத் திரும்புகையில், முந்நூறு வராகன் விலைகொண்ட விழுமிய பட்டாக்

கத்தியொன்று ஆங்குள்ள ஒரு தலைவனிடம் இருப்பதாகச் சிவாஜி அறியலாயினன். அதனை அவனிடமிருந்து பறித்து விடவேண்டுமென்று சிலர் கூறினர். அதற்குச் சிவாஜி "தோழரே! சுத்த வீரன் பிறர் பொருளில் ஆசைவைத்தல் ஆகாது," என்றனன். அச்சமயம் அவனது தோழர், மேற்கண்ட உடைவாள் கொண்ட தலைவனையணுகி "அன்ப! எங்கும் வெற்றிபெறு நிற்கும் வீரசிவாஜியுடன் நட்புக் கொள்ள இதுவே ஏற்றசமயம். நின்னிடம் உள்ள வெற்றி வாள் அச்சூரனுக்கே உரியது. அதனை யளித்து நட்புக் கொள்ளுதலே சாலச் சிறந்தது," என்றனர். அங்ஙனமே அத்தலைவன் உடைவாளை ஈந்து, சிவாஜியின் நட்பை நாடினன். சிவாஜியோ அவ்வாளுக்குரிய விலையைத் தந்து, அத்தலைவனை ஒரு தளகர்த்தனாக அமர்த்திக்கொண்டனன். அவ்வீரவாளின் அமைப்பும் தோற்றமும் சிவாஜியின் உள்ளத்தைக் கவர்ந்தன. ஆதலின், அவன் அவ்வாளினுக்கு அம்மைபவானி என நாமஞ்சூட்டி, நாள்தோறும் வணங்கி வரத் தலைப்பட்டனன். நவராத்திரிப் பண்டிகை தினங்களிலே பவானியின் சிலையருகே அவ்வாளை வைத்துப் பூஜித்து, அதனை அவன் வணங்குவது வழக்கம். படை கொண்டு புறப்படுவதாயின், அவ்வாளின்றி ஒரு நாளும் சிவாஜி வெளிக் கிளம்பான்.

சிவாஜி கொங்கணத்தின்மீது தண்டுகொண்டு சென்ற பொழுது, இராஜபுரி நகரைத் தாக்கி அதனைக் கைப்பற்றினன். அச்சமயம் பாலாஜி என்னும் பெரும்புருஷன் சிவாஜியின் உயிர்த்தோழனாக வாய்த்தனன். அவன் சரிதம் வெகு விசித்திரம். இராஜபுரியில் அதிபதியாக விளங்கிய முகம்மதியனிடம் அரிச்சந்திரன் என்பான்

அமைச்சுத் தொழில் புரிந்து வந்தனன். சிறு குற்ற மொன்றிற்காக அம்முகம்மதியன் ஆத்திரங்கொண்டு, அரிச்சந்திரனையும் அவன் சோதரனையும் கொன்றுகுவித்து, அவனது மனைவிமக்களை அரபியா நாட்டினுக்குக் கொண்டு போய், அடிமைகளாக விற்றுவரும் வண்ணம் ஆணை தந்தனன். அரிச்சந்திரனது மனைவி தனது மதிவன்மையால் மாலுமிகளின் மனத்தைக் கவர்ந்து, தன்னையும் தன் மக்களையும் இராஜபுரியிலேயே அடிமைகளாக விற்றுவிடுமாறு வேண்டினள். அவ்வாறே இராஜபுரியில் மாலுமிகள் விலைகூற, சங்கரன் என்பான் அவர்களை விலைக்கு வாங்கினன். தான் அவர்களுக்கு நெருங்கிய உறவினன் என்பதை அச்சங்கரன் யாருக்கும் உணர்த்தவில்லை. அம்மாதின் மூத்தமைந்தன் பெயர் பாலாஜி; ஏனைய இருவரும் சிம்ஞஜி, சாமாஜி என்று அழைக்கப்படுவர். மூன்று குமாரருக்கும் அச் சங்கரன் கல்விபுகட்டி நற்பதவிக்குக் கொண்டுவந்தான். மூவரில் மூத்தவனான பாலாஜி, அரசாங்கத்திலே கணக்குவேலை பார்த்து வந்தனன். கொங்கணதேசத்தின்மீது சிவாஜி தண்டுகொண்டு வந்திருப்பதைக்கேட்டதும், பாலாஜி பரமானந்தமடைந்து, தனது குடும்பத்தின் கதையை விரித்துக் கூறி, சிவாஜிக்கு நிருபம் விடுத்தனன். பாலாஜியின் அழகிய கையெழுத்தைக் கண்டு களிகூர்ந்த சிவாஜி, அபயம் அளித்துப் பதில் கொடுத்தனன்; அவன் இராஜபுரியில் புகுந்ததும், ஓர் ஆள் விடுத்து, அப் பாலாஜியை வரவழைத்தான்.

வெற்றிவீரன் விரும்பி அழைத்த காரணத்தை உணராத பாலாஜியின் தாய், 'பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும் என்பது மெய்யாகுமோ?' என வருந்தி, சிவாஜி

யின் பாதம் பணிந்து, தனது கதையைக்கூறி அழுதுபுலம்பினள். அதுகேட்ட சிவாஜி பெரும்பரிவு கொண்டு, அம்மூதாட்டியை நோக்கி, "அன்னாய்! நேற்றுவரை உமக்குப் புத்திரர் மூவரே! இன்றுமுதல் நால்வர் ஆவர். அடியேனே உமது நாலாவது மைந்தன். என் சோதரர் அனைவரையும் நமது சேனையில் அமர்த்திப் பராமரிப்பேன். என் தாயே! இனிக் கவலைவிடுக," என்று பணிவுடன் பதில் அளித்தனன். பாலாஜியின் பேரறிவை உணர்ந்த சிவாஜி, தனது மெய்காவலருள் ஒருவனாக அவனை அமர்த்திக்கொண்டு, ஏனைய இருவருக்கும் ஏற்ற உத்தியோகம் தந்தருளினன். அச்சமயத்தில், சங்கரனுக்குரிய பொருளைக் கொடாமல், வேறுவேலையில் புகுவதெங்ஙனம் என்று பாலாஜியின் மனங் கலங்கிற்று. உடனே அத் தொகையைக் கொடுத்துவிடுமாறு சிவாஜி தனது தனாதிகாரிக்கு ஆணையிட்டான். அப்பால் பாலாஜி, சிவாஜியின் உயிர்த்தோழரில் சிறந்தவன் ஆயினன். பாலாஜி அறியாத அந்தரங்கம் எதுவும் சிவாஜியிடம் இராது. கடிதப்போக்குவரவு எல்லாம் பாலாஜியின் மூலமே நடந்துவரும். குறிப்பிற் குறிப்பறியும் கூரிய அறிவும் சீரிய ஆற்றலும் பாலாஜியிடம் நிரம்பியிருந்தன.

போர்முனையிலே ஒரு சமயம் மும்முரமாகப் பாலாஜி முனைந்திருக்கையில், அதன் விபரத்தை உடனே எழுதியனுப்ப வேண்டுமென்று சிவாஜி கட்டளையிட்டனன். கண்ணிமைப் பொழுதும் வேறொன்றில் கவனஞ்செலுத்த முடியாவண்ணம், நள்ளிரவு வரையில் போர் வெகு கடுமையாக நடந்தது. ஆதலின் சிவாஜி ஆணையிட்டபடி செய்யப் பாலாஜிக்கு அவகாசமில்லை. நள்ளிரவில் சிவாஜி பாலா

ஜியை வரவழைத்து, "அறிக்கை எங்கே?" என்று வினவி னன். பாலாஜி என்ன செய்வான்? அவகாசமில்லை என்று ரைப்பின், அனர்த்தம் விளையும். ஆகவே, 'அறிக்கை இதோ உளது,' என்று விடைதந்தனன் பாலாஜி. "அங்ஙனமாயின் அதனைப் படிப்பாயாக" என்று சிவாஜி செப்ப, பாலாஜி ஒரு வெறுந்தாளைக் கையில் தாங்கி, எழுதியுள்ள அறிக்கையைப் படிப்பதுபோல், தட்டாமல் தயங்காமல் படிக்கலானன். அந்த அறிக்கையின் வாசகத்தையும் நேர்மையையுங் கண்டு, சிவாஜி ஆனந்தங்கொண்டு, பாலாஜியின் திறமையைப் புகழ்ந்து பேசினன். பாலாஜியின் அருகே பந்தம் பிடித்துநின்ற பணியாளன் அந்த அதிசயங்கண்டு விலாவெடிக்க நகைத்திட, உடனே சிவாஜி உண்மையை உணர்ந்தும், பாலாஜியைச் சினந்துரையாமல், அவனது ஞாபகசக்திக்கு மெச்சிப் பரிசும் ஈந்தான்.

சிவாஜி சாம தான பேத தண்டமென்னும் நால்வகை உபாயங்களையும் ஏற்றவாறு கையாண்டு, பல கோட்டைகளைக் கைப்பற்றலாயினன். தோல்வியுற்ற எதிரிகளின் மனத்தை அவ் வெற்றிவீரன் புண்படுத்தாது தக்கவாறு அன்னவருக்கு மரியாதை செய்துவர, அப்பகைவர்களே பின்னர் அவ்வீரனுக்கு அந்தரங்க நண்பராகித் தம்தம் உடல்பொருள் ஆவி யனைத்தையும் வழங்க முன்வருவாராயினர்.

## 4. பழிக்குப் பழி

சிவாஜியின் வீரச்செயல்களைக் கண்டு, விஜயபுரி வேந்தன் சிறிதுகாலம் வாளாவிருந்தனன். ஆயினும் கல்யாண மாகாணத்திலிருந்து வந்த கப்பத்தொகையைப் பறித்தது மன்றி அந்த நாட்டையும் சிவாஜி கைப்பற்றியபின், விஜய புரி அரசு பரபரப்புக் கொள்ளலாயிற்று அந்தரங்கத்தில் ஷாஜியின் ஆதரவில்லாது சிவாஜி அவ்வாறு விளைபுரி யான் என்று விஜயபுரி சுல்தான் தீர்மானித்தான். ஆயி னும் ஷாஜியைப் பகைத்துக்கொள்ள அவ்வேந்தன் துணிய வில்லை. சிவாஜியின்மீது படைகொண்டு சீறி எழவும் இயல வில்லை. ஏனெனின், வடக்கே மொகலாயர் தொல்லை இழைக்கா நின்றனர். தெற்கிலோ, பாளையக்காரர் பதட் டங்கொண்டு திரிந்தனர். விஜயபுரியின் வேந்தன் அந்நிலை யில் ஷாஜிக்கு "உன் மைந்தனது மமதையை அடக்கா விடின் அனர்த்தம் நேரும்'' என ஒரு கடிதம் விடுத்தனன். ஷாஜியோ, "அரசே! மகனது செய்கைக்குத் தந்தையின் மீது சினங்கொள்ளுதல் அழகாமோ? சிவாஜியின்மீது தண்டொன்றை யனுப்பித் தண்டிப்பதாயின் எனக்கு ஆட்சேபமில்லை,'' என்று பதில் வரைந்தனன். அதைக் கண்ட அடில்ஷா ஆத்திரங்கொண்டு, வஞ்சனை வழியில் ஷாஜியை வசஞ்செய்து சிறைசெய்யும் வண்ணம் பாஜி என்னும் ஒரு ஜாகீர்தாரனுக்கு உத்தரவனுப்பினன்.

அச்சமயம் ஷாஜி செஞ்சிக் கோட்டைக்கருகில் விஜய புரியின் சார்பாகச் சமர் முறுக்கி நின்றனன். ஒருநாள் பாஜி, ஷாஜியிடம் வந்து இனிமையாகப் பேசி விருந்துக்கு அழைத்து உணவு உண்ணுங்கால் அவனைச் சிறைப்படுத்தி

விலங்கிட்டு, அடில்ஷாவின் சமுகம் அனுப்பினன். தன் மீது யாதொரு தவறுமில்லையென ஷாஜி எடுத்துக் கூறி யும், சுல்தான் நம்பாது அவனை உயிருடன் நிற்கவைத்து அவனைச் சுற்றிக் கல்சுவர் எழுப்ப ஆணையிட்டான். கொத்தர் ஒவ்வொரு கல்லாக வைத்துச் சுவர் எழுப்புகை யில், "உண்மையை உரைத்து உயிர்ப்பிச்சை பெறுக," என்றனன் சுல்தான். ஷாஜியின் கழுத்தளவு சுவர் எழும் பிய காலத்தும், ஷாஜி 'அரசே! யான் நிரபராதி' என்று பகர்ந்துவர, சுல்தான், "அங்ஙனமாயின் உடனே இவண் வந்து சேரும் வண்ணம் சிவாஜிக்கு நிருபம் வரைக. வாராதுபோயின், உடனே தலைக்குமேல் சுவர் கிளம்பி விடும் என்றும் கூறுக," என்று கர்ஜித்தான்.

அங்ஙனமே ஷாஜி எழுதி விடுத்த கடிதங்கண்டு, செய்வது இன்னதெனத் தோன்றாது மனம் தத்தளித்து நிற்கும் சிவாஜியை நோக்கி அவனது மனைவி சாயாபாய், "என் ஐயனே! வீண் கலக்கமேன்? பேதையாகிய யான் ஒன்று கூறுவேன். ஆண்மையுடன் வாழ்தல், இன்றேல் ஆண்மை குலையாது வீழ்தலே மேன்மை என்பேன். ஆண்ட வன் ஒருவன் உளன். அரசியல் துறையை ஆராய்கையில், உறவின்முறை ஒரு பொருட்டாமோ? நம் தந்தை ஷாஜி யும் இவ்விதமே இயம்புவார் என்பது திண்ணம்," என்று விளம்பினள். அன்னை ஜீஜாபாயும் அறிவுடைய அமைச் சரும் அதுவே சரி என்றனர். சிவாஜி அம்மை பவா னியை நினைந்து, "அன்னாய்! யான் தனியரசும் காண வேண்டும்; எந்தைக்கும் இடையூறு நேரலாகாது. இதற்கு வழி யாதோ அறிகிலேன்," என்று வேண்டிக் கொண் டனன். பவானியருளால் அவன் தெளிவுகொண்டு,

தக்கிணத்திலே டில்லியரசின் பிரதிநிதியாக விளங்கிய ஷாஜஹானது மைந்தன் மூரத் என்பவன்மூலம் டில்லி பாதுஷாவுக்கு விண்ணப்பம் ஒன்று விடுத்தனன். தக்கிணத்திலுள்ள முகம்மதிய அரசுகளை மாய்த்துப் பேரரசு கொள்ளவேண்டுமென்ற ஆவல்கொண்ட டில்லி வேந்தன், ஷாஜி, சிவாஜி ஆகிய இரு பெரு வீரரின் பலத்தை நன்கறிந்தவன். ஆதலின் அவ்வேந்தன் 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததென' அவ் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, "இராஜா ஷாஜியை உடனே விடுவித்தல் வேண்டும்" என்று விஜயபுரிக்கு ஆணைபோக்கினன்; ஐயாயிரம் வீரர் அடங்கிய படைத்தலைவன் எனும் பதவியையும் பட்டத்தினையும் சிவாஜிக்கு வழங்குவதாக டில்லி யரசிலிருந்து சிவாஜிக்கு நிருபம் வந்தது. டில்லி பாதுஷாவின் கடிதம் கண்டதும், விஜயபுரி வேந்தன் அஞ்சி உடனே ஷாஜியை விடுத்தான். அதுமுதல் நான்கு வருஷம் விஜயபுரியிலேயே ஷாஜி வாளா வதிய நேர்ந்தது.

கர்நாடகத்திலிருந்து இராஜா ஷாஜி திரும்பிய காலந் தொட்டு, அங்கே விஜயபுரிக்கு உட்பட்டிருந்த நாடுகள் சீர்குலையலாயின. அதுகண்ட சுல்தான் வேறுவகையின்றி, ஷாஜியை அத் தேசத்திற்கு மீண்டும் அனுப்பவேண்டியதாயிற்று. ஷாஜி புறப்படுமுன் சிவாஜிக்கு, "வீரப்புதல்வ! பாஜி எனக்குப் புரிந்த உதவியை நீ நன்கறிவாய்; அவனிடம் நன்றிகாட்ட நீ தவறுவையோ? எடுத்த வேலையை இனிது முடிப்பாயாக. ஆண்டவன் அருளால் உனது ஆவலும் ஆசையும் கைகூடும்." என்று மறைபொருளாக ஒரு கடிதம் வரைந்தனுப்பிவிட்டுக் கர்நாடகதேசம் சென்றான். தந்தையின் கடிதத்தில் ஆணையும் ஆசியும் இருத்தல்

கண்ட சிவாஜி, பாஜியைப் பழிவாங்கக் காலங்கருதி இருந்தனன். விஜயபுரியிலேயே ஐந்தாண்டு (1649—1653) ஷாஜி கட்டுண்டு கிடந்தகாலேயில், சிவாஜி அவ்வரசின் பிரதேசங்களில் கண்வைக்கவில்லே. ஆனால் புதிதாக வசமான கோட்டைகளேச் செப்பனிட்டு, அரசியலே அவன் வளம்படுத்தி வந்தனன். தன் தந்தைக்காக டில்லியரசினுக்கு சிவாஜி விண்ணப்பம் விடுத்தநாள் தொடங்கி, டில்லியரசிலே வந்து சேர்ந்து, பெரும்பதவி பெறுமாறு ஷாஜஹான் பன்முறை சிவாஜிக்கு ஓலே போக்கியதுண்டு. அப்போது சிவாஜி, “ஆமது நகரம், ஐனுர் ஆகிய மாகாணங்களின் இறைப்பணத்தில் எங்களுக்குப் பரம்பரையாகப் பங்குளது. அம் மாகாணங்கள் மொகலாயரின் வசமானதுமுதல், அப் பகுதித்தொகை கிடைக்கவில்லே. ஆதலின் அத்தொகை பெறும் உரிமையை எனக்கு அளித்தல் வேண்டும்,” என்று கூறி, நேரில் டில்லிக்குப்போக உடன்படாமல் வெகு தந்திரமாகக் காலதாமதம் செய்து வந்தான்.

இந்நிலேயில் ஷாஜஹான் தன் மைந்தன் அவுரங்கசீபை ஒரு பெரும்படையுடன் அனுப்பி, விஜயபுரியரசை வென்று திரும்புமாறு ஆணைதந்தனன். அங்ஙனமே அவுரங்கசீப் தண்டுடன் கிளம்பிவந்து போர்புரிய, விஜயபுரியின் கோட்டை கொத்தளங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மொகலாயரின் வசமாயின. மொகலாய சேனேயின் படையெடுப்பால் தனது நாடுகளுக்கும் பங்கம் நேரக்கூடுமெனக் கருதிய சிவாஜி, “இளவரசே! அடியேன் பாதுஷாவுக்குச் சேவைசெய்யக் கடமைப்பட்டவன். விஜயபுரியுடன் நடக்கும் சமரில் தங்களுக்கு உதவிசெய்ய அடி

யேன் காத்திருக்கின்றேன். ஆனால் விஜயபுரி அரசி லிருந்து எனது கையில் சிக்கியுள்ள கோட்டைகளுக்கும் நாடுகளுக்கும் உமது படைஞரால் யாதோர் இடையூறும் நேரலாகாது; கொங்கண நாட்டிலே விஜயபுரிக்குச் சொந்த மான நாடுகளைக் கவர்வதில் யான் துணைபுரிவேன்,'' என்று கூறி, அவுரங்கசீப்புக்குத் தூது போக்கினன். சிவாஜியின் வீரதீரத்தை உணர்ந்து, "அங்ஙனமே ஆகுக,'' என்று பதில் அளித்தனன் மொகலாய இளவரசன். நாள் சில சென்றதும், டில்லியரசுடன் சிவாஜியை இணைத்துவிட வேண்டுமென்றே அவுரங்கசீபு ஆசைகொண்டிருந்தான். வீரசிங்கமாகிய சிவாஜிக்கு அவ்வலையில் அகப்பட்டுக் கொள்ள விருப்பமில்லை. ஆதலின் டில்லி பாதுஷாவிடம் அதிக அன்பும் விசுவாசமும் உண்டென்று சிவாஜி வாய் கொண்டு விளம்பி வந்தனனேயன்றி, உண்மையில் வணங்கி வாழ ஒரு நாளும் நினைத்தவனல்லன். அந்நாளில் மொக லாய சேனையும் விஜயபுரி வீரரும் கடும்போர் புரிந்து நிற்கையில், மகாராஷ்டிர அரசை மேன்மேலும் பெருக்கு வதில் சிவாஜி சிந்தை செலுத்தினன்.

ஆமது நகரம், ஜூனார் ஆகிய மாகாணங்களின் பகு திப்பணத்தில் தனக்குப் பங்குண்டென்று சிவாஜி டில்லி யரசினுடன் வாதாடி வந்தனன் அல்லவா? ஷாஜஹா னே அதற்குச் சம்மதிக்கவில்லை. மொகலாய சேனை விஜய புரி அரசுடன் சமர்செய்து நிற்கும் சமயம் பார்த்து, ஓர் இரவிலே சிவாஜி திடீர் என்று ஜூனார் நகரிலும் ஆமது நகரிலும் புகுந்து கொள்ளையாடினன். அங்குக் கிடைத்த நிதிகொண்டு தனது குதிரைப் படையைப் பெருக்குவதில் சிவாஜி முனையலானான். சிவாஜி அங்ஙனம் தனது வலி

யையும் வாழ்வையும் பெருக்கி வருதல் கேட்ட அவுரங்க சீபுக்கு அச்சம் உண்டாயிற்று. எனினும் விஜயபுரியை மாய்த்தபின்னர், சிவாஜியை மடக்கவேண்டும் என்று அவுரங்கசீபு கருதினன். அச்சமயம் ஷாஜஹான் படுநோய் கொண்டுவிடவே, அரியணை குறித்து அவன் மைந்தருக்குள் பெருஞ் சச்சரவு தோன்றியது. அவுரங்கசீப் உடனே போரை நிறுத்தி, டில்லிக்குப் பயணமாயினன். டில்லி சென்றதும் தந்தையைச் சிறையிலிட்டு, சோதரரிடம் ஒவ்வொரு குற்றத்தை ஏற்றி அன்னாரைக் கொன்று குவித்து, அரியணையில் அமர விரும்பினான் அவுரங்கசீபு. அதற்கிணங்க, அவன் தக்கிணத்திலுள்ள தோழருக்கும் பிறருக்கும் தூதுவிடுத்தனன். சிவாஜிக்கும் கடிதம் ஒன்று வந்தது. அரசை இச்சித்து அப்பனைக் காவலில் வைக்கவும், சோதரரை வஞ்சித்துக் கொல்லவும் துணிந்த அவுரங்க சீபுக்கு உதவிபுரிய சிவாஜி விரும்பாமல், அக்கடிதத்தை நாய்வாலில் கட்டி, அதனைக் குப்பைமேடெங்கும் தூரத்தினன் என்றும், இதுகேட்ட அவுரங்கசீப் அடங்காச் சீற்றங்கொண்டு "சமயம் பார்த்து இச்சிவாஜியைப் பழிவாங்காது விடுவதில்லை" எனச் சபதம் கூறியதாகவும், கன்ன பரம்பரைச் செய்தி யொன்று வழங்குகிறது.

இனி, கொங்கண தேசத்தில் சிவாஜி புகுந்து சிங்க நாதம் செய்துவருதல் கண்டு, விஜயபுரி சுல்தான் வெகுளி மிகக்கொண்டனன். படையொன்றை ஏவின், சிவாஜி மொகலாயரின் பக்கம் சேர்ந்து விடுவனே என்ற பயமும் ஒருபுறம் அவனை வாட்டியது. ஆதலின் அவன், முன்னம் ஷாஜியை வஞ்சனையாகச் சிறைசெய்ததுபோல், சிவாஜியையும் சிறை செய்யக் கருதினன். கொங்கணத்திலே சிவாஜியின் வச

மான புதிய இடங்களில் ஒன்றாகிய மகத நகருக்கு அடிக்கடி சிவாஜி போய்வருவதுண்டு. விஜயபுரி வேந்தனிடம் வேலை பார்க்கும் சாமராஜன் என்பானொருவன் அஃதுணர்ந்து சிவாஜியைச் சிறைசெய்து திரும்புவதாகப் புறப்பட்டான். ஜாவளி ஜாகீரின் அதிபனான சந்திர ராவ் மௌரி எனப் படுவான் அச் சதிக்கு உடந்தையாகி உதவி புரிந்தனன். வேவுகாரர் மூலம் அச்சதியாலோசனை சிவாஜிக்குத் தெரிய வந்தது. சாமராஜனது படைஞர் வந்து திடீரென்று சிவாஜியின் மாளிகையைச் சூழ்ந்து கொண்டதும், மாவல வீரர் சினந்தெழுந்து அப் படைஞரை முறியடித்தனர். சாமராஜன் உயிர்தப்பினால் போதுமென அஞ்சி, வாடிய முகத்துடன் விஜயபுரி சேர்ந்தனன்.

சந்திரராவ் மௌரியின் சதி கண்டதும், சிவாஜி கோபம் பொங்கிப் பழிவாங்க முயன்றனன். ஜாவளி என்ற நகரம் மகாபலேசுவரத்திற்கு அருகிலுள்ள மிகப் புராதனமான பிரதேசம். அதன் தலைவனான சந்திர ராவ் விஜயபுரியின் சிற்றரசரில் ஒருவன். அவனுக்கு அழ கிற் சிறந்த மகளிர் மூவர் இருந்தனர். சிவாஜியின் இளம் பருவத்திலே, ஜீஜாபாய் மகாபலேசுவரம் செல்வதுண்டு. அத்தருணம் சந்திரராவின் மகளிரது வனப்பைக் கண்டு வியந்து, ஒருத்தியை சிவாஜிக்குத் தரும்வண்ணம் ஜீஜா பாய் வேண்டிக்கொண்டனள். சந்திரராவ் தருக்கு மிகக் கொண்டு மறுத்துவிட்டனன்.

ஈது இங்ஙனம் இருக்க, சிவாஜி வாலிபப் பருவம் அடைந்ததும், சந்திர ராவின் குலநலத்தையும் உயர் வீரத்தையுங் கண்டு, "பெருவீர! நமது நாடும் நம்ம வரும் அன்னியரின் கையில் அகப்பட்டுழலுதல் அடுக்

குமோ? வேற்றரசினுக்குக் கப்பங் கட்டி வாழ்தல் ஒரு வீரனுக்குப் பெருமையாமோ? நீ விஜயபுரிக்குக் கப்பங்கட்டாமல் தனியரசாக வாழின் அது எனக்குச் சம்மதமே. விஜயபுரியை வேரறுக்கும் முயற்சியில் நீயும் என்னுடன் கலந்துகொள்ளல் ஆகாதோ?'' என்று பலவாறு சொல்லிப் பார்த்தனன். மௌரியன் அவ்வேண்டுகோளை மதிக்கவில்லை. எனினும், மீண்டும் ஒருமுறை முயன்று பார்க்கலாமென வீர சிவாஜி எண்ணியிருந்தனன். அச்சமயத்தில் தான், சிவாஜியைச் சிறைசெய்ய அம்மௌரியன் உடந்தையாக இருந்தனன். ஆதலின் அவனை மாய்த்தலே தகுதியென்று சிவாஜி துணிவும் முனிவுங்கொண் டெழுந்தனன்.

சந்திரராவின் குலத்தினர் மகாவீரர்; பெருந்தொகையினரும் ஆவர்; ஆதலின் தந்திரமாகவே கருமம் புரியக் கருதினன் சிவாஜி. அவ்விதமே சிவாஜியின் தூதர் இருவர் சென்று, சந்திரராவைக் குறுகி, "அரசே! சிவாஜி வேந்தனது முடிவான வார்த்தை ஈதாகும். மகளொருத்தியை எங்கள் மன்னவனுக்குத் தந்து நட்புக்கொள்ள வேண்டும். இன்றேல் வீண்பகை கிளம்பும்,'' என்றனர். மௌரியனோ திட்டமான பதில் கூறாமல், நாளைக் கடத்தி வந்தனன். இதற்கிடையில் போருக்குரிய ஆயத்தங்களையும் அவன் அமைக்கலாயினன். குடிப்பழக்கம் அவனிடம் குடிகொண்டிருந்தது. அந்நிலையில் அவனை முடித்தலே மேலென அத்தூதர் கருதி, குறிப்பிட்ட இடத்திலே வீரருடன் வந்திருக்கும் வண்ணம் சிவாஜிக்கு அறிவித்தனர். ஒரு தினம் இரவு சந்திரராவும் தூதரும் நெடுநேரம் பேசியிருக்கையில் வார்த்தை தடித்தது. உடனே தூதுவர் உடைவாளை உருவி, மௌரியனையும் அவனது சோதரரையும்

வெட்டி வீழ்த்தினர். பதுங்கியிருந்த சிவாஜி அத்தரு ணம் துணைவருடன் கிளம்பிவந்து, வெகுண்டெழுந்த பகை வர் அனைவரையும் புறங்கண்டு வெற்றிகொண்டனன். ஜாவளி ஜாகிரைச் சேர்ந்த கோட்டைகளி லெல்லாம் சிவாஜியின் வெற்றிக்கொடி பறக்கலாயிற்று. அந்தப் பிர தேசத்திலே சிவாஜிக்கு அடங்காமல் தருக்கித் திரிந்த பந்தலன் என்பானுடன் சிவாஜி போர்புரிய நேரிட்டது. அப்போரில் பந்தலனது மந்திரியான பாஜி தேசபந்தன் காட்டிய வீரங் கண்டு களித்த சிவாஜி, உரிய மரியாதை யுடன் அவனைத் தனது அரசியலில் அமர்த்திக்கொண் டான். ஜாவளியில் கிடைத்த பெருநிதிகொண்டு சிவாஜி பிரதாபகோட்டை என ஒரு கோட்டை கட்டி, அங்கே அம்மை பவானிக்கு அழகிய ஆலயமொன்று சமைத்து வைத்தனன். அக்கோயிலே கடைநாள் வரையில் சிவாஜி யின் உள்ளத்தைக் கவர்ந்து நின்றது.

இனி விஜயபுரிஅரசு மொகலாயரின் கையில்பட்டுச் சீர ழிந்ததும், பல பட்டாணிய வீரர் வாழவகையின்றித் தவித் தனர். முடிவிலே அன்னாரில் எழுநூறுபேர் சிவாஜியின் வீரப் பிரதாபங்களைக் கேள்வியுற்று, அவனிடம் சேவகம் பார்க்க வந்தனர். 'முகம்மதியரைப் படையிலே அமர்த்து வதா?' என வீரசிவாஜி ஆலோசித்தனன். "விஜய புரி அரசின் சூழ்ச்சியினால் பட்டாணியர் வந்துளர் போலும்! அன்னாரை அமர்த்தின், அவர்கள் நம் படை வகுப்பில் புகுந்து சதிசெய்யக்கூடும்," என்று ஒரு சிலர் சாற்றினர். இளமை முதல் சிவாஜியுடன் தோழமைபூண்டு வரும் கோமாஜிநாயக் என்பான், "அரசே! அன்னார் அன்னியர் ஆயின் என்ன? நாமோ பேரரசு காண

முனேந்துளோம். நினது பெருவீரங் கேட்டு, உன்னிடம் சேவை செய்யவே அப் பட்டாணியர் வந்துளர். சாதி, சமயம் இவற்றைப் பாராமல், அறிவும் தகவும் பார்த்துப் பலரையும் வரவேற்றுக் கொள்ளுவதே சுத்த வீரபுருஷனது கடமை; தரும நெறியில் பரிபாலனம் பண்ணுவோன் சாதி சமயப் பாகுபாடுகளைப் பாரான்; யாவருக்கும் சமய சுதந்திரம் தந்து சுகமே தேடித் தருவான்,'' என்று பேசினன். உடனே சிவாஜியின் சேனையில் சேர, அப் பட்டாணியருக்கு அனுமதி கிடைத்தது. அன்று முதல் முகம்மதியரைப் படைத்தலைவராகவும் வீரராகவும் சேர்த்துக்கொள்ள சிவாஜி சிறிதும் தயங்கவில்லை. அம்முகம்மதியரிலே பலரும் தமது வீரதீர பராக்கிரமத்தினுலும், மாசிலா விசுவாசத்தினுலும், சிவாஜியின் பெரும் புகழ்ச்சிக்கும் பேரன்புக்கும் பாத்திரமாயினர்.

கொங்கண தேசத்தின் கடலோரத்திலே உள்ள ஜான்ஜிரா என்னும் துறைமுகம் அக்காலத்திலே வெகுபிரபலம். அங்கே அபிசீனியர் என்னும் ஒருவகை முகம்மதியர் ஏக போக வாழ்வுகொண்டு மிக எடுப்பாக இருந்துவந்தனர். அவர்களின் தலைவன் விஜயபுரிக்கு உட்பட்ட ஒரு பட்டவர்த்தனன். அவன் பெயர் பதீ கான். அவனிடம் கப்பல்படை மிக அதிகம். பன்முறை அவன் சிவாஜியின் நாடுகளுக்குத் தீமை புரிந்து வந்தனன். சிவாஜி அது கண்டு, முதன் மந்திரி சாமராஜ பந்தனிடம் பெரும் படை கொடுத் தனுப்பினன். பராக்கிரமசாலியான பதீ கானுடன் போர்புரிந்து வெற்றிமாலை சூட அம்மந்திரியினுல் ஆகவில்லை. அது கேட்டுச் சிவாஜி சினங்கொண்டு, அவ்வமைச்சனைப் பதவியினின்றும் விலக்கிவிட்டு, மற்

ெருரு வீரனை ஒரு படையுடன் அனுப்பினன். இருபக்கத்தினரும் வீராவேசங்கொண்டு போர்புரிந்தும் ஒருவரையொருவர் வெல்லமுடியவில்லை. இதற்குள் மாரிகாலம் வந்து குறுக்கிட்டது. ஆயினும சிவாஜியின் மாவல வீரர் சளைக்காமல் போர்புரிய, பதீகான் பதியிழந்து பரிதபித்தனன். பதீகான் பட்ட பரிபவமும், மௌரியருக்கு நேர்ந்த கதியுங் கண்டு சவந்தவாடி ஜாகீர்தார் தனது ஜாகீரின் வருமானத்தில் பாதியை ஆண்டுதோறும் சிவாஜிக்குத் தருவதாகவும், விஜயபுரி அரசை விடுத்துச் சிவாஜியின் பாளையக்காரனுக வாழ்ந்துவருதாகவும் கூறி அடிபணிந்தனன்.

ஒன்றன்பின் ஒன்ருக விஜயபுரி அரசுக்குச் சொந்தமான நாற்பது கோட்டைகள் சிவாஜியின் கையில் சிக்கிவிட்டன. அன்றியும் ஜாகீர்தார்களில் சிலரை வாளுக்கு இரையாக்கியும், வேறு சிலரை வசஞ்செய்தும், மற்றுஞ் சிலரை முறியடித்தும், அவ்வீர வேந்தன் அட்டகாசம் புரியாநின்ருன். ஷாஜியைச் சிறைசெய்து, சிவாஜியை மடக்க முயன்றும் பயன்படவில்லை. சிவாஜியைச் சிறை செய்யக் கருதியும் சிறுமையே கிட்டியது. இந்நிலையில் நல்லவேளையாக அவுரங்கசீப் டில்லிநோக்கிச் செல்ல, விஜயபுரி அரசு மொகலாய சேனையின் தொல்லை தீர்ந்ததென ஆறுதல் அடைந்து சிவாஜியின்மீது சீற்றங் கொள்ளலாயிற்று. அவ்வேளை பாலப்பருவமுள்ள அலி அடில்ஷா என்பான் விஜயபுரியின் அரியணையில் அமர்ந்திருக்க, அவனது அன்னையே அரசியலைத் திறம்பட நடத்தி வந்தனள்.

ஒருதினம் அம்மாது தனது அமைச்சரையும் தளகர்த்தரையும் தருவித்து, எங்ஙனமாயினும் சிவாஜியைக் குலைக்க வேண்டும் என்று கூறினள். சிவாஜியின் வீரமும் தந்திரமும்

நன்கு தெரிந்திருந்தமையால் ஒருவரும் வாய்திறக்கவில்லை. முடிவில் அப்ஸல்கான் என்பான், "அரசியே! நமது நாட்டில் ஆண்மையுள்ளோர் இல்லையென எண்ணவேண்டாம். அடியேன் அச்சிவாஜியுடன் அரும்போர் ஆற்றமுடியும். அரசி ஆணையிடின், எனது வாள் வீச்சினுக்கு அச்சிவாஜியை இலக்கு ஆக்கியே திரும்புவேன்," என்று கூறவே, அரசி அகங்களித்து, "வீரத்தலைவ! சிவாஜியுடன் தோழமை கொள்வது போல் நடித்து, அவனைக் கொன்று அல்லது வென்று வரல் வேண்டும்," என்று கூறினள். உடனே பன்னீராயிரம் பெரு வீரர் போர்க்கோலம் பூண்டனர். யானை, குதிரை, ஒட்டை முதலிய படைகளும் கிளம்பின. வேண்டுமளவு யுத்த தளவாடங்களும் ஆயத்தமாயின. மூவாயிரம் மாவல வீரரும் மொய்ம்புடன் கிளம்பினர். சிவாஜியைத் தனது குதிரைச் சேணத்தில் கட்டிக்கொணர்வதாக அப்ஸல்கான் வீறுபேசிக் கிளம்பினன்.

## 5. அப்ஸல்கானது முடிவு

அப்ஸல்கான் பெரும்படையுடன் துளசாபுரம் சேர்ந்தனன். மகாராஷ்டிரரின் குலதெய்வமான அம்மை பவானிக்கு அங்கே புராதனமான ஆலய மொன்றுளது. பகைவனது வருகைகேட்ட ஆலய அருச்சகர் மூலவிக்கிரகத்தை மறைத்து வைத்துவிட்டனர். அப்ஸல்கான் உற்சவ விக்கிரகத்தை உடைத்து, ஆலயத்தையும் இடித்துத் தள்ளி, ஆவொன்றைக் கொன்று அதன் உதிரத்தை எங்கும் வாரியிறைத்தனன். அப்பால் அவ்விடத்தே மசூதியொன்று எழுப்பி அவன் மனமகிழ்ந்தான். பின்னர் அவன் பண்டரீ



அப்ஸல்கான்

புரஞ் சென்று, ஆங்குள்ள கோயிலையும் தரைமட்டமாக்கி, ஆண்டவன் சிலையையும் அசுத்தப்படுத்தினான். அப்பால் அத்தளகர்த்தன் சிவாஜியைச் சிறைசெய்வதற்காகக் கூண்டொன்று சமைத்துப் பார்த்துச் சித்தங் களித்தனன்.

அவ்வேளை இராஜகோட்டையில் இருந்த சிவாஜிக்கு இச்செய்தி எட்டியது. எட்டவே சிவாஜி தனது மந்திரிமாரையும் தோழரையும் தருவித்து ஆலோசனை கேட்டனன். 'பிரதாபகிரியின் சரிவில் தந்திரத்தால் பகைவனை இழுத்து, அப்பால் போர்புரிதலே சிறந்ததாகும்,' என்றனர் சிலர்; மற்றுஞ் சிலரோ, "அப்ஸல்கான் அசகாய சூரன். அவனை வெல்லுதல் ஆகாத காரியம். ஆதலின் உடம்பாடு கொள்ளுதலே உயர்வாகும்," என்று உரைத்தனர். சிவாஜியோ, "வீரர்காள்! போர்க் களத்தில் பகைவனை எதிர்ப்பதே சுத்த வீரமாகும். ஆண்டவனது பேரருளையும் உங்களது துணையையுங்கொண்டு, பகைச் சேனையை முறியடிக்கவே முனைவேன்," என்று கூறினன். அன்றிரவு அவன் பள்ளியறை சென்று, அம்மை பவானியை நினைந்து வணங்கி நித்திரை கொண்டனன். கனவிலே அம்மை தோன்றி, "அப்பனே! அஞ்சேல்! துளசாபுரத்தில் என்சிலையைத் தூளாக்கிய அப்ஸல்கான் உனது கைவாளால் மாளுவதை யான் கண்டுகளிக்கக் காத்துளேன்; போரிலே நீ வெற்றிமாலை சூடி, விஜயமாதினைக் களிப்பிப்பாயாக," என்று கூறியருளி மறைந்தனள். உடனே சிவாஜி எழுந்து காலைக்கடனை முடித்து, அருகே நின்ற துணைவரை நோக்கி, "அன்பர்களே! மாற்றரசுடன் உடம்பாடு கொள்ளுதல் மாசுள்ள செயலாகும்; அது அழிவுக்கும் இடமாம். போர்முனையிலே குதித்து வீரவாழ்வு அல்லது வீரச்சாவு அடைதலே சாலச்

சிறந்தது. இவ்வுடலில் உயிரிருக்கும் வரையில் ஒன்ன லருக்கு உடல் வணங்கேன். ஒருகால் யான் இறந்துபடின், இச்சிற்றரசைப் பேரரசாக்கி, அன்னை ஜீஜாபாயின் ஆணைப் படி நடப்பதே என் துணைவராகிய உங்களது கடமை,'' என்று வீரவசனங் கூறிவிட்டு, அந்தப்புரஞ் சென்று அன்னையை அடிவணங்கி ஆசிவேண்டலும், ஜீஜாபாய், "குமர! வீரனை ஈன்ற மங்கையென்னும் பாக்கியம் எனக்கு வாய்க்கு மாறு அம்மை அருள்புரிவாள். தோளிரண்டும் தோழரும் துணையாக இருக்கையில், வாகை சூடுவாய்,'' என்று அருளும் ஆசியும் ததும்பப் பேசினள். உடனே சிவாஜி பகையை முடிக்கும் வகையை ஆராய்ந்துகொண்டே பிரதாப கோட்டைக்குப் பயணமாயினன்.

அப்ஸல்கானும் அஃதறிந்து, வழியிலே சிங்கணபுரத்திலுள்ள மாதேவனது ஆலயத்தைப் பாழாக்கி, வேய் என்னும் நகரில் தங்கி, மாவலரின் தலைவர்களுக்கும் ஜாகீர் தார்களுக்கும் தூதுவிடுத்து, அன்னாரின் துணைவேண்டினன். சிவாஜியின் குடிமக்களிலே சிலர் அச்சங் காரணமாக மானபிமானம் விடுத்து அப்ஸல்கான் பக்கம் போயினர்; பலரோ பெருவீர சிவாஜிக்குத் துரோகம் புரியோமெனக் கூறி உறுதியுடன் இருந்தனர்.

பிரதாபகிரியிலே சிவாஜி தனது படைகளை அணி வகுத்து நிற்பதுகேட்டு, அப்ஸல்கானுக்கு ஏக்கம் பிறந்தது. மலைப்பிரதேசத்திலே பெரும்படைகொண்டு புகுந்து, சமர்புரிதல் சங்கடமாதலின், சிவாஜியை எவ்விதத்திலேனும் அக் கோட்டையைவிட்டு இறங்கச்செய்ய வேண்டுமென அவன் சூழ்ச்சி செய்யலானான். இதற்கிடையில் விசுவாசராவ் என்பான் பக்கிரி வேடம் பூண்டு சென்று

அப்ஸல்கானது படைபலத்தையும் போர்த்துறையையும் ஊடுருவி உணர்ந்து வந்து சிவாஜிக்கு உணர்த்தினன். பகைவனது படைப் பெருக்கையும் சதிப்போக்கையும் கூர்ந்தறிந்தவுடன், சூதைச் சூதுகொண்டு சிதைக்கவேண்டுமென்று சிவாஜிக்குத் தோன்றியது. அங்ஙனமே அவன், "மாவீர! நின்னுடன் சமர்புரிய அடியேனுக்கு ஆற்றல் உளதோ? விஜயபுரி அரசினுக்கு யான் அடங்கிவாழ விரும்பியுள்ளேன். அவ்வரசினைப் பெரிதும் புண்படுத்திவிட்டேனென்பது மெய்யே. அதுபற்றி எனக்கு மன்னிப்புத் தேடித்தந்து ஆதரித்தல் நினது கடன். நினது பெருந்தன்மை கண்டு உன்பால் அடைக்கலங் கொள்ளவே அடியேன் காத்துநிற்கின்றேன். விஜயபுரியிலிருந்து பறித்துக்கொண்ட பிரதேசங்களை விட்டுவிட எனக்குச் சம்மதமே. மன்னிப்பு ஒன்றையே இச்சமயம் யான் நாடிநிற்கின்றேன்," என்று சாமோபாயத்தைக் கையாள்வான் போல் அப்ஸல்கானுக்கு நிருபம் விடுத்தனன்.

அக் கடிதங் கண்டதும் அப்ஸல்கான் அடங்கா மகிழ் பூத்து, வேதிய குலத்தைச் சேர்ந்த கிருஷ்ணஜி பாஸ்கரனைச் சிவாஜியின்பால் தூதுபோக்கினன். தூதில் வல்ல அந்தணாளன் சிவாஜியின் சமூகம் சேர்ந்து, "அரசே! அப்ஸல்கான் உனது தந்தை போன்றவன். நின் தந்தையும் அவனும் தோளொடு தோள்கலந்து போர்புரிந்த துணைவர் ஆவர். நினது தந்தைபால் அப்ஸல்கானுக்கு அளவிறந்த மதிப்பும் அன்பும் உண்டு. ஷாஜியின் சேவைகண்டும், உனது துணிவுகண்டும், உன்பால் அப்ஸல்கான் ஆர்வம் கொண்டுளான். உன்னை ஒரு குறுநில மன்னவனுக்கி மன்னிக்க அவன் தவறுன். விஜயபுரி வேந்தனது சீற்றம்

தவிர்த்து, அவ்வரசின் பட்டவர்த்தனப் பதவியில் உன்னை அமர்த்தவே அவன் கருதியுள்ளான். ஆதலின் நீ தனிமையிலே வந்து, அவனைக் காணின் நலமாகும்,'' என்று தேனொழுகச் சொல்லினன்.

சபை கலைந்ததும், நள்ளிரவிலே அனைவரும் துயின்ற பின்னர், சிவாஜி தனிமையில் சென்று கிருஷ்ணாஜியைத் தட்டியெழுப்பி, "நான்மறையாள! தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்வதே வேதிய குலத்தின் கடமை. அந்தணர் இன்றேல், அருமறையும் பெருங்கலையும் எங்ஙனம் தலையெடுக்கும்? சமயமும் சமூகமும் பங்கமுறுகையில், பார்ப்பனர் வாளா விருப்பரோ? அன்னியவரசின் அவலத்தால் நம் தேசம் படும்பாட்டை நான் நவிலவும் வேண்டுமோ? தேசத்தின் மாசைப் போக்கித் தேசை வளர்க்கவே அடியேன் ஆவி தாங்கியுள்ளேன். தன்னலம் என்பதைக் கனவிலும் கருதினேன் இல்லை. நம் அம்மை பவானியே இதற்குச் சான்று. அந்தணரைப் புரந்து, ஆவினங்களைக் காத்து, ஆலயங்களைப் பராமரித்து அருந்தொண்டு புரிக என்று ஆண்டவன் பெருங்கட்டளை தந்துளான். அத்தொண்டை ஆற்றவேண்டியே, இவ்வுடலை அர்ப்பணம் செய்துளேன். ஏதோ இன்றளவும் ஒரு சிறிதே அவ் அரும்பணி புரிந்தேன். அத் தெய்வப்பணி நன்கு நிரம்பவேண்டின், தங்களைப்போன்ற வேதியரின் உதவியும் ஆசியும் அதியவசியம். ஐய! இந்நிலையில் நீர் என்னைக் கைவிடுவீரோ?'' என்று நயம்பட நவிலாநின்றனன்.

அவ்வுரை கேட்டதும் வேதியன் மனம் அனலிலிட்ட மெழுகுபோல் உருகிவிட்டது. வஞ்சனைபுரிந்து வதைக்கவே அப்ஸல்கான் துணிந்துளான் என்பதை அவ்வேதி

யத்தூதன் விளங்க வுரைத்து, சிவாஜி வழங்கிய மிக்க விலை யுள்ள பரிசுகளுடன் மறுதினம் கானிடம் திரும்பினன். சிவாஜியோ கோபிநாத பந்தன் என்னும் விப்பிரனைத் தூதாக உடனனுப்பினன். கிருஷ்ணாஜி, அப்ஸல்கானை அடைந்ததும், "தளகர்த்த! சிவாஜியோ அஞ்சிக் கிடக் கின்றான். நின்னைத் தனிமையில் கண்டு பேச, அவனுக் குத் தைரியம் இல்லை. ஜாவளி நகரம் சென்று அபய வாக்கு அளிப்பின், தட்டாது சிவாஜியைச் சிறைசெய்து விடலாம்,'' என்றனன். பின்னர் கோபிநாதபந்தனும் சிவாஜியின் தடுமாற்றத்தை உணர்த்தி அபயம் வேண்ட லும், அப்ஸல்கான், "அங்ஙனமே ஆகுக'' என்று சொல்ல, கோபிநாதன் திரும்பிவந்து உற்றது முற்றும் சிவாஜிக்கு உரைத்தனன்.

பின்பு சிவாஜி, விஜயபுரிச் சேனை வரும் வழியனைத் தையும் செப்பனிட்டு, எங்கும் அப் படைக்குரிய ஆகார மும் வசதியும் அமைத்து வைத்தான். அப்ஸல்கான் ஜாவளிக்கு ஆனந்தமாகப் புறப்பட்டு வருகையில், ஆங் காங்கு ஆகாரமும் வசதியும் நிரம்பியிருத்தல் கண்டு, அத் தலைவனும் படைஞரும் உள்ளம் பூரித்தனர். முடிவிலே விஜயபுரிச் சேனை பிரதாபகிரியின் அடிவாரம் வந்துசேர்ந் தது. மறுதினம் மாலை சிவாஜியும் அப்ஸல்கானும் சந்தித் துப் பேசுவதாக ஏற்பாடாயிற்று. கலந்து பேசக் குறிப் பிட்ட இடமோ பிரதாபகிரிக் கோட்டைக்குக் கால் மைல் தூரத்தில் உள்ள நடு நாயகமான இடமாகும். அதிகாலை யிலே சிவாஜி எழுந்து தேவியைத் தொழுது உண்டி கொண்டபின், தனது தோழரை அருகே யழைத்து, "நண்பர்காள்! எனது உயிரைக் கையில் பிடித்துக்

கொண்டே அப்ஸல்கானைக் காணச் செல்கின்றேன். எல்லாம் வெற்றியாக முடியின், அம்மையின் அருள்தான். ஏதேனும் தீமை நேரின், நீவிர் மனமொடிந்து போதல் ஒண்ணாது. பகைவர்மீது பாய்ந்து நமது அரசைக் காப்பது உங்கள் கடன். உங்களது வாள்வலியையும் தோள் வலியையும் நம்பியே, இப் பெருங் கருமத்தில் இறங்கியுள்ளேன். இத்துணை நாள் நாமனைவரும் சேர்ந்து இயற்றிய சிறப்பான வேலை இடைக்குறை கடைக்குறை யாதல் கூடாது. உங்களுக்குச் சோதனை நாள் இதுவே யாகும்," என்று கனிவுடன் கூறினன்.

அப்பால், ஒருசமயம் தன் உயிருக்கு உலை நேருமோவெனச் சிவாஜி சிந்தித்து, "நான் இறந்துபடின் காசியிலே கருமம் புரியுங்கள்," என்று கூறிச் சிலவேதியரை வாரணசி நகருக்கு அனுப்பிவிட்டு, ஏனைய அந்தணருக்கும் ஏழை எளியவருக்கும் தானதருமம் வழங்கி, அன்னை ஜீஜாபாயிடம் சென்று அடிவணங்கி ஆசிவேண்டினன். அவ்வீரத் தாய் உள்ளத்தே கவலையும் களிப்பும் ஒருங்கேகொண்டு, "மைந்த! முன்னம் தன் குமரர் ஐவரையும் குந்தி குருக்ஷேத்திரத்துக்கு அனுப்பியது போல், இன்று யானும் உன்னைச் சமர்முனைக்கு அனுப்புகின்றேன். கண்ணபிரானருளால் ஐவரும் வெற்றிசூடித் திரும்பியதுபோல், பவானியின் அருளால் நீயும் வாகைசூடி வருவாயாக! மேலும் உனது அண்ணன் சாம்பாஜியைக் கொல்வித்தவன் அப்ஸல்கான் என்பதை மறவாதே. அவனைப் பழி வாங்காமல் உன் தந்தை விட்டுவிட்டார். ஆதலின் இச்சமயம் அப்ஸல்கானைப் பழிவாங்குதல் உனது கடமை," என்று ஆசி கூறிக் குலதெய்வத்தைத் துதித்து விடை கொடுத்தனள்.

இதற்கிடையில் அப்ஸல்கான் நாலாயிரம் பரிவீரருடன் சிவாஜியைச் சந்திக்கப் புறப்பட்டான். கிருஷ்ணாஜி அது கண்டு, "தலைவ! பலவீரருடன் செல்லின் சிவாஜி பயங்கொள்வான். ஆதலின் இரண்டொரு வீரருடன் செல்லுதலே சிறந்தது," என்றுரைத்தனன். அங்ஙனமே அப்ஸல்கான், ஸையத் பந்தன் என்னும் உயர்வாள்வீரனும் கிருஷ்ணாஜியும் உடன்வர, ஒரு பல்லக்கில் அமர்ந்து குறித்த இடம் போய்ச் சேர்ந்தனன். சிவாஜியோ உடலில் இரும்புக் கவசமும் அழகிய சட்டையும், சிரத்திலே எஃகுக் குல்லாயும் அதன் மேலே தலைப்பாகையும் தரித்து, சட்டையின் வலதுகையிலே மறைவாகச் சிறிய பிச்சுவாவும், இடதுகை விரல்களிலே யாருங் காணமுடியாத வேங்கைநக ஆயுதமும் தாங்கி, அக்கூடாரத்தில் புகுந்தனன். அவ்வளவில் சிவாஜி கையும் காலும் நடுங்குவதுபோல் நடிக்கவே, கிருஷ்ணாஜி அதனை அப்ஸல்கானுக்குக் காட்டி, "ஐய! சிவாஜியின் நடுக்கத்தை நோக்குக. நினது சமுகம் வருவதென்றால், அவனுக்கு அச்சம் பிறக்கின்றது. ஸையத்பந்தனையும் கூடாரத்துக்கு வெளியே நிற்கச்செய்தல் நலமாகும். ஆருமில்லையெனில் சிவாஜி அச்சமின்றி வருவான். அச்சமயம் அவனைச் சிறைசெய்தல் சுலபமாகும். கைக்கு அருகே கிட்டிவிட்ட சிவாஜி இனி நம் கையில் படாமல் தப்பான்," என்று கூறினான். அங்ஙனமே ஸையத் பந்தன் வெளியே போமாறு ஆணைபிறந்தது.

ஜீவமகாலயன், சாம்பாஜிகவி ஆகிய இருவரும் உடன்வர, சிவாஜி அப்ஸல்கானைக் குறுகினான். உடனே அப்ஸல்கான் எழுந்து இரண்டடிதூரம் முன்சென்று, சிவாஜியை எதிர்கொள்வான்போல் நெருங்கினன். "எதிரியிடம் ஆயு

தம் எதுவுமில்லை. ஆதலின் எளிதிலே அவனை நசுக்கி விடலாம்,'' என்பதே அப்ஸல்கானது சிந்தை. அப்ஸல்கான் சிவாஜியினும் அதிக வலியும் உயரமும் கொண்டவன். கிருஷ்ணாஜி அவ் விருவரையும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துவைத்தான். அவ்வளவில், சிவாஜியை நோக்கி, "அடா குடியானவன் மகனே! இக்கூடாரத்தை நவரத்தின கசிதமாய் அலங்கரிக்கும் அளவு அருந்தனம் எங்ஙனம் பெற்றாய்?'' என்று அப்ஸல்கான் அவமதிப்பாகப் பேசினன். அப்ஸல்கானது தந்தை அரசபரிசாரகனாயிருந்ததை மகாராஷ்டிர வீரன் தன் மனத்திற்கொண்டு, "சமையல்காரனது மைந்தன் இக்கூடார நேர்த்திகண்டு அசூயை கொள்ளுதல் வியப்பாமோ?'' என்னலும், அப்ஸல்கான் வெகுண்டெழுந்து, தனது இடக்கரத்தினால் அவ்வீரனது கழுத்தை நெருக்கி, வலக்கரத்தில் வாள் தாங்கி, சிவாஜியின் விலாப்புறத்தில் செருகலாயினன். உடலிலே இருப்புக் கவசம் பூண்டிருந்ததனால் அவ் வாள்முனை மழுங்கிப் போயிற்று. சிவாஜிக்கு யாதோர் ஊறும் அச் சமயம் நேரவில்லை. பகைவனது துரோகச்செயல் கண்டதும், சிவாஜி இமைப்பொழுதில் வேங்கைநக ஆயுதங்கொண்டு அப்ஸல்கானது குடலைக் கிழித்து, வலக்கரத்தில் மறைவாக விருந்த பிச்சுவாவை எடுத்துக் குத்தினன். உடனே அப்ஸல்கான் தனது இடதுகரத்தினால் வயிற்றைப் பிடித்துக்கொண்டு, வலதுகரத்தில் வாளேந்திச் சிவாஜியைத் தாக்கினன். வாள் வீச்சின் வருகை கண்ட சிவாஜி எழும்பிக் குதித்து, அவ் வீச்சினைத் தடுத்து, மீண்டுமொருமுறை முழுவலியுங் கொண்டு குத்தவே, அப்ஸல்கான், "அந்தோ! கொலை! கொலை!! வீரரே! விரைந்து வருக!'' என்று அலறிக்

கொண்டே பூமியில் சாய்ந்தனன். அக் கூக்குரல் கேட்டசையத்பந்தன் கூடாரத்தினுள்ளே புகுந்து பட்டாக்கத்தியுடன் சிவாஜியின்மீது தாவிப் பாய்ந்தனன். இதற்குள் ஜீவமகாலயன் கடுகி வந்து, சிவாஜிக்கு ஒருவாள் கொடுத்துத் தானும் மற்றொரு வாள்கொண்டு வீசவே, சையத்பந்தனது வலக்கரம் அறுந்து வீழ்ந்தது. உடனே எங்கும் குழப்பம் நேர, விஜயபுரி வீரர் விரைந்தோடி வந்து, அப்ஸல்கானை ஒரு பல்லக்கில் எடுத்துச் செல்லலாயினர். சிவாஜியின் உயிர்த்தோழனான தானாஜி சிங்கம்போல் பாய்ந்து வந்து பல்லக்குத் தூக்கும் போகிகளைத் தாக்கலும், அவர்கள் பல்லக்கைப் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர். உடனே சாம்பாஜி அப்ஸல்கானது சிரத்தைக் கொய்து சிங்கநாதஞ் செய்தனன். அப்ஸல்கானது துணைவரில் ஒருவனான வேதிய கிருஷ்ணாஜி வைரங்கொண்டு சிவாஜியின்மீது சீறி வர, "ஐய! மறைபயிலும் அந்தணாளரின் ஆவிபறித்தல் ஆகாதென எந்தை இயம்பியுள்ளார். ஆதலால் உம்மைக் கொன்று குவிக்க ஒருப்படேன். உயிருக்கஞ்சி ஓடிவிடுக," என்று கூறி உறுமியதும், வேதியன் வந்தவழியே போய்விட்டான். அப்பால் சிவாஜி பிரதாபகிரியின் கோட்டைவாயில் போய்ச் சேர்ந்தனன். கதிரவன் மேலைக்கடலில் குளிக்க இன்னும் இரண்டுநாழிகை இருந்தது. பிரதாபகிரியின் பீரங்கிகள் உடனே அலறலாயின; சங்கநாதமும் கிளம்பியது. அக் கிரியின் அடிவாரத்திலே பாசறையில்தங்கியிருந்த விஜயபுரி வீரர், அவ்வொலிகேட்டு, "நம்தலைவனும் சிவாஜியும் சந்திக்கும் சந்தோஷ அறிகுறியாகவே பீரங்கிகள் அலறுகின்றன போலும்!" என்று எண்ணிக் கிடந்தனர். அச் சமயத்தில் சிவாஜியின் படைகள்

நானு பக்கங்களிலிருந்தும் கிளம்பி வந்து விஜயபுரி வீரரை வளைந்து கொண்டு எங்கும் தாக்கின. அப்ஸல்கானது சேனை சிதறுண்டு திசைதோறும் ஓடி ஒளிந்து உயிர்ப் பிச்சை வேண்டிநின்றது. ஆயுதங்களைத் தந்து அபயம் கேட்போரை ஆவிபறிக்க வேண்டாமென்று சிவாஜி ஆணையிட்டனன். சிறைப்பட்ட வீரர் சிறப்பாகவே நடத்தப் பட்டனர். மீண்டும் விஜயபுரி செல்ல விரும்பிய வீரர், தம் வழிச் செலவுக்குப் பணமும் பெற்றனர். பதவி படைத்த பெருமக்களைச் சிவாஜி பெருமையுடன் நடத்தினன். சிவாஜியின் வீரமும் பெருந்தன்மையும் கண்ட விஜயபுரிப்படையிலிருந்த மகாராஷ்டிர வீரரில் பலர் சிவாஜியின் சேனையில் சேர்ந்து சேவிக்கத் தலைப்பட்டனர். மாவல வீரரிடம் சிக்கிக் கொண்ட அப்ஸல்கானது இரு மைந்தரையும் மாதரையும் குழந்தைகளையும் சிவாஜி விடுதலைசெய்து விஜயபுரி செல்லுமாறு அனுமதி தந்தனன். விஜயபுரிச் சேனையிலிருந்து சிவாஜிக்கு அகப்பட்ட பொருளும் பிறவும் அபரிமிதமாகும்.

அப்பால் சிவாஜி அப்ஸல்கானது சிரத்துடன் சென்று அன்னை ஜீஜாபாயை வணங்க, அவ்வீரமாது அளவிலா ஆனந்தங்கொண்டு மைந்தனைத் தழுவி முத்தமிட்டு, ஆசி பல கூறித் திருஷ்டி கழித்தனள்; அவனது தோழரை நோக்கி, "வீரர்காள்! இப்பெருமித வெற்றிக்குப் பாத்திரமாவார் நீவிரே! உங்களது உதவியின்றேல் சிவாஜி தலை சிறக்கவும் இயலுமோ?" என்று புகழ்ந்து பேசினள். சிவாஜி பின்னர் அப்ஸல்கானது தலையை அன்னை பவானியின் சன்னிதி சென்று காட்டி, அதனை உரிய சிறப்புடனும் மரியாதையுடனும் ஓரிடத்தே அடக்கஞ் செய்தனன்.

அவ்விடம் சிவாஜி சமைத்த கோரியை இன்றும் பிரதாப கோட்டையின் அடிவாரத்தில் காணலாம். அப்ஸல்கானிடமிருந்து பறித்த பட்டாக்கத்தி இன்றும் சிவாஜியின் சந்ததியாரிடம் சிறப்பாக இருந்துவருகின்றது. அப்ஸல்கானுடைய கூடாரத்தின் நடுத்தூண் தங்கத்தினால் ஆக்கப்பட்டிருந்தது கண்டு, அதனை வீரசிவாஜி மகாபலேசுவர ஆலயத்திற்கு அளித்தனன். இன்றும் மாதேவரின் ஆலயத்தில் அத் தங்கத்தூண் பத்திரமாய் இருப்பதைப் பார்க்கலாம். அப்பால், இரணகளத்தில் காயமுண்டு சிகிச்சை பெறுவோரிடம் சிவாஜி சென்று, அன்புடன் பேசி அன்னாருக்கு ஆறுதல்கூறினான்; தனது படைவகுப்பில் உயிர்துறந்த வீரரின் குடும்பத்தினருக்கு மான்யம் தந்தனன்; பெரு வீரங் காட்டிப் போர்புரிந்த படைத்தலைவருக்கு ஜாகீர் வழங்கினான். சுருங்கச் சொல்லின், சிவாஜியின் படைவீரரிலே வெகுமதி பெறுதார் இல்லை என்னலாம். வேவுபார்த்து வந்து சொன்ன விசுவாசராவ் பெருநிதி பெற்றுக் களித்தனன். இப் பெருமித வெற்றி கேட்டதும், சிவாஜியின் நாடெங்கும் திருவிழாக் கொண்டாடப்பட்டது. மக்கள் அனைவரும் தத்தம் வாயில்களிலே மகரதோரணங்கள் கட்டிக் களித்தனர். அந்தணருக்கும் பிறருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலயங்களிலே அபிஷேக ஆராதனைகள் நடந்தன. மகாராஷ்டிரர் அனைவரும் அந்நாளைத் திருநாள் எனவே மதித்து மகிழ்பூத்தனர். இராஜா ஷாஜியும் அதுகேட்டு அகங்களித்தான். அப்ஸல்கானது அழிவையும் சிவாஜியின் வெற்றியையும் பொருளாகக் கொண்டு சிவாஜியின் சமஸ்தான வித்வானன பூஷணன் என்பான் சொற்சுவையும் பொருள்நயமும் பொருந்திய பாமாலை

பாடினன். அவ்வெற்றியும் பாமாலையும் மகாராஷ்டிரருக்குப் புத்துயிரும் புதிய உணர்ச்சியும் இன்றும் ஊட்டாநிற்கும்.

---

## 6. விஜயபுரியின் வீழ்ச்சி

அப்ஸல்கானும் சேனையும் அழிந்தமை கேட்டு, விஜயபுரிவேந்தன் வாட்டங் கொண்டனன். அரசியோ, பன்னாள் வரையில் அன்ன பானமின்றி ஆறாத் துயருற்றாள். விஜயபுரியரசின் பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர் முதலிய பெருமக்கள் அனைவரும் மனம் புழுங்கினர்.

வெற்றிமுரசு கொட்டிய சிவாஜிக்குப் பனகலக் கோட்டையின் காவலன் ஒரு தூது போக்கி, வலுவில் அக்கோட்டையை ஒப்படைத்துச் சரண் புகுந்தனன். பலவணகட்டம், இரங்கணம் முதலிய கோட்டைகளும் சிவாஜியின் வசமாயின. இவ்விதம் சிவாஜி பல நகரங்களையும் கோட்டைகளையும் கைப்பற்றி வருதல் கண்டு, விஜயபுரி அரசு பெரிதும் வெருண்டு, ரஸ்டம்கான் என்பானை அனுப்ப, சிவாஜி ஒரு படையுடன் சென்று, அவனை முறியடித்தனன். ரஸ்டம்கான் உயிர்தப்பினால் போதுமென ஓடநேர்ந்தது. பின்னர், சிவாஜி தனது குதிரைப் படையுடன் விஜயபுரி நகரம் வரையில் சென்று, அவ்வரசின் பற்பல பாகங்களையும் கொள்ளையாடினன்.

அடில்ஷா அதுகண்டு, தனது அரசின் முழுவலியுங் கொண்டு, சிவாஜியை அடக்கிப்போடக் கருதிச் சித்திஜோகர் என்பானைப் பதினாயிரம் பரிவீரரும் பதினாலாயிரம் காலாளரும் கொண்ட பெரும்படையுடன் போர்செய்ய

விடுத்தான். அப்ஸல்கான் மகன் முகம்மது சிவாஜியைப் பழிவாங்க அப்படையுடன் வரலாயினன். அதே சமயத்தில் ஜான்ஜிராவிலிருந்து கிளம்பி, கொங்கணத்தை வசஞ் செய்யுமாறு பதீகானுக்கு ஆணைபோயிற்று. சவந்தவாடித் தலைவனும் சுல்தானது கட்டளைக்கிணங்க ஒரு படையுடன் சிவாஜியைத் தாக்கப் புறப்பட்டனன். இங்ஙனம் பகைவரின் பெருஞ்சேனை மூன்று பக்கத்திலும் சூழ வருவது கண்ட சிவாஜி, அம்மூன்று படைகளையும் ஒன்று சேராதவாறு தடுக்கத் தீர்மானித்து, தனது சேனையை மூன்று பாகமாகப் பிரித்து அணிவகுத்தனுப்பினன். பதீகானும் சவந்தவாடித் தலைவனும் சிவாஜியின் சேனையை எதிர்க்க வகையின்றி இளைத்துப் போயினர்.

சித்திஜோகர் என்பான் தனது பெரும்படையுடன் பனகலக் கோட்டையை வளைந்து கொண்டனன். பல மாதகாலம் முற்றுகை மும்முரமாக இருந்தது. சிவாஜியே நேர் நின்று, அம்முற்றுகையை நான்கு மாதகாலம் சமாளித்து நின்றனன். நாலாபக்கமும் பகைவர் சூழ்ந்து நின்றமையால், வெளியிலிருந்து ஒரு செய்தியும் சிவாஜிக்கு எட்டவில்லை. அவ்வீரனுக்கு இதுவே கவலைக்கிடமாயிற்று. விஜயபுரி வீரர், "கூண்டிலகப்பட்ட புலிபோல் ஆனான் சிவாஜி; இனி அவன் தப்பும் வகை இல்லை; இரண்டொரு நாளில் அவன் நம் கையில் அகப்படுவது திண்ணம்," என்று எண்ணி இறுமாந்து கிடந்தனர்.

அத்தகைய ஆபத்தான நிலையிலும், சிவாஜி சித்தம் சலிக்கவில்லை. தந்திரத்தாலேயே தப்பவேண்டுமெனத் துணிந்த சிவாஜி, "விஜயபுரி வீர! நினது பெருவலியும் மாவீரமுங் கண்டு மெச்சினேன். உன்னுடன் அமர்

புரிதல் அருமை அருமை! ஆதலின் கோட்டையைத் தந்து, பணிந்து வாழ விரும்புகின்றேன்,'' என்று சித்தி ஜோகருக்குத் தூது விடுத்தனன். சித்திஜோகர் அதனை நம்பி, சிவாஜியுடன் கலந்து பேசலானுன். மாலைப் பொழுது நெருங்கியும், ஒப்பந்தம் முடியவில்லை. ஆதலின் மறுதினம் பேசிக்கொள்ளலாமென இருவரும் பிரியலாயினர். மறுதினம் கோட்டை பணிந்துவிடுமென்று விஜயபுரிச் சேனை எக்காளங் கொண்டு கிடந்தது. பொழுது புலர்ந்ததும், பகைவன் பணிந்து விடுவது நிச்சயம் என எண்ணிய காவலாட்கள், காவலைத் தளர்த்தி, நடுநிசியில் நிம்மதியாக உறங்கலாயினர். இதனையே எதிர்பார்த்திருந்த சிவாஜி சிலவீரருடன் கோட்டையை விட்டுக் கிளம்பி, பகைவனது காவலைக் கடந்து, விசாலகட்டம் எனும் கோட்டையை நோக்கிப் போயினன். பொழுது புலர்வதற்குள் சிவாஜியின் சூழ்ச்சியை விஜயபுரிப் படைஞர் கண்டு கொண்டனர். கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று சித்திஜோகர் பெரிதும் வருந்திஞன். முகம்மதோ பழி வாங்கும் சமயம் தப்பியதே எனத் துடித்தனன். முடிவில் சிவாஜியைத் தொடர்ந்து சென்று, சிறை செய்தே மீளுவதெனத் துணிந்து, முகம்மது ஒரு பெரும்படையுடன் காற்றினும் கடுகிச் சென்ருன்.

நண்பகலிலே சிவாஜியின் படைவகுப்பை விஜயபுரி வீரர் நெருங்கிவிட்டனர். விசாலகட்டத்துக்கு இன்னும் ஆறுமைல் உளது. சிவாஜி சிறிதும் தைரியம் குன்ருது, தனது துணைவனை பாஜிதேசபந்தனிடம் மாவல வீரரில் ஒரு பாதியை ஒப்படைத்து, "அன்ப! நான் விசாலகட்டத்தைச் சேர்ந்து ஐந்து வெடி போடுவேன். அது கேட்டதும்,

நீங்கள் போரை நிறுத்தி அங்கு வரலாம். அதுவரையில் பகைப்படையை வழிமறித்து நிறுத்திப் போர்புரிதல் உனது கடன். எனது உயிர் உனது அடைக்கலம்,'' என்று சொல்லிப் போயினன்.

பாஜிதேசபந்தன் முன்னம் சந்திரராவ் மௌரியின் துணைவனாக இருந்து, சிவாஜியுடன் மல்லுக்கு நின்றவன்; அப்பால் சிவாஜியிடம் சேவைக் கமர்ந்து உயிர்த்தோழன் ஆனவன். சிவாஜியைத் தொடர்ந்துவரும் படைக்கடலைத் தடுக்க வேண்டி, பாஜி தேசபந்தன் ஒருகணவாயின் முகப்பிலே அணிவகுத்து நின்று, விஜயபுரியின் பரிவீரர் நெருங்கி வந்த அளவில், அவர்மீது குண்டுமழைபொழிந்து கொன்று குவித்தனன். அப்பால் காலாட்படை வந்து கடுங்கோபத்துடன் பாஜியைத் தாக்கிற்று. அப்படையையும் பாஜி வேசாறிப் போமாறு செய்தனன். அதுகண்ட முகம்மது ஆயிரக் கணக்கில் வீரரைக் கொணர்ந்து குவித்து, பாஜியை எதிர்த்தனன். மூன்றுமணி நேரம் யுத்தம் நடந்தும், பாஜியின் வீரர் ஓரடிகூடப் பின்வாங்கவில்லை. பின்னர், முகம்மது பீரங்கிப்படையையும் கொணர்ந்து குண்டுமழை பொழிய, அதேசமயத்தில் காலாளரும் பரிவீரரும் கலந்து பாஜியின் படையில் விழுந்து தாக்கினர். பெரும்படையின் முன்னே ஒரு சிறுபடை எத்துணை நேரம் மல்லுக்கு நிற்கமுடியும்? இரவெல்லாம் நித்திரை யின்றியும், உணவுகொள்ள நேரமின்றியும், தம் உயிரைக் கையில் பிடித்து யுத்தம் செய்த மாவல வீரரில் பலர் மரித்துப் போயினர். அப்போதும் பாஜி பின்வாங்காது போரை நடத்தினன். அத்தருணம் குண்டொன்று வந்து தாக்கவே, பாஜி தொப்பென்று நிலத்தில் சாய நேர்ந்தது. சாயும் சமயத்தில்,

ஐந்து வெடிகளின் சத்தம் விசாலகட்டத்தினின்று கேட்டது. அவ் வெடிகுரல் கேட்டதும் பாஜி, "ஆண்டவன் அருளால் எனது கடனை நன்கு முடித்தேன். என் மித்திரன் பிழைத்தான். இனி யான் மடிவதில் எனக்கு வருத்தமில்லை," என்று கூறிக் கண்மூடினன். "அரசையும் தேசத்தையும் காக்க, பாஜியைப்போல் ஆருயிர் வழங்குவார் யாருமிலர்" என்று அனைவரும் புகழ்ந்து பேசினர். மாவல வீரர் தம தலைவனது உடலைத் தாங்கிக்கொண்டு, காட்டு வழியே புகுந்து சென்று, விசாலகட்டம் சேர்ந்து சிவாஜியைக் கண்டு களிப்புக் கொண்டனர்.

கையில் சிக்கிய சிவாஜி தப்பிவிட்டது கண்டு, சித்திஜோகர் சிந்தாகுலம்கொண்டு விசால கோட்டை சென்று முற்றுகை இட்டனன். சிவாஜியின் வீரச் செயலின் முன்னே அங்கும் சித்திஜோகர் தோல்வியே கொள்ள நேர்ந்தது. சித்திஜோகரின் தோல்விகண்டு பொங்கிய அலி அடில்ஷா, தானே சேனைத்தலைமை வகித்து யுத்தம் புரியலானன். அரசனே முன்னின்று அமர்புரிவது கண்ட வீரர் ஆவேசங்கொண்டு சமர் செய்தனர். சிறிதுகாலத்திற்குமுன் சிவாஜியின் வசமான கோட்டைகளில் பலவும் மீட்கப்பட்டன. இதற்குள் மாரிகாலம் தோன்றிவிடவே, விஜயபுரி சுல்தான் சிறிதுகாலம் பாசறையில் வாளா வதிந்திருந்தனன். அச் சமயம் சவந்தவாடித் தலைவன் சிவாஜியின்மீது கிளம்பக் கருதி, விஜயபுரி அரசைப் படைத்துணை கேட்டனன். மத்தள ஜாகீரின் அதிபதியான பாஜி கௌரி பந்தனையும் மற்றொரு படைத் தலைவனையும் சுல்தான் அனுப்பி உதவினன். அவ்விருவரும் சவந்தவாடித் தலைவனுடன் சேர்ந்துவிடின், சிவாஜியின் நிலைமை ஆபத்தாக

முடியும். அஃதறிந்த சிவாஜி, அம்மூவரையும் சேர வொட்டாமல் தடுக்கவும், தந்தையை முன்னம் சிறைப் படுத்திய பாஜிகௌரிபந்தனைப் பழிவாங்கவும் தீர்மானித் தனன். உடனே சிவாஜி காலந்தாழ்க்காமல் விசாலகட் டத்தினின்று கிளம்பி, மத்தளநாடு சென்று பாஜியைப் போருக்கிழுத்து, அவனைத் தன்வாளுக்கு இரையாக்கினன். ஷாஜியை வஞ்சனையாகச் சிறைசெய்ததுபற்றிப் பாஜியின் குலத்தினரிலே மூவாயிரவர் மடிய நேர்ந்தது. சிவாஜி நடத் திய போர்களிலே அத்தகைய கோரக்கொலை அதுவரை யில் நிகழ்ந்ததில்லை.

பாஜியின் படுகொலையைக் கேட்டுப் பரிதவித்த சுல்தான் மற்றொரு சேனையைச் சவந்தவாடித் தலைவனுக் குத் துணையாக அனுப்பினன். அதனையும் சிவாஜி வழி மறித்து வெட்டி வீழ்த்தவே, சவந்தவாடித் தலைவனுக்குத் திகில் பிறந்துவிட்டது. சிவாஜியும் சவந்தவாடியில் புகுந்து கொள்ளையிடத் தொடங்கினன். உடனே அத்தலைவன் அருகேயுள்ள போர்த்துகேசியரின் நகரமாகிய கோவா சென்று அடைக்கலம் புகுந்தனன். அஃதறிந்த சிவாஜி ஆத்திரங்கொண்டு, "உடனே அத்தலைவனை அனுப்பா விடின், உங்கள் நகரும் நிர்மூலம் ஆகும்," என்று தூதனுப் பவே, போர்த்துகேசியர் பயந்து, அத்தலைவனைக் கைவிட் டனர். ஆதரிப்பார் ஆருமின்றித் தவித்த அத்தலைவன் விதியின்றி சிவாஜியிடமே சரண்புகுந்து, சிற்றரசனாகக் கப் பங்கட்டி வாழ இணங்கினன்.

சிவாஜி, சவந்தவாடியிலே வதிந்த இராம தளவாய் என்னும் மாவீரனது நட்பினைக் கொண்டு, அவ்வீரனை ஒரு

படையுடன் கொங்கணத்திற்கு அனுப்பினன். கொங்கணத்திலே சிவாஜிக்கு வசமாகாத பிரதேசங்கள் ஒவ்வொன்றையும் இராம தளவாய் கைப்பற்றி வருகையில், போர்த்துகேசியரின் பல நகரங்களும் அவன் வசமாயின. போர்த்துகேசியர் அதுகண்டு அச்சங்கொண்டு, தலைநகரான கோவாவைக் காக்கவேண்டி, சிவாஜியுடன் உடம்பாடு கொள்ளக் கருதி முயன்றனர். அப்பொழுது ஆனந்தன் என்பான், "சிவாஜியிடம் ஒரு தூதனுப்பி உடம்பாடு பேசச் சொல்வோம். ஆனல் இதற்கிடையில் நாம் பெரும்படையுடன் இரவிலே செல்லின், சிவாஜியைச் சிறைசெய்து விடலாம்," என்று சொல்லலும், போர்த்துகேசியர் அதற்கிணங்கினர். அங்ஙனமே தூதுவர் சென்று சிவாஜியுடன் சமரஸம் பேசினர். இரவிலே ஆனந்தன் பத்தாயிரம் போர்த்துகேசியருடன் சிவாஜியின் பாசறையை நெருங்கினன். வேவுகாரர் மூலம் அவ்வஞ்சனையை முன்னதாகவே உணர்ந்த சிவாஜி தனதுபடைகளை அணிவகுத்து நிறுத்தியிருந்தான். பகைப்படையைக் கண்டதும், மாவல வீரர் உக்கிரமுடன் தாக்கலாயினர். சிவாஜியே முன்னின்று போரை நடத்த, அவனது பரிவீரர் போர்த்துகேசியரின் மத்தியில் பாய்ந்து பலரை மாய்த்துக் குவித்தனர். பத்தாயிரம் போர்த்துகேசியரில் ஓராயிரவர்கூட உயிர்தப்பவில்லை. அப்பால் போர்த்துகேசியரின் நகரங்கள் அனைத்திலும் மாவலவீரர் புகுந்து, பலரையும் சிறைசெய்து, பணமும் பறித்தனர். முடிவிலே போர்த்துகேசியர் இருபதினாயிரம் மோகரா அனுப்பி, சிவாஜியினிடம் அபயம் வேண்டினர். அதன் விளைவாக, ஆண்டு தோறும் போர்த்துகேசியர் பல பீரங்கிகளைக் கப்பமாகச் செலுத்த இசைந்ததோடு, தங்கள்

வியாபாரக் கப்பல்களுக்கான சுங்கப்பணம் செலுத்து வதாகவும் ஒப்புக்கொள்ள நேர்ந்தது.

விஜயபுரி வேந்தின் நிலைமை முன்னையிலும் வரவர மகாகேடாகிவிட்டது. சவந்தவாடித் தலைவனோ சிவாஜியின் சிற்றரசாகி விட்டான்; ஜான்ஜிராவில் உள்ள முகம்மதி யர் சிவாஜியின்முன் வலியற்று வீழ்ந்துவிட்டனர். மத்தள நாட்டுத் தலைவனும் மாய்ந் தொழிந்தனன். சிவாஜியை எதிர்க்கும் ஆற்றல்கொண்ட படைத்தலைவர் விஜயபுரியிலே ஒருவருமில்லை. பட்டவர்த்தனர் பலரும் மாறுபட்டு, காற் றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென நினைத்து, கலகம் செய்வதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தனர். எனவே, விஜயபுரி வேந்தன் எங்ஙனம் போரைத் தொடர்ந்து நடத்தவியலும்? போரை நிறுத்தி உடம்பாடு கொண்டு நிம்மதியாக வாழ்தலே மேலெனா விஜயபுரியின் இறைவன் ஒரு முடிவுக்கு வந்தனன்.

## 7. தந்தைக்குத் தந்த ஏற்றம்

சிவாஜி இளமையிலே கொண்ட கருத்து ஓரளவு கை கூடியதென்னலாம். மகாராஷ்டிரர் அனைவரையும், முகம்ம திய ஆட்சியிலிருந்து ஒருவாறு விடுவித்தாய்விட்டது. இனி, மொகலாயரை ஒரு கை பார்க்கக் கூடும் என்பதே சிவாஜி யின் சிந்தனையாயிற்று. விஜயபுரியின் முதன்மந்திரி தூத னுப்பிச் சிவாஜியின் சிந்தனையை உணர்ந்து கொண்டனன். உடனே உடன்படிக்கையின் விவரங்கள் பேசப்பட்டன. அன்றளவும் சிவாஜி பறித்துக்கொண்ட நாடுகள் அவன் வசமே இருத்தல் வேண்டும் எனவும், அவைகளை மீட்க

விஜயபுரி முயலுவதில்லை எனவும், தனக்குச் சமமான தனியரசின் தார்வேந்தனுக சிவாஜியை அச் சுல்தான் ஒப்புக் கொள்வது எனவும், இரு வேந்தரும் நேசமாய் வாழ்ந்து ஆபத்துக்காலத்தில் ஒருவருக்கொருவர் ஆதரவாயிருத்தல் வேண்டும் எனவும், உடன்படிக்கை ஒன்று ஏற்படலாயிற்று. இருவருக்கும் இடையேயிருந்து நேசமூட்ட இராஜா ஷாஜியே ஏற்ற புருஷனென விஜயபுரி சுல்தான் மதித்து, சிவாஜியின்பால் ஷாஜியைத் தூதாக அனுப்பி ஆறுதல் அடையலானன்.

'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, இவன் தந்தை என்னேற்றான்கொல் எனும் சொல்' என்றார் திருவள்ளுவர். அவ் வாக்கினுக்கு ஓர் இலக்காகச் சிவாஜி விளங்குவது கேட்டு, இராஜா ஷாஜி உவகைபூத்து, இராஜதௌத்தியத் தொழில் புரிய, நல்ல நாளிலே பிரயாணமானன். நீண்டநாளாகப் பிரிந்துவிட்ட மனைவியையும் மகனையும் காணவிருக்கும் ஆசை ஒருபக்கமும், மைந்தனது வெற்றிப் பிரதாபம் மற்றொரு பக்கமுமாகப் பரவசம் ஊட்ட, இராஜா ஷாஜி விரைவில் சிவாஜியின் எல்லையில் புகுந்தனன். மைந்தன் மகிமை பெறின், காணிக்கை செலுத்துவதாக முன்னம் ஒரு சமயம் விரதம் பூண்ட வண்ணமே, ஷாஜி துளசாபுர பவானியை வணங்கிப் பிரார்த்தனை செலுத்தி, சிங்கணபுரம், பண்டரிபுரம் முதலிய தலங்களையும் தரிசித்து, ஆங்காங்கு அந்தணருக்கும் வறியவருக்கும் அவன் வழங்கிய தானதருமம் பலவாகும். தந்தையும் தநயனும் ஜிஜுரி நகரிலுள்ள ஓர் ஆலயத்தின் முன்னிலையில் சந்திப்பதெனை ஏற்பாடாயிற்று. அவ்விடம் ஷாஜி வந்துசேர, சிவாஜியின் முதன் மந்திரியும் தளகர்த்

தரும் முன்னதாகவே அங்குக் காத்திருந்து, ஷாஜியை வரவேற்றனர். குறித்த முகூர்த்தத்திலே சிவாஜி சென்று, அப்பனை அடிவணங்கி, கைகட்டி வாய்புதைத்து நின்றான். உடனே ஷாஜி தன் மகனைத் தழுவிக்கொள்ள, சிவாஜியின் நயனங்களிலிருந்து ஆனந்தநீர் பொங்கியது. அப்பால், ஜீஜாபாயும் சிவாஜியின் இருமனைவியரும் பரிவுடன்வந்து ஷாஜியின் பாதம் பணிந்தனர். பிறகு அனைவரும் சிவாஜியின் மாளிகைக்குப் பயணமாக, ஷாஜி ஒரு பல்லக்கில் ஏறி அமர்ந்தான். சிவாஜி பல்லக்கிலும் ஏறவில்லை; குதிரையின் மீதும் அமரவில்லை. தந்தையின் பாதுகைகளைத் தாங்கிக்கொண்டு அப்பல்லக்கின் அருகே நடந்துவந்தனன். மாளிகை சேர்ந்ததும், ஷாஜி தனக்கென நியமித்த பஞ்சணையில் பாங்காக அமர, சிவாஜி மிக்கபணிவுடன் முன்னே நின்று, "எந்தாய்! தங்கள் ஆணையை மீறி, விஜயபுரியுடன் போர் தொடுத்தேன். ஆனதுபற்றித் தங்களது உயிருக்கே அந்நாள் ஆபத்து நேரலாயிற்று. சிறியேன் செய்த பிழையைப் பெரியோராகிய தாங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். அப் பெரும்பிழைக்கு என்ன தண்டனையிடினும் அடியேன் அனுபவிக்கக் காத்துள்ளேன்," என்று கூறினன். உடனே ஷாஜி எழுந்து, புதல்வனை அருகே அமர்த்தி, "அப்பனே! சுகமேயிரு. நீ பிழை எதுவும் புரியவில்லை; நம் மரபுக்குரிய ஆண்மையே காட்டினாய்; நம்மவரின் சமய உணர்ச்சிகளையும், ராஜீய உரிமைகளையும் நிலைநாட்ட நீ பட்ட பாடனைத்தையும் யான் நன்கறிவேன். உனது போர்த் திறனையும் வீர வாழ்வையும் அவ் வப்போது அறிந்து, யான் அடைந்த ஆனந்தம் அளவிடமுடியாது. நம் தேசத்தினுக்குப் புதிய வாழ்வளிக்கும் பெருமகன் என்

வயிற்றில் உதித்தது எனக்கு ஒரு பெருமையன்றோ? அறிவும் ஆற்றலும்கொண்ட ஆண்மகவின் பிரதாபங்கேட்டுப் பரமானந்தங் கொள்வதினும், வானுலகில் அடையும் பயன் உளதோ?'' என்று சொல்லி ஆசியும் கூறினான். அதன் பின், சிவாஜி தனது தோழரையும் துணைவரையும் தளகர்த்தரையும் தந்தைக்கு அறிமுகப்படுத்தினன்; தனது சிற்றன்னை துகாபாயின் பாதம் பணிந்து, பக்தி காட்டினன்; அவ்வன்னையின் வயிற்றில் உதித்த வெங்காஜியைக் கட்டித் தழுவிக் களித்தனன். தந்தையிடம் சிவாஜி கொண்டுள்ள பய பக்தி விசுவாசம் கண்டு, அனைவரும் ஆனந்தங் கொண்டனர். உடனே ஏழை எளியவருக்கு அளவிறந்த தான தருமங்கள் வழங்கப்பட்டன. இரண்டு மாதகாலம் ஷாஜியும், சிவாஜியும் அகம் பூரித்து அந்நகரிலே போக போக்கியங்களுடன் வாழாநின்றனர்.

பின்பு, சிவாஜி தனது தந்தை ஷாஜியை அழைத்துச் சென்று, இராஜகோட்டை, பிரதாபகிரி முதலிய தனது கோட்டைகளைக் காட்டினான். போர்நூலின் முறையையும் கோட்டைகளின் நிலையையும், நன்குணர்ந்த ஷாஜி, "மைந்த! ரெய்ரி என்னும் குன்றில் கோட்டை யமைப்பின், அதனை எப்பகைவனும் எளிதில் தாக்க இயலாது. ஆதலின் அக்குன்றிலேயே உனது இருக்கைக்கு உரிய அரண்மனையும் ஆலயங்களும் கட்டி வாழ்க,'' என்று கூறினன். உடனே அவ்விடத்தில் பலவகை அரண்கள் பொருந்திய அரிய கோட்டையொன்று கட்டினன் சிவாஜி. அதற்கு இராயகோட்டை என்று பெயரிடப்பட்டது. அன்று முதல் இராயகோட்டை சிவாஜியின் தலைநகராக விளங்கலாயிற்று. அக் கோட்டையின் நிலையைப் பரீட்சித்தறிய

விரும்பி ஒருதினம் சிவாஜி, "இராயகோட்டையின் வாயில் வழியை விடுத்து, வேறு மார்க்கம் கொண்டு, யாரேனும் கோட்டையின் உச்சியில் ஏறிவிடின், அன்னாருக்குப் பொற்கிழியும் தங்கச் சங்கிலியும் பரிசளிக்கப்படும்," என்று விளம்பரம் செய்தான். மகார் வகுப்பைச் சேர்ந்த ஒருவன் முன்வந்து, அக்கோட்டையின் உச்சியை அடைந்து விடுவதாக வீரம் பேசினன். பலரும் அதுகேட்டு நகைத்தனர். சிவாஜியோ புன்னகை பூத்து, "வீர! ஆற்றலுளதேல், ஏறிப் பார்க்கலாம்," என்றனன். குழந்தைப் பருவம் முதல் அக்குன்றின் உச்சியில் ஏறிப்பழகிய அம்மனிதன், இராய கோட்டையின் உச்சி சேர்ந்து, கொடியொன்று நாட்டித் திரும்பினுன். சிவாஜி அதுகண்டு களித்து, வாக்களித்த வண்ணம் பொற்கிழியும் சங்கிலியும் பரிந்தளித்து, அவ் வழியை அடைத்துவிடுமாறு ஆணையிட்டான்.

இரத்தினதேவி என்னும் ஆயர்குல மாதொருத்தி, அக்கோட்டையின் படைஞருக்குப் பால் விற்கப் போய் வருதல் வழக்கம். ஒரு தினம் அந்திபடும் வரையில் அவள் தனது வேலையினிமித்தம் குன்றை விட்டிறங்காதிருந்தனள். இரவு எட்டு மணிக்கு அவள் திரும்புகையில் கோட்டைக் கதவுகள் தாளிடப்பட் டிருந்தன. காவலரை வேண்டிக்கொண்டும், அன்னவர் இரவிலே கதவைத் திறந்து விட மறுத்தனர். அடிவாரத்திலே அவளது பச்சைக் குழந்தையும் வயதுசென்ற மாமியும் இருந்ததால், இரவிலே வீடுசெல்லாவிடின் தாய்முகங் காணுமல் அக் குழந்தை ஏமாறிப்போம்; மாமியும் கோபங் கொள்வாள். ஆதலின் உயிர் ஒரு பொருட்டன்று என, அந்த இடையர் குலமங்கை கருதி, தானறிந்திருந்த ஒரு கள்ளவழியின்

மூலம் இரவிலே அடிவாரம் போய்ச் சேர்ந்தனள். மறு தினம் சிவாஜிக்கு அச்செய்தி எட்டியது. அக்கணமே அப் பாதையையும் கூர்ந்தறிந்து, அடைத்து விடுமாறு அவன் ஆக்கினை இட்டனன். சின்னாள் சென்றபின் ஷாஜி கர்நாடகம் போகவிரும்பவே, சிவாஜி கொண்ட துயரம் கொஞ்சமன்று. "அரசே! எந்தாய்! அன்று ஏகலைவன் துரோணரது சிலையை வணங்கி, வில்நூலின் கரைகண்டது போல், அடியேனும் தங்களது அடிச்சுவடுகளைப் பின்பற்றி, தங்களது அருளினாலும் அம்மையின் கருணையினாலும் அரசொன்று கண்டேன். அருகிருந்து தந்தைக்குரிய பணி புரியும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. தங்களுக்கோ வார்த்திகதசை வந்து விட்டது; ஆதலின் தாங்கள் இவ்வரசிலிருந்து எனக்குப் புத்தி புகட்டி வாழ்தலே மேன்மையாகும். வேற்றரசினுக்குத் தலைவணங்கி நிற்றலும் ஒரு வாழ்வாமோ?" என்று அப்பெருமகன் புகன்று தந்தையின் பாதம் பணிந்தனன்.

ஷாஜி அதுகேட்டு, "அரும்புதல்வ! எனக்கு இன்றளவும் வெற்றி தேடித்தந்த வீரவாளைப் பெற்றுக்கொள். உனது வேண்டுகோளை மீறி நடக்க எனக்கு மனமில்லை. ஆயினும் திரும்பச் செல்லாவிடின், கர்நாடகத்திலே நான் கொண்டுள்ள வெற்றிகள் வீணாகி விடும். அன்றியும் நான் கர்நாடகத்தில் இருப்பின், பின்னால் உனது உயரிய எண்ணமாம் பேரரசை நிலை நாட்டுதலும் எளிதில் கைகூட வழிபிறக்கும்," என்று கூறி, சிவாஜிக்கு ஆறுதல் அளித்தான். சுருங்கச் சொல்லின், உடலிலிருந்து உயிர் பிரிவது போல், தந்தையும் மைந்தனும் முடிவிலே பிரிய நேர்ந்தது. அக்காலையில், "மைந்த! யான் உயிருடன் இருக்கும் வரை

யில், விஜயபுரியின் மீது நீ படையெடுத்துச் செல்லலாகாது,'' என்று ஷாஜி கூறி வாக்குறுதி வேண்ட, சிவாஜியும் அதற்கு இசைந்து, தந்தையின் ஆசிபெற்றனன்.

கர்நாடகத்துக்குப் போகும் முன்னம், ஷாஜி விஜயபுரி சென்று, சிவாஜியின் உடம்பாட்டை வேந்தனுக்கு உணர்த்தியதும், சுல்தான் கவலையொழிந்து நிம்மதிகொண்டனன். சிவாஜியை விட்டுப்பிரிந்து கர்நாடகம் சென்றதும், இரண்டு ஆண்டினுக்குமேல் ஷாஜி உயிரோடிருக்கவில்லை. 1664-ஆம் ஆண்டிலே ஒருநாள் ஷாஜி வேட்டையாட அடவி புகுந்து, முயலொன்றைத் துரத்திச் சென்றனன். வழியிலே குதிரை காலிடறிக் கீழே விழுந்துவிட, ஷாஜியும் தரையில் வீழ்ந்தனன். அதுவே நோயாக மாற, அவனது ஆவி அகன்றது. துகாபாயின் மைந்தன் வெங்காஜி ஆற்றொணுத் துயர்கொண்டு ஈமக்கடன்கள் புரிந்தனன். ஷாஜிக்கு அப்பொழுது வயது எழுபது.

தந்தை மரித்த செய்திகேட்ட சிவாஜி அறிவழிந்து அழுது புலம்பினன். ஜீஜாபாயோ அத்துயர் தாங்காமல் தீக்குளிக்கத் துணிந்தனள். அஃதறிந்த சிவாஜிக்கோ துக்கம் இன்னும் பெருகிவிட்டது. அதுகண்டு படைத்தலைவரும் பிறரும், "அன்னய்! தந்தையை இழந்து தவிக்கும் சிவாஜி மன்னன் தாயையும் இழக்க நேரின் ஆவி துறப்பனே! அரசியாகிய நீர் தீக்குளிப்பின், இராஜா ஷாஜியின் பெயரும், சிவாஜியின் சீரும் மறைந்துபோம். மைந்தன் தனது வலிமையால் கண்ட இவ்வரசும் இல்லாதுபோம். இவ்வரசு மறையின், தலைதூக்கி நிற்கும் மகாராஷ்டிரரும் தலைசாய்வர். வெண்ணெய் திரண்டுவருங் காலத்திலே தாழி உடையலாமோ?'' என்று வேண்டிக்கொண்டனர். தநய

னது பெருவாழ்வை முற்றிலும் கண்டு களிக்கவேண்டி இன்னும் சிறிதுகாலம் உயிருடன் இருக்க அம்மாது ஒருவாறு இசைந்தனள். சிவாஜி தனது தந்தைக்குரிய ஈமக்கடன்களை வைதிக முறைக்கிணங்க இலட்சக்கணக்கான பொருட்செலவில் நிறைவேற்றினன். ஷாஜி இறந்த பசவப்பட்டினம் என்னுமிடத்திலே, சிவாஜியின் ஏவலால் அழகிய சமாதியொன்று சமைக்கப்பட்டுளது.

ஷாஜி காலகதியானதும், அவன் மைந்தன் வெங்காஜியையே விஜயபுரிவேந்தன் கர்நாடகத்தின் அதிபனுக்கினன். கடைநாளிலே ஷாஜி தனது இளையபிள்ளைக்குக் கூறிய புத்திமதி ஈதாகும்:—"மைந்த! நினது அண்ணன் தனது பெயரால் அரசொன்று கண்டு ஆண்மைகொண்டு விளங்குகின்றான். எனக்குப் பின் கர்நாடகத் தலைமைப் பதவி உனக்குக் கிட்டும். நீதியும் நேர்மையுங் காட்டி நீ அரசாளவேண்டும்; அம்மையின் அருளை முன்னிட்டுப் பேரரசை நிலைநாட்டி, உலகெங்கும் வியன் புகழ் கொள்ளும் வெற்றிவீரனாக வாழவே, உனது தமையன் எண்ணியுள்ளான். அக்கருத்து கைகூடுமேல், அவனே நமது குடும்பத்தின் தலைவனாவன். ஒருசமயம் அவன் தவறித் தவிப்பின், இக் கர்நாடகம் உனக்கும் அவனுக்கும் சொந்தமாகும். சுல்தானும் அதற்குச் சம்மதிப்பான். கடைக்குட்டியான உன்மீது எனக்கு அன்பு மிக அதிகம். வீரசிங்க சிவாஜியின் தம்பி நீ என்பதை மறவாதே. எனது மதியமைச்சரின் சொற்படி நடப்பின், நீ நலமும் பலமும் எய்திச் சுகமே வாழ்வாய்!"

விஜயபுரி அரசுடன் உடம்பாடுகொண்ட காலத்திலே மேலைக்கடற்கரையில் உள்ள கொங்கண தேசத்தின் பல

துறைமுகங்கள் சிவாஜியின் கைவசத்தில் இருந்தன. அங்கே ஜான்ஜிரா எனும் மாகாணத்தின் தலைவனாக விளங்கிய பதீகான்என்னும் முகம்மதியன் கப்பல் படைகொண்டு பலசமயங்களில் சிவாஜிக்குத் துன்பம் இழைக்கலாயினன். இன்னல் சிறிது மின்றி இனிதாள வேண்டின், தனக்கும் கப்பற்படையொன்று மிகுதியும் தேவையெனக் கண்டு கொண்ட சிவாஜி, உடனே கப்பல்கட்டுந் தொழிலில் கைவந்த மக்களைப் பற்பல இடங்களிலிருந்தும் தருவித்து அரிய கப்பல்படை யொன்றை அமைத்துக்கொள்ள லானான். நாளடைவில் ஐந்நூறு மரக்கலங்கள் சிவாஜிக் குச் சொந்தமாயின. இத் துறையில் ஒருகோடிக்குமேல் அவன் செலவிட்டனன்; கப்பல்படை அமைத்ததுடன் நில்லாமல், துறைமுக நகரங்களிலே அப்படை தங்கி நிற் கும் வண்ணம், பலவகையான தளவாடங்களும் நிரம்பிய துறைமுகக் கோட்டைகளையும் நிருமித்தனன். துறைமுகக் கோட்டைகள் எழுப்புங்காலையில் சிவாஜி தானும் வேலை செய்யத் தலைப்பட்டு மக்களுக்கு ஓர் உற்சாகம் ஊட்டி னான். அவன் முதலில் கட்டிய துறைமுகக் கோட்டை சிந்துதுர்க்கம் எனப்படும். அப்பால் விஜயதுர்க்கம், சுவர்ணதுர்க்கம் எனும் இன்னும் இரண்டு துறைமுகக் கோட்டைகளும் கட்டுவித்தான் சிவாஜி. அதற்கு முன்னம், கடலிலே அட்டகாசம் புரிந்த மூர், ஆங்கிலர், பிரஞ்சுக்காரர், போர்த்துகேசியர் முதலியோரின் கப் பல்கள் அப்பால் சிவாஜியின் கப்பல்படை கண்டு அச்சங் கொண்டன. முதன்முதலாகப் போர்த்துகேசியர் சிவாஜி யுடன் உடன்படிக்கை செய்துகொண்டனர். பின்னர் ஆங்கிலேயரும் அப்படியே சிவாஜயுடன் சமரஸம் நாடின

றென்று புலப்படுகின்றது. நிலப்படையில் இணையிலாப் பேராற்றல் கொண்டு விளங்கியதுபோல, நீர்ப்படையிலும் ஆற்றல்காட்டி ஆண்மைபெற அவ்வீரமகன் ஆவல்கொண் டிருந்தனன். இந்தியாவில் இதர நாடுகளுக்குக் கப்பல் மூலம் நடைபெறும் வர்த்தகம் அன்னியரின் கையில் இராமல், நாட்டுமக்களின் கைதனில் இருக்கவேண்டுமென் பது அவனது ஆசையாயிருந்தது.

---

## 8. மொகலாயரின் முறிவு

அரிய தந்தையைச் சிறைசெய்து, உடன் பிறந்தாரை ஒருங்கே மாய்க்க வகைதேடி, டில்லியரியணையில் அவுரங்க சீபு அமர்ந்தனன். அவ்வாறு முறைபிறழ்ந்து மணி முடி சூடிய அவுரங்கனிடம் கலைமகளது பேரருள் நிரம்பியிருந் தது. அரியாதனம் ஏறுவதற்கு முன்னம், அவன் அனைவ ருக்கும் இனியனுய்த் திகழ்ந்து, தனது குலத்தவருக்குள் உயர்ந்த மேதாவியெனப் பெயர்வாய்ந்து,வாக்கு நயத்தால் வீரர் பலரையும் வசமாக்கி வரிசை படைத்தவன். கவிபாடுந் திறமையும், இஸ்லாமிய சமயநூலாராய்ச்சியும், பகைவரை நடுக்குறச் செய்யும் வீரஉணர்ச்சியும், அரசியலை நடத்துவ தற்குரிய அரிய தாளாண்மையும் அவனிடம் நிறைந்து நிற்கவே, அவன் பலரது உள்ளத்தையும் கவரும் கள்வனு யினன். ஆதலின், அன்னுன் நெறி தவறி அரியாசனத்தை எய்தியும், அறிவு மிக்க முகம்மதியரில் பலரும் அதற்கு ஒருவாறு மனமொப்பினர். அரியணையில் அமர்ந்த பின் னர், அவனது நற்குணங்களையெல்லாம் அகந்தை யென் னும் அலகை விழுங்கி விட்டது. மொகலாயவரசை நிலைநாட்

டிய பாபரும், அதனைப் பெருக்கிய அக்பரும் கையாண்டு வந்த சமய சமரஸ முறையை அவுரங்கன் எண்ணிப்பார்க்க வில்லை. ஏழைபோல் நாள்தோறும் உழைத்து வருவோனே உண்மை அரசன் ஆவான் என்பதை அவன் நன்குணர்ந்து, அதன்படி நடந்துவந்த போதிலும், மதவெறி மேலிட்டு விடவே, தன்மதமே நன்மதமென மமதைகொண்டு, புறசம யத்தினரை வருத்தியும் புண்படுத்தியும், பழிக்கு ஆளாயி னன். அவரவர் சமயத்தில் அவரவர்க்குப் பற்று மிகுந்து நிற்கும் என்பதை அவ்வரசன் தன் கருத்தில் கொள்ள வில்லை. தக்காணத்தில் உள்ள விஜயபுரியரசை வீழ்த்தி, சிவாஜியின் சீரைக் குலைத்து, கன்னியாகுமரி வரையில் பிறைக் கொடியைப் பறக்கவிடவேண்டும் என்பதே அம் மன்னவனது ஆவல். அதற்கேற்ப அவுரங்கசீபு அளவிலாச் சதிசெய்தனன். அவன் ஒருசமயம் விஜயபுரியுடன் போர் புரியும் சிவாஜியை உற்சாகப்படுத்தி ஊக்குவன்; மற்றொரு சமயம் சிவாஜியை நசுக்கி அழிக்குமாறு விஜயபுரி வேந் தைக் கிளப்பிவிடுவான். இருவரும் அவ்விதம் போரிட்டு வலியிழப்பின், எளிதில் அவ்விருவரையும் முடிவிலே தான் தொலைத்துவிடக் கூடும் என்பதே அவனது மனக்கருத்துப் போலும்!

தக்காணத்தில் அச்சமயம் மொகலாயவரசின் பிரதி நிதியாக விளங்கியவன் பெயர் ஷீஸ்டாகான். அவன் அவு ரங்கசீப்பின் தாயுடன் பிறந்தவன்; மேலும் டில்லியரசில் முதன்மை பெற்ற மகுடவர்த்தனன். காலங் கருதி யிருந்து சிவாஜியைச் சீர்குலைக்க வேண்டுமெனும் ஆணை தாங்கியே அவன் தக்காணம் வரலாயினன். விஜயபுரியர சனுக்கும் சிவாஜிக்கும் போர் மூண்டவுடனே, ஷீஸ்டா

கான் அதுவே தக்க சமயமெனத் தனது பெரும்படையைத் திரட்டிக்கொண்டு மகாராஷ்டிரத்தின் மீது பாய்ந்தனன். நூறுயிரம் வீரருடன் சூபாஜில்லாமீது ஷீஸ்டாகான் வருதல் கண்டு, சிவாஜியின் சேனுவீரர் தந்திரமாகப் பின்வாங்கினர். பூனுவை வசஞ்செய்துகொண்டு சூபா நகரைத் தாண்டிய பின்னர், மொகலாய சேனையின் முன்னேற்றம் மிகவும் கஷ்டமாயிற்று. மகாராஷ்டிரப் பரிவீரர் அச்சேனையின் பிற்பகுதியைத் தாக்கி, மிகுதியும் நாசம் விளைத்தனர். மொகலாயரின் தளவாடங்களும், பரிகளும், ஒட்டைகளும் சிவாஜியின் வீரரிடம் சிக்கிக்கொண்டன.

சிவாஜியின் சீரிய கோட்டைகளில் ஒன்முன சகனம் என்பதை ஷீஸ்டாகான் முற்றுகையிடக் கருதினன். அக்கோட்டை எளிதில் வசமாகுமென அவன் முதலில் எண்ணினுன். அதன் தலைவனுன பிராக்ஞன் என்பான் ஒருசிறிய படையுடனிருந்தும், வீராவேசங்கொண்டு மூன்று மாத காலம் சமர் தொடுத்தான். அத்தருணம் விஜயபுரிச் சேனையின் முற்றுகையினுல், பனகலக் கோட்டையிலே சிவாஜி சிக்கிக் கிடக்கவே, பிராக்ஞனுக்குத் துணைப் படையனுப்ப, அவ்வீரனுல் இயலவில்லை. முடிவிலே ஒருநாள் மொகலாயப் படைஞர் சுரங்க வெடி வைத்து, அக்கோட்டையின் சுவரிலே ஒருபாகத்தில் பிளவு உண்டுபண்ணிவிடனும், அதுகண்ட பிராக்ஞன் சிறிதும் சோர்வின்றிச் சில வீரருடன் ஓர் இரவு முழுதும் மொகலாயரை வழிமறித்து நின்முன். மறுதினம் காலையிலே மொகலாயர் வெள்ளம் போல் வந்து குவிந்ததனுல், அத்தலைவன் சிறைப்பட்டு விழ நேர்ந்தது. கையில் சிக்கிய தலைவனைக் கண்டதும், ஷீஸ்டாகான், "வெற்றிவீர! சிற்றரசிடம் சேவை செய்து

யாது பயன்? பேரரசாம் மொகலாயரிடம் சேவகம் புரியின், ஏற்றம் பலவும் பெறலாம்,'' என்றுகூறி ஆசைவலை வீசிப் பார்த்தான். மானமே பெரிதென மதித்த பிராக்ஞன் அதற்கு மனமொப்பாமல், முடிவிலே விடுதலை பெற்று வீரசிவாஜியுடன் வந்து சேர்ந்தனன். முடிவு வரையில் முதுகுகொடாமல் மொய்யமர் முறுக்கித் திரும்பிய பிராக்ஞனைச் சிவாஜி பெரிதும் பாராட்டி, உயர்பதவியும் மிக்க கௌரவமும் அளித்து உற்சாகப்படுத்தினன்.

பகைவரது படைவெள்ளத்தைக் கூர்ந்தறிந்த சிவாஜி, தனது சிறுபடைகொண்டு அவர்களுடன் நேர்நின்று சமர் தொடுத்தல் முடியாதெனக் கண்டுகொண்டான்; பகைவர்களை மூலை முடுக்குகளில் வலிய இழுத்து அலையவைத்து, அதனால் அவர்கள் அயரும்போழ்தில் மேலேபாய்ந்து வெற்றிகொள்ளுதலே ஏற்றதெனத் தீர்மானித்தான். மேலும் அவன், மொகலாயரின் நாட்டில் ஒருபக்கம் உட்புகுந்து சீரழிப்பின், பகைப்படையில் சிறிது ஆங்கே செல்ல நேரும். ஆதலால், பகைவரது வலி சிதறும் வழியைச் சிவாஜி கருதிக் கருமம் புரியலானன்.

'மலைகல்லி எலிபிடித்தது போல்' படைஞரிலே பலரைப் பறிகொடுத்தே அச்சிறு கோட்டையைத் தான் வசப்படுத்த நேர்ந்ததைக் கண்ட ஷீஸ்டாகானுக்குச் சிந்தாகுலம் உண்டாயிற்று. இதற்குள் அவுரங்கசீபும் மகாராஷ்டிரரை எளிதில் வெல்லமுடியாதென உணர்ந்து, ஜோதிபுரிக்கு இறைவனான யசோவந்தன் என்பானை ஷீஸ்டாகானுக்குத் துணையாக அனுப்பினன். அதன் பின்னர், மொகலாய சேனை மூர்க்கமுடன் எழுந்து, கொங்கண தேசத்தில் புகுந்து, சிவாஜிக்குச் சொந்தமான கல்யாண

மாகாணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அதுகண்ட சிவாஜி தனது தோழன் மௌரிபந்தனை ஏவ, அங்ஙனமே மௌரியன் சென்று, கடும்போர் புரிந்து அம்மாகாணத்தை மீட்டனன். மற்றொரு தோழனான நேதாஜி என்பான் சிவாஜியின் ஆணை தாங்கிப் பத்தாயிரம் வீரருடன் சென்று, மொகலாயருக்குச் சொந்தமான ஆமத் நகரம், அவுரங்கபாத் ஆகிய பிரதேசங்களிற் புகுந்து, ஆங்காங்கே கொள்ளையும் கொலையும் நடத்தி, மாற்றாரின் மனத்தில் அச்சமும் திகிலும் உண்டாக்கி வந்தான்.

அச்சமயத்திலே அப்பிரதேச அதிபரும் பெருமக்களும் மகாராஷ்டிரருக்கு அஞ்சிநின்று, மொகலாய வரசுக்கு அனுப்பவேண்டிய இறைப்பணத்தை அனுப்பத் தாமதித்தனர். அஃதறிந்த ஷீஸ்டாகான் சினங்கொண்டு, "அதிபர்காள்! நீவிர் ஆண்பிள்ளைகளாயினும், அஞ்சி உழலுகின்றீர். மகாராஷ்டிரரை எதிர்த்து நிற்க உங்களால் ஆகவில்லை. ஆதலின் உங்களுக்கு ஆதரவளிக்க ஆண்மை படைத்த மாதொருத்தியை அனுப்புகின்றேன்," என்று கூறி, இரவிபாகினி எனும் மடந்தையின் தலைமையிலே ஒரு படைவகுப்பை அனுப்பினன். அங்ஙனமே அவ்வீரமாது படையுடன் புறப்பட்டனள். சிவாஜியின் வீரர் ஆவேசங்கொண்டெழுந்து, மொகலாயப் படையை முறியடித்து, அம் மாதையும் சிறைசெய்து திரும்பினர். அப்பால் மற்றொரு மொகலாய சேனை கொதித்தெழுந்து வந்து நேதாஜியைப் போருக்கு அழைத்தது. ஆமத் நகருக்கு அருகே இருதிறத்தினரும் சந்தித்துக் கொடும்போர் புரிந்தனர். அதில் மொகலாயர் முறிபட்டுப் பல பரிகளையும் யானைகளையும் கைவிட்டு ஓட்டம் பிடிக்கவே, நேதாஜி வெற்றி

மாலேயுடன் திரும்பினன். சிவாஜியும் சிலவீரருடன் சென்று, பகைஞரின் பராமரிப்பில் உள்ள பிரபலகோட்டையை வளேத்துக் கொண்டான். அதன் தலேவஞன கேசரி சிம் மன் சின்ஞள் வீரமுடன் எதிர்த்து நின்றும் பயன்படாமல் வீரசுவர்க்கம் புக நேர்ந்தது; ஆஞல் அதன் முன்னம் அக் கோட்டைக் குள்ளிருந்த இராஜபுத்திர மங்கையர் பலரும் தீக்குளிக்கும் வண்ணம் கேசரி சிம்மன் கட்டளேயிட்டான். பகைவனது வீழ்ச்சி கண்டு, சிவாஜி அக்கோட்டையி னுள்ளே புகுந்து, இறந்துபட்ட பகைவர் அனைவரையும் வேத விதிக்கிணங்க அடக்கஞ் செய்தனன்; கேசரி சிம்ம னது அன்னேயும் குமரியும் உயிருடனிருத்தல் கண்டு, பொன்னும் மணியும் கொடுத்து, அவ்விருவரையும் தகுந்த மரியாதையுடன் அனுப்பிவைத்தான். அங்கே அம்மை யின் அருளால் சிவாஜிக்கு நாலுலட்சம் மோகராக் கொண்ட பெரும் புதையல் ஒன்று அகப்பட்டது.

மொகலாயசேனே மகாராஷ்டிரத்திலே புகுந்தகாலத் தில், சிவாஜியின் அதிகாரிகளிலே இருவர், ஷீஸ்டாகான் வீசிய ஆசை வலேயில் பட்டுக் கிடந்தனர். அதுகேட்டு வீர சிவாஜி கொண்ட துயரம் கூறுந்தரமன்று. மோசக்காரரு டைய குலத்தைச் சேர்ந்த சாம்பாஜி என்பவன் சிவாஜி யின் நம்பிக்கையுள்ள வீரரில் ஒருவஞக விளங்கியவன். ஒருநாள் சிவாஜி, சாம்பாஜியை நோக்கி, "அன்ப! நினது குலத்தினரிலே இருவரை நம்பி நான் மோசம்போனேன். அவர்கள் எனக்குத் துரோகம் புரிந்ததுடன், தம் குலத் தினுக்கும் மாசு தேடிக்கொண்டனர். இனி அக்குலத்தி னரை யான் எங்ஙனம் இலகுவில் நம்ப இயலும்?" என்று மனங்கரைந்து மொழிந்தனன். அச் சொல்லம்பைப்

பொருத சாம்பாஜியும் சமயம் பார்த்து, மொகலாயரிடம் போய்ச் சேர்ந்துகொண்டான். சாம்பாஜியின் சரீர ஆற்றல் மிகவும் வியக்கத்தக்கது. பெரும் பரியொன்றை அதன் குளம்புகொண்டு அவன் அந்தரத்தே தூக்கி நிறுத்தியது கண்டு, ஷீஸ்டாகானும் இதர மொகலாயரும் மெச்சிப் புகழ்ந்தனர். ஐந்நூறு வீரருக்குத்தலைவன் என்னும் பட்டம்பெற்று, அவுரங்கசீபின் சேனையிலே அவன் சேவித்து நின்றனன். நாட்சில சென்றதும், அவன் ஒருபடைக்குத் தலைமை வகித்துப் போர் புரிதல் கண்டு, நேதாஜியை அவன்மீது ஏவினன் சிவாஜி. நேதாஜி சிங்கநாதஞ் செய்து சென்று, சாம்பாஜியை விண்ணேற்றி, அவன் தங்கியிருந்த நகரையும் தரையோடு தரையாக்கித் திரும்பி வந்து, சிவாஜிக்கு ஆறுதல் அளித்தனன்.

மகாராஷ்டிர வீரர் இங்ஙனம் சிறுபோர் செய்து வந்தனரே யன்றி, மொகலாய சேனையனைத்தையும் ஒரு முகமாக எதிர்த்துப் போர்புரிய இசையவில்லை. பெருவெள்ளம் போல் பரந்து வந்துள்ள அச்சேனையைச் சந்தித்து, வெற்றியோ தோல்வியோ காணுவதாயின், அது ஆகாத காரியமாகும். சிவாஜி தந்திரத்தாலேயே மொகலாயரை முறியடிக்கக் காத்திருந்து, தனது குலதெய்வத்தைத் துதித்து நிற்கையில், "குழந்தாய்! மொகலாய சேனைகண்டு மனம் மறுகற்க. அப்ஸல்கான் அழிவுண்டதுபோலவே, ஷீஸ்டாகானும் சிதறுண்டு போவான். கவலை விடுக. மனவலி கொள்க," என்று அம்மை பவானி அருள்புரிவதுபோல் கனவுகண்டனன். ஆதலின் அம்மை முன்னின்று உதவிபுரிவாளென அவ்வீரனுக்கு முன்னையினும் மனவலி பெருகலாயிற்று. அப்பால் சிவாஜி மொகலாய சேனையின் நிலை

கண்டு, சிம்மகோட்டையிலே தங்கி, மாற்றாரின் வரவை எதிர் நோக்கி இருந்தனன். இதற்குள் மாரிகாலம் வந்து விட்டமையால், ஷீஸ்டாகான் பூனா நகரில் தங்குவானாயினான். ஆயினும் வாய்க்கொழுப்பு அக்கானைச் சும்மாவிருக்க விடவில்லை. அவன், "மலையில் மறைந்து வாழும் மூர்க்கக் குரங்கே! இரணகளத்தில் குதித்து நேர்நின்று போர்புரிய இதுவரை நீ முயன்றாயில்லை. மலைக்குகைகளில் பதுங்கிக் கிடந்து, சமயம் பார்த்துக் கிளம்பி வந்து, கோரம் புரிந்து செல்கின்றாய். உன்னை அம்பலத்துக்கு இழுத்து, உம்பர் உலகுக்கு அனுப்பவே வந்துள்ளேன். உனது உபாயமும் சூழ்ச்சியும் எத்தனைநாள்தான் உன் உயிரைக் காக்கும்? சின்னாளில் நினது கதியை நீயே அறிவாய்," என்று இகழ்ந்து, வீரசிவாஜிக்கு ஓலை போக்கினன்.

அதற்குச் சிவாஜியும், "அகந்தைகொண்டு கிடக்கும் மூடா! குரங்கென என்னை நீ மதிப்பின், ஜானகித் தாயின் கோலங்கண்டு ஆற்றப்பொறாது அசோகவனத்தை அழித்து, இலங்கையை எரித்து இலங்கேசனை வீறழித்த அநுமானைப்போல், யானும் பாரதத்தாயின் துயரந் துடைக்கவே உனது சேனைவெள்ளத்தைச் சின்னபின்னஞ் செய்து, உனது வீறாப்பையும் போக்கவே தோன்றியுள்ளேன்," என்று பதில் விடுத்தான். சுத்தவீரர் வாய்ப்பேச்சோடு நின்றுவிட ஒருப்படுவரோ? அரிமாவின் குகையிற் புகுந்து, அதன் பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்டங் காண்பது போல், மொகலாயரின் பாசறையுட் புகுந்து, ஷீஸ்டாகானைச் சீர் குலைக்க நினைந்த சிவாஜி அதற்குரிய வழியை ஆராயலாயினான். பூனா நகரிலிருந்து பத்துமைல் தூரத்தில் உள்ள சிம்மகோட்டையில் தங்கியிருந்த சிவாஜி, எச்சமயம்

வெளிக்கிளம்பித் தன்மேற் பாய்வனேவென்று ஷீஸ்டா கான் அஞ்சி, அதற்குத் தக்கவாறு காவலுக்கு ஏற்பாடு செய்திருந்தனன்.

அந்நகரிலே ஷீஸ்டாகான் தங்கியிருந்தஇடம் சிவாஜி சின்னவயதில் வதிவதற்குச் சமைக்கப்பட்ட இராஜமகால் என்னும் மாளிகையே யாகும். அம்மாளிகையின் ஒரு புறத்தே ஷீஸ்டாகானும், மற்றொரு புறத்தில் அவனது அந்தப்புரமாதரும் தங்கியிருந்தனர். அம்மாளிகையைச் சுற்றி நான்கு புறத்திலும் பதினாயிரம் இஸ்லாமிய வீரர் உருவின கத்தியுங் கையுமாகக் காவல் புரிந்து நின்றனர். சிம்மகோட்டைக்குச் செல்லும் பாதையிலே, மகா ராஜா யசோவந்தன் பதினாயிரம் வீரருடன் எதிரியை நோக்கியிருந்தான். மொகலாயரைச் சேவித்து நின்ற மகாராஷ்டிரப் பரிவீரர் எவரையும் ஷீஸ்டாகான் நம்பாது, அனைவரையும் வேலையினின்று விலக்கி விட்டனன். மேலும் இந்துக்கள் அனைவரும் பூனா நகரின் உள்ளே வரவோ, வெளியே செல்லவோ வேண்டின், அத்தலைவனது அநுமதி பெறவேண்டுமெனவும், மகாராஷ்டிரப் பெருமக்கள் தவிர ஏனைய சாமானியர் எவரும் அச்சேனாபதியை நேரிற் காணக் கூடாதெனவும் ஆணை பிறந்தன. இத்தகைய காப்புடன் நிற்கும் ஷீஸ்டாகானை யாவரே அணுக முடியும்? இவை யனைத்தையும் ஒற்றரால் சிவாஜி உணர்ந்துகொண்டான். உடனே சிவாஜியின் தூதுவர் இருவர் பூனா நகரம் சென்று, ஆங்கிருந்த மகாராஷ்டிரப் பெருமக னொருவனிடம் அந்தரங்கமாகப் பேசினர். பேருதவி புரியத் தடையில்லையென அப்பெருமகன் மொழிந்தனன். அப் பெருமகன் தனது மனையிலே மணவினை நடப்பதை முன்

னிட்டு, ஊர்வலம் நடத்தப்போவதாக ஷீஸ்டாகானது அனுமதி பெற்றதும், சிவாஜி ஓராயிரம் உயர் வீரருடன் மாறுவேடம் பூண்டு சிம்மகோட்டையிலிருந்து கிளம்பி வரலானான்.

பூனாவுக்குக் கிழக்கேயுள்ள மற்றொரு வழியிலே, சிவாஜியின் ஆணைப்படி ஆங்காங்கு மரக்கிளைகளில் தீவர்த்திகள் அமர்த்தப்பட்டன. அங்குள்ள மலைக்காடுகளில் மேய்ந்து திரியும் எருமைகளின் கொம்புகளிலும் தீவர்த்திகள் கொளுத்த ஏற்பாடாயின. பறையடிப்போரும் குழலூதுவோரும் அக்குன்றின் சிகரங்களிலே மறைவான இடங்களில் நிறுத்தப்பட்டனர். ஷீஸ்டாகானைத் தாக்கிச் சின்னபின்னஞ் செய்து திரும்புங்கால், மரக்கிளைகளிலும் மாட்டின் கொம்புகளிலுமுள்ள தீவர்த்திகளைக் கொளுத்தி விட்டுப் பறையடிப்போரும் குழலூதுவோரும் கிழக்கு நோக்கி ஓட்டமும் பெருநடையுமாக மாடுகளைத் துரத்திச் செல்லின், அத்திசை நோக்கியே சிவாஜி தன் வீரருடன் செல்வதாக மொகலாயர் மதித்துப் பின் தொடர்வர்; அவ்வேளை சிவாஜி வேறுவழியே சிம்மகோட்டையைச் சேர்வது இலகுவாயிருக்குமென்று கருதியே, இவ்வளவு தந்திரங்கள் செய்யப்பெற்றன. இனி, சிம்மகோட்டைக்கும் பூனாவுக்கும் இடையேயுள்ள பாதையில் சிற்சில மாவல வீரரை வெவ்வேறு வேடம் பூணச்செய்து வீர சிவாஜி நிறுத்திவைத்தான். குழலொலி கேட்டவளவில், அவ்வீரர் அனைவரும் திரண்டு குவியும் வண்ணம் கட்டளை பெற்றனர். மேலும் பூனா நகருக்கு அருகேயுள்ள மாந்தோப்பில் ஐந்நூறு மாவல வீரர் பதுங்கியிருந்தனர். மொகலாயப் பாசறைக்கு அணித்தான ஓர் இடத்திலே

இருநூறு வீரர் எதற்கும் ஆயத்தமாக இருக்குமாறு சிவாஜி திட்டப்படுத்தினன்.

இங்ஙனம் எல்லாவற்றையும் சிறக்க அமைத்துவிட்டு, 1663-ஆம் ஆண்டு எப்ரல் மாதத்தில் இருபது வீரருடன் சிவாஜி மொகலாயப் பாசறையின் வாயிலைக் குறுகவே, காவலர் யாரென்று கேட்டு வழிமறித்தனர். நகரினுள்ளே நடக்கும் ஊர்வலத்தைக் காணவந்த உறவினரென்று கூறி, அவ் விருபதின்மரும் நகரினுள்ளே புகலாயினர். முன்னதாகவே ஏற்படுத்திக்கொண்ட சங்கேதத்திற் கிணங்க, விவாஹ ஊர்வலம் அச்சமயம் மதில்புறம் வந்தது. சிவாஜியும் அவனது தோழரும் அந்த ஊர்வலத்திற் கலந்துகொண்டனர். அந்நாளிலே விவாக சமயத்திலும் மகாராஷ்டிர வீரர் ஆயுதபாணிகளாக விளங்குதல் வழக்கம். ஆதலின் ஊர்வலத்திற் கலந்துகொண்ட வீரர் ஆயுதபாணிகளாகவே இருந்தனர். அந்நகரின் வேறொரு வாயிலின் வழியே, சிவாஜியின் வீரரிற் சிலர் புகுந்து, ஊர்வலத்திலே கலந்துகொண்டு உறவினர்போல் குலாவிப் பேசி வரலாயினர். சிவாஜியின் சிரத்திலும் உடலிலும் இருப்புக் கவசங்கள் உடையினூடே மிளிரா நின்றன. சிவாஜி வலது கையிலே வெற்றிவாளும், இடதுகை விரல்களிலே வேங்கை நகமும், இடுப்பில் ஈட்டியும் ஏந்தியிருந்தனன். குறித்த நேரத்தில் ஊர்வலம் முடிதலும், ஊரோசையும் அடங்கலாயிற்று. ஷீஸ்டாகானது மாளிகை வாயிலின் காவலர் அவ்வேளையில் நித்திரையில் ஆழ்ந்து கிடந்தனர். இளம் பிராயத்திலே தான் வளர்ந்துவந்த அம்மாளிகைக்குள், தனது வீரரைச் சிவாஜி அழைத்துச்செல்லுதல் வெகு இலகுவாயிற்று. காவலர் துயில்வது கண்ட சிவாஜி தனது

தோழருடன் அம்மாளிகையின் நாற்புறமும் சுற்றிப் பார்க்கவே, மடைப்பள்ளியின் சாளரவழியே உட்புகலா மெனத் தோன்றியது. அந்தப்புர மாதரின் நலத்தைக் கருதி, அச்சாளரத்தை ஷீஸ்டாகான் கல்லும் மண்ணும் கொண்டு அடைத்திருந்தான். அச்சாளரச் சுவரை எளி தில் சிவாஜி இடித்துத் தள்ளி, ஒரு கணப்பொழுதில் தானே முதலில் உட்புகுந்தான். அவனைத் தொடர்ந்து இரண்டு மூன்று வீரரும் புகுந்தனர். அவ்வளவுதான் தாம தம். ஷீஸ்டாகானது மகன் அங்கு அயர்ந்து நித்திரை போவதைச் சிவாஜி கண்டனன். உடனே சிவாஜியின் வெற்றிவாள் அவனை இருதுண்டாக்கியது. அந்த அரவங் கேட்டு அவன் மனைவி விழித்தெழலும், அவள்மூலம் ஷீஸ் டாகானது படுக்கையை உணர்ந்து, சிவாஜியும் அவன் துணைவரும் கடுகிச் சென்றனர்.

இதற்கிடையில் தாதி யொருத்தி விழித்தெழுந்து விரைந்து சென்று ஷீஸ்டாகானைத் தட்டி எழுப்பினள். "உத்தரவின்றி உள்ளே நுழைந்து தூக்கத்தைக் கலைப் பவர் யார்?" என்று அவன் கூறிவிட்டு உறங்கலாயினன். மற்றொரு பணியாளனும் அங்கே பதைத்தோடி வந்து ஆபத்தை உணர்த்தவே, ஷீஸ்டாகான் கண் விழித்தான். ஆயினும் வாளுருவிப் போர்புரிய அவன் துணியாது அந் தப்புரத்தில் புகுந்து பதுங்கிக்கொண்டான். அத்தருணம் சிவாஜி அவ்விடம் சென்று, கானைக் கீழேதள்ளி, அவனது மார்பின் மீதமர்ந்து ஈட்டியை உருவிட, ஷீஸ்டாகானது மனையாள் கைகூப்பி, "வீரனே! என் கணவனுக்கு உயிர்ப் பிச்சை தரல்வேண்டும்" என்று வேண்டினள். இதற்குள் மொகலாய வீரரிலே சிலர் பாசறைக்குள் நடக்கும் பாடு

கேட்டுப் பதைத்தோடிவரலும், சிவாஜி தனது வாளை எடுத்து வீசியவளவில், சிலரின் உடலம் நிலத்தில் சாய்ந்தன. அச்சந்தடியில் ஷீஸ்டாகான் உயிருக்கஞ்சி ஓடத்தலைப்பட்டான். சிவாஜியின் வாள் வீச்சினால் ஷீஸ்டாகானது கைவிரல்கள் அறுந்து வீழ்ந்தன. மொகலாயப் பாசறையெங்கும், "அந்தோ! கொலை! ஆரோ பகைஞர் புகுந்துவிட்டனர்!" என்ற சந்தடி நிரம்பிவிட்டது. அக்குழப்பத்தினிடையே சிவாஜி வெகு தந்திரமாகப் பூனா நகரின் எல்லையைக் கடந்தனன். அவ்வளவில், நகரின் புறத்தே நரபதியின் வரவு நோக்கியிருந்த இருநூறு மாவல வீரரும் சிவாஜியுடன் சேர்ந்துகொள்ள, அனைவரும் பரிமீது ஏறி, சிம்மகோட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

அச்சமயம் பறையொலியொன்று கிளம்பியது. மலை நடுவே மரக்கிளைகளிலிருந்த தீவர்த்திகள் கொளுத்தப்பட்டன. மாடுகளின் கொம்புகளிலிருந்த தீவர்த்திகளையும் மாவல வீரர் கொளுத்தி, முன்னம் குறித்த வண்ணம் கிழக்கு நோக்கி, அம்மாடுகளைத் துரத்திச்சென்றனர். சிவாஜியைத் தொடர்ந்துவந்த மொகலாயர் அப்பெரு வெளிச்சங் கண்டு மயங்கிக் கிழக்கு நோக்கிக் கடுகி நடந்தனர். அவர்கள் நெடுந்தூரம் சென்ற பின்னர், பொழுது புலர்ந்தது. பின்னரே மொகலாயர் சிவாஜியின் தந்திரத்தையறிந்து சினமும் வெட்கமுங்கொண்டு, சிம்மகோட்டை சென்று அதனை வளைந்து கொள்ளப் பார்த்தனர். பகைஞர் மதில் புறத்தை நெருங்கும் வரையில் வாளாவிருந்து, கோட்டையின் அடிவாரத்தில் அவர்கள் குறுகியவுடனே, சிம்மகோட்டையின் பீரங்கிகள் குண்டுகளைப் பொழிந்தன. அக் குண்டுமாரியைத் தாங்கவியலாமல் பலர் மாண்டு




சிவாஜியும் ஷீஸ்டாகானும்

போயினர்; பலர் காயமுண்டு தரையில் சாய்ந்தனர்; சிலர் முதுகுகாட்டி ஓடினர். மொகலாயவரசின் பிறைக்கொடியைத் தாங்கிவந்த அரச குஞ்சரம் குண்டுபட்டுக் குப்புற வீழ்ந்தது. உயிருக்கஞ்சி ஓடிய மொகலாயரை வழிநடுவே நேதாஜியின் பரிவீரர் மடக்கி வாட்டினர். சிவாஜியைத் துரத்திவந்த பெரும் படையில் மிகச் சிலரே உயிருடன் தப்பி, ஷீஸ்டாகானிடம் சென்று அப் படை பட்ட பாட்டை உணர்த்தலாயினர்.

'புலியடித்தது பாதி, கிலியடித்தது பாதி' என்னும் மூதுரைக்கு இலக்கான ஷீஸ்டாகான் என்ன செய்வான்? "சிவாஜியைப் புறங்கண்டேனும், அல்லது அவனது நாட்டைக் கவர்ந்தேனும் திரும்புவேன்," என்ற வாக்கு அழிந்ததேயென அவன் அழுங்கியது இவ்வளவு அவ்வளவு அன்று. அருமை மகனை யிழந்தும், கைவிரலறுப்புண்டும் மானபங்கமுற்றும் அவன் தத்தளித்தான். "மறுகணத்தில் இன்னம் யாது நேருமோ?" என்னும் அச்சப்பேய் அவனைப் பிடித்தாட்டியது. அவனது சேனை சிவாஜி என்ற பெயரைக் கேட்கவும் பொறாமல் கிலிகொண்டது. அப்ஸல்கானைப்போல் உயிரைப் பறிகொடாமல் ஊருக்குத் திரும்பினால் போதும் என்றே ஷீஸ்டாகான் கருதலானான். அச்சமயம் யசோவந்த சிம்மன் தோன்றி, "வீரத்தலைவ! எதிர்பாராவண்ணம் பரிபவம் நேர்ந்ததே!" என்று துக்கம் விசாரித்தனன். அதற்கு ஷீஸ்டாகான், "இராஜ புத்திர வேந்தே! எனக்கு விபத்து நேருகையில், நீவிர் எங்கிருந்தீர்? யாது செய்தீர்?" என்று மிக்க வெறுப்புடன் கேட்டான். பின்னர் ஷீஸ்டாகான் அந்த இராஜபுத்திர வேந்தன் மீது பழிசுமத்தியும் அவுரங்கசீபுக்குத் தூதுபோக்கினன்.

தனது பெருஞ்சேனையின் தோல்வியும், ஷீஸ்டாகானது சிறுமையுங் கேட்ட அவுரங்கசீபு, "அந்தோ! தக்காணத்திலே நமதரசின் மதிப்புக்குப் பங்கம் வந்ததே! சிவாஜியை எளியவனாக எண்ணியது மதியீனமன்றோ? இனிமேல், தக்காணப் பிரதிநிதியாக மாமனை வைத்திருப்பதில் பயனில்லை," என்று பெரிதும் வருந்தி, ஷீஸ்டாகானை டில்லிக்கு அழைத்துக் கொண்டனன். யசோவந்தனைத் திரும்பிவரக் கட்டளையிட்டால், அவன் அவமானம் தாளாமல், ஒருவேளை மகாராஷ்டிரரோடு சேர்ந்து விடக்கூடுமென அவுரங்கசீப் அஞ்சினன்; உடனே தனது மைந்தன் மௌஸம் என்பானைத் தக்காணப் பிரதிநிதியாக அனுப்பினன். டில்லியரசிடம் தனக்குள்ள பெரும்பக்தியைப் புலப்படுத்தக் கருதிய யசோவந்தன், தனது படையுடன் சென்று, சிம்மகோட்டையை முற்றுகையிட்டும் வாகை சூட வகை காணாது தலையிறக்கங்கொண்டு, அவுரங்கபாத் எனும் நகரம் போய்ச்சேர நேர்ந்தது.

யசோவந்த சிம்மன் அகன்ற பின்னர், பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று மொகலாய வரசின்மீது சிவாஜிக்குச் சினம் பொங்கிற்று. மகாராஷ்டிர நாடுகளில் மொகலாயர் புகுந்து, பல இடங்களில் கொள்ளையும் கொலையும் நடத்தினர் அல்லவா? அதற்கு ஈடாக, அவ்வரசின் முக்கிய துறைமுக நகரும் பிரபல வர்த்தக ஸ்தலமுமான சூரத்தைக் கொள்ளையடிக்கக் கருதினன் சிவாஜி. எனினும் அந்நகரின்மீது தண்டுகொண்டு செல்வதைப் பிறர் அறியாவண்ணம் போர்த்துகேசியரைத் தாக்கப் புறப்படுவதாக அவன் எங்கும் பறைசாற்றினன்.

மொகலாயரின் காலத்திலே அரபியாவுக்குச் செல்லும் முகம்மதியர், சூரத் நகரம் சேர்ந்து கப்பலேறிப் பிரயாணமாவர். அன்றியும், வியாபாரத்தை நாடி வந்த போர்த்துகேசியரும் டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் அந்நகரில் தங்கி, பண்டகசாலைகள் பல கட்டி, அளவிலா வர்த்தகம் செய்துவந்தனர். சிவாஜியின் காலத்திலே அந்நகரில் வணிகர் பலர் லட்சப்பிரபுக்களாகவும், கோடீசுவரர்களாகவும் விளங்கி யிருந்தனர்.

துப்பறிவதில் கைதேர்ந்த ஒருவன் முன்னதாகவே அங்குச் சென்று, அந்நகரின் நிலையையும் வளத்தையும் நன்குணர்ந்து வந்து, சிவாஜிக்கு உரைத்தனன். சிவாஜியும் மாறுவேடம் பூண்டு அந்நகரம் சென்று, உளவனைத்தும் உற்றுணர்ந்து வந்தனன். அப்பால், அவன் தனது படை வகுப்புக்களுடன் நாசிகை நகரஞ்சென்று, அங்கே இரண்டொரு தினம் தாமதித்தான். மொகலாயருக்கும் பிறருக்கும் சிவாஜியின் உள்ளக்கருத்து விள்ளவில்லை. 1664-ஆம் ஆண்டின் துவக்கத்தில், சிவாஜியின் படைகள் சூரத்நகரை நெருங்கின. அப் படையெடுப்பைக் கண்டதும், நகர மாக்களிலே பலர் தம் மனைவிமக்களுடன் வேற்றிடம் செல்லலாயினர். நகரின் அதிபனோ சிவாஜியுடன் சமாதானத்தை நாடி, ஒரு தூதனை அனுப்பினன். அந்நகரிலே பண்டகசாலை அமைத்துப் பெருவாழ்வு கொண்டிருந்த டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் அவ்விதமே தூதர்களை விடுத்தனர். அம்மூன்று தூதுவரையும் சிவாஜி சிறைசெய்துவிட்டு, மறுதினம் அந்நகரின் கோட்டைவாயிலைக் குறுகி, “நகரத் தலைவ! உனது மன்னவன் அவுரங்கசீபு ஆசைப்பெருக்கில் அகப்பட்டு உழலுவதால், நான் பெருஞ்சேனை கொண்டு

வாழநேர்ந்துளது. அச்சேனையின் செலவுக்கு நீயும் நினது நிருபனும் பணங் கொடுத்தாக வேண்டும். ஆனது பற்றியே, படையுடன் இங்கு வந்துளேன். நகரின் பிரபல வர்த்தகர் மூவரை உடனழைத்துக்கொண்டு, என்னைவந்து கண்டு, கப்பத்தொகையை வரையறுத்து அதனைச் செலுத்திவிடின், நீயும் நினது நகரும் நிம்மதியாக வாழலாம். இன்றேல், நகரம் நாசமுறும்,'' என்று தூதனுப்பினன்.

நகரின் தலைவனோ அச்சமும் நடுக்கமுங்கொண்டு, சில துணைவருடன் வேற்றிடஞ் சென்று, பதுங்கிக்கொண்டனனேயன்றிப் பதில் ஏதும் விடுக்கவில்லை. பதில் வாராமல் போகவே, மகாராஷ்டிர வீரர் அந்நகரினுள்ளே புகுந்து, சீமான்களின் வீடுகளைக் கொள்ளையாடினர். துருக்கியிலிருந்து மொகலாய மன்னவனிடம் வயிர வியாபாரஞ்செய்ய வந்திருந்த யூதனொருவன், தனது கைவசமிருந்த பொருளனைத்தையும் பூமியிலே புதைத்துவிட்டு, ஏதுமில்லையென்று பாசாங்கு பண்ணினன். பரிவீரர் அவனைப் பிடித்துச் சென்று, சிவாஜியின் முன்னே நிறுத்தினர். "பணம் பெரிதன்று, உயிரே பெரிது; உயிரிருப்பின் வேண்டுமளவு பணம் திரட்டலாம். ஆதலின் உண்மை பேசுக,'' என்று சிவாஜி சொல்லிப் பார்த்தும், யூதன் பேசாதிருந்தனன். உடனே மகாராஷ்டிர வீரர் அவனைக் கீழேதள்ளி, உடைவாளை உருவி, அவன் கழுத்துக்கு நேரே வீசி, மும்முறை அச்சுறுத்தியும், அவன் அசையவில்லை. அவன், பணமே பெரிதென மதித்துப் பிராணனைத் துறந்தனன். மூன்று நாள் முழுவதும் அந்நகரில் கொள்ளை நடந்தது.

அந்நகரிலே கிறிஸ்தவப் பாதிரி யொருவர் பெரும் பணம் படைத்திருந்தார். அவ் வீட்டைக் கொள்ளையிட

வேண்டுமென்று வீரர் முனைந்தனர். அதுகண்ட சிவாஜி, "வீரர்காள்! பாதிரிமார் பரம பக்த புருஷர். அன்னாரைத் துன்புறுத்தின், ஆண்டவன் மனம் புண்ணாகும்," என்று கூறித் தடுத்தனன். சிவாஜியின் பெருந்தன்மை இம்மட்டோ? பெரு வள்ளலான மோகன தாஸ் என்பான் அந் நகரச் சீமான்களில் ஒருவன். சிவாஜியின் படையெடுப்புக்கு முன்பே, மோகனதாஸ் காலகதியாயினன். அவன் வீட்டிலே மலைபோல் செல்வம் குவிந்து கிடந்தது. இதனை அறிந்தும், மகாராஷ்டிர வேந்தன், "பயன் மரம் உள்ளூரில் பழுத்ததுபோல், அவன் செல்வம் பலருக்கும் பயன்பட்டு வந்துளது. அத்தகைய உதார புருஷனது பணத்தை நாம் பறித்தலாகாது," என்று சொல்லியது கண்டு, பலரும் பரவசங்கொண்டு சிவாஜியைப் போற்றினர். மொகலாய சேனை முன்னம் மகாராஷ்டிரத்தில் புகுந்த காலையிலே, "ஈவு இரக்கமின்றி மக்களை வாளுக்கு இரையாக்கி, நாட்டை நிர்மூலஞ்செய்க," என்று அவுரங்கசீப் இட்ட ஆணையின் படியே, அப்படைகள் மகாராஷ்டிர நகரைச் சீரழித்தன. சிவாஜியோ, மொகலாயரின் நகரில் தங்குதடையின்றிப் புகுந்தும், அவ்விதம் மக்களை மாய்க்கவில்லை; நகரைப் பாழாக்கவுமில்லை; பணம் படைத்த பிரபுக்களை மட்டும் சிவாஜியினது வீரர் கொள்ளையிட்டு, ஏழை எளியவருக்கு அபயம் அளித்தனர்.

உயிர் வெல்லமென்று முதலில் ஓடியொளிந்த சூரத் நகரத் தலைவன், அப்பால் வஞ்சனை வழியில் இறங்கியது விந்தையாகும். சமாதானம் பேசவந்திருப்பதாகத் தூதனொருவனை அத்தலைவன் சிவாஜியின்பால் விடுத்தனன். சமாதான நிபந்தனைகளோ சிவாஜியைச் சிறுமைப் படுத்து

வனவாக இருந்தன. அது கேட்ட சிவாஜி, "தூத! பெண் பிள்ளைபோல் பதுங்கிக் கிடக்கும் உன் தலைவனுடன் யான் பேச விரும்பேன். வீரமிருக்குமேல் அவன் வெளிவந்து போர்செய்யட்டும்," என்றனன். தூதன், "அரசே! நாங்கள் மகளிர் அல்லர்," என்று கூறி, ஈட்டிகொண்டு சிவாஜியின்மீது பாய்ந்தனன். இதற்குள் சிவாஜியின் அருகேயிருந்த துணைவர் அம் மாயத் தூதனது மண்டையைப் பிளந்து போட்டனர்; அஃதுடன் நில்லாமல், நகரினுள்ளே புகுந்து, நகரத் தலைவனது உறவினரில் சிலரை வதைக்கவும் தலைப்பட்டனர். சிவாஜி அதனை யறிந்து, ஒரு பாவமு மறியாத மக்களை மாய்க்க வேண்டாமென்று கட்டளை யிட்டனன். சூரத் கொள்ளையிலே சிவாஜிக்குக் கிடைத்த கருந்தனம் ஏழு அல்லது எட்டுகோடி வராகன் ஆகும். மேலும் பல கரி பரிகளும் கிடைத்தன. பொதி மாடுகளிலும் பரிகளிலும் அத் திரவியத்தை ஏற்றிக் கொண்டு திரும்புகையில், "டில்லியரசே! உமது மாமன் ஷேஸ்டாகானைச் சிரழித்தேன். வியாபாரத்தில் சிறந்த உமது அழகிய நகரைக் கொள்ளை யாடினேன். இந்துஸ்தானம் இந்தியருக்கே உரியது; ஆதலின் இங்கே உமக்கு என்ன வேலை?" என்று அவுரங்கசீபுக்கு மகாராஷ்டிர மன்னவன் ஓலை ஒன்று அனுப்பினன். அதற்கு அவுரங்சீப் யாது மறுமொழி தருவான்?

சூரத் கொள்ளையிலிருந்து சிவாஜி திரும்பியதும், தந்தை ஷாஜி பரகதி போயினன் எனும் சமாசாரம் எட்டியது. கலகஞ் செய்து கிளம்பிய விஜயபுரியின் பாளையக் காரரை அடக்கச் சென்ற சமயத்தில் இராஜா ஷாஜி உயிர் துறக்க நேர்ந்ததென சிவாஜி அறியவரலானன். தந்தை

யின் மரணத்தினுக்கு அப் பாளையக்காரரே மூலபுருஷ ரெனக் கருதிய சிவாஜி, தனது தோழரை ஏவி, அப்பாளை யக்காரரை முறியடித்துக் கப்பமும் பெற்றனன். சிவாஜி யின் பாட்டனை மாலவனுக்கு ஆமது நகர வேந்தனல் இராஜா என்ற பட்டம் பரம்பரை உரிமையாகச் சூட்டப் பட்ட தல்லவா? தனது தந்தை காலகதியான பின்னர், சிவாஜி, 'இராஜா' என்ற பட்டஞ் சூடி, இராஜகோட்டை யில் நாணயசாலை அமைத்துத் தனது பெயரால் நாணயம் போட்டு வழங்கி, நாட்டையும் படையையும் இன்னும் நன்னிலையில் அமைக்க நாட்டங் கொண்டனன்.

சிவாஜியின் துணைவர் வாளாவிருக்கவில்லை. நேதாஜி பலவீரருடன் சென்று, மொகலாயரின் நாடுகளைத் தாக்கி, நிதியும் பொருளும் திரட்டி வந்தான். சிவாஜியின் கப்பல் படையும் மேலைக்கடலிலே பாய்விரித்துப் பயணமாகி, வழி யிலே வரும் மொகலாயரது மரக்கலங்களை வழிமறித்துப் பணம் பறித்து வந்தது. அச் சமயம் இந்தியாவிலிருந்து புண்ணிய நகரமாம் மக்காவுக்குச் சென்ற கப்பல்களும் சிவாஜியின் கப்பல் படையிடம் சிக்கிக்கொண்டன. அதி லிருந்த யாத்திரைக்காரர் ஏராளமான பணங்கொடுத்து உயிர்ப்பிச்சை பெற்றனர். அவ்வாறு சிவாஜியின் வீரக் கொடி எங்கும் பிரதாபங்கொண்டு விளங்காநின்றது.

## 9. ஜயசிம்மனது இராஜதந்திரம்

தக்காணத்திலே மொகலாய வல்லரசின் பிரதிநிதியாகச் சென்ற மௌஸம் என்பான் இன்பவாழ்விலும், களிப்பிலுமே காலங்கழித்து வந்தனன். ஷீஸ்டாகானும், யசோவந்த சிம்மனும் சிதைந்து திரும்பியது கண்டு, அவுரங்கசீபு அகம் கரைந்தான். அந்நிலையில் சூரத் கொள்ளையின் செய்தி எட்டிவிடலும், அவன் மனம் புண்ணாகியது. அவ்வேளை, மக்கா சென்ற யாத்திரிகரைச் சிவாஜியின் வீரர் வழிமறித்துப் பணம் பறித்த வரலாற்றினைச் சிலர் வந்துரைப்ப, அது புண்ணில் கனல் நுழைந்ததேபோல் டில்லி பாதுஷாவை வாட்டியது. அவன் அடங்காச் சினங்கொண்டு, தானே நேரில் சென்று சிவாஜியைக் குலைக்கக் கருதினனாயினும், வடநாட்டின் அவல நிலைமை அவனைத் தடுத்து நின்றது. எனவே அவ்வேந்தன் ஜயசிம்மனையும் டிலவர்கானையும் தக்காணத்துக்கு அனுப்பினன். சதிபுரிந்து சந்து செய்வதில், சிவாஜி வல்லவனென்பதே அம் மொகலாய மன்னன் கொண்ட கவலையாகும். ஆதலின், ஜயசிம்மன்மீது கண்ணாயிருக்க வேண்டுமென, அவ்வேந்தன் டிலவர்கானுக்கு எச்சரிக்கை செய்தனன். பின்னர் ஜயசிம்மனையும் தனிமையில் அழைத்து, "இராஜபுத்திர வீர! சிவாஜியை மடக்கிக் கொணரும் ஆற்றலுடையார் நின்னையன்றி யாவருளர்?" என்று முகமன் கூறி அனுப்பினன்.

அக்பரின் அரசு தழைத்துச் செழிக்க மானசிம்மன் பேருதவி புரிந்ததுபோலவே, ஷாஜஹானது ஆட்சி வலுத்தோங்க, ஜயசிம்மன் மூலபுருஷனாயிருந்தவன். ஜயசிம்மன் தனது பன்னிரண்டாவது வயது முதல், மொகலாய சேனை

யில் சேவகம் புரிந்து வருபவன். மத்திய ஆசியாவிலுள்ள 'பாக்' என்ற நகரம் முதல், தக்காணத்திலே விஜயபுரிவரை யிலும், பாரதபூமிக்கு வடமேற்கேயுள்ள காந்தாரம் முதல் கிழக்கே வங்கதேசம் வரையிலும், அவ்வீரன் சமர்புரியாத போர்முகம் கிடையாது. அவன் ஒவ்வொரு போரிலும்வெற் றியும் புகழும் பெற்றதுடன், இராஜதந்திரத்திலும் இணை யற்றவனாக விளங்கினன். ஆகாத கருமமாயினும், அதனை ஈடேற்றவேண்டின், ஜயசிம்மனையே ஷாஜஹான் அனுப்பு வது வழக்கம். உருது, பாரசீகம், வடமொழி முதலிய பல பாஷைகளிலும் அவனுக்குப் பயிற்சி மிக அதிகம். பட் டாணியர், துருக்கியர், இராஜபுத்திரர் முதலிய பல வகுப் பினரையும் கொண்ட படைவகுப்பைப் பெருமிதமாக நடத்துவதில், ஜயசிம்மனுக்கு நிகரில்லை என்னலாம். தக்காணத்திலே அவன் படைகொண்டு புகுந்த காலத்தில், அவனுக்கு வயது அறுபது. இளவயதில் படைவலியையும் போர்த்திறனையுமே கொண்டு வாகை சூடிய அவ்வீரன், வயோதிகப் பருவத்திலே நிகழ்ந்த இப்போரில், தந்திரத் தையும் தாளுேபாயத்தையும் கையாளக் கருதினன். முன் யோசனையும், நகைமுகமும் இன்சொல்லும் ஜயசிம்மன் தாங்கி நின்ற கருவிகளாகும்.

அவ்விரு பெருஞ் சேனாபதிகளை மகாராஷ்டிரத்தின் மீது ஏவியதுடன் நில்லாமல், அவுரங்கசீப், விஜயபுரியை யும் தூண்டிவிட நினைந்து, "விஜயபுரி வேந்தே! இஸ்லாமிய சமயத்திற்கும் முகம்மதிய அரசவமிசத்துக்கும் தக்காணத் திலே சிவாஜியின் செயலால் அழிவு நேரும்போல் தோன் றுகிறது. புண்ணிய மக்காவுக்குச் சென்ற யாத்திரிகரை அவன் வழிமடக்கி நிதி பறித்துளான். பாளையக்காரனது

மகன் மணிமகுடஞ் சூடி அட்டகாசஞ் செய்தல் அடுக்குமோ? இதனை எத்தனை நாள் டில்லியரசும் விஜயபுரியும் சகித்து நிற்பது? நாம் இருவரும் சேர்ந்து அவனை வாட்டி வதைத்துக் கொட்டத்தை யடக்குதலே நம் கடமையாம்,'' என்று தூது போக்கினான். டில்லியரசின் தூதுகண்டதும், விஜயபுரியரசு கொண்ட களிப்பு கொஞ்சமன்று. உடனே விஜயபுரி வேந்தன், முன்னம் சிவாஜியுடன் செய்து கொண்ட உடன்பாட்டை மறந்து, கவாஸ்கான் என்பானை ஒரு படையுடன் சிவாஜியின்மீது அனுப்பினன்.

சுத்தவீரனுக்கு ஆபத்துக்காலத்தில் அறிவும் ஆற்றலும் வளரும்; சோர்வும் நடுக்கமும் தலைகாட்டா, என்பர் பெரியோர். அங்ஙனமே சிவாஜி இருபகைவரின் படையெடுப்பைக் கேட்டும், மனச் சோர்வு கொள்ளாமல், தனது சேனைகளை அணிவகுத்துக் கிளம்பினான். விஜயபுரிச் சேனை சங்கடமான மலைப்பிரதேசம் சேரும் வரையில், சிவாஜியின் சேனை சும்மாவிருந்தது. முன்னே செல்லவும் பின்னே போகவும் இயலா இடமொன்றில், கவாஸ்கானது படைவந்தது கேட்டதும், சிவாஜி சீறிப்பாய்ந்து சிறிதும் சலியாது போர் புரிந்தனன். அதன் விளைவாக விஜயபுரிச் சேனை சின்னபின்ன மாகியது. கவாஸ்கானே தொங்கிய தலையுடன் விதியை நினைந்து வருந்தி, விஜயபுரி நோக்கிப் போயினன். மொகலாய மன்னவனை நம்பி, ஆராயாது படையை அனுப்பிய பலன் கைமேல் கிடைத்ததென, முதலில் விஜயபுரி வேந்தன் வருந்தினும், முடிவிலே "மொகலாயர் சிவாஜியை மடக்கி மாய்த்துவிடின், அன்னவர் உடனே நம்மீது போருக்கு எழுவர். ஆதலின் மகாராஷ்டிர மன்னவன் வலிகொண்டு வாழ்தலே ஒருவகையில் நமக்கு

நலமாகும்,'' என்று கருதிச் சிவாஜியுடன் சமரஸங்கொண்டனன். அதன்பயனாக விஜயபுரி அரசிலிருந்து வேண்டுமான பணமும் போர்க்கருவிகளும் சிவாஜிக்கு அனுப்பப்பட்டன. கோவலகுண்டத்தின் கொற்றவனும் மொகலாயரால் தனக்கு நேரக்கூடிய அனர்த்தத்தை யூகித்தறிந்து, சிவாஜிக்குப் பொருள்கொடுத்து உதவினன். இங்ஙனம் இரு மன்னரும் ஒருபக்கம் சிவாஜிக்குத் துணைபுரிந்து, மற்றொருபுறம் டில்லியரசிடம் தங்களுக்கு மிக்க பற்றுண்டென்று பாதுஷாவிற்கு அடிக்கடி அறிவித்துக் கொண்டிருந்தனர்.

இராஜதந்திரத்தில் இணையற்ற ஜயசிம்மன் நருமதையாற்றைக் கடந்து, தெற்கே புகுந்ததுதான் தாமதம். சிவாஜியினால் சீரழிந்த பல பெருமக்களை அவன் தனது பக்கம் இழுத்துக்கொண்டனன்; மகாராஷ்டிர வீரரில் சிலரையும் ஆசைவலைவீசி அகப்படுத்திக்கொண்டான். அங்ஙனம் செய்தபின்னர், சிம்மகோட்டை, புரந்தரம் இரண்டையும் மொகலாய சேனைகள் ஒரேகாலத்தில் முற்றுகை செய்தன. ஆயினும் ஜயசிம்மனுக்கு உள்ளூரக் கவலை பிறந்தது. சிவாஜியின் சாமர்த்தியத்தை அவன் நன்கறிவான்; சனாதன சமயத்தையும் தேசத்தையும் சிறப்படையச் செய்யவே சிவாஜி தோன்றியுள்ளான் என்பது ஜயசிம்மன் அறியாததன்று. தவிர அப்ஸல்கான், ஷீஸ்டாகான் ஆகிய இருவரும் அவமதிப்புற்றதை அவன் அறிந்தவனாதலின், மானமுடன் மகாராஷ்டிரத்தி லிருந்து திரும்பினால் போதுமெனவே ஜயசிம்மன் கருதியதுமுண்டு. அறுபதாண்டளவும் முதுகு கொடா வீரங்கொண்டு விளங்கிய ஜயசிம்மன், கடைநாளிலே மானபங்கமடைய மனமொப்புவனோ? ஆதலின், அநுபவம்

முதிர்ந்த அவ்வீரன், "மகாராஷ்டிர வீர! நாமிருவரும் ஒரு குலம்; ஒரு சமயம்; நினது சமயப்பற்றும் தேசபக்தி யுங் கண்டு, எனது உள்ளம் உவகை பூக்கின்றது. நின்னை வீழ்த்தவோ மாய்க்கவோ யான் விரும்பேன். உன்றன் அரசும் ஆணையும் அழிவுறுமல் ஓங்கவேண்டும் என்பதில் எனக்கும் ஆவலுண்டு. டில்லி வல்லரசை நீ பகைத்துக் கொள்வதில் யாது பயன்? பாதுஷாவுக்கு நீ பணியவேண்டு மென்பது எனது கருத்தன்று. டில்லி யரசுடன் நீ நேசங் கொண்டு வாழ்வதிலேயே, எனது சிந்தை செல்லுகின்றது. இருவரும் பகைஞர்போல் போர்க்களம் குறுகியுள்ளோ மாயினும், நம்மிருவருக்கும் உறவிருப்பதை உனக்கு உரைத்து, உயர்வு தேடித்தரவே காத்து நிற்கின்றேன். உனது கருத்து யாதோ அறிய விரும்புகிறேன்," என்று சிவாஜிக்குத் தூது விடுத்தான்.

அத்தூதின் நிலைகண்டு சிவாஜிக்கு ஓரளவு கவலை ஒழிந்தது. "இதனைத் தொடர்ந்து தூதனுப்பி உயர்வு பெற முந்துவோம்," என்று சிவாஜியின் அமைச்சர் சொல்லினர். அங்ஙனமே இரகுநாத பந்தன் உரிய மரி யாதைப் பொருள்களுடன் சென்று, ஜயசிம்மனைக் கண்ட னன். ஜயசிம்மனும் அத்தூதனை அன்புடன் வரவேற்க, "இராஜபுத்திர வேந்தே! வயதிலும் அறிவிலும் தாங்கள் எங்கள் வேந்தனுக்குத் தந்தையாவீர், தாங்கள் சொல் லும் யோசனையை எங்கள் இறைவன் சிறப்பாக எண்ணிப் பார்ப்பர். இந்து சமயத்தையும் சமூகத்தையும் காக்க வேண்டுமென்பதே அவரது ஆவல். நமது ஆலயங்களும் சமயக்கோட்பாடுகளும், இஸ்லாமியரால் இழிவுஎய்துவது தாங்கள் அறியாததன்று. அத்தகைய அரசின்கீழ் கைகட்

டிச் சேவகம்புரிய எங்கள் இறைவன் இசைவது எங்ஙனம்? டில்லியரசுக்கும் எங்கள் அரசுக்கும் தாங்கள் இடையே நின்று, நமது சமயத்துக்கும் சமூகத்துக்கும் பங்கமின்றி, ஓர் உடன்படிக்கை செய்துவைப்பின், அதனை ஆராய்ந்து ஏற்று எங்கள் தலைவர் உள்ளங்களிப்பார்,'' என்று நயம்பட இரகுநாத பந்தன் பேசினன். ஜயசிம்மன் அதுகேட்டு, "தூத! டில்லி வல்லரசுடன் உங்கள் வேந்தன் சமரஸங் கொள்வதே சாலச் சிறந்ததாகும். குலமதிப்பையும் சமயப் பற்றையும் இராஜபுத்திரர் கைவிடார் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. இருவருக்கும் சமரஸம் உண்டாக்கவும், உங்கள் வேந்தை டில்லியரசன் நன்கு மதிக்கும்படி உதவிபுரியவும், யான் விழைகின்றேன். இவ்வாக்கினின்று யான் இம்மியளவும் தவறேன்,'' என்று கூறினன்.

பின்பு, உடன்படிக்கையின் நிபந்தனைகள் வரையறுக்கப்பட்டன. இருபக்கத்திலுமுள்ள இந்துத் தலைவர்கள் டில்லி யரசுக்கு விரோதமாக அந்தரங்கத்தில் பேசிக்கொண்டு விட்டனர், என்று டிலவர்கான் நினைக்கவே, அவனுக்கு ஜயசிம்மன்மீது ஆத்திரமும் அசூயையும் பிறந்தன. டில்லி யரசின் சம்மதமின்றி எச் சமரஸமும் கூடாதென்பதே அவனது கருத்து. அதுகண்ட ஜயசிம்மன், "சேனைத்தலைவ! ஆதியில் ஆமதுநகருக்குச் சொந்தமாய், அப்பால் நமது வசமாகி, இப்பால் மராட்டியர் கையில் சிக்கியிருக்கும் கோட்டைகளையும் நாடுகளையும் சிவாஜி நம்மிடம் விட்டுக் கொடுப்பின், அது நமக்கு ஒருவகையில் வெற்றியே யாகும். சிவாஜிக்குச் சொந்தமான மலைக் கோட்டைகளை நாம் முற்றுகையிட்டு வசஞ்செய்தல் இயலாத காரியம். ஒவ்வொரு கோட்டைக்கும் ஆயிரக்கணக்

கில் உயிரைப் பறிகொடுக்க நேரும். அங்ஙனம் பறி கொடுப்பினும், வெற்றி சூடுவதென்பது கஷ்டமாக முடியு மன்றோ?" என்று உரைத்தனன். அச்சொல் டிலவர் கான் செவியில் நுழையவில்லை. அவன், "அன்ப! சிம்ம கோட்டையின் முன்னே நீர் சோம்பிக் கிடப்பதில் எனக் குச் சம்மதமே. யானோ புரந்தரத்தைக் கைப்பற்றியே தீருவேன். பாதுஷாவின் ஆணையின்றிச் சிவாஜியுடன் சமாதானம் பேசலாகாது," என்று பிடிவாதமுடன் பேசிப் பிணங்கலானான்.

அவ்விதமே புரந்தரக்கோட்டை பலமாக முற்றுகை யிடப்பட்டது. நான்கு புறத்திலும் மொகலாயர் அக் கோட்டையை வளைந்துகொண்டனர். அக்கோட்டையின் தலைவன் முராரி என்னும் மகா வீரன். முன்னேறும் மொகலாயரை அவன் முறியடித்து, அவர்களிடமிருந்து பற்பல தளவாடங்களைக் கைப்பற்றலும், டிலவர் கான் தனது படைவகுப்புக்களை வெள்ளம்போல் கொணர்ந்து குவித்தான். முராரியும் ஈராயிரம் வீரருடன் ஆவேச மாய்ப் போர் தொடுத்தும், முடிவிலே மொகலாயர் சுரங்க வெடி வைத்து, அக்கோட்டையின் அடிப்பாகத்தில் சந் துண்டு பண்ணினர். அச்சந்தின் வழியாக மொகலாயர் புகும்வரையில் முராரி வாளாவிருந்தான். அப்பால் முராரி தனது பீரங்கிகளைப் பிரயோகிக்க, முன்னேறி வந்த மொகலாயப் படையனைத்தும் அடியுண்டு அலறியோடியது. அவ்வேளை டிலவர்கான் ஓர் யானையின் மீதேறிப் போர்க் களங் குறுகி, மொகலாயருக்கு உற்சாகம் ஊட்டவே, பின் வாங்கிய டில்லிப்படை சிறிது சிறிதாக முன்னேறத் தலைப் பட்டது. முராரி அதுகண்டு, தனது வீரருடன் கோட்

டையை விட்டிறங்கி வந்து, மொகலாயருடன் மல்யுத்தம் புரியலும், மாவல வீரரின் வாள்வீச்சைத் தாங்கமாட்டாமல், மொகலாயரிலே பலர் மரித்து வீழ்ந்தனர். முராரியின் வீரப்போர் கண்டு, பகைஞருக்கும் பெருவியப் புண்டாயிற்று. யானையின்மீது டிலவரைக் கண்டதும், அவன்மீது பாய்ந்தனன் முராரி; டிலவர்கான் அதுகண்டு, "பெருவீர! சுத்தவீரரில் உனக்கு நிகராவார் எவருமிலர். உன்னைக் கொன்று குவிக்க எனக்கு மனம் வரவில்லை. சரணமடையின், உன்னை ஏற்றமுடன் நடத்தி உயர்பதமும் ஈவேன்," என்று பேசினன். முராரி, "மொகலாய வீர! நீங்கள், துருக்கரும் தார்த்தாரியரும் ஆவீர். யாவரும் எனக்கு ஒருபொருட்டன்று; நீ யளிப்பதாகச் சொல்லும் பதவியும் எம்மாத்திரம்? சிவாஜிக்கு மெய்ச்சேவகம் புரியவே, யான் விரதம் பூண்டுளேன். சரணாகதி என்பதைக் கனவிலும் கருதேன். பணிவதினும் போரில் மரித்தலே மேலாம். இதுவே எனது துணிபு," என்று வீரம் பேசினன்; பேசியதும் உடைவாளை உருவி, அவன் டிலவர்கானின் கழுத்தைக் குறி பார்த்து வீசினன். உடனே டிலவர் கான் வில்லை வளைத்து, அம்பொன்றை ஏவ, வீர முராரி வீரசுவர்க்கம் புகுந்தனன். தலைவன் பட்டதுகண்டும், மகாராஷ்டிர வீரர் மனந்தளராது, உயிருள்ள வரையில் அக் கோட்டையை மொகலாயரிடம் விடுவதில்லையெனத் துணிந்து, முன்னையிலும் மும்முரமாகப் போர் தொடுத்தனர். அத்தருணத்தில் சிவாஜி விடுத்த துணைப்படையும் வந்து கூடிக் கொண்டது. பக்கபலம் பெற்ற மகாராஷ்டிர வீரர் சாகசமுடன் போர் புரியவே, மொகலாயரின் சேனை சிதறுண்டு பின்னடைய நேர்ந்தது. டிலவர்கான் அது

கண்டு, அவமானமும் ஆத்திரமும் கொண்டு, சிறிதுநேரம் சிந்தாகுலம் எய்திக் கிடந்தனன்.

பின்பு, புரந்தரக் கோட்டையை வசஞ்செய்தால் அல்லது தலைப்பாகை தரிப்பதில்லை என டிலவர்கான் சபதங் கொண்டான். புரந்தர நகரின் பிரதானகோட்டையைக் கைப்பற்றுமுன், அடிவாரத்திலுள்ள வஜ்ரகோட்டையை வசஞ்செய்யப் பெருமுயற்சி செய்தனன் அச் சேனைத் தலைவன். வஜ்ரகோட்டையைக் காத்துநின்ற மகாராஷ்டிரர் சிறு தொகையினராவர். முராரி மரித்த செய்தியை அக் கோட்டையின் வீரர் அறியார். ஆதலின் துணைவலி வருமென்று அவர்கள் வெகுநாள் போர்புரிந்து வந்தனர். மொகலாயர் பெருந் தொகையினராகக் கிளம்பி வந்தும், அவ்வீரர் சலிக்காமல், ஆவிபோம் வரையில் அருஞ்சமர் புரிந்து நின்றனர். அனைவரும் இறந்த பின்னரே, வஜ்ர கோட்டை மொகலாயரின் வசமாயிற்று. உடனே அக் கோட்டையின்மீது டிலவர்கான் பீரங்கியேற்றிப் புரந்தரத்தின் பிரதான கோட்டையைத் தகர்க்கத் தொடங்கினான். பிரதான கோட்டையின் வீரர் முராரியைப்போல் உறுத்தெழுந்து சமர் முறுக்கினர். மழைநாள் வந்துவிட்டதால், மொகலாய பீரங்கிகளின் வன்மை குறையலாயிற்று. "பணியும் வண்ணம் ஆணைவந்தாலன்றி மொகலாயனுக்குத் தலைவணங்க லாகாது," என்று சிவாஜி தூதனுப்பினன். டிலவர்கானும் விடாப்பிடியாக அக்கோட்டையின் முன்னே பெரும்படையுடன் நிற்கலானான்.

சிம்மகோட்டையின் முன்னே நின்ற ஜயசிம்மனும் வாளா விராமல், அக்கோட்டையின் அயலிலுள்ள பல கிராமங்களைக் கொள்ளையாடினன். அவன் படைஞரால் பல

நகரங்கள் தரையோடு தரையாயின. மக்களுக்குப் பயத்தை உண்டாக்கி, அதன் பயனாகச் சிவாஜியை வசம் செய்யலாம் என்றே மொகலாய வீரர் எண்ணினர். மகாராஷ்டிர வீரரும் வாளாவிருக்கவில்லை. நேதாஜியோ தனது இயற்கைக்கு இணங்க, ஓராயிரம் வீரருடன், திடீரென்று மொகலாயரின் மீது பாய்வான்; பொருள்களைக் கொள்ளை கொள்வான்; பகைவரின் முன்னேற்றத்தைத் தடுப்பான்; மொகலாய சேனை சினந்தெழுங் காலத்து, மறைவிடஞ்சென்று பதுங்கிக்கொள்வான்; நேதாஜி முதுகு காட்டிவிட்டானென்று டில்லிப்படை அயர்ந்துகிடக்கையில், சட்டென்று அவர்கள் மீது பாய்ந்து பரிபவங் காண்பான். அதுகண்டு ஜயசிம்மனுக்கு மனக்கலக்கம் பிறந்துவிட்டது. மகாராஷ்டிரரை மடக்குதல் முடியாத காரியமென அவன் உணர்ந்து கொண்டனன். தக்காணப் படையெடுப்பிலிருந்து தப்பிச் சென்றால் போதுமென நினைந்து, ஜயசிம்மன் கொண்ட வியாகூலம் கொஞ்சமன்று. முடிவில் அவன், "மமதையும் மடமையும் கொண்டு கிடப்பதில் யாது பயன்? ஒரு சிறிய கோட்டையை வசஞ்செய்ய ஆயிரக் கணக்கான வீரர் ஆவியை இழந்துளர். பிரதான கோட்டையோ இன்னும் பணியவில்லை. அதனைக் கைப்பற்றல் ஆருக்கும் அருமை. புரந்தரக் கோட்டைக்கே இவ்வளவு பாடு நேருமாயின், அதனினும் வன்மைகொண்ட ஏனைய கோட்டைகளை எங்ஙனம் வசஞ்செய்ய இயலும்? மகாராஷ்டிர மன்னவனோ சமரஸத்துக்கு இசைகின்றான். இந்த நற்சமயத்தை நழுவவிடாமல், நலம் பெறுவதே மதிவன்மையாம். ஷீஸ்டாகானைப்போல் சிறுமையுற்றுச் செல்வதினும், சிவாஜியுடன் சமரஸங் கொள்ளுதல் சாலச் சிறந்ததன்றோ?" என்று இடித்

துக்கூறி, டிலவர்கானுக்கு நிருபம் விடுத்தனன். அதன் மேல், டிலவர்கானும் அறிவு தலைப்பட்டு, "யான் புரந்தரக் கோட்டையை வசஞ்செய்யாமல், தலைப்பாகை தரிப்ப தில்லை எனச் சபதஞ் செய்துவிட்டேன். அது பொய்க்கா வண்ணம், அக் கோட்டையின்மீது ஒரு கண நேரமேனும் பிறைக்கொடி பறக்க, மகாராஷ்டிர மன்னவன் மனமொப் பின், மறுகணமே அதனை நாம் அவனிடம் விட்டுவிடு வோம்" என்று ஜயசிம்மனுக்குப் பதில்போக்கினன்.

டிலவர்கானது பிடிவாதத்தினால் தடைபட்டு நின்ற சமரஸப்பேச்சு மீண்டும் தலை தூக்க லாயிற்று. உடன் படிக்கையின்படி, நிபந்தனைகளை நேரில் பேசிக்கொள்ளுதல் நலமென்று, சிவாஜிக்கு ஜயசிம்மன் கடிதம் விடுத்து, அம் மன்னவனை மொகலாயரின் பாசறைக்கு வருமாறு அன் புடன் அழைத்தனன். திடீரென்று முன்னம் சமாதானப் பேச்சு முறிபட்டதனால், தனக்கு மிக்க நஷ்டம் நேர்ந்த தென மகாராஷ்டிர நரபதி கோபக்குறி காட்டினனாயி னும், ஜயசிம்மனது பாசறைக்குச் செல்ல இசைந்தனன். அங்ஙனமே சிவாஜி புறப்பட்டுச் செல்ல, அவனது உயிர்த் தோழரும் உடன் சென்றனர். யானையின்மீது சிவாஜி வருவதைக் கேள்வியுற்று, ஜயசிம்மனும் ஒரு குஞ்சரத்தின் மீதேறி, அவ்வீர வேந்தனை எதிர்கொண்டழைக்க ஏகலா னான். ஜயசிம்மனைக் கண்டதும், சிவாஜி யானையை விட்டி றங்க, ஜயசிம்மனும் இறங்கினன். இருவரும் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டனர். மகிமை பொருந்திய மகாராஷ்டிர வேந்தனைக் காண விரும்பி, வந்து குவிந்த மொகலாய தளகர்த்தருக்குக் கணக்கில்லை. சிவாஜியின் முகவிலாசமும் தோற்றமுங் கண்டு பிரமிக்காத மொக லாயப் பெருமக்களும் இல்லை.

இரு வேந்தரும் கூடாரஞ் சேர்ந்தபின், 'மகாராஷ்டிர மன்னவ! நினது பெருவீரத்தை வியந்து பேசாதிருக்க என் மனம் ஒப்பவில்லை. மொகலாயப் பேரரசின் மதிப்புக்கும் உனது ஏற்றத்துக்கும் சிறிதும் பங்கமின்றி, பாதுஷாவுடன் பேசி உடன்படிக்கையை உறுதிப்படுத்தக் காத்துள்ளேன். எனது மூத்த மைந்தன் இராமசிம்மன்மீது எனக்கு எத்தகைய அன்பு உளதோ, அத்தகைய அன்பு உன்மீதும் உளது. இச் சத்திய வாக்கினின்று யான் எள்ளளவும் தவறேன்,'' என்று ஜயசிம்மன் பேசினன். சிவாஜியும், "வெற்றி வேந்தே! எனது தந்தையைப்போல் உம்மை மதித்து, எனது அரசையும் மதிப்பையும் உம்மிடம் ஒப்படைக்கத் தடையில்லை,'' என்றனன். பின்னர் ஜயசிம்மனது வேண்டுகோளுக் கிணங்க, டிலவர்கானைச் சிவாஜி சந்தித்து இராஜதந்திரத்தைத் தழுவி முகமன் பேசவே, டிலவர் கானுக்குக் களிப்பு மிகுந்து விட்டது. முடிவில் சண்டை ஓய, இரு திறத்தினரும் ஒருவர்க் கொருவர் விருந்து நடத்திக் களிப்பு எய்தினர். அப்பால் இருபக்கத்தாரும் மனமொப்பி வரைந்த உடன்படிக்கை ஈதாகும்:—

"மொகலாயரிடமிருந்து கைப்பற்றிய நாடு நகரங்களை உடனே சிவாஜி கொடுத்து விடல் வேண்டும். அந்நாடு நகரங்களிலே சிலவற்றில் நாலிலொரு பங்கு இறைப்பணமும், இதரபாகங்களில் பத்திலொரு பங்கு பகுதிப்பணமும் சிவாஜிக்கு உரியனவாகும். முன்னம் ஆமதுநகர அரசினுக்கு உரித்தாயிருந்த நாடுகளிலே சிவாஜி கட்டியுள்ள 32 கோட்டைகளில் இருபது, மொகலாயரைச் சேர வேண்டும். விஜயபுரி அரசிலிருந்து சிவாஜி கைப்பற்றிய நாடுகளனைத்தையும், டில்லியரசின் ஜாகீராக மகாராஷ்டிர

மன்னவன் துய்த்து வரலாம். சிவாஜியின் மகனுன எட்டு வயதுள்ள சாம்பாஜிக்கு 'ஐயாயிரம் வீரருக்குத் தலைவன்' என்ற பட்டம் டில்லிபாதுஷா மனமுவந்து அளிப்பான். மொகலாய சேனையில் சிவாஜியின் குதிரைப்படை யொன்று சேவித்தல் வேண்டும்."

அந்த உடன்படிக்கையை டில்லி வேந்தனுக்கு ஜய சிம்மன் அனுப்பி, "தக்காணத்திலே சிவாஜியின் ஆதரவு டில்லியரசினுக்கு அதியவசியம்," என்று வற்புறுத்தினன். அதனை அவுரங்கசீப் ஏற்றுக்கொள்ளத் தவறவில்லை. சிவாஜியுடன் அங்ஙனம் சமாதானம் செய்துகொண்டபின்னர், மொகலாயர் கவலையொழிந்து விஜயபுரியின்மீது பாய்ந்தனர். உடன்படிக்கையைத் தழுவி ஒரு பதினயிரம் வீரருடன் சிவாஜி சென்று, ஜயசிம்மனுக்குத் துணை புரிந்தனன். மொகலாய சேனையின் மொய்ம்பினுக்கு முன்னே, விஜயபுரி தலைநிமிர்ந்து நிற்க முடியவில்லை. ஆதலின், பல கோட்டைகள் மொகலாயரின் வசமாயின; விஜய புரி வேந்தன் முதுகுகாட்டி யோடினன். அவ்வெற்றிக்கு ஆதாரமாயிருந்த சிவாஜியை ஜயசிம்மன் மனமாரப் பாராட்டி, அவுரங்கசீபுக்கும் அறிவித்தனன். அவுரங்கசீபினுக்கு மகாராஷ்டிர வீரனை நேரில்காண ஆவல் பிறந்தது. ஆதலின், ஆக்ரா நகரம் வந்து அரசவையில் அமர்ந்து அரியபதவியும் பட்டமும் பெற்றுப்போமாறு அம் மன்னவன் சிவாஜியை அழைத்தனன். சிவாஜியின் வழிச்செலவுக்கு ஒரு லட்சம் ரூபா கொடுக்கும் வண்ணமும் ஜய சிம்மனுக்கு அவுரங்கசீப் ஆணையிட்டான். ஜயசிம்மனும், "அன்ப! யாதொரு மனக்கலக்கமுமின்றி நீ ஆக்ரா நகரம் செல்வாயாக. ஆங்கே எனது மைந்தன் இராமசிம்மன்

உனக்குரிய நலமும் பாதுகாப்பும் தேடித்தருவன்,'' என்று உறுதி கூறினன். சிவாஜி அங்ஙனமே டில்லி பாதுஷாவின் சமூகம் செல்ல ஆயத்தமாயினன்.

---

## 10. பாதுஷாவின் வஞ்சகம்

ஆக்ரா நகருக்குப் புறப்படுமுன்னம் சிவாஜி இராஜ கோட்டை சென்று, தனது அமைச்சர் தோழர் முதலாயி னோருடன் ஆலோசனை செய்தனன். அவர்களில் பலரும் அவுரங்கசீபின் நயவஞ்சகத்தை விளக்கிக் கூறி, அங்குச் செல்லலாகாதெனத் தடுத்தனர். சிவாஜி, "அமைச்சர் காள்! யான் டில்லியரசவைக்குச் செல்லாமலிருக்க இய லாது. அம்மை பவானி எனக்கு ஓர் ஊறுமின்றிக் காப்பா ளென்பது திண்ணம். ஆதலின், நீங்கள் அனைவரும் அஞ் சற்க. இனி வடதேசம் செல்லின், ஆங்குள்ள நிலையையும் விபரத்தையும் அரசரின் போக்கையும் நன்குணர இயலும். அங்குள்ள இராஜபுத்திர வேந்தரையும் ஏனைய இந்து வீர ரையும் நேரில் கண்டு பேச, எனக்கு மிக்க அவா உளது. தக்காணத்திலே இந்து அரசை நிலைநாட்டி இருப்பது போல், வடதேசத்திலும் இந்து அரசை நிலைநாட்ட வகை யுளதா என்று ஆராய்தல் அவசியம். மேலும், ஆரியா வர்த்தத்தில் அரிய ஆலயங்களும் புண்ணிய தலங்களும் நிரம்பியுள. அவற்றையெல்லாம் தரிசித்துவர இதுவே சமயம். எனக்கு எத்தகைய இடுக்கணும் நேராதென ஜய சிம்மன் சத்திய வாக்குத் தந்துளான். ஒருகால் ஆபத்து நிகழினும், அச் சத்திய வாக்கு என்னைக் காக்கும். தோளிரண்டுமே துணையெனக் கொண்டுள்ள யான்

என்று வாள்வலியும் மனவலியும் கொண்டு இடுக்கண்களை அகற்றி மீளுவேன். இதில் சந்தேகம் வேண்டாம்,'' என்று ஆறுதலும் தைரியமும் கூறினன். அமைச்சரும் அன்பரும் அதுகேட்ட பின்னர், வேறு வழியின்றி ஒப்பினர்.

உடனே சிவாஜி தனது அன்னை ஜீஜாபாயிடம் அரசை ஒப்படைத்து, அன்பரையும் அமைச்சரையும் அவளுக்கு உதவிபுரியுமாறு ஆணையிட்டனன்; பின்பு, தனது நாடெங்கும் ஒருமுறை சென்று, தனது யாத்திரையை எடுத்துக் கூறி, மக்களின் ஆசியையும் ஆதரவையும் எய்தினன்; முடிவில் அன்னையை அடைந்து அடிபணிந்து ஆசி வேண்ட, அவ்வீரத்தாய் மகனைக்கட்டித்தழுவி முத்தமிட்டு, "மைந்த! பவானிதான் உன்னைக் காக்கவேண்டும்,'' என்று கூறிப் பிரியா விடை தந்தனள். தரவே, உயிர்த்தோழரும், மூத்தமைந்தன் சாம்பாஜியும், நாலாயிரம் மாவலவீரரும் உடன்வர, அவன் நல்ல முகூர்த்தத்தில் ஆக்ராவுக்குப் பயணமாயினன். வழியிலே சிவாஜி ஜயசிம்மனைக் கண்டான். அப்போது இராஜபுத்திரன் விருந்தொன்று நடத்தி வீர சிவாஜிக்கு ஆசிகூறியதோடு, "நண்ப! நீ திரும்பிவரும் வரையில், நான் தக்காணத்திலேயே இருந்து உனது அரசுக்குப் பங்கம் நேராவண்ணம் பார்த்து வருவேன். உனக்கு ஏதேனும் ஆபத்து விளையின், எனது மைந்தன் இராமசிம்மன் தட்டாது தலைகொடுப்பான். அதுபற்றி அவுரங்கசீபின் சீற்றத்திற்கு ஆளாயினும் எனக்குக் கவலையில்லை. ஆதலின் கலக்கமின்றிச் சென்று வருக,'' என்று உறுதி கூறினன். ஆக்ராவுக்குச் செல்லும் வழியிலே ஆங்காங்குள்ள மொகலாய அதிகாரிகள் சிவாஜியை எதிர்கொண்டழைத்து உரிய மதிப்பும் உயர்வுங் காட்டி உபசரித்தனர்.

தானில்லாத சமயத்தில் கோட்டைகளின் பாதுகாப்பு எங்ஙனமுளதென அறிய அவ் வீரவேந்தன் ஆவல்கொண்டு, இடைவழியிலே ஓர் இரவில் தனது கோட்டைவாயிலொன்றைக் குறுகி, "தளகர்த்த! பகைப்படை பரந்தெழும்பித் துரத்திவருதல் கண்டு, பாதுகாப்பை நாடி இவண் வந்துளேன். ஆதலின் வாயிலைத் திறந்துவிட்டு எனது ஆயுளைக் காப்பாயாக," என்றனன். உடனே அத் தளகர்த்தன் பீரங்கிப்படைகளை ஆயத்தப்படுத்திப் பகைவரின் வருகையை எதிர்நோக்கி இருக்கும் வண்ணம் தனது வீரருக்கு ஆக்கினை இட்டனனேயன்றி, வாயில் கதவைத் திறந்துவிட உடன்படவில்லை. சிவாஜி எவ்வளவோ சொல்லிப் பார்த்தனன்; கோட்டைவாயிலைத் திறக்காவிடின், அனர்த்தம் நேருமென்றும் அச்சமூட்டினன். எதற்கும் அத் தளகர்த்தன் தளரவில்லை. மறுதினம் பொழுது புலர்ந்ததும், கோட்டையின் காவலனும் தலைவனும் சிவாஜியை நேரில்கண்டு கைகட்டி வாய்புதைத்து நின்றனர். அவர்களது மனவுறுதியையும் விசுவாசத்தையும் சிவாஜி கண்டு களித்து, ஆடையும் பொன்னும் அளித்துப் பாராட்டிப் போயினன்.

சிவாஜியின் குதிரைவீரர் ஆக்ராநகரை அணுகியது கேட்ட அவுரங்கசீபு, இராமசிம்மனையும் மற்றொரு முஸ்லீம் தலைவனையும் அனுப்பி எதிர்கொண் டழைத்தான். தனது பதவிக்கேற்ற அரசரை யனுப்பி வரவேற்கவில்லையே என்று சிவாஜி சினந்தனனாயினும், அதனை அத்தருணம் பொருட்படுத்தாமல், குறித்த மாளிகை சென்று துணைவருடன் தங்கினன். பேரரசுக்கு ஏற்ற பான்மையில் அப் பாதுஷா, சிவாஜிக்குரிய சௌகரியங்க ளனைத்தையும் தேடி

யமைக்கத் தவறவில்லை. ஆனால், பழம்பகையை மூட்டி விட அவுரங்கசிபின் அந்தப்புர மாதரிலே சிலர் துணிந்தெழுந்தனர். ஷீஸ்டாகானது மனைவி அச்சமயம் ஆக்ரா நகர் வந்திருந்தாள். தனது கணவனுக்கும் மகனுக்கும் தீங்கிழைத்த சிவாஜியின்மீது பழிவாங்க வேண்டுமென அவளுக்கு ஆத்திரம் பொங்காநின்றது. கையருகே சிக்கியுள்ள சிவாஜியைத் தண்டிக்க இதுவே தருணமென அந்தப்புரத்திலே அம்மாது பெருஞ்சூழ்ச்சி செய்தனள். அவுரங்கசீபும் அதுகேட்டு மனம் தடுமாறலாயினன். அஃதறிந்த மொகலாயப் பெருமக்களிலே சிலர் பாதுஷாவையடைந்து, "வேந்தே! வீரசிவாஜியை விருந்தாக அழைத்துளோம். இந்நிலையில் அந்நரபதியை மாய்ப்பதாயின், நமது பேரரசுக்கு என்றுமழியா மாசு ஏற்படும். அன்றியும், ஜயசிம்மனும் இதர இராஜபுத்திர வேந்தரும் நமது அரசுக்கு எதிராகக் கொதித்தெழவும் நேரிடும்," என்று இடித்துக் கூறினர். அதன்மேல் அவுரங்கசீபு ஓரளவு தடுமாற்றம் நீங்கினன்.

ஒருதினம் அவுரங்கசீபைச் சிவாஜி காண ஏற்பாடாயிற்று. அத்தினத்திலே பாதுஷாவின் காவலுக்குப் பலவகை ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பட்டாணிய மெய்காவலரிலே பலர் உருவின கத்தியும் கையுமாக அரியணையைச் சூழ்ந்துநின்றனர். பெருவீரரும் ஆயுதபாணிகளாக ஓரிடத்தில் காத்திருந்தனர். சிவாஜி எளியவனல்லன் என்பதை அவுரங்கசீபு நன்கு அறிவான். 'பகை முடிக்கக் கருதின், சிவாஜி தனது உயிரையும் ஒரு பொருட்டாக எண்ணான்,' என்று பலரும் அவுரங்கசீபின் காதில் ஓதினர். எதிரியின்மீது பாய்வதாயின் இருபத்தைந்து கஜ

தூரம் எழும்பிக்கிளம்பித் தாண்டிவரும் ஆற்றல் மகாராஷ்டிரனுக்கு உண்டென்று பலரும் பேசினர். எனவே, மெய்காவலர் அருகே சூழ்ந்திருக்க, அவுரங்கசீபு இரும்புக்கவசம் தரித்துப் பஞ்சாயுதபாணியாகவே வந்து அரியணையில் அமர்வானாயினன். சிவாஜியோ யாதோர் ஆயுதமுமின்றியே அரசவைக்குப் போக நேர்ந்தது. தென்தேசத்துத் தீரவேந்தன் வருவதைக் காணவேண்டி, மொகலாயப் பெருமக்களும் பட்டவர்த்தனரும் மகுடவர்த்தனரும் ஏனைய சிற்றரசரும் அரசவையில் எள்ளிட இடமின்றிக் குழுமியிருந்தனர். அந்தப்புர மாதரும் அப் பெருவீரனைக் காண ஆவல்கொண் டிருந்ததனால், அவர்களுக்கும் திரைமறைவிலே தனியிடம் அமைக்கப்பட் டிருந்தது.

குறித்த நேரத்திலே இராமசிம்மனும் சில துணைவரும் உடன்வரச் சிவாஜி அரசவையில் நுழைந்தனன். மொகலாய அரசவையில் அனைவரும் மும்முறை மண்டியிட்டுச் சலாம் செய்தல் வழக்கம். சிவாஜிக்கோ அங்ஙனம் மண்டியிட மனம் வரவில்லை. ஆயினும் மும்முறை கையெடுத்து வணங்கினன். முதல் முறையில் மகாதேவனையும், அப்பால் ஜகதாம்பிகையையும்,பின்னர் தந்தை ஷாஜியையுமே மனத்தினால் வணங்கி, அச்சிவாஜி கையெடுத்தனன். உடனே அவுரங்கசீபு, “வீர! சுகமா?” என்று பலவாறு வினவ, சிவாஜி உரிய விடை பகர்ந்தனன். பகர்ந்ததும், இரண்டாம் படியிலுள்ள தலைவர்கள் வீற்றிருக்கும் இடத்தில் சிவாஜியை அமர்த்துமாறு அவுரங்கசீப் ஜாடைசெய்தனன். அங்ஙனமே இராமசிம்மன் சிவாஜியை அழைத்துச் செல்ல, சிவாஜி அந்த ஆசனத்தில் வீற்றிராமல், “அன்ப! சக்கரவர்த்தி என்னைச் சிறுமைப்படுத்தவே எண்ணியுள்ளான்

போலும்? இரண்டாந்தரத் தலைவருடன் என்னைக் கணக்கிடுதல் எங்ஙனம் தகும்? இது ஈனமன்றோ?" என்று சீறிப் பேசினன். அவுரங்கசீப், அஃதறிந்து, "அங்கே யாது சந்தடி?" என்று கேட்டனன். இராமசிம்மன் பதிலுரைக்கு முன்னம், சிவாஜி, 'மொகலாய வேந்தே! சிவாஜியின் தன்மை இன்னதெனத் தெரியவில்லையோ? ஷீஸ்டாகான் பட்டபாடும் சூரத் கொள்ளையும் போதாவோ?" என்று பொங்கிப்பேசி, இராமசிம்மனை நோக்கி, "அன்ப! ஈட்டியொன்று தருக," என்று கேட்டவளவில், அவுரங்கசீப் அச்சங் கொண்டனன். இராமசிம்மனும் பிறரும் சிவாஜியை அரசவையினின்று வெளியே அழைத்துச் சென்றனர். மறுதினம் பேசிக்கொள்ளலாம் என்று அவுரங்கசீபும் சிவாஜிக்குத் தாம்பூலம் கொடுத்தனுப்பினன்.

மறுநாள் சிவாஜியை அரசவைக்கு வரவழைக்க அவுரங்கசீப் தைரியம் கொள்ளவில்லை. அவுரங்கசீபினால் வஞ்சனையே விளையப்போகிறதென்று சிவாஜி கருதி, உண்மையை உணர்ந்துவர இராமசிம்மனை அரசவைக்கு அனுப்பினன். அங்ஙனமே இராமசிம்மன் சென்று வினவ, அவுரங்கசீப், "வீரனே! சிவாஜியை நமது அவையில் இருத்தி வைப்பதே நமது ஆவல். அவனுக்கு உயர் பட்டமும் பெரும் பதவியும் அளிப்பதாக உத்தேசம். தக்காணத்திலே அவன் விரும்பியவண்ணம் ஜாகீர் தந்துள்ளோம். வடதேசத்திலும் விழுமிய ஜாகீர் ஈவதாக நமக்கு விருப்பமுண்டு. தக்காண ஜாகீரிலே தனது மகனை அமர்த்திவிட்டு, வடக்கே மொகலாய சேனையில் பெரும்பதவி பெற்று அவன் களிக்கலாம். சிவாஜியின் வீரதீரத்துக்கு ஏற்ற இடம் மொகலாய அரசவையே யாகும்," என்ற



சிறுமைகண்டு சீறியெழல்

ணன். எத்தகைய உயர்வாயினும் டில்லியரசில் சேவை செய்ய சிவாஜிக்கு மனமில்லை என்பது பிரசித்தம். அன்றியும், பாதுஷாவின் வார்த்தையில் அவனுக்கு நம்பிக்கை பிறக்குமோ? ஆதலின் சிவாஜி இரகுநாத பந்தனை அவுரங்கசீபினிடம் அனுப்பி, "பெருமை மிக்க பாதுஷா! மொகலாய வரசில் எனக்குப் பற்றுண்டு என்பது சமுகம் அறிந்த விஷயமே. ஜயசிம்மன்மூலம் ஏற்பட்ட உடன்படிக்கையின் வண்ணம் அடியேன் நடக்கச் சித்தமாயிருக்கிறேன். விஜயபுரி, கோவலகுண்டம் ஆகிய இரு அரசர்களையும் அடக்கும் முயற்சியில் பேருதவி புரிதல் எனக்கு இலகுவாகும். முன்பின் அறியாத வடதேசத்தில் பெருவீரம் விளைக்க என்னால் இயலாது. ஆதலின் விரைவிலே தக்காணம் செல்ல அனுமதிவேண்டும்," என்று வேண்டினன். இதற்கு அப்பாதுஷா ஒரு பதிலும் தரவில்லை. சிவாஜியை ஆக்ராவிலே தந்திரமாக இருத்தி, தக்காணத்திலே அவனது அரசைக் கைப்பற்றி மானாபிமானத்தையும் சிதைக்கவே அவுரங்கசீப் கருதி நின்றனன். ஆனால் ஜயசிம்மனது வாக்குறுதி வந்து குறுக்கிட்டு அவுரங்சீபின் மனத்தை அவ்வப்போது அலைக்கலாயிற்று.

அன்றியும் அரசவைக்குச் சிவாஜி வந்த காலத்தில் அம்மகா புருஷனது முகவிலாசத்தைக் கண்டு களித்த ஸேபென்னிஸா என்பாள் அவுரங்கசீபுடன் வாதாடத் தொடங்கினள். அவள் பாதுஷாவின் மகள்; மகாபண்டிதை; உருது பாஷையிலே பல நூல்களை இயற்றியவள்; தெய்வ பக்தியும் தயையும் அவளிடம் மிக அதிகம்; சிவாஜியின் வீரத்தைக் கேள்வியுற்று வியந்து நின்ற அந் நங்கை அவ்வீரனை நேரில் கண்டதும் அளவிலாப் பரிவுகொண்டனள்.

உயர்குணம் பலவும் வாய்ந்த அம் மங்கை நல்லாள் தனது தந்தையை அணுகி, "அரசே! பெரு வீர புருஷனை வஞ்சனையாக மடக்குதல் மாபாவம்," என்று கூறினள். ஆதலின் சிவாஜியின் உயிருக்கு உலை வைக்க அப்பாதுஷா துணியவில்லை; என்றாலும் ஆக்ரா நகரருக்கு வெளியிலே ஓர் அரண்மனையில் அவனை அமர்த்தி, நாலுபக்கமும் பெருங் காவல் போட்டனன். அவுரங்கசீபின் உத்தரவின்றி அந்த அரண்மனையின் உள்ளே போகவும் வெளியே வரவும் ஒருவருக்கும் இயலாதபடி ஆணைபிறந்தது.

சிறைப்பட்ட சிவாஜிக்கோ சினம் பொங்கியது. தந்திரத்தைக் கையாண்டு தப்புவதைவிட வேறுவகை யொன்றும் அவ்வீரனுக்குத் தோன்றவில்லை. பாதுஷாவினிடம் நேரில் தனது நிலையை உரைக்கவும் பணிவைப் பகரவும் அனுமதி வேண்டுமென்று சிவாஜி விண்ணப்பித்துக் கொண்டான். அப்ஸல்கானும் ஷீஸ்டாகானும் பட்டபாட்டை நன்கறிந்த அவுரங்கசீப் அதற்குச் சம்மதி தரவில்லை. அப்பால், டில்லியரசின் முதன் மந்திரியான ஜாபர்கான் என்பானைத் தனிமையில் அழைத்துப் பேசினன் சிவாஜி. அச்சமயம் அவன் மனைவியான ஷீஸ்டாகானது சோதரி ஒரு தூதனை விடுத்து, "ஐயனே! சிவாஜியுடன் நெடுநேரம் பேசியிருத்தல் உமக்கு ஒவ்வாது. உயிருக்கே ஆபத்து நேரும்," என்று எச்சரிக்கை செய்தனள். அத்தூது கேட்டதும் ஜாபர்கான் சரேலென்று எழுந்துபோய், உயிர் தப்பியதெனக் களித்தனன். சாமோபாயம் அனைத்தும் கைகொடாதது கண்ட சிவாஜி, வேறு வழியை ஆராயலுற்றான். அதன் முடிவாக, நண்பனுயினும் பகைவனுயினும் யாரிடமும் வீரசிவாஜி தனக்குள்ள அச்சத்தை வெளிக்

காட்டவில்லை. தனது வீரரில் பலரையும் சொந்த தேசம் அனுப்பத் துணிந்து, "தக்காணத்தவருக்கு வடதேசவாசம் விரும்பத்தக்கதா யில்லை. ஆதலின் அவர்கள் தமது ஊர் செல்ல விரும்புகின்றனர். எனது வீரரில் பலரை இங்கு வைத்திருத்தலும் வீண் செலவாகுமன்றோ?" என்று சிவாஜி அவுரங்கசீபுக்கு அறிவித்தனன். அவ்விதமே ஒரு சிலர் தவிர ஏனைய வீரர் அனைவரும் தக்காணஞ் செல்ல அனுமதி கிடைத்தது. வீரவேந்தன் எங்ஙனமேனும் தப்பி விடுவான் என்ற நம்பிக்கையுடன் அவ்வீரர் தமது தேசம் போகத் தலைப்பட்டனர்.

பின்னர் மொகலாயப் பெருமக்களைக் கண்டு கொள்ளவும், அன்னாரைத் தனது விடுதியில் வரவேற்கவும் சிவாஜி அனுமதி பெற்றனன். பலருடனும் அவன் பேசிப் பழகவே, அனைவருக்கும் சிவாஜியின் நடை நொடி கண்டு வியப்பும் மதிப்பும் பெருகின. அவர்களுடன் பேசிநிற்கும் காலையிலே, "ஆதியில் எனக்கிருந்த கருத்து யாதாயினும், இப்போதோ மொகலாய அரசின் சேவையே மிக்க ஏற்றமுடைத்து என்று காண்கின்றது. எனது வலியும் வீரமும் தலைசிறப்பதற்குத் தக்க இடம் பாதுஷாவின் சமுகமேயாகும்," என்று சிவாஜி மெய்போல் பகர்ந்தான். அது கேட்டு அனைவரும் சிவாஜிக்கு மனமாற்றம் உண்டாகி விட்டதெனக் களிக்கலாயினர். அச்செய்தி பாதுஷாவின் காதுக்கும் எட்டியது.

## 11. சிவாஜியின் சிறைமீட்சி

குருவாரந்தோறும் சிவாஜி விரதங் கொண்டாடத் தொடங்கினன். அச் சமயம் சிவாஜியின் அரண்மனையி லிருந்து கூடை கூடையாகக் கனிவர்க்கங்களும் பணியாரங் களும் மொகலாயப் பெருமக்களுக்கு அனுப்புவது வழக்க மாயிற்று. ஒரு கொம்பின் இருமுனையிலும் இரு கூடையைக் கயிறு கொண்டு கட்டித் தொங்கவிட்டு அவற்றை வேலை யாட்கள் பலர் வெளியில் எடுத்துச் செல்வர். முதலில் காவலாளர் அக் கூடைகளை இறக்கிச் சோதனை செய்யாமல் விடார். ஆனால் வாரந்தோறும் அவ்விதம் நடந்து வரவே, காவலாளருக்கு அப் பரிசோதனையில் வரவர அலுப்புண் டாகத் தலைப்பட்டது. அதன் பின்னர் அவர்கள் எல் லாக் கூடைகளையும் பரீட்சை செய்து பாராமல், இரண் டொன்றை மட்டும் சோதனை செய்து பார்ப்பர். இதற்குள் சிவாஜியின் இனிய சொல்லும் உயரிய செயலும் அன் பான நடையும் காவலரின் மனத்தை உருக்கி வசஞ் செய்து விட்டன. சிவாஜி அடிக்கடி அக் காவலருடன் கலந்துபேசி அவர்களது கஷ்ட நஷ்டங்களை அறிந்து அவர் களின் அன்பையும் மதிப்பையும் எல்லையில்லாமற் பெற லாயினன். அக்காவலரின் தலைவர்களிடமும் சிவாஜி நேர் மையுடன் பேசி நடக்கவே, அன்னவரும் வீரசிவாஜியிடம் பெருமதிப்பு வைக்கத் தொடங்கினர்.

அப்பால் சிவாஜியின் தோழர்களும் ஒவ்வொருவராக ஊர் செல்லத்தலைப்பட்டார்கள். சிலர் தமக்கு நோயென்று நவின்று புறப்பட்டனர். சிலர் வேறு ஜோலி கொண்டு சென்றனர். அங்ஙனம் சென்ற ஒவ்வொருவரும் குறித்த

இடத்திலே சிவாஜியின் வருகையை நோக்கி இருந்தனரே யன்றி வேறன்று. முடிவில் சிவாஜியும் சாம்பாஜியும் இரு ஏவலாளருமே எஞ்சியிருந்தார்கள். ஒருநாள் சிவாஜி நோய் கொண்டதுபோல் பாசாங்கு பண்ணினன். மருத்துவர் பலர் வந்து கைபார்த்து ஔஷதம் கொடுத்துச் சென்றனர். பொய் நோய் அதிகரித்துவிடவே, வந்து பார்க்கும் அனைவரும் அகல நின்று உரையாடும் வண்ணம் சிவாஜி கட்டளை யிட்டனன். முடிவில் அம்மாய நோய் குணமாகி விடவே, அதனையொட்டி வேதியருக்கும் வைத்தியருக்கும் மொகலாயருக்கும் பிறருக்கும் ஏராளமான தின்பண்டங்கள் அனுப்பப்பட்டன. பக்கிரிகளுக்கும் பைராகிகளுக்கும் தானதருமம் செய்யப்பட்டன. பலகாரக்கூடை அனுப்புதல் வெகு சகஜமாகி விட்டதால், காவலாளர் அதனை அவ்வளவாகச் சோதனை செய்வதில்லை. ஒருதினம் பல கூடைகள் சிவாஜியின் மாளிகையினின்று புறப்பட்டன. ஒன்றில் சிவாஜியும் மற்றொன்றில் அவன் மைந்தன் சாம்பாஜியும் அமர்ந்து கொண்டனர். இரண்டொரு கூடைகளைக் காவலாட்கள் சோதனைசெய்து அனுப்பினர்கள். கூடைகள் எல்லாம் வெளியே செல்லவே, சிவாஜியும் சாம்பாஜியும் சிறையைவிட்டு வெளியேறி விட்டனர்.

சிவாஜியின் உயிர்த் தோழனான ஷீராஜி என்பான் சிவாஜியின் படுக்கையில் அமர்ந்து காலொடு தலை போர்த்திக்கொண்டு கிடந்தனன். அவனது கைவிரல் மட்டும் வெளியே தெரிய, அதில் சிவாஜியின் சீரிய கணையாழி பளீர் பளீர் என்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. பணியாள னொருவன் காலையும் உடம்பையும் பிடித்துப் பணிபுரியா நின்றனன். மறுதினம் பொழுது புலர்ந்து வெகு

நேரமாகியும் சிவாஜி வெளிக்கிளம்பாதது கண்ட காவலர் வந்துபார்த்தனர். அரசன் பெருந் தலைவலிகொண்டு படுத்துக் கிடப்பதாகப் பணியாளன் புகன்றனன். காவலர் அதுகேட்டுத் திரும்பிவிட்டனர். பின்னர் ஷீராஜி அப் பணியாளனுடன் புறப்பட்டு வந்து காவலரை நோக்கி, "வீரர்காள்! எங்கள் இறைவனது தலைநோய் தீரவில்லை. இருவரும் சென்று மருத்துவரை அழைத்து வருகின்றோம். அரசன் இப்பொழுதுதான் சற்றே கண்மூடியிருக்கின்றான். ஆதலின் வைத்தியர் வருமுன் யாரும் உள்ளே செல்ல வேண்டாம்," என்றனன். காவலர் சரியென்று செப்பியதும், அவ்விருவரும் இராமசிம்மனை அடைந்து சிவாஜி தப்பிச் சென்றதை அறிவித்துவிட்டு விடைபெற்றுத் தம் இறைவனை நாடிப் போயினர்.

இராமசிம்மன் உடனே விரைந்துசென்று அவுரங்கசீபை யடைந்து, "அரசே! எனது தந்தையின் சத்திய வாக்குறுதியை நம்பியே சிவாஜி நமது சபை குறுகினன். புரந்தர உடன்படிக்கையின் வண்ணம், அவ்வேந்தனைப் பெருமையுடன் நடத்தாமல் சிறைசெய்திருத்தல் சரியாகுமோ? சிவாஜியின் சினேகமிருப்பின், தக்காணத்திலே நமது பேரரசின் பிரதாபம் எங்கும் பெருகாநிற்கும். சிவாஜி மகாவீரன் என்பது பிரசித்தம். இனி அச்சிவாஜியைக் குறித்து நானோ எனது தந்தையோ எதற்கும் ஈடுபட இயலாது," என்று எடுப்பாகப் பேசினன். அவுரங்கசீப் அதுகேட்டு, "வீரமைந்த! சிவாஜி எனக்கு உட்பட்ட ஒரு குறுநில மன்னனாவன். தகுதியென்று எனக்குத் தோன்றும் வண்ணம் அவனை நடத்த எனக்கு உரிமையுளது. தனது பிழைக்கு அவன் வருந்தி மன்னிப்பை

நாடின், பெரும்பதவியில் அவனை அமர்த்தத் தடையில்லை. இதுபற்றி நீயும் உனது தந்தையும் வீணே கவலைகொண்டு உழலுவது ஏனோ அறியேன்,'' என்று கூறினன்.

சிறிதுநேரஞ் சென்றதும் அரண்மனைக்குள்ளே சந்தடி எதுவும் இல்லையெனக் கண்ட காவலர் ஐயங்கொண்டு உள்ளே சென்றுபார்க்க, அங்கே சிவாஜியைக் காணவில்லை. மருத்துவனைத் தேடிச்சென்ற ஷீராஜியும் திரும்பிவரவில்லை. காவலருக்கு உண்டான திகிலோ கூறுந்தரமன்று. பாதுஷாவுக்கு யாது பகர்வதென ஒன்றும் தோன்றாது அனைவரும் திகைத்தனர். பூட்டியபடியே கூடு இருக்க, அதனுள் இருந்த வீரசிங்கம் மறைந்த செய்தி நகரெங்கும் பரவலாயிற்று. காவலர் தலைவனை கொத்தவால் திடுக்கிட்டுப் போய், அவுரங்கசீபை அடைந்து, "பெருவேந்தே! சிவாஜி இந்திரஜாலம் கைவந்தவன் போலும்! நமது காவலர் இமைகொட்டாமல் காத்து நிற்கையிலேயே, அவன் எங்ஙனமோ மாயமாக மறைந்துவிட்டனன்,'' என்று நாக்குழற நவின்றனன். அச்செய்தி கேட்ட பாதுஷா இடியேறுண்ட நாகம்போல் கலங்கலானான். பின்பு, அவுரங்கசீப் பல்லைக் கடித்தும் கையை நெரித்தும் சீற்றம் மிகுந்து கொத்தவாலை வேலையினின்றும் நீக்கினன்; நான்கு திசையிலும் மொகலாயப் பரிவீரரை அனுப்பிச் சிவாஜியைத் தேடவிட்டனன். மொகலாயர் நாடெங்கும் சென்று துருவிப் பார்த்தனர். சிவாஜி தப்பிச்சென்றசெய்தி தேசமெங்கும் மொகலாய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. கண்டவிடத்தில் சிவாஜியை விலங்கிட்டுக் கொணர வேண்டுமென ஆணைபெறாத அதிகாரிகள் இல்லை. தக்காணத்திலே ஜயசிம்மனிடம் போர்ச்சேவகம் புரியும் வீர நேதாஜியைச் சிறைசெய்யுமாறும் ஆணைபோயிற்று.

சிவாஜியின் மீட்சிகேட்டு மொகலாயப் பெருமக்கள் துக்கமும் வியப்பும் ஒருங்கே கொண்டனர். 'வலுவில் வந்த சிதேவியை உதைத்துத் தள்ளுவதுபோல், பணிய விரும்பி நின்ற சிவாஜியைச் சிறைசெய்தது அழகோ?' என்று சிலர் பேசினர். 'பெருவீரனது பக்கபலத்தை இழந்து, மீண்டும் பகைமையைத் தேடிக்கொண்டனனே பாதுஷா!' என்று சிலர் வருந்தினர். 'எங்கும் வீரக்கொடி தூக்கும் சிவாஜியைச் சிறைசெய்தல் யாவரால் ஆகும்?' என்று சிலர் மொழிந்தனர். 'சிவாஜி ஆக்ரா நகரிலேயே மறைந்திருந்து, சமயம் பார்த்துப் பாதுஷாவின்மீது ஒருவேலை பாயவுங்கூடும்,' என்று சிலர் விளம்பினர். இவையனைத்தும் கேட்ட அவுரங்கசீப் தாங்கமுடியா அவமானமும் சோர்வும் கொண்டு சின்னாள்வரையில் உண்ணவுமில்லை, உறங்கவுமில்லை. எச்சமயமும் கவலையே அவனைச் சூழ்ந்துநின்றது. சிவாஜி திடீரென்று தோன்றித் தாக்குவனோ என்ற கிலிக்கும் அக்கொற்றவன் ஆளாயினன். இராமசிம்மன்மீதும் அவுரங்கசீப் ஐயுறவு கொள்ளவே, அன்றுமுதல் அரசவை புக ஜயசிம்மனது மைந்தனுக்கு உத்தரவு கிடைக்கவில்லை. ஜயசிம்மன்மீதும் பாதுஷாவுக்கு ஐயம் பிறந்ததாயினும், அது செல்லாவிடத்துச் சினமாகவே முடிந்தது.

கூடையிலே வெளிக்கிளம்பிய வேந்தன், ஆக்ராநகரைத் தாண்டியவுடனே மாறுவேஷத்துக் குரியனவும் இருபரிகளும் அங்குத் தயாராக இருந்தன. ஒன்றில் சிவாஜியும், மற்றொன்றில் சாம்பாஜியும் மாறுவேடத்துடன் ஏறி அமரலும், பரி இரண்டும் அதிவேகமாய்ப் பறந்தன. முன்னதாகவே சிவாஜியை விட்டுப்பிரிந்த துணைவர், குறித்த இடத்திலே கொற்றவனைக் கண்டு குதூகலம் கொண்டனர். நேர்

வழியாகத் தக்காணம் செல்லின் மொகலாயர் தொடர்ந்து வருவரெனக் கண்ட சிவாஜி, திரிசுழலான வழியே ஆரு மறியாவண்ணம் துறவிவேடம்பூண்டு போகலாயினன். அவனது துணைவரில் சிலர் வேறுவழியாகச் சென்றனர். காசிமாநகரைத் தரிசித்துக் கங்கையில் நீராடியபின்னர், சிவாஜி வடமதுரை சேர்ந்தனன். அங்கே மகாராஷ்டிர மன்னவனது முதல்மந்திரியின் உறவினர் மூவரைச் சிவாஜி கண்டான். சாம்பாஜியையும் உடனழைத்துச் செல்லுதல் கூடாதகாரியமென்று சிவாஜிக்குத் தோன்றியது. ஆதலின் மைந்தனை அவர்களிடம் ஒப்படைத்து அவன் விடைபெற்றுச் சென்றான். வழியிலே சிவாஜி பட்டபாடு கொஞ்சமன்று. மழைநாள் ஆதலின், நதிகளிலே வெள்ளம் அப்பொழுது பெருகியிருந்தது. வாராவதி இல்லாத இடங்களில் சிவாஜி அந்நதிகளை நீந்திச் சென்றனன். மலைகளையும் காடுகளையும் கால்நடையால் கடத்தல் அம்மன்னவனுக்கு மகா கடினமாயிற்று.

ஒருநாள் சிவாஜி, மொகலாய கிராமத் தலைவனொருவனிடம் சிறைப்பட்டனன். உடனே வேண்டுமளவு அவனுக்குத் திரவியங்கொடுத்து வீரசிவாஜி விடுதலை பெற நேர்ந்தது. ஒரு சமயம் யமுனைநதியிலே சிவாஜி நீராடி நிற்கையில், புரோகிதர் இருவர், சிவாஜியின் முகத்தை உற்று நோக்கினர். ஒருவன், “இச் சந்நியாசி யாவன்? அரச லட்சணங்கள் காணப்படுகின்றனவே!” என்றனன். மற்றவனோ, “சோதர! தென்தேச அதிபதியான சிவாஜி ஆக்ராவிலிருந்து தப்பி யோடினன் என்கின்றனரே? அவனைக் கண்டுபிடிப்போருக்குக் கருந்தனம் தருவதாக டில்லி பாதுஷா பறையறைந்துளான். அங்ஙனம் இருநிதி பெற

யாவர் பாக்கியம் படைத்துளரோ? அறியேன்,'' என்றனன். அச்சொல் காதில் விழுமுன் சிவாஜி அவ்விடம்விட்டு ஒரு கணப்பொழுதில் மறைந்தான். அங்கிருந்து சிறிது தூரஞ் சென்றதும் சிவாஜி கால்நடையாகவே செல்ல இயலாமல் பரிமா வொன்று வாங்க முயன்றனன். சுழி சுத்தமில்லாத ஒரு கோணைக் குதிரைக்கு அதன் சொந்தக்காரன் கேட்ட பணத்தைக் கொடுக்கச் சிவாஜி பணப்பையை அவிழ்த்ததும், அவன் திகைத்து, "இக் குதிரைக்குப் பொற்காசு தரும் இம்மனிதன் இராஜா சிவாஜியோ?'' என்று சந்தேகங்கொண்டு பேசினன். அவ்வளவில் சிவாஜி தனது பணப்பையை அவனது முகத்தி லெறிந்துவிட்டு ஓட்டம் பிடித்தான்.

ஓரிரவு சிவாஜி ஆகாரம் நாடிப் பரம ஏழை யொருவனது குடிசையில் புகுந்தான். பைராகிவேடந் தாங்கிவந்த சிவாஜியைக் கண்டதும் அவ்வீட்டுக்கிழவி, "ஐயா! உமக்கு அமுது படைக்க எனக்கு இஷ்டமே. ஆயினும் என் செய்வேன்? சிவாஜியின் வீரர் அடிக்கடி இக் கிராமத்தில் புகுந்து கொள்ளை யடிக்கின்றனர். பணத்தைப் பறிப்பதுடன் நில்லாமல், தட்டுமுட்டு சாமான்களையும் அவர்கள் அபகரித்துச் சென்றுவிட்டனர். சிவாஜி டில்லிக்குச் சென்றிருப்பதாகக் கேள்வி. அவனை அவுரங்கசீப் இன்னம் தண்டிக்காமல் இருப்பது ஏன்?'' என்று வருந்திக் கூறினள். துறவியான சிவாஜி அதுகேட்டு, "அன்னாய்! சிவாஜி இருந்திருப்பின், அவனது வீரர் அக் கொடுஞ்செயல் புரிந்திரார். மொகலாய சேனை படைகொண்டு மகாராஷ்டிரத்தில் புகுந்த காலையில் பல கிராமங்களும் நகரங்களும் பாழ்பட்டன. மேலும், சமாதானம் பேசுமாறு சிவாஜியை

அப்பாதுஷா அழைத்துச் சிறைசெய்து விட்டதாகக் கேள்வி. அதற்குப் பழிவாங்கக் கருதியே மொகலாயரது கிராமங்களில் சிவாஜியின் வீரர் புகுந்து கொள்ளையிட்டனர் போலும்! ஏழை மக்களையும் விவசாயிகளையும் இம்சிக்கக் கூடாது என்பதே இராஜா சிவாஜியின் கருத்து. இனி உங்களுக்கு நற்காலம் வருமென நம்புகிறேன்,'' என்று ஆறுதல் கூறவே, அக்கிழவி அன்புடன் அமுது படைத்து வேந்தனது பசியை ஆற்றினள்.

அங்ஙனம் காசி, பிரயாகை, வட மதுரை, பூரி, கயை முதலிய பல தலங்களுக்கும் சிவாஜி சென்று, முடிவிலே தனது நண்பனுடன்காஷாய உடை தாங்கி இராஜகோட்டை சேர்ந்தனன். உடனே சந்நியாசிகள் இருவர் ஜீஜா பாயைப் பார்க்க வந்திருப்பதாகச் சமாசாரம் எட்டியது. ஜீஜாபாய் அவ்விருவரையும் எதிர்கொண் டழைத்துச் சென்று ஆசனத்தில் அமர்த்தினள். சிவாஜியுடன் வந்த நீராஜி பந்தன் என்பான் ஜீஜாபாயை நோக்கி, "அம்மணி! பவானியம்மையின் அருள் பரிபூரணமாகக் கிட்டுமாக!'' என்று துறவியைப்போல் ஆசிகூறினன். சிவாஜியோ அன்னையைக் கண்டதும் அன்பு மேலிட்டு அடியில் வீழ்ந்து வணங்கினன். அது கண்ட ஜீஜாபாய் திடுக்கிட்டு, "ஐய! துறவிகளாகிய தாங்கள் எனது காலில் விழலாகுமோ? இந்த அபசாரத்திற்கு என்ன செய்வேன்?'' என் றுரைத்து ஏங்கினள். அன்னையின் முன்னே துறவியைப் போல் நெடுநேரம் நடிக்கச் சிவாஜியினால் ஆகவில்லை. உடனே சிவாஜி தனது காஷாய உடையைக்களைந்து எறிந்து அத்தேவியை வணங்கினன். ஜீஜாபாய்க்கு அப் பொழுதும் அடையாளம் தெரியவில்லை. பல மாத காலம்

வழி நடந்த களைப்பினாலும் கவலையினாலும் சிவாஜியின் மேனியும் தோற்றமும் வாடியிருந்தன. முடிவில் அத்தேவி உற்று நோக்கி, அருமந்த மைந்தனை உணர்ந்துகொண்டு அவனைக் கட்டித்தழுவி ஆனந்தக் கண்ணீர் வடித்தனள். பிள்ளை திரும்பி வந்தனன் என்ற களிப்பின்றி, மீண்டும் சிவாஜி பிறந்தனன் என்றே அத்தேவி களிகூர்ந்தனள். சிவாஜி தப்பி வந்த செய்தி நாடெங்கும் பரவவே, அமைச்சரும் அன்பரும் கடுகி வந்து காவலனைக் கண்டு மகிழ்ச்சி கொண்டனர். நகரமாந்தரும் காணிக்கையுடன் வந்து நரபதியை வணங்கி மகிழ்ந்தனர். சிறைமீட்சியினிமித்தம் மகாராஷ்டிரமெங்கும் திருவிழாக் கொண்டாடப்பட்டது. ஏழை எளியவர்க்கும் அந்தணர்க்கும் அளவிறந்த தானதருமங்கள் செய்யப்பட்டன. எங்கும் யாவர்க்கும் அன்னமும் ஆடையும் வழங்கப்பட்டன. ஆனந்த அறிகுறியாக ஒவ்வொரு கோட்டையினின்றும் பீரங்கிகள் கர்ஜித்தன. 'தோல்வி என்பதை யுணராது வெற்றியே கொண்டு விளங்கும் எங்கள் இறைவனுக்கு நிகராவார் உளரோ?' என்று எல்லாரும் வியந்து புகழ்ந்தனர். டில்லி யரசனிடம் சென்ற காலையில் உடன் வந்து உதவிய ஆருயிர் அமைச்சரையும் அன்பரையும் சிவாஜி மறக்கவில்லை. அவரவர் நிலைக்கும் நெறிக்கும் ஏற்ற பதவியும் பட்டமும் பணமும் வழங்கிப் போற்றினன் அப் பார்த்திபன். ஆக்ரா அரண்மனையிலே தனக்குப் பதிலாக மஞ்சத்தில் படுத்துக்கிடந்து காவலரை ஏமாற்றி வந்த ஷீராஜிக்கு விசுவாசராவ் என்னும் உயரிய பட்டம் வழங்கப்பட்டது. மேலும் குதிரைப் படைவகுப்பின் தலைமையும் பல்லக்கில் செல்லும் ஏற்றமும் அவனுக்கு அளிக்கப்பட்டன.

இனி, சாம்பாஜி திரும்பிவந்த விவரம் பேசுவோம்.
வடமதுரையில் சாம்பாஜியை அடைக்கலமாகக் கொண்ட
காசிபந்தன் தனது குடும்பத்துடன் மகாராஷ்டிரத்துக்குப்
புறப்பட்டான். வழியிலே ஒரு நகரில் சாம்பாஜியின் அரச
ஜாடைகண்டு மொகலாயத் தலைவனொருவன் அக் குடும்
பத்தினரைச் சிறைசெய்தனன். காசிபந்தன் அதுகண்டு,
"இம்மைந்தன் எனது புத்திரன்," என்று சத்தியஞ் செய்
தும் மொகலாயன் நம்பாது, "அந்தண! வாய்ப்பேச்சினை
நம்பேன். நீர் இக்குமரனுடன் சமபந்தி போஜனம் செய்
யின், நம்பமுடியும்," என்றனன். வேதியர், பிறருடன்
கலந்துண்ணாரென்பதை அவன் நன்கறிவன். அடைக்கலப்
பொருளைக் காக்கக் கருதி ஆருயிரையும் வழங்கவிருந்த காசி
பந்தன், தனது குலாசாரத்தைப் பாராட்டாது சாம்பாஜி
யுடன் சமபந்தி போஜனம் செய்யத் துணிந்தான். மொக
லாயன் அதுகண்டு ஏமாறி அவர்களை விடுவிக்க, சாம்பாஜி
யும் அக்குடும்பத்தினரும் பத்திரமாக இராஜகோட்டை
சேர்ந்தனர். சாம்பாஜி நீண்ட சிகை படைத்தவ னாதலின்
பெண்வேடமிட்டு அவனைக் காசிபந்தன் அழைத்து வந்த
தாகச் சிலர் சொல்வதுமுண்டு. சாம்பாஜியின் வருகை
கண்டு பலரும் பரமானந்தங் கொண்டனர். காசிபந்த
னது குடும்பத்தினருக்குச் சிவாஜி மன்னவன் மானியம்
கொடுத்து மகிமை பலவும் செய்தனன்.

---

## 12. வல்லரசின் பரிபவம்

சிறையினின்றும் வெளியேறிய சிவாஜி தக்காணத்திலே மொகலாயரைப் பழிவாங்க நினைத்தான். சிவாஜி தப்பிச் சென்றதுமுதல் ஜயசிம்மன்மீது ஐயங்கொண்ட அவுரங்கசீப் மன்னவன், அது சமயம் தக்காணத்தை விட்டுத் திரும்பிவருமாறு ஜயசிம்மனுக்கு ஓலை போக்கினன். இதுவே ஏற்ற தருணம் எனக் கருதிய சிவாஜியோ, தனது படையுடன் புறப்பட்டு, முன்னம் கைதவறிப் போன கோட்டைகளையும் நகரங்களையும் மொகலாயரிடமிருந்து மீட்கலானான்.

ஜயசிம்மனைத் திரும்பிவர அழைத்த பின்னர், மூத்த மைந்தன் மௌஸம் என்பானையும் இராஜபுத்திர வீரனை யசோவந்த சிம்மனையும் டில்லி பாதுஷா தக்காணத்திற்கு அனுப்பினன். அவ்விருவரில் மொகலாய இளவரசன் உலக இன்பத்தில் மகிழ்ந்திருக்கலானான். இராஜபுத்திரனோ, சிவாஜியின் வீரப்பிரதாபத்தைக் கண்டும் கேட்டும் வாளாவிருக்கலாயினன். அதுகேட்டு அவுரங்கசீபு, அடங்காச் சினங்கொண்டு சிவாஜியைச் சிறைசெய்து தீரவேண்டுமென இருவருக்கும் கண்டிப்பான ஆணை அனுப்பினன். உடனே மொகலாய சேனை திரண்டு எழுந்து வரலாயிற்று. சிவாஜியின்மீது சீறி வந்த மௌஸம் வழிநடுவே தாங்கொணுத் தாகவிடாய் கொள்ளலும், அத் தருணம் ஏழை ஒருவன் பரிமளம் நிரம்பிய தயிர் தந்து மறைந்துபோய் விட்டான். அத் தயிரைப் பருகியதும், சட்டியிலே குழலொன்றில் நிருபம் ஒன்று காணப்பட்டது. இளவரசன் அதனைப் பிரித்துப் பார்க்க, "இளங்கோவே! என்

ளோடு அமராட ஆரவாரத்தோடு கிளம்பிவரும் நின்னையும நினது முகவிலாசத்தையும் படைவலியையும் என் கண் கொண்டு காணவே இச் சூழ்ச்சி புரிந்தேன். தயிர்ப்பானை தந்து சென்றவன் மகாராஷ்டிரத்துக்கு மகிமையூட்டும் வீர சிவாஜியே,'' என்று அதனுள் எழுதியிருந்தது.

இத்தகைய தந்திரமும் திறமையும் படைத்த தரணி பாலனுடன் சமர் புரிந்து வாகை சூடுவது எங்ஙனம் என்று திகைத்த மொகலாய இளவரசன், தனது துணைவன் யசோவந்தன்மூலம் சிவாஜியுடன் சமாதானம் பேசினன். வலுவில் வருவதை ஏற்றுக்கொண்டு, மற்றதற்கு உற்றபோது பார்த்துக்கொள்ளலாமென எண்ணிய சிவாஜியும் அச் சமாதானத்திற்கு இசைந்தான். அதன் முடிவாகச் சிம்மகோட்டை, புரந்தரம் ஆகிய இரண்டும் நீங்கலாக, ஏனைய கோட்டைகள் அனைத்தையும் சிவாஜியிடம் ஒப்படைக்கவும், விஜயபுரியின்மீது சிவாஜி தண்டெடுத்துச் செல்லின் அதற்கு மொகலாயர் இடையூறு புரிவதில்லை எனவும், மௌஸம் வாக்குறுதி தந்தான். இந்த உடன்படிக்கையை உறுதி செய்யவேண்டுமென்று தனது தந்தைக்குத் தூதுவிடுத்தான் அவ் விளங்கோ. தந்தையைக் கொன்று தான் பட்டமேறியதுபோல், தநயனும் சிவாஜியின் உதவிகொண்டு சதிசெய்வனோ என்று அச்சங்கொண்ட அவுரங்கசீபு, அந்த உடன்படிக்கையை உறுதிப்படுத்தியது மன்றிச் சிவாஜிக்கு இராஜா என்ற பட்டமும் உயர்ந்த சால்வை ஒரு ஜோடியும் வழங்கினன்.

அதன் பின், சிவாஜி தக்காணத்திலே தான் வகுத்து வரும் தனியரசினுக்கு விஜயபுரியும் கோவலகுண்டமும், தடைகல்லாய் நிற்குமென நினைந்து, முதலில் விஜயபுரி

யின்மீது படைகொண்டு பாய்தலும், ஆண்டுதோறும் ஏழு லட்சம் ரூபா இறை செலுத்துவதாக வாக்களித்து அவ்விர வேந்தனுக்கு விஜயபுரி பணியலாயிற்று. பின்னர் கோவலகுண்டத்தின்மீது சிவாஜி கொதித்தெழ, அவ்வரசும் வேறுவகை காணாமல் விஜயபுரியைப் பின்பற்றி வருடந்தோறும் ஐந்து லட்சம் ரூபா கப்பங்கட்டி வாழ ஒப்புக்கொண்டது. தக்காணத்தின் ஈரரசுகளும் அவ்வாறு அடங்கி இணங்கி விடவே, சிவாஜி சிறிது காலம் கவலையின்றித் தனது அரசின் ஆக்கவேலையில் ஊக்கம்செலுத்தி உயர்வுகொள்ளக் கருதினன்.

தக்காணத்து முகம்மதிய அரசுகளை அடக்கி ஆண்மை பெற்று வாழ்கின்ற சிவாஜியின்மீது அடங்கா ஆத்திரம் கொண்டான் அவுரங்கசிபு. ஆதலின் அவனை வதைப்பதற்கான காலத்தையும் அப்பாதுஷா நோக்கிக் காத்திருந்தான். வீரனான சிவாஜியும் மொகலாயரின் வசமாயுள்ள புரந்தரம், சிம்மகோட்டை ஆகிய இரண்டையும் மீட்க விரும்பி, இடம் பொருள் ஏவலை எய்தக் கருதியிருந்தான். அந்நிலையில் ஒரு தினம் தேவி ஜீஜாபாய் பிரதாபகிரியின் மீதிருந்தவண்ணம் வானவெளியை நோக்கா நிற்கையில், கதிரவனது கிரணவொளியால் சிம்மகோட்டை சிறந்து விளங்குவதைக் கண்டு, தனது வீர மைந்தனை வரவழைத்து, "மகனே! மூன்று தினத்தில் சிம்மகோட்டையை மீட்டுத்தரல் வேண்டும்," என்றனள். உடனே சிவாஜி தனக்கு இளமை முதல் நட்பாளனான தானாஜிக்கு ஓர் ஆள் விடுத்தான். தனது மைந்தனுக்குரிய மணவினையில் முனைந்திருந்த தானாஜி, அதுகேட்டு மணவினையை நிறுத்திவிட்டு அக்கணமே புறப்பட்டு வழி

யிலே தோன்றிய அபசகுனத்தையும் பொருட்படுத்தாமல் இராஜகோட்டையைச் சேர்ந்தனன். "சிம்மகோட்டையை மீட்கவல்ல சிங்கம் நீயே!" என்று சிவாஜி கூறலும், தானாஜி தனது துணைவர் சிலருடன் கணப்பொழுதில் அக்கோட்டையைக் குறுகினன்.

அக்கோட்டையின் உளவறிய அவன் மாறுவேடம் பூண்டு பகைவரின் அணிவரிசையை நெருங்கவே, மொகலாய வீரர் சந்தேகங்கொண்டு அவனைச் சிறை செய்தனர். தானாஜி அவர்களை நோக்கி, "வீரர்காள்! யான் அயல் கிராமத்தலைவன். கானகத்தே வேங்கை ஒன்று சீறிவர, அதற்கஞ்சி இவண் சரண் புகுந்தேன்," என்று தந்திரமாகக் கூறித் தன் பைதனிலிருந்த அபினும் தாம்பூலமும் எடுத்து அவர்களுக்கு வழங்கினன். பகைவர் அவ்வுரையை நம்பி அவனைச் சிறை விடுத்தனர். திரும்புகையில், அக்கோட்டையின் உளவனைத்தையும் தானாஜி ஊடுருவி உணர்ந்து கொண்டனன். மறுதினம் இரவிலே முந்நூறு வீரருடன் தானாஜி அக்கோட்டையின் வடபாரிசம் சேர்ந்து, பழகிய உடும்பொன்றை மதிலின்மீது ஏற விடுத்தான். உடும்போ சிறிது தூரம் மேலே சென்றதும், தொப்பென்று தரையில் விழுந்தது. அதுகண்டும் தானாஜி தயங்காது, உடும்பை உறுத்துநோக்கி அதட்டி மீண்டும் அதனை விடுக்க, அது மதிலின் உச்சியை அடைந்து இறுகப் பற்றிக்கொண்டது. அதன் உடலில் கட்டப்பட்டுக் கீழே தொங்கிய நூலேணியின் வழியாக முதலில் தானாஜி ஏறலானன். அவனைத் தொடர்ந்து ஐம்பதின்மர், தம் உடைவாளை வாயில் கௌவிக்கொண்டு ஒருவர் பின் ஒருவராக ஏறலுற்றனர். பின்பு ஏனையோரும் கூட்டமாக

ஏறவே, நூலேணி அறுந்து போயிற்று. அதுகண்ட தானாஜி முதலில் சற்றே திகைத்து, அப்பால் முன் வைத்தகாலைப் பின்வைத்தல் ஆண்மையன்று என்று துணிவு கொண்டு, அந்த ஐம்பது வீரருடன் கோட்டைக் குள் புகுந்து ஆங்குள்ள படைஞருடன் அருஞ்சமர் ஆற்றி வீரம் விளைக்கலானான்.

மது வெறியில் மூழ்கி இன்ப நுகர்ச்சியில் ஆழ்ந்து கிடந்த அக்கோட்டையின் காவலனான உதயபாணன், பர பரப்புக் கொள்ளாமல் தனது யானையை மட்டும் ஏவினன். அந்த மதகரியும் மாவுத்தனும் மாவலவீரரின் வாளுக்கு இரையானமை கண்டு, உதயபாணன் போருக்கு எழுந் தான். சுருங்கச் சொல்லின், இருபக்கத்துத் தலைவரும் நீண்டநேரம் வாளமர் புரிந்து ஆவியிழந்து நிலத்தில் சாய்ந் தனர். உடனே கோட்டைக் குள்ளிருந்த வீரர் அனைவரும் திரண்டு வந்து மாவல வீரரை மாய்த்து நின்றனர். அத் தருணம் தானாஜியின் தம்பியான சூரியாஜி என்பான், அக்கோட்டையின் கதவுகளைப் பிளந்து எறிந்து உள்ளே புகுந்து சிங்கநாதம் செய்தான். அதிகாலையிலே அக் கோட்டையின்மீது பிறைக்கொடி தாழ்ந்து சிவாஜியின் வெற்றிக்கொடி பறக்கலாயிற்று. அஃதறிந்த சிவாஜி தனது துணைவருடன் அக்கோட்டைக்குள் புகுந்து வெற்றி முரசு கொட்டினான். தானாஜியின் மரணங் கேட்டு, "அந்தோ கோட்டை வசமாயிற்று. ஆயினும் சிம்மம் தவறிவிட்டதே!" என்று சிவாஜி கொண்ட துயரம் கூறுந்தரமன்று. பின்பு சிவாஜி அப்போரில் வீரங்காட்டிய பலருக்கும் ஏற்ற பரிசு வழங்கி, சூரியாஜியை அக்கோட்டையின் தலைவனாக்கி, வெற்றியின் நிகழ்வை அன்னைக்கு உரைத்து ஆசி பெற்ற

னன். அப்பால் இராஜா சிவாஜி ஒரு படையுடன் சென்று மேற்குக் கடலோரத்திலுள்ள மொகலாயரின் துறைமுகக் கோட்டையான ஜான்ஜிராவை வலியழித்து, அதன் தலைவனை பதிகானையும் வாட்டிக் கப்பங்கட்டச் செய்தனன்.

அதன் பின், பிரபல வர்த்தக ஸ்தலமான சூரத்நகரையும் கொள்ளையாட, ஆங்கிருந்த ஆங்கில வணிகரும் பிரஞ்சு வர்த்தகரும் கப்பம் தருவதாகக் கூறிச் சிவாஜியை நயந்து கொண்டனர். அக்கொள்ளையில் கிடைத்த அளவிறந்த பொருள்களை ஒட்டையின்மீதும் குதிரையின்மீதும் ஏற்றிக் கொண்டு சிவாஜி தன் நகருக்குத் திரும்புகையில், மொகலாயப் படையொன்று தோன்றி வழிமறித்தது. கொள்ளைப்பொருளைக் காக்க விரும்பிய சிவாஜி, அப்படைக்கு ஒரு பக்கம் போக்குக்காட்டி, வேறு ஒருவழியே பொருளை அனுப்பலானான்; தானே அப்படையை முறியடித்துச் செல்லுகையில், மொகலாயருக்கு உட்பட்ட ஒரு குறுநாட்டின் தேவியான இரவிபாஹினி எனும் மாது, அவுரங்கசிபின் ஆணைபெற்று அவ் வீரவேந்தனைக் குறுக்கிட்டனள். நான்கு பக்கமும் சிவாஜியின் சேனை வந்து வளைந்து கொள்ளவே, அம்மாது சரணாகதி செய்ய நேரிட்டது. சுத்தவீரம் படைத்த சிவாஜி அம்மாதின் மனவலிகண்டு மகிழ்ந்து, மணியும் பொன்னும் கொடுத்து அவளுக்கு ஓர் ஊனமு மின்றி ஊருக்கு அனுப்பிவிட்டனன்.

சூரத் நகரிலிருந்து வெற்றியுடன் திரும்பிய பின்னர், தனது படைத்தலைவரில் பலரையும் மொகலாயரின் நாடுகளின் மீது படைகொண்டு செல்லுமாறு சிவாஜி ஏவலானான். அவ்வாறே தலைவர்கள் புறப்பட்டுக் கான்தேசம், பீரார் முதலிய நாடுகளில் புகுந்து, பல நகரங்களைக் கைப்

பற்றி ஏராளமான கொள்ளையும் கொண்டனர். சிவாஜியினது ஆணைக்கிணங்கி அத் தலைவர்கள் பாதரையும் வறியவரையும் சிறிதும் துன்புறுத்தவில்லை. இவ்வாறு தனது தோழர் மொகலாயரது நாடுகளைச் சீர்குலைத்து வருகையில், வேந்தன் சிவாஜியும் ஒரு படையுடன் சென்று சாலேரி என்னும் கோட்டையை வசம் செய்தனன்.

மகாராஷ்டிரவீரர் அங்ஙனம் எங்கும் புகுந்து வெற்றி முரசு கொட்டுவதைக் கேள்வியுற்ற அவுரங்கசீபு மனம் பொறாமி, புயவலி பெரிதும் படைத்த முகபத்கானையும் டிலவர்கானையும் பெருஞ்சேனையுடன் சிவாஜியின்மீது ஏவினான். முகபத்கானோ முதலில் இராஜபுத்திரனாக இருந்து அப்பால் மதங்கெட்டு முகம்மதியனாக மாறிய மகாவீரன்; அக்பர், ஷாஜஹான், இவர்களுக்கு முன்னம் துணையாக இருந்து, எங்கும் மொகலாயருக்கு மேம்பாடு தேடித்தந்தவன். அத்தகைய வீர புருஷனுடன் மொய்யமர் புரிய மகாராஷ்டிர மன்னவன் சிறிதும் பின்வாங்கவில்லை. இருவருக்கும் இணையிலாக் கொடும்போர் நிகழ்ந்தது. மொகலாயப் படையின் பெருக்கையும் பெருமிதத்தையும் கண்டு, மகாராஷ்டிரரிலே சிலர், போரின் விளைவு யாதாகுமோ என்று நடுக்கமுற்றனர். ஆயினும் விஜயலக்ஷ்மி சிவாஜியைக் கடைக்கணிக்கவே, மொகலாயப்படை முறிந்து முதுகுகாட்டி ஓட நேர்ந்தது. அப்போரிலே கணக்கற்ற தளவாடங்களும் நூற்றுக்கணக்கான கரிபரிகளும் சிவாஜியின் கையில் சிக்கின. மொகலாயவீரரிலே பலர் சிவாஜியினிடம் சிறைப்பட்டனர். காயமுண்ட பகைவர் அனைவரையும் சிவாஜி ஏற்ற மரியாதையுடன் இராஜகோட்டைக்கு அனுப்பி, அவர்களது புண்களை ஆற்றி அன்புகாட்டி அனை

வரையும் டில்லிக்கு விடுத்தான். சிவாஜியின் பெருந் தன்மை கண்டுகளித்த மொகலாயவீரரில் சிலர், சிவாஜியின் சேனையில் சேர்ந்து சேவிக்கலாயினர். சாலேரிச் சண்டையில் சீரழிந்து முறிப்பட்டதுபோல், அதுவரையில் மொகலாயர் எங்கும் எக்காலத்தும் அவதியுற்றதில்லை.

இப்போரினால் மொகலாய வல்லரசின் வலிமை குன்றியது; மகாராஷ்டிரரின் வீரப் பிரதாபம் எங்கும் உயர்ந்து பரவிற்று. டில்லி அரசிலும் தக்காண முகம்மதிய இராஜ்யங்களிலும் சேவித்து வாழ்ந்துவந்த மகாராஷ்டிரப் பெருமக்களில் பலரும் அன்றுமுதல் சிவாஜியிடம் சேவிக்க ஆவல்கொண்டு வந்து குவிந்தனர். முகபத்கானது தோல்வி கேட்ட பாதுஷா துடிப்பும் துயரமும் மிகுந்து வாட்டமுற்றனன்.

## 13. சிவாஜியின் பட்டாபிஷேகம்

முனைமுகத்திலே தனது பெருஞ்சேனை முறிபட்டது கேட்ட டில்லி பாதுஷா, 'இனி சிவாஜியைச் சிதைத்தல் இயலாத காரியம்' எனக் கருதி வீறிழந்து சோர்ந்து கிடக்கலானன். தக்காண முகம்மதிய வரசுகளோ, முன்னதாகவே சிவாஜியின் பெருமிதவெற்றி கண்டு, அவனுக்கு ஆண்டுதோறும் கப்பங்கட்டி வாழ ஒருப்படாநின்றன. மேலும் அவ் வல்லரசின் தாழ்வுகண்டதும் தக்காண வரசுகளுக்கு மகாராஷ்டிர மன்னவனிடம் பயமும் பணிவும் பெருகிவரத் தலைப்பட்டன. எனவே முகம்மதிய மன்னவரைக் கண்டு இனி எவ்வகையிலும் பரபரப்புக்கொள்ள சிவாஜிக்கு இடமில்லை. மேலும் அவ்வரசுகளில் சேவித்துநின்ற மகா

ராஷ்டிரப் பெருமக்களில் பலரும், சிவாஜியின் சீரியபிரதாபங் கண்டு அயலரசைக் கைவிடுத்து, மகாராஷ்டிர சுயவரசில் சேவகம் புரியப் புதிய உணர்ச்சியும் அபிமானமும் கொண்டு, சிவாஜியின் ஏவல் கேட்க வந்து குவியலாயினர். இந்நிலையில் சிவாஜி வேதவிதிப்படி முடிசூடி அரியணையில் அமர ஆர்வங்கொண்டனன்.

சிவாஜி தனது தந்தை மரித்தகாலந் தொட்டு 'இராஜா' என்ற பட்டஞ் சூடித் தனது பெயரால் நாணயமும் அச்சடித்து வாழ்ந்து வந்தனனென முன்பே சொல்லியுள்ளோம். அவுரங்கசீபும் சிவாஜிக்கு 'இராஜா' என்ற பட்டம் வழங்கியதும் பிரசித்தம். பகையரசுகள் பரிந்தோ பயந்தோ அளித்த பட்டம் பயன்படாது என்பதே சிவாஜியின் கருத்து. மக்கள் மன மொப்பிப் பட்டந் தர, வைதிக மார்க்கத்திற்கு இணங்க முடிசூடிக் கொள்ளுதலே சாலச் சிறந்ததாகு மென்பது சிவாஜியின் தீர்மானம். அந்நாளில் முகம்மதியவரசுகளிடம் சேவைசெய்தும், தனிக்காட்டரசுகளாகத் திரிந்தும் நின்ற மகாராஷ்டிரப் பெருமக்களனைவரையும் ஒருங்கே திரட்டி உயரிய மகாராஷ்டிர ஆதிபத்தியத்தை நிலைநாட்டுவதற்கு, முடிசூடி மேம்படுதல் ஒரு வகையில் அவசியமாயிற்று. சுதேச வல்லரசொன்று உளதாயின் மாத்திரமே, மகாராஷ்டிர மக்கள் அனைவரும் சாதி, சமய, தேசாபிமானங் கொண்டு தலைசிறக்க வகை ஏற்படும் என்பது அவனது துணிபு. இக் கருத்துப் பற்றியே பதினாறுவது பிராயந்தொட்டு முப்பது வருடகாலம் அவ் வீரபுருஷன் முனைந்துழைத்தான். கடைசியாக ஷாஜியைக்கண்ட காலையில் தந்தையினிடம் நாட்டை ஒப்படைத்து, அத்தகைய அரசை நிலைநாட்டி ஆண்மை

யுடன் வாழவும் அவன் விரும்பிய துண்டு. தந்தையோ அந்நாளில் அதற்கு இசையாது போகவே, இந்நாள் தானே அரசனாக முடிசூட சிவாஜி விரும்பினன். தந்தை காலகதி யான காலம் முதல், இது வரையில் பெரும் போராட்டங்களில் மூழ்கிக் கிடந்ததால், பட்டாபிஷேக முயற்சியில் முனையச் சிவாஜிக்கு அவகாசம் கிடைக்கவில்லை. தனது தேசமெங்கும் அமைதி நிலைத்தவுடனே, அவன் பட்டாபிஷேகத்தில் கவனஞ் செலுத்தினன்.

இக்கருத்தினை நன்கு வலியுறுத்த அரிய சம்பவம் ஒன்றும் நிகழலாயிற்று. ஒருநாள் சிவாஜி பெரு விருந்தொன்று நடத்தினன். மகாராஷ்டிரப் பெருமக்கள், தளகர்த்தர், படைவீரர், பாளையக்காரர் முதலிய அனைவரும் அவ் விருந்தினுக்கு அழைக்கப் பெற்றனர். விருந்து மண்டபத்திலே சிவாஜிக்கு நடு நாயகமான ஆசனமொன்று அமைக்கப்பட்டிருந்தது. மகாராஷ்டிரரிலே பரம்பரைப் பெருமக்களும் பிரபுக்களுமான மோகதர், மகாதிகர், நிம்பல்கர், யாதவர், சவந்தர் முதலியோரில் சிலர் அவ்வுயரிய ஆசனங்கண்டு பொறாமை கொண்டனர். "மகாராஷ்டிரத்திலே சிவாஜியே சிரியபுருஷனாகி விட்டனனன்றோ? நாங்கள் அனைவரும் அநாமதேயர்கள்போலும்! பரம்பரையாகப் பெருமக்களாகி, சத்திரம், சாமரம், முரசம் முதலிய அரசசின்னங்கள் கொண்டு குலவும் யாம் அனைவரும், இச் சிவாஜிக்குத் தாழ்ந்த விடத்தில் அமர்ந்து விருந்துண்ண ஒருநாளும் உடன்படோம். இதனினும், விருந்துண்ணாது வெளிச் செல்லுதலே மேலாகும்," என்று அன்னார் முணுமுணுத்தனர். சிவாஜியின் தோழர் அப்பிரபுக்களைச் சாந்தப்படுத்திப் பார்த்தும் பயனில்லை. சிவாஜி அஃதறிந்து

அவர்களை நேரில் வருவித்து வினவ, "வீர! முகம்மதிய சுல் தான்களிடம் நாங்கள் ஐந்தாறு நூற்றாண்டுகளாக அரும் பதவி வகித்து வந்துளோம். நினக்குத் தாழ்வான நிலைக்கு ஒருப்பட எங்களால் இயலாது. பின்னர் நினது சித்தம்," என்று அப்பிரபுக்கள் பேசினர். சிவாஜி, "பிரபுக்களே! உங்கள் குடும்ப மதிப்பைக் குலைக்க எனக்கு எண்ணமில்லை. எனினும், உங்கள் குலத்தினரிலே பலர் என்னிடம் சேனை யிலும் அரசிலும் சேவை செய்வதை நீங்கள் மறத்தல் ஒண்ணாது," என்று பணிவாகப் பகர்ந்தனன். பிரபுக்கள் பிடிவாதமாகவே இருந்தனர். அதுகண்ட சிவாஜி, "அங்ஙனமாயின் நீங்கள் விடைபெற்றுக் கொள்ளலாம். இதோ தாம்பூலம் உளது" என்றனன்.

இந்நிகழ்ச்சி சிவாஜியின் மனத்தை யலைக்கத் தொடங் கியது. ஒருநாள் கனவிலே அம்மை பவானி தோன்றி, "மைந்த! வாட்டமேன்? சமயமும், சாதியும் சிறப்புறச் சமர் புரிந்து வாகை சூடியுள்ள நீ முடிசூடி மகிழ்தல் திண் ணம். உன்னையன்றி அரியணையில் அமரத் தக்கோர் யாவர்? நீ சிறிதும் அஞ்சற்க," என்றருளிச் சென்றனள். உடனே அவன் தனதன்னை ஜீஜாபாயை அடைந்து, தனது ஆவலையும் கருத்தையும் கண்ட கனவினையும் அறிவித்த னன். அத்தேவி, "அங்ஙனமே ஆகுக," என்று ஆசிகூறி னள். தனது குரு இராமதாஸ் ஸ்வாமிக்கும் தூது விடுத்து வேண்ட, அவரும் அருள் மொழி சுரந்தார். ஏனைய பெரி யோரையும் வரவழைத்துக் கலந்து பேசியபின் சிவாஜி பெருஞ்சபையொன்று கூட்டினன். வேத பாரகரும், சாஸ்திர வல்லுநரும், வேதிய திலகங்களும் அச்சபைக்கு அழைக்கப்பெற்றனர். தனது அரசிலுள்ள பெருமக்களை

யும் சேனைத்தலைவர்களையும் அன்பரையும் அமைச்சரையும் சிவாஜி அழைத்தனன். அப் பெருஞ் சபையின் முன்னே தனது கருத்தை அவ்வீரன் உணர்த்தலும், அனைவரும் வேதசாஸ்திர விதிகளுக்கிணங்கப் பட்டாபிஷேகம் நடத்தலே தகுதியென்று ஒருமுகமாக மொழிந்தனர்.

அங்ஙனமே வேதசாஸ்திர விதிகள் ஆராயப்பட்டன. பிரமோபதேசம் பெற்ற இரு பிறப்பாளரே விதிப்படி முடிசூடலாமெனப் புலப்பட்டது. பிரமோபதேசம் பெறாமல் மணம்புரிந்து மக்களையும் பெற்றெடுத்து நாற்பத்தாறு வயதுகொண்ட சிவாஜி எங்ஙனம் பட்டாபிஷேகம் செய்து கொள்வது என்று பலரும் ஏக்கங்கொண்டு கலங்கினர். அத்தருணம் பாலாஜி தோன்றி, "அரசே! வீண்சிந்தனை யேன்? வடதேசத்திலே நாலுவேதமும் ஆறுசாஸ்திரமும் வல்ல கங்கபட்டர் என்னும் வேதியர் திலகம் இருக்கிறார். அவரை நான்முகனது அவதாரமெனவும், வியாசரது மறுபிறப்பென்றும் பலரும் புகழ்வர். அவரது வாக்கினுக்கு எதிர்வாக்கு இராது. சாஸ்திர சம்பந்தமான சிக்கலான விஷயங்களில் அவரது தீர்ப்பையே பாரத வேதிய உலகம் அங்கீகரிக்கும். ஆதலின் அம் மகானை வருவித்து வினவுக; அவர் இதற்கு ஒரு வழி உரைப்பார்," என்றனன். அக்கணமே சிவாஜி அப்பெரியார்க்குப் பொன்னும் பரியும் காணிக்கையாக அனுப்பினான். வேதவித்தான கங்கபட்டர் தட்டாது வந்து சேர்ந்தார். சிவாஜி தனது பரிவாரங்களுடன் சென்று அவரை எதிர்கொண்டனன். உடனே பெரும் பண்டித சபை கூட்டப்பட்டது. சிவாஜியின் வம்சாவளியையும் வீரவாழ்வையும் உயர் நெறியையும் கங்கபட்டர் ஊடுருவி

நோக்கி, அச்சபையினரைப் பார்த்து,"வேதவித்துக்காள்! இஸ்லாமியரின் படையெடுப்பினாலும் அந்நிய ஆட்சியினாலும் பாரத தேசத்தில் சுதந்திர தர்மம் குன்றிவிட்டது. எங்குப் பார்த்தாலும் அயலாரே அரியணையில் அமர்ந்துளர். சூரிய சந்திர இராஜகுல ஒளியே காணப்படவில்லை. யாக யக்ஞங்கள் நின்றுவிட்டன. நமது ஆசார அனுஷ்டானங்கள் குன்றி வருகின்றன. ஆரிய தர்மம் தத்தளிக்கின்றது. நான்மறையும் மறைபட்டுக் கிடக்கின்றன. பேராலயங்கள் பிரகாசமின்றி மங்கிக் கிடக்கின்றன. இந்நிலையிலே, சிவாஜி வீராவேசங்கொண்டு கிளம்பி, நூறாயிரம் வீரர் அடங்கிய பெருஞ்சேனை திரட்டி, எண்ணிறந்த கோட்டை கொத்தளங்களைக் கட்டி, டில்லி பாதுஷாவான அவுரங்கசீப்பை மடக்கி, எடுப்பான சுயவரசும் கண்டுளான். நமது சமயத்தையும் சமூகத்தையும் காக்க, அவன் பட்டபாடு அருமையினும் அருமை! அத்தகைய வீரபுருஷன், வேந்தனாகப் பட்டாபிஷேகங் கொள்ள எவ்வகையாலும் தகுதி உள்ளவன் என்பதில் யாது தடை? ஒற்றை வெண்கொற்றக் குடையும் உயர்சாமரமும் ஒங்கும் விதானமும் தாங்கி, அழகிய அரியணையில் சிவாஜியை அமர்த்தலே மகாராஷ்டிரத்தின் மகிமையாகும். வீர சிவாஜி இராஜபுதனத்திலுள்ள உதயபுரி நாட்டின் அரசகுல வழித்தோன்றல் என்பதை யாவரே அறியார்? உதயபுரியிலும் ஜயபுரியிலும் இராஜபுத்திர வேந்தர்கள் முடிசூடும் முன்னரே பிரமோபதேசம் பெற்றுப் பூணூல் தரிப்பது வழக்கம். வேதசாஸ்திரம் அதற்கு இடந்தரா நிற்கின்றது," என்று கூறினர். அச்சொல் கேட்டு அனைவரும் அகமகிழ்ந்து சம்மதி தந்தனர்; சிவாஜியும் மகிழ் பூத்தனன்.

அங்ஙனமே மகுடாபிஷேகத்துக்குரிய ஏற்பாடுகள் ஆயத்தமாயின. ஜோதிடர், நாளும் கோளும் பார்த்து, 1674-ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆறுந்தேதி நாள் குறித்தனர். மகாராஷ்டிரத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் அழைப்புக் கடிதங்கள் போயின. இராஜகோட்டையிலேயே முடி சூட்டுவதாகத் தீர்மானமாயிற்று. ஆயிரக் கணக்கான மக்கள் நிரம்பி நிற்கும் வண்ணம், அத்தாணி மண்டபமொன்று அழகாகச் சமைக்கப்பட்டது. அரண்மனைச் சுவர்கள் அனைத்திலும் விசித்திரமான சித்திரங்கள் விளங்கலாயின. வைதிக முறைக்கு இணங்க, குற்றம் நீங்கிய நவமணிகள் இழைத்த அரியணையொன்று அமைக்கப் பெற்றது. பெருமக்களும், பிரபுக்களும், போர்வீரரும், படைத்தலைவர்களும், வேதியர்களும், வித்தகரும் வதிவதற்கான மாளிகைகளும் கூடாரங்களும் நகரைச் சுற்றி எங்கும் எழும்பின.

பட்டாபிஷேக வைபவம் தொடங்குவதற்கு இரு தினங்களுக்கு முன்னமே வீரசிவாஜி பிரமோபதேசம் பெற்றுப் பூணூல் தரித்தனன். பட்டாபிஷேக தினத்தை எதிர்நோக்கி, சிவாஜியும், அவனது அமைச்சரும், பட்டாபிஷேகச் சடங்கை நடத்தும் வேதியரும் விரதமிருந்தனர். அபிஷேக தினத்திலே ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் தத்தம் பதவியில் அமர்த்தப்பட்டனர். சிவாஜியுள்பட அனைவரும் தூயநீராடி, வெள்ளிய ஆடை தரித்து, பஞ்சாமிர்தம் பருகிப் பாங்காகப் புறப்பட்டனர். ஒரு சிறிய மணையிலே சிவாஜி அமர, அவனருகிலே பட்டமகிஷி சூரியாபாயும் இளவரசன் சாம்பாஜியும் இனிதமர்ந்தனர். அஷ்டதிக்குப் பாலகர்களைப்போல

அமைச்சர் எண்மரும் சூழ நின்றனர். அமைச்சருக்குப் பின்னால் அதிகாரிகளும் பெருமக்களும் குழுமியிருந்தனர். பட்டாபிஷேக காலம் வந்ததும், துவாரங்கள் நிரம்பிய தங்கத்தட்டொன்றைச் சிவாஜியின் சிரத்தின்மீது வைத்து மந்திராபிஷேக நீரை வார்க்க, அமைச்சர் அனைவரும் தத்தம் கைகளில் இருந்த நெய், பால், தேன், முதலிய வற்றைச் சொரிந்தனர்; வேதியர் அனைவரும் மந்திர கீதம் பாடினர்; பதினெண் வாத்தியங்களும் முழங்கலா யின; பாணரும் மாகதரும் இசையொலி எழுப்பினர்; நடனமாதர் நிருத்தம் புரிந்தனர். உடனே சுமங்கலிகள் ஆலாத்தி யெடுத்தனர். நெய்ப் பாண்டத்திலும் நிலக்கண் ணாடியிலும் சிவாஜி தனது வடிவம் கண்டு, அவ்விடத்தை விட்டு எழுந்து முடி தரிக்க ஆயத்தமாயினன்.

அரியணையின் அடித்தளத்தில் வேதவிதிக் கிணங்க ஆலினாலும் அத்தியினாலும் ஆக்கிய பலகை பொருந்தி யிருந்தது. பொன் தகட்டினாலான பீடத்தின் நான்கு மூலைகளிலும் சிங்கம், புலி, பூனை, குள்ளநரி முதலிய விலங்குகளின் உருவங்கள் விளங்கின. மான் தோலும் புலித்தோலும் கொண்டு மெத்தை தைத்து, அதற்கிடையே பொன்காசுகள் பரப்பப்பட்டன. அதன்மேல் பீதாம்பர விரிப்பு விளங்க, மூன்று பக்கத்திலும் தங்கத் தகட்டி னால் அணைகள் ஆக்கப்பட்டன. அணையின் பின்புறத்தி லிருந்து வைரம் வைத்திழைத்த பொற்றாண் ஒன்று எழும் பியது. மேலே நவரத்தின மாலையுடன் கூடிய விதானம் விரிக்கப்பட்டிருந்தது. அத்தாணி மண்டபத்தின் முகப் பில் சுழிசுத்தமுடன் ஒரு யானையும் குதிரையும் அலங் கரிக்கப்பட்டிருந்தன. நல் ஓரை நெருங்கியதும், சிவாஜி

விநாயக பூஜைசெய்து கையிலே செங்கோலைத் தாங்கி அந்தணரை வணங்க, அவர்கள் வேதம் ஓதி ஆசிகூறினர். அப்பால், அன்னை ஜீஜாபாயும் அடங்காக் களிப்புடன் ஆசி மொழி புகன்றனள். சிவாஜி ஸிம்மாஸனத்தின் அருகே சென்று அதனை வணங்கி அழகாக அமர்ந்தனன். அரியணையின் எட்டுத் தம்பங்களின் அருகே அமைச்சர் எண்மரும் பயபக்தி விசுவாசத்துடன் நின்றனர். ஏனைய பெருமக்களும் பிரபுக்களும் அதிகாரிகளும் தத்தமக்குரிய இடத்தில் அமர்ந்தனர். கங்கபட்டர் முன்னவனைத் துதித்து மணிமுடியை எடுத்துச் சிவாஜிக்குச் சூட்டினார். உடனே வாத்தியங்கள் ஒலித்தன; இராஜகோட்டையின் பீரங்கிகள் ஆனந்த கர்ஜனை புரிய, அவ்வொலி கேட்டு மகாராஷ்டிரத்திலுள்ள ஒவ்வொரு கோட்டையும் குண்டுமழை பொழிந்து களித்தது. அரியணையில் அமர்ந்து முடிசூடியதும், அரசர்க்குரிய ஆயுதமனைத்தையும் சிவாஜி தாங்கி வெளியே வந்தனன். அனைவரும் பொன் வெள்ளிகளாலான மலர் கொண்டு அம் மன்னவன்மீது தூவி மனமகிழ்ந்தனர். வேதிய மாதரார் பதினறுபேர் ஆலாத்தி எடுத்து மங்களம் பாடினர். அவர்கள் எல்லோருக்கும் ஆடையும் பொன்னும் அளிக்கப்பட்டன. அப்பால் வேதியர் மந்திராட்சதை கொண்டு வாழ்த்தினர். அவர்களுக்கும் அளவிறந்த வெகுமதிகள் கிடைத்தன. கங்கபட்டருக்கு ஒருலட்சம் வராகன் தட்சிணையாகும். முடிசூடும் வேதவிதி புரிந்த பூசுரர், தலைக்கு ஐந்நூறு வராகன் பெற்றனர். ஏனைய வேதியர் ஒவ்வொருவரும் இருபத்தைந்து பூவராகன் பெற்றுக் களித்தனர். பக்கிரிகள், பைராகிகள், துறவிகள் முதலியோருக்கு வேண்டுமளவு தான தருமங்கள்

செய்யப்பட்டன. பின்னர், சிவாஜி துலாபார தானம் செய்தான். அமைச்சரும் படைத்தலைவரும் ஏனைய அதிகாரிகளும் பட்டம், பதவி, பிருது முதலியன பெற்றனர். அப்பால், சிவாஜி மன்னவன் வீதிவலம் வரப் புறப்பட்டனன். அவன் அத்தாணி மண்டபத்திலே பரிமீதேறி அரண்மனையின் நிலாமுற்றம் சேர்ந்ததும், அம்பாரி வைத்த ஆனைமீது அமர்ந்தான். அம்பாரியிலே சிவாஜிக்குப் பின்னுல் முதன் மந்திரி அமர்ந்து ஒற்றை வெண்கொற்றக் கொடை பிடித்தனன். ஏனைய அமைச்சர் ஒரொரு யானையின்மீது அமர்ந்து உடன் சென்றனர். சதுரங்கசேனையும் வரிசையாகத் தொடர்ந்து வந்தது.

அரசன் பவனி வரப்போவதை அறிந்து, நகர வீதிகள் வாழை, கமுகு, தோரணம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. தெருவின் இருபுறமும் மக்கள் நிரம்பி நின்று, "சிவாஜி மன்னவனுக்கு ஜே!" என்று ஆனந்த கோஷம் செய்தனர். ஆலயந்தோறும் சிவாஜி சென்று ஆண்டவனை வணங்கினன். திரும்பி வருகையில் வீதியிலே மாதர்கள் ஆலாத்தி எடுத்து மங்களம் பாடினர். அரண்மனை வாயிலைக் குறுகியதும் சிவாஜி தேர்மீதேறி நிலா முற்றம் சேர்ந்து, அங்கிருந்து பல்லக்கிலேறி அரண்மனைக்குள் புகுந்தனன். உடனே பெரியோர் தோன்றித் திருஷ்டி கழித்தனர். சிவாஜி அந்தப்புரம் சென்று முதலில் அன்னையை வணங்க, அத்தேவி ஈன்றபொழுதினும் பெரிதுவந்து வாழ்த்தினள். பின்னர் மன்னவன் அரசிகளைக் காண, அவர்கள் வந்து வணங்கிக் கனியும் மலரும் காணிக்கையாகச் செலுத்திக் களித்தனர். அதன்பின் சிவாஜி அரியணையில் அமர்ந்து கொலுவிருந்து, அனைவருக்கும் அத்தர், பன்னீர், தாம்பூலம்

வழங்கினன். முடிவில் அனைவருக்கும் அறுசுவை கலந்த உண்வு அளிக்கப்பட்டது. முடிசூடும் வைபவச் செலவு ஒன்றரைக் கோடி பூவராகன்.

சிம்மாசனம் ஏறிய நன்னாள் தொட்டு, அம்மன்னவன் பெயரால் சிவ சகம் என்ற சகாப்தம் ஆரம்பமாகி 109 ஆண்டு நிலைத்திருந்தது. அச் சமயம் அவன் க்ஷத்திரிய குல திலகன் ராஜா சிவாஜி சத்ரபதி எனும் பெரும்பெயர் சூடினன். இளமையிலே தனியரசு கண்டு முடிசூடவேண்டுமென்று அவன் கொண்ட எண்ணம் பூர்த்தியாகவே, அவ் வீரசிங்க சிவாஜி களிப்பெய்தினன்.

சிவாஜியின் பட்டாபிஷேகம் கேட்டு முகம்மதிய வரசுகள் முகம் வாடின. அவன் முடிசூடும் வரையில் பாளையக் காரனது மகன் எனவே அவ்வரசுகள் அவனை இலேசாக எண்ணிக்கிடந்தன. அவனை அடக்கிவிடின், தமது தொல்லைகள் எல்லாம் தொலையும் என்பதே அவைகளின் கருத்து. ஆயினும் பட்டாபிஷேக வைபவ சமாசாரம் எட்டிய உடனே, வடதேச இராஜபுத்திர வேந்தரும், தென் தேசத்திலே விபாபார நிமித்தம் வந்திருந்த ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர் முதலியோரும் சிவாஜியிடம் பெருமதிப்பு வைக்கலாயினர். டில்லி, விஜயபுரி, கோவலகுண்டம் ஆகிய முகம்மதிய வரசுகளும் சிவாஜி சத்திரபதியைக் கண்டு மதிப்புக் கொள்ளாமலிருக்க முடியவில்லை. அன்றுமுதல் அவன் பெயரைக் கேட்டவளவில், பகைவர்களுக்கு அச்சமும் மதிப்பும் ஒருங்கே உதித்தன என்பது திண்ணம்.

முடிசூடும் வைபவம் பூர்த்தியாகிப் பன்னிரண்டு தினமானதும் ஜீஜாபாய் நோய்கொண்டு ஆவிநீங்கினள். தவமிருந்து பெற்ற தனயன் தரணீபதியாயினன் என்ற களிப்

புடன் அத்தேவி கண்ணை மூடினள். இளவயதில் அவள், பாலுடன் ஊட்டிய கல்வியும் அறிவும் பெரும்பயன் தந்தன. அன்னையின் பிரிவால் சிவாஜிமன்னவன் அருந்துயருற்று ஒரு லட்சம் ரூபா செலவிட்டு அன்னைக்குரிய ஈமக்கடன்களை விதி வழுவாமல் செய்தனன். நான்குமாத காலம் வரையில் தாயைப் பிரிந்த சோகத்தால் அவன் அரியணையில் அமரவில்லை. அப்பால் நன் முகூர்த்தமொன்று பார்த்து அரியணை ஏறித் தர்பார் நடத்த எண்ணி, அவன் பிரதாப கோட்டை சென்று, அம்மை பவானியை வணங்கி, இராமதாஸ் சுவாமியைத் தரிசித்து, இராஜகோட்டை திரும்பினன். திரும்பியதும் நீதிமுறை பிறழாமல் நேர்மையுடன் யாவரிடமும் நேசங்காட்டி, இனிய சொல்லும் ஈகையும் தாங்கித் தூய்மையனாக நடந்துவந்ததனால், அனைவரும் அம் மன்னவனைக் கண்கண்ட தெய்வம் என்று கொண்டாடி வந்தனர். தாதாஜி கொண்டதேவன் காலகதியான பின்னர், அன்று வகுத்த சுயவரசையே பலவகையிலும் பெருக்கி, மக்களின் சுகபோக வாழ்விலேயே நாட்டங்கொண்டு, அரசியலை அவன் ஒழுங்குபடுத்திய உயர்வை உணர்ந்து சிவாஜியைப் போற்றாதார் இல்லை.

அரசியலை எட்டு உறுப்பாக வகுக்க, ஒரொரு உறுப்பினுக்கும் ஒரொருவர் அமைச்சராக நியமனம் பெற்றனர். அவ் எண்மரில் முதன்மந்திரி அல்லது முக்கியப் பிரதானி என்பான் அரசனுக்கு அடுத்தபடியாகி, அரசியல் துறையனைத்திினுக்கும் பொறுப்பாளி ஆயினன்.

முதன்மந்திரியை அடுத்து, அரும்பதம் பெற்ற அமைச்சன் சேனாபதி. சேனையின் பற்பல அங்கங்களும் அவனது அதிகாரத்துக்கு உட்பட்டன. மூன்றாவது அமைச்சன்

பொக்கிஷ மந்திரியாகி, அரசின் வரவு செலவனைத்தை யும் பார்த்து வந்தான். அரசின் கடிதப் போக்குவரத் தனைத்தையும் கவனித்துவர ஓர் அமைச்சனும், மன்னவ னது சொந்த நிருபங்களை மேற்பார்வை பார்க்க ஒரு மந் திரியும் நியமனம் பெற்றிருந்தனர். அயலரசுகளுடன் தொடர்போ வினையோகொள்ளும் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட அமைச்சன் சுமந்தன் எனும்பெயர்பெற்றனன். சமயத்தையும் சாஸ்திரத்தையும் காலதேச வர்த்தமானத் தைத் தழுவிப் பொருள்படுத்தி விளக்கிக் கூறும் பண்டித சாஸ்திரி எனும் அமைச்சனும், துலைக்கோல்போல் நடுநிலை தவறுமல் நீதிவழங்குவதைக் கண்காணித்துவரும் நியாய தீட்சிதன் எனும் அமைச்சனும் தத்தம் கடமையைச் சரி வர ஆற்றிவந்தனர். பொதுவில் அரசாங்கத்துக்குச் சாதக பாதகமான காரியங்களை அமைச்சர் எண்மரும் சிவாஜி யும் சேர்ந்து தீர ஆலோசித்த பின்னரே ஒரு முடிவுக்கு வருவர். செங்கோலுக்கு முன் சங்கீதமா என ஒருநாளும் சிவாஜி தருக்குக் கொண்டதில்லை; ஏகபோக அதிகாரம் செலுத்தியதும் கிடையாது. சிவாஜியின் அரசிலே கிராமந் தோறும் பெரியோர்கள் அடங்கிய பஞ்சாயத்து சபை ஏற்பட்டு, அவை குட்டிக் குடியரசுகள் போல் விளங்கி, கிராமநிர்வாகம் அனைத்தையும் கண்காணித்து வந்தன.

## 14. கர்நாடகப் படையெழுச்சி

சிவாஜி சிம்மாசனம் ஏறியது கேட்டும், தக்காணத்திலே மொகலாயவரசின் பிரதிநிதியான கான்ஜஹான் வாளா விருப்பதுகண்டும், அவுரங்கசீப் நெஞ்சம் புழுங்கிப் பதைபதைத்தனன். அதன் விளைவாக மொகலாய சேனைத் தலைவன் டிலவர்கான் சீற்றங்கொண்டு சிவாஜியின்மீது படைகொண்டு புறப்பட, மகாராஷ்டிரரின் முதன் மந்திரியான மௌரிபந்தன் அக்கணமே மொகலாயரின் நாடுகளில் புகுந்து பலநகரங்களைக் கைப்பற்றினன். சிவாஜியின் பிரதம சேனாபதியான ஹம்ஸாஜியும் நருமதை நதியைக் கடந்து மொகலாயரின் தேசங்களில் கொள்ளைகள் நடத்தவே, டிலவர்கான் தனது படைவகுப்புடன் பின்வாங்கிச் செல்ல நேர்ந்தது. டிலவர் திரும்பி யோடியதும், மௌரிபந்தன் போர்த்துகேசியரின்மீது பாய்ந்தனன். ஏனெனில், அப்போர்த்துகேசியர் தங்கள் எல்லைக்குள்ளிருந்த இந்துக்களில் பலரையும் பலவந்தமாக மதமாறச்செய்தும், அங்ஙனம் மதங்கெட மறுத்தோரின் உரிமைகளைப் பறித்தும், கொடுமை பல இழைத்து வந்தனர். சிவாஜியின் சேனையைக் கண்டதும் போர்த்துகேசியர் பதைபதைப்புற்றுச் சிவாஜிக்குக் காணிக்கை செலுத்தி முன்போல் அம்மன்னவனுக்கு அடங்கிவாழ ஒருப்பட்டனர்.

தனது படைத்தலைவரில் இருவர் அங்ஙனம் வீரம் விளைக்கா நிற்கையில், சிவாஜியும் ஒரு பெரும்படை கொண்டு கிளம்பினன். அப் படையெழுச்சியின் மர்மம் இன்னதென ஒருவரும் முதலில் அறியமுடியவில்லை. மகாராஷ்டிரச் சேனையின் ஆர்ப்பாட்டங் கண்டதும், ஜனோ

என்னுமிடத்திலே நாற்பதாயிரம் மொகலாயவீரர் திரண்டு நிற்கலாயினர். சேனையுடன் சென்ற சிவாஜி, மௌரிபந்தனுடன் கூடிக்கொண்டு மொகலாயரை எதிர்க்கவே, கடும் போர் மூண்டது. முடிவில் மொகலாயசேனை முறிபட்டு வெருண்டோடியதே யன்றி வெற்றிகொள்ளவில்லை. அப்போது பல பரிகளும் பொருள்களும் மகாராஷ்டிரரிடம் சிக்கிக் கொண்டன.

ஈதிங்ஙனமிருக்க, போந்தாக் கோட்டையின் முகம்மதியத் தலைவன் சிவாஜிக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி, விஜயபுரி அரசனிடம் மீண்டும் நட்புக்கொண்டு, மகாராஷ்டிர கிராமங்களைத் தாக்கி வரலானான். சிவாஜி உடனே சீறிச்சென்று, அக்கோட்டையைத் தகர்த்து வசஞ்செய்கையில் அம்முகம்மதியத் தலைவன் மாண்டு போகவே, சிவாஜியிடம் விசுவாசமாகச் சேவித்துவந்த இப்ரஹீம் கான் என்பான் அத்தலைமைப் பதவியில் நியமனம் பெற்றனன். அக்கோட்டை வீழ்ந்ததும், அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களும் சிவாஜிக்குச் சொந்தமாயின. அப்பால், கல்வார் கோட்டையை நோக்கி மகாராஷ்டிரர் சென்று அதனைத் தீக்கு இரையாக்கினர். இதற்கிடையில் ஹம்ஸாஜி கூர்ஜர தேசத்திலே பல மொகலாய நகரங்களைக் கொள்ளை கொண்டு பெரும் பொருளுடன் திரும்பினன். இவையனைத்தையும் கேள்வியுற்ற அவுரங்கசீப் ஆத்திரங்கொண்டு புழுங்கினனாயினும், விஜயபுரியரசுடன் போர் தொடுத்து விட்டதனால் சிவாஜியின்மீது படையனுப்ப அப்பாதுஷாவினால் ஆகவில்லை. அப்பால் கொஞ்சநாள் ஆனதும், சிவாஜி பெருநோய் கொண்டு ஒன்பது மாதகாலம் பெரிதும் வாடலாயினன். சென்ற முப்பதாண்டுகளாக

ஓயாமல் போர்முனையிலேயே காலங்கழித்துவந்த களைப்பி னால் சிவாஜியின் சரீரதிடம் சிறிது குன்றியது. அங்ஙனம் உடல்நோய்கொண்டு கிடந்தன னாயினும், சிவாஜியின் உள்ளமோ உரங்கொண்டே விளங்காநின்றது. அச்சமயத் தில், கர்நாடக திராவிட தேசங்களில் புகுந்து, இராமேசு வரம் வரையில் பல நாடுகளை ஜயித்துப் பிடிக்கவேண்டு மென்று அவன் ஆவல்கொண்டு, அதற்குரிய வகைகளையும் திட்டங்களையும் ஆராய்ந்து வந்தான்.

வடஇந்தியாவிலே மொகலாய வல்லரசும், தக்காணத் திலே விஜயபுரி, கோவலகுண்டம் ஆகிய இரண்டும், சிவா ஜியின் போர்த்திறத்தைக் கண்டு தலைநிமிர மாட்டாமல் மாழ்கிக் கிடந்தும், மகாராஷ்டிர இராஜ்யத்தை மாள்விக்க வேண்டும் என்ற உட்கருத்தைமட்டும் அவ்வரசுகள் விட்ட பாடில்லை. ஆயினும் சிவாஜிக்கோ தனது தாளாண்மை யும் வில்லாண்மையுங் கொண்டு இமயம்முதல் குமரிவரை யில் இந்தியவரசை வகுக்க வகை தேடவேண்டும் என்பதே சிறப்பான சிந்தனையாகும். அன்றியும் அம் முகம்மதிய வரசுகள் மூன்றும் மனமொருமித்துக் கைகோத்துத் தங்கள் கருத்தை முற்றுவிக்க முயலுமாயின், அக்காலத் தில் தென்தேசம் தனக்குப் பக்கபலமாக இருக்கவும், அல்லது வேறுவகையின்றேல் தென் கோடியிலேயே தனி யரசு கொள்ளவும் சிவாஜி மன்னவன் கருதி, இராமே சுவரம் வரையில் தண்டெடுத்துச் சென்று திக்கு விஜயம் செய்யத் தீர்மானம் கொண்டனன்.

நோய் தீர்ந்ததும், அந்நோக்குடன் சத்திரபதி சிவாஜி தென்தேசம் செல்ல வெண்ணவே, அவனது படை வகுப் புக்கள் அதற்கு ஆயத்தமாயின. தான் தென்தேசம் செல்

னும் சமயம்பார்த்து மகாராஷ்டிரத்தைத் தாக்கியழிக்க மொகலாயர் முனைவர் என்பதை வீரசிவாஜி உணராமலில்லை. 'பணம் பத்தும் செய்யுமாதலால்', சிவாஜியின் தூதனொருவன் பத்தாயிரம் பூவராகன் கொண்டு கான்ஜஹானைக் கண்டதும், அம்மொகலாயப் பிரதிநிதி ஆனந்தங்கொண்டு மகாராஷ்டிரத்துக்கு ஊறெதுவும் நேராதென உறுதிகூறி யனுப்பினன்.

காலகதியாகு முன்னர் இராஜா ஷாஜி கர்நாடக தேசத்தின் பல பாகங்களை வசஞ்செய்து விஜயபுரியின் ஆதரவில் வாழ்ந்துவந்த காலத்தில், பங்களூரே கருநாடகத்தின் தலைநகராக விளங்கியது. அப்பால் அவனது இரண்டாவது மைந்தன் வெங்காஜி அத்தேசத்தின் அதிபனாயினதும், தஞ்சை நகரம் தலைநகராயிற்று. இராஜா ஷாஜியிடம் அமைச்சுத் தொழில் புரிந்த இரகுநாத அனுமந்தன் வெங்காஜியிடமும் மந்திரியாகி அரசியலை நடத்திவந்தனன். துன்மந்திரிகள் சிலர் தலையெடுக்கவே, வெங்காஜிக்குச் சித்தம் திரும்பிவிட்டது. ஆதலின் வெங்காஜியே அரசியலைக் கைக்கொண்டு நேர்மையும் நெறியும் விடுத்து இன்ப நுகர்ச்சியில் மூழ்கிக் கிடத்தலும், அரசும் நாடும் அவதியுற்றன. அனுமந்தன் இடித்திடித்துக் கூறியும், வெங்காஜி செவி சாய்க்கவில்லை. சிவாஜி அச்செய்தி கேட்டு அன்பான கடிதமொன்று விடுத்து அறிவு புகட்டியும், அது விழலுக்கிறைத்த நீராயிற்று. முடிவில் வெங்காஜி உதாசினமாக வார்த்தை பேசி, அனுமந்தனை நாட்டைவிட்டு ஒட்டினன். எட்டிமரமாயினும் பயிர்பண்ணிய மரமாயின் பற்றுவிடாதன்றோ? அங்ஙனமே பாசமேலீட்டால், வெங்காஜியை நல்வழிக்குக் கொணருமாறு அனுமந்தன்

கருதி, நேரில் சிவாஜியிடம் வந்து அனைத்தையும் சொல்ல விரும்பி மகாராஷ்டிரத்தை நோக்கிப் புறப்பட்டனன்.

கர்நாடக, திராவிட தேசங்களில் தன்னரசைப் பரப்பச் சிவாஜி வேந்தன் சிந்தனை கொண்டிருத்தல் அனுமந்தனுக்குத் தெரியவந்தது. சிவாஜியின் சேனைகள் தெற்குதிசை நோக்கி வருவதாயின், கோவலகுண்டத்தின் வழியேதான் செல்லவேண்டும். ஆதலின் அதற்கு அடிப்படையான கருமம் புரிய அனுமந்தன் ஆசை கொண்டு, கோவலகுண்டத்தின் தலைநகரான பாகநகரம் (தற்காலம் ஹைதராபாத்) சேர்ந்தனன். அத்தருணம் அங்கே அக்கண்ணு, மத்தண்ணு, என்னும் இருவேதியர் மந்திரித்தொழில் பார்த்துவந்தனர். இருவரும் மகா பண்டிதர்; பெரும் புத்திமான்கள். ஆன்ற அறிவு படைத்த அனுமந்தன் பெரும் பண்டிதனைப்போல் வேடம்பூண்டு அம் மந்திரிமாரைச் சந்தித்தனன். பண்டிதரைக் கண்டால் பெருஞ்சபைகூட்டி வாதம்புரிந்து வல்லமை உணர்தல் அவ்விரு அமைச்சரின் இனிய பொழுது போக்காகும். அங்ஙனமே பண்டித சபை கூடியது. சைவம் பெரிதா, வைணவம் பெரிதா என்ற கேள்வி பிறக்கவே, தன் மதமான வைணவமே சாலவும் சிறந்ததென அனுமந்தன் அதியற்புதமாக விவாதம் செய்தனன். அதுகேட்டு அனைவரும் அப்பண்டிதனது பெரும் புலமைகண்டு புகழ்ந்தனர். உடனே அனுமந்தன், சைவமே உயர்வுடைத்து என்று தர்க்கம் புரிந்து, தக்க மேற்கோள் காட்டித் தனது புலமையின் திண்மையைப் புலப்படுத்தினன். மந்திரிமார் இருவரும் மகிழ் பூத்து அனுமந்தனுக்குப் பூமியும் பொன்னும் பரிசளிக்கப் புகுந்தனர். அதுபோது தனிமையில்

பேச வேண்டுமென அனுமந்தன் செப்ப, அவ்வாறே மூவ ரும் கூடிப்பேசினர். கர்நாடகப் படையெடுப்பில் சிவாஜிக் குத் துணைபுரிவதையே சம்மானமாக வேண்டினன் அனு மந்தன். அவ்விருவரும் முன்னதாகவே சிவாஜியின் சீரிய வரிசையை யுணர்ந்தவர்கள்; அன்றியும் முன்னம் கோவல குண்டத்துக்கும் சிவாஜிக்கும் சமரஸம் உண்டாக உழைத் தவர்கள். ஆதலின் அவ்விருவரும் உதவிபுரிய வாக்களித் தனர். பின்னர் அங்குப் பெருவிருந்தும் உபசாரமும் பெற்று, அனுமந்தன் சத்தாரா நகரம் சென்று சிவாஜி யைக் கண்டு களித்தனன். உடனே சிவாஜி ஆசனம் விட்டெழுந்து தந்தையின் மதியமைச்சனைப் பெருமை யுடன் வரவேற்று மரியாதையும் உபசாரமும் புரியத்தவற வில்லை. அனுமந்தன் மூலம் வெங்காஜியின் விபரீதச் செயல் கேட்டதும், சிவாஜிக்குச் சினம் ஒரு புறமும் துக் கம் ஒரு புறமும் பொங்கின. உடனே மகாராஷ்டிரத்தின் காவலுக்கும் அரசுக்கும் தக்க ஏற்பாடு செய்து, நாற்பதா யிரம் காவலாளரும் இருபதாயிரம் பரிவீரரும் அடங்கிய படையுடன் சிவாஜி வேந்தன் புறப்பட்டனன்.

அத்தகைய பெருஞ்சேனை கொண்டு செல்லுகையில் செலவு அதிகமாகும் அல்லவா? அதற்கு யாது செய்யலா மென ஆராய்ந்த சிவாஜி கோவலகுண்ட நாட்டில் புகுந்து பாகநகரம் குறுகினன். பெருஞ் சேனையுடன் சிவாஜி வருதலைக்கண்டு அந்நாட்டின் அதிபனான தானுஷா மனம் தடுமாறினன். அவனது அமைச்சர் இருவரும் அபாயம் எதுவும் இராதென ஆறுதல் கூறினர். கோவலகுண்ட நாட்டிலே குடிமக்களுக்கு யாதொரு தொல்லையும் இழைக்கக் கூடாதென்று சிவாஜி இட்ட ஆணை எங்

கும் பரந்தது. அவ்வாணையை மீறி நடந்த இரண் டொருவர் கையும் விரலும் தறிக்கப்பட்டனர். சிவாஜி யின் வரவுகேட்டு, அமைச்சர் இருவரும் எதிர்சென்று வெகு சிறப்பாக அவனை அழைத்துவந்தனர். இந்துமக்கள் அனைவரும் ஆவலுடன் வீதியில் கூடிநின்று சிவாஜியை வாழ்த்தினர். சிவாஜியும் அம்மக்களின் மனங்குளிர வந்தன மளித்துப் பொன்னும் மணியும் வீசி வழங்கினன். அரண் மனை வாயிலை மகாராஷ்டிர மன்னன் குறுகியது கேட்ட தானுஷா தனது மாளிகையிலிருந்து இறங்கிவர எண்ணி னன். அஃதறிந்த சிவாஜி தானே நேரில் உப்பரிகைமீது ஏறிச் செல்ல, இருவேந்தரும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். அப்பால் அனைவரும் தத்தம் ஆசனத்தில் அமர, கோவலகுண்டக் கொற்றவன் தனது கையினுல் சிவாஜிக்கு அத்தரும் பன்னீரும் தந்து அன்புகாட்டினன். ஒரு மாதகாலம் சிவாஜியின் சேனை அந்நகரிலே தங்கியிருந் தது. அப்போது சிவாஜியின் வீரரது ஆற்றலை நேரில் காண விரும்பினன் தானுஷா. குஞ்சரத்தையும் குலைக்கும் வலியுடைய வீரர் பலர் சிவாஜியின் சேனையில் சேவகம் செய்வதாக அனுமந்தன் உரைக்க, அங்ஙனமாயின் அதனை நேரில் காணவேண்டுமென்று தானுஷா சாற்றலானுன். உடனே பத்துமகாராஷ்டிரவீரர் தோன்றிச் சலாம்செய்து நின்றனர். மற்போர் நடக்கும் பெருங் கூடத்தினுக்கு அனைவரும் ஆவலுடன் செல்லவே, தானுஷாவின் யானைப் படையிலிருந்து மதம்பிடித்த குஞ்சரமொன்று கிளம்பி வந்தது. அப்பதின்மரில் ஏசாஜி என்பான் அக்குஞ்சரத் தைக் கண்டு அசையாமல் நின்றனன். கரியோ தனது துதிக்கையை உயரத் தூக்கிக்கொண்டு, கொம்பினுல் அவ்

வீரனைக் குத்திக் குலைக்கக் கடுகிவந்தது. கணப்பொழுதில் அவன் கொன்று குவிக்கப்படுவான் என்று அனைவரும் அஞ்சி நின்றனர். அத்தருணம் ஈசாஜி திடீரென உயரக் கிளம்பி அதன் மத்தகத்தின்மீதமர்ந்து, தனது உடை வாள்கொண்டு துதிக்கையை வெட்டிவீழ்த்திச் சிங்கநாதஞ் செய்தான். சுல்தான் அவ்வீரங் கண்டு அகம்பூரித்து வீர கண்டையும் பாஜிபந்தும் பரிந்தளித்து ஜாகீரும் தந்து புகழ்ந்தனன்.

முப்பது தினங்கள் கழிந்ததும் சுல்தான், சிவாஜி வேந்தனுக்கு ஒரு பெரு விருந்து நடத்தினன். அச்சமயம், "இஸ்லாமிய வேந்தே! விஜயபுரியும் கோவலகுண்டமும் எனக்கு உதவிபுரியின், மொகலாய வல்லரசை முற்றிலும் முறியடித்து இப்பாரதபூமி அனைத்திலும் வெற்றிக்கொடி தூக்குவேன்," என்றனன் சிவாஜி சத்திரபதி. முடிவில் சிவாஜியின் சேனைக்கு நாள்தோறும் மூவாயிரம் பூவராகன் உதவுவதாக அச்சுல்தான் ஒப்புக்கொண்டு, ஒரு பெருந் தொகையும் முன்பணமாகத் தந்தான். அச் சுல்தானது பீரங்கிப் படையும் சிவாஜிக்குத் துணைபுரியப் புறப்பட்டது. வழியிலே சிவாஜியின் சேனை துங்கபத்திரா நதிக் கரையில் கர்நூல் நகரம் குறுக, அதன் தலைவன் ஐந்து லட்சம் வராகன் கப்பங் கட்டி, சிவாஜியின் நட்பைத் தேடிக்கொண்டனன். அங்கிருந்து இருபத்தைந்து மைல் தூரம் சென்றதும் புண்ணிய தலமான பவநகரம் தென் படவே, அங்கே சிவாஜி நீராடி மல்லிகார்ச்சுனம் சேர்ந் தனன். தனது படைஞரை நிறுத்திவிட்டுச் சில துணைவருடன் அக்குன்றின்மீது ஏறிப் பார்த்தலும், அதன் இயற்கைச் சிறப்பும் வளமும் சிவாஜியின் சிந்தையைக் கொள்ளை

கொண்டன. பூலோககைலாசமோவென அத்தலத்தினை மதித்த சிவாஜி பரவசங்கொண்டு தனது துணைவரை நோக்கி, "அன்பர்காள்! அம்மை பவானியின் அருளினால் நமது ஆசைகளனைத்தும் ஈடேறலாயின. இனிமேல் இம் மாயவுலகில் இருந்து என்ன பயன்? எஞ்சியுள்ள வாணாளைத் துறவறத்தில் செலுத்தலே பரகதிக்கு மார்க்க மாகும். கர்நாடகப் படையெழுச்சியை நீவிர் நிறுத்தி, நமது நாடுசேர்ந்து என்மைந்தனை அரியணையில் அமர்த்தி, அரசைக் கவனியுங்கள். இதுவே எனது விருப்பம்," என் றியம்பினன். துணைவர் அதுகேட்டு ஒன்றுந் தோன்றாது திகைத்தனர். சிவாஜியோ காவியாடை பூண்டு ஜபமாலை தாங்கி மோனவிரதம் பூண்டுவிட்டான். வேந்தனது யோக நித்திரை கலையுந்தருணம் பார்த்து, அவர்கள், "வீர வேந்தே! எடுத்த கருமத்தை இடையில் விட்டுச் செல்லு தல் அழகன்று. அன்றியும் க்ஷத்திரிய தர்மத்தினை நாங் கள் எடுத்துரைக்கவும் வேண்டுமோ?" என்று ஏதேதோ சொல்லிப் பார்த்தனர். ஒன்பது தினம் வரையில் அம் மன்னவன் மௌனியாக இருந்தபின்னர், அனுமந்தனது வேண்டுகோளுக்கிணங்கி முன்னமேபோல் போர்க்கோலம் பூண்டு கிளம்பினன்.

சின்னாளிலே சிவாஜியின் சேனை கர்நாடகத்தில் புகுந்து, சென்னை நகரைத் தாண்டி, செஞ்சிக் கோட் டையை முற்றுகையிடத் தொடங்கியது. விஜயபுரிக்குச் சொந்தமான அக்கோட்டையின் காவலன் காணிக்கை யுடன் வந்து சிவாஜியைக் கண்டு வணங்கி, செஞ்சியை ஒப் படைத்துத் திரும்பினன். அப்பால் அச்சேனை சென்று திருவண்ணாமலையை வளைந்து கொள்ள, அதன் தலைவன்

போரில் புறங்கொடுத்துப் புண்பட்டனன். அங்கே அள விறந்த பொருள்கள் மகாராஷ்டிரரின் வசமாயின. பின்னர், இராயவேலூர் கோட்டையும் பணிந்தது. இதற்கிடையில் சிவாஜி தனது குதிரைப்படையுடன் கொள்ளிடக் கரையி லுள்ள திருமலவாடியை அடைந்து வெங்காஜிக்கு, "என் பிரிய சோதர! நந்தந்தை பரகதி சென்று பதின்மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன. தமது நாட்டையும் செல் வத்தையும் அவர் நினக்கீந்து சென்றார். எனினும் அச் சொத்திலே எனக்கும் உரிமையுளது. இன்றளவும் நீயே அதனைத் துய்த்து வருகின்றாய். சோதர வெங்காஜி துய்க் கட்டுமெனவே இன்றளவும் எண்ணியிருந்தேன். நீயோ நெறி தவறி நீசருடன் நேசம்பூண்டு சீரழிவதாகக் கேள்வி யுற்றேன். எனக்குண்டாகும் துயரம் கூறுந்தரமன்று. ஆத லின் விரைவிலே நம் தந்தையின் உடைமையைக் கணக்குப் பார்த்து, உரிய பங்கு எனக்குத் தரல் வேண்டும். நாம் இருவரும் பகைத்துப் போர்புரியின், உலகம் நம்மை நகை யாடும். இருவரும் ஒரு தந்தையின் மக்கள் அன்றோ?" என்று தூது போக்கினன்.

அச்சிரிய நிருபங் கண்டும் வெங்காஜி சிந்தை தெளிய வில்லை. மைசூர் அரசனும் மதுரை வேந்தனும் வெங்காஜிக் குத் துர்ப்போதனை புரிந்தனர். அப் பக்கபலங் கொண்டு வெங்காஜி போருக்கெழுந்தான். போரென்று கேட்டதும் மதுரை மன்னவன் பேதுற்றுப் பின் வாங்கினன்; மைசூர் அரசனே ஆறுலட்சம் வராகன் கப்பம் தந்து சிவாஜியைச் சேவித்துச் சென்றான். வெங்காஜி அதுகண்டு சிந்தை கல ங்கி விதியிலாது சிவாஜியைச் சந்திக்க உடன்பட்டனன். தம்பியைக் கண்டதும், சிவாஜி கட்டித் தழுவிக்கொண்டு

இருபது நாள் தனது பாசறையில் இருத்தி, அவனுக்கு நீதி யுரை புகன்றும் பயனில்லை. எதற்கும் வெங்காஜி வாய் திறவாமல் மௌனஞ் சாதித்தல் கண்டு, சிவாஜிக்குச் சிந்தா குலம் உண்டாயிற்று. அங்ஙன மிருக்கையில் ஒருதினம் இரவிலே யாருமறியா வண்ணம் ஐவருடன் வெங்காஜி ஓடிவிட்டான். சிவாஜி அஃதறிந்து சினம் பூத்தானயி னும், சோதர வாஞ்சை குறுக்கிடவே மீண்டும் நயமொழி பேசிப் பார்க்கலாம் என்று கருதி, தஞ்சைநகரையும் இரண்டொரு கோட்டைகளையும் தந்தால் போதும் என்று தம்பிக்குச் சொல்லியனுப்பினன். வெங்காஜியின் அன்பர் அதுகேட்டு, "நண்ப! சிவாஜி நினது தமையன் ஆயின் என்? விஜயபுரி அரசுக்கு விரோதமாக அவன் கிளம்பியவ னன்றோ? அதன் விளைவாக உன் தந்தையின் உயிருக்கே ஒரு சமயம் உலை நேர்ந்த தல்லவா? உனது விசு வாசங் கண்டே விஜயபுரியரசன் உனது ஜாகிரைப்பறியாது ளான்; இல்லையேல் முன்னமேயே பறித்திருப்பான். அன்று தந்தையையும் மதியாது கருமம்புரிந்த மைந்தன் இப்பொழுது தந்தையின் சொத்தில் பங்கு வேண்டல் அழகு அழகு!" என்று தூண்டிக் கொடுத்தனர். அன்றி யும் சிவாஜிக்கு எதிராக விஜயபுரியரசின் துணையை நாட வும் வெங்காஜிக்கு அறிவுறுத்த அன்னர் தயங்கவில்லை. இதற்கிடையில் சிவாஜி வேலூர் சேர்ந்து, அதற்கு அப்பா லுள்ள மகாராஜ கோட்டை, ஜகதேவி கோட்டை முதலிய பல கோட்டைகளை வசஞ்செய்தனன். அச்சமயம் ஆரணிக் கோட்டை வேதபாஸ்கரன் என்னும் ஓர் அந்தணன் வச மிருக்க, அம்மறையவனது மைந்தர் இருவரும் சிவாஜியின் சமுகம் சேர்ந்து, கோட்டையின் சாவிகளைக் கொடுத்து

வணங்கினர். சிவாஜி சந்தோஷங்கொண்டு ஆண்டு தோறும் மூன்று லட்சம் வராகன் வருமானமுள்ள பிரதேசமொன்றை அவ்விருவருக்கும் மானியமாகத் தந்தனுப்பினன். பின்னர் இராமேசுவரம் வரையில் சென்று வழியிலுள்ள நாடனைத்தையும் வசஞ்செய்யச் சிவாஜி சிந்தித்திருக்கையில், அவுரங்கசீபே பெரும்படையுடன் தக்காணத்தில் புகப்போவதாக ஆக்ரா நகரிலிருந்து ஒற்றர் வந்து உரைத்தனர். உடனே சிவாஜி, கர்நாடகத்திலே தக்க பாதுகாப்பமைத்து, பவழேற்காடு, சதுரங்கப்பட்டணம், சென்னை ஆகிய இடங்களிலுள்ள ஐரோப்பியரின் பண்டகசாலைகளைக் கைப்பற்றுமாறு ஆணைதந்துவிட்டு, இராஜகோட்டை நோக்கிப் போகலானான்.

கோவலகுண்டக் கொற்றவன் சிவாஜியுடன் நெருங்கிய உறவுகொண்டது கேட்டு, மொகலாயவரசும் விஜயபுரியரசும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு கோவலகுண்டத்தை எதிர்க்கலாயின. மொகலாய சேனை வருமுன்னர் விஜயபுரிச் சேனை சென்று கோவலகுண்டத்தைத் தாக்க, மத்தண்ணா என்னும் மந்திரி மதியூகங்கொண்டு பெரும் படையொன்று அனுப்பினன். அதன் விளைவாக விஜயபுரிச்சேனை சிதறுண்டு பறந்து விட்டது. அச்சேனைத்தலைவனை அப்துல்கரீம் இறந்துபட்டனன். போதாக்குறைக்கு விஜயபுரி யரசிலே உட்பகை கிளம்ப, மக்கள் பெரிதும் வாடினர். வரும் வழியிலே சிவாஜி அச்செய்தி கேட்டு, ஆங்காங்கு விஜயபுரிக்குச் சொந்தமான நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டே சென்றனன். வில்வாதி அல்லது பெல்லாரி நகரின் தலைவியாக விளங்கிய சாவித்திரீபாய் தனது கோட்டையிலிருந்து சிவாஜியை எதிர்த்தனள். சிவாஜியின்

சேனை உடனே அதனை முற்றுகையிடத் தொடங்கிற்று. இருபத்தேழு நாள் வரையில் அவ் வீரமாது கடும்போர் புரிந்து பார்த்தும் முடியவில்லை. முடிவிலே அவள் வாள் தாங்கிப் பகைவரின் அணி வரிசையிலே புகுந்து பலரைக் கொன்ற பின்னர், படுகாய முண்டு வீழ்ந்தனள். சிவாஜி யின் படைத்தலைவ னொருவன் அம்மாதைச் சிறைசெய்து சிறுமையும் கண்டனன். அது தெரிந்ததும் சிவாஜி, கோபம் பொங்கி அத்தலைவனைத் தருவித்து, அவனது இருகண்களையும் பிடுங்கிக் கடுந்தண்டனை விதித்தனன்; பின்னர் அம்மாதை அழைத்து ஆறுதல் கூறி மரியாதை யுடன் மாளிகைக்கு அனுப்பி வைத்தான். அம்மாதின் சந்ததியாருக்கு இரு கிராமங்கள் சிவாஜியினால் இனமாக அளிக்கப்பட்டன.

கர்நாடகத்திலிருந்து சிவாஜி திரும்பியதைக் கேள்வி யுற்ற வெங்காஜி தனது முகம்மதிய நண்பருடன் கூடி, செஞ்சி, வேலூர் இவைகளை மீட்கப் புறப்பட்டனன். அனுமந்தன் தனது படையைத் திரட்டி வெங்காஜியை வழிமறித்து மீண்டும் நற்புத்தி கூறியும் அது பயன்படாமல் போகவே, போரில் அவனை முறியடித்தான். வெங்காஜி உடனே ஓடியிராமல் போயின் சிறைப்பட்டிருப்பான். ஓடிச்சென்ற வெங்காஜியைத் தொடர்ந்து பிடிக்க அனு மந்தனுக்கு மனம் வரவில்லை. இச்செய்தி அனைத்தும் சிவாஜிக்கு எட்டவே அவ் வீரவேந்தன் மீண்டும் தனது தம்பிக்குக் கடிதம் வரைந்தனன்.

"அரிய தம்பி! அன்னியக் கயவரின் மாயவலையில் சிக்கி, என் சேனையுடன் போருக்கு எழுந்தனை. அப்போர் தனில் நீ பட்ட பரிபவம் கொஞ்சமன்று; பலரை இழந்தனை

நீயும் புறங்கொடுத்தனை; நீ எனது தம்பியாதலின் நினது பரிபவம் எனது பரிபவம் ஆகும். உனக்கு நேரும் அவமானம் என்னையும் சாரும். உனது அபகீர்த்தியை உலகினுக்கறிவித்து யாது பயன் பெறுவையோ அறியேன். உனது துன்மந்திரிகள் கைமேல் பலன் பெற்றுக் கலங்கிக் கிடப்பதை அறியாயோ? என்னை நம்பின், நீ உயர்வு பெறலாம். எனது பங்கை நீ தந்தாகவேண்டும். தந்தையின் உடைமையில் எனக்கு உரிமையில்லையென நீ எங்ஙனம் மறுக்க வியலும்? விஜயபுரியரசு உன்னை ஒரு பொருட்படுத்தாது; பதிலும் விடுக்காது; இதனை நன்கறிந்துகொள். துஷ்டப் பிள்ளைபோல் நடக்கின்றனையே! தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பின், நீ நலம் பல பெறலாம். நெறி கொள்க; சிறுமை விடுக. பகுத்தறிவு கொண்டு பார். குடிமக்களுக்கு நலம்புரிய நாட்டங்கொள். ஷாஜியின் மைந்தன் என்பதை மறவாதே. நன்மை, தீமை இரண்டையும் எண்ணித்துணி. சிந்தை திரியின், துயரே கிட்டும். நேர்மையும் நிம்மதியுங் கொண்டு நடத்தலே மேன்மையாம். அம்மை பவானி எனது பங்கிலிருக்க, யான் என்றும் வெற்றியே பெறுவேன். துரியோதனனைப்போல் நடந்து நாசம் தேடிக்கொள்ளாதே. நமது குடும்பத்தில் சேர்ந்த ஒருவனிடம் போரில் அடியுண்டு புறங்காட்டினையே. இதனினும் மானக்கேடு வேறு வேண்டுமோ? இனிமேலாயினும் நன்மதி கொள். நன்கு பழகிய பெரியாரைக் கைவிடுதல் அழகோ? பட்டது போதாதோ? அனுமந்தன் வந்து என்னைத் தூண்டிவிட்டதாக எண்ணற்க. அழ அழச் சொல்வர் தமர்; சிரிக்கச் சிரிக்கச் சொல்வர் பிறர். குடும்பத்திலே கலகம் வேண்டாம். இனியேனும் நாமிருவரும்

நண்பராக வாழ்வோம். உனது நலத்தை நாடியே இத்துணை தூரம் உரைக்கின்றேன். வீணே பகைகொண்டு வாடவேண்டாம். வாழ்வு பெறும் வகையைப் பார்."

சிவாஜி இங்ஙனம் வெங்காஜிக்கு அறிவித்த பின்னர், அவனை இன்னும் அவதிகாண வேண்டாமென அனுமந்தனுக்கு ஆணையிட்டனன். அண்ணனது கடிதம் கண்டதும், வெங்காஜிக்குச் சற்றே அறிவு தலைப்பட்டது. அச்சமயம் வெங்காஜியின் படைத்தலைவர் வந்து, சேனையின் அவதியைச் சொல்லி வருந்தினர். போரில் இறந்துபட்ட வீரரின் மனைவிமக்கள் வாயிலில் வந்து குவிந்து ஓலமிட்டனர். நெடுகப் போர் நடத்தலாமெனின், ஆற்றல் இல்லை; அணிவகுப்பு மில்லை; கவலையும் துயருமே அவனது கண்ணெதிரில் நின்றன. அண்ணனது வார்த்தையை அப்பொழுதே கேட்டிருப்பின், அவதி நேர்ந்திராதே எனப் பலவாறு வெங்காஜி கருதி, ஊண் உறக்கமின்றி மஞ்சத்தின் மீது சாய்ந்து கிடந்தனன். அவன் மனைவி தீபாபாய் அஃதறிந்து பின்வருமாறு பேசத் தொடங்கினள்:—

"தலைவ! தந்தைக்குப்பின் தமையனே தந்தையன்றோ? கெடுமதியாளரின் தீய வாசகங் கேட்டுச் சிந்தை திரிந்துவிட்டீர். எண்ணித் துணியவேண்டிய காலத்தில் ஏமாந்து போய்விட்டீர். அண்ணன் சிவாஜி, சீரிய புருஷர்; வெற்றி வீரருமாவர்; நேர்மையாக நடப்பின், அவர் உமது ஆவலை மதித்து நடப்பார். அவர் தனியரசு கொண்டிருத்தலை நீர் அறியீரோ? தமது தோழருக்கும் அவர் ஜாகீர் பல தேடித் தந்துளார். அவருக்கு அடங்கி வாழின், உமக்கு யாது குறை நேரும்? உமது சொத்திலா அவர் பங்கு விரும்புகின்றார்? தந்தை தேடி வைத்துச்

சென்ற பொருளை நீர் பெருக்கியதுண்டோ? இங்ஙிலையில் அவர்மீது எக்காரணம்பற்றி நீர் குறைகூற வியலும்? உம் மீது அவர் பேரன்பு பூண்டிருக்கையில், படையெடுத்துச் சென்று பகையையும் தேடிக்கொண்டீர். அனுமந்தன் நமது குடும்பத்தின் பெருநண்பன்; அரிய உறவினனு மாவன்; வயதிலும் முதிர்ந்தோன். அவனை வெறுத்துப் பேசி உதறித் தள்ளினீர்; உமது நாட்டைக் குலைக்க நீசரின் நட்பை நாடினீர். இன்றும் சரி, நற்கதி பெறலாம்; பகைமை விட்டொழியுங்கள்; அனுமந்தனது அரிய வசனத்துக்குச் செவிசாய்த்தல் வேண்டும். அவன் சொற்படி நடப்பின் நமது ஆபத்தனைத்தும் அகலும். வீண் மமதை கொள்ளின், புன்மையும் பழியுமே சுமரும். அகந்தையை விடுத்து, அண்ணனிடம் அடைக்கலம் புகுக. அடக்கம் அமரருள் உய்க்கும். அண்ணன் சிவாஜி அவசியம் உம்மைக் காப்பார். அவரைத் தவிர நம்மை ஆதரிப்பார் வேறு ஒருவருமிலர்.''

பெண்ணுயிருப்பினும் பெருமதி கொண்டு தீபாபாய் அங்ஙனம் புகன்ற வசனம் வெங்காஜியின் மனத்தில் வேரூன்றியது. உடனே உடன்படிக்கை பேசும்வண்ணம் அவன் அனுமந்தனை அழைத்தனன். இரு திறத்தினரும் செஞ்சிக் கோட்டையிலே சந்தித்தனர். அனுமந்தனைக் கண்டதும் தீபாபாய், வெங்காஜி ஆகிய இருவரும் அவனது அடியில் வீழ்ந்து, "ஐயனே! நினது கையில் கத்தியுளது; எங்கள் தலைகள் இதோ உள; எங்களைக் காக்கினும் சரி, கைவிடினும் சரி,'' என்று பணிவுடன் பகர்ந்தனர். அதுகண்ட அனுமந்தன் திடுக்கிட்டு, "இளவரசே! யான் உங்கள் குடும்பத்தின் ஊழியன்; நீங்கள்

என்னை வணங்குதல் ஒவ்வாது,'' என்று கூறி, வெங்கா ஜியை ஓர் உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தி, "மைந்த! சிவாஜியினிடம் அன்பும் விசுவாசமும் கொண்டிருப் பதுபோல், உன்னிடமும் நான் பாசமும் நேசமும் பூண்டுளேன். உனது ஆசனத்தில் அமர்ந்து, அரசியலை நடத்த என்னால் இயலும். அது எனக்குத் தகும் என்றும் முன்னம் சொல்லியே சென்றேன். அச் சொல்லின் வண்ணம், செயலிலும் நடந்துளது. யான் சென்றதும், சிவாஜி என்னை அணைத்துக்கொண்டனன். எனது ஊழி யத்தை நீ நாடின், என்னால் தடையில்லை. உனக்கு நலம் புரிவதில் எனது உயிரையும் தட்டாது தருவேன். ஆயி னும் நன்னெறியில் நீ பிறழின், உன்னை வழிக்குக் கொணர எக்கருமம் புரியவும் பின்வாங்கேன். மடையரின் வசனங் கேட்டு மானமழிந்தாய்; மதியும் கெட்டாய். இரண்டொரு மாதம் போர்புரிந்து நாலைந்து கோடி வராகன் வருமான முள்ள நாடுகளைக் கைப்பற்றினன் அவ்வீரன். இனியும் அவனுக்கு உன்பால் பேரன்பு உளது. ஸ்ரீ இராமபிரா னிடம் இலட்சுமணன் எங்ஙனம் நடந்துகொண்டனன் என்பதை அறியாயோ? சகோதர வாஞ்சைக்கு அவ்விரு வருமே சாட்சி. சிவாஜியைப்போல் நீ சீரும் சிறப்பும் எய்த வேண்டுமென்பதே எனது அவாவும் ஆசியுமாம்,'' என்று பெருமதி புகட்டினன். அதன்மேல் அரசின் வருவாயில் பாதியை அண்ணனுக்கு ஈந்து வாழ வெங்காஜி ஒருப்பட் டனன். வெங்காஜியிடமிருந்து தான் பறித்துக்கொண்ட கோட்டைகளைத் தந்துவிடவும் சிவாஜி சம்மதித்தான். தீபாபாயின் செம்மொழி கேட்டு வெங்காஜி நன்மதி கொண்டதை யுணர்ந்த சிவாஜி, எய்திய களிப்பு கொஞ்ச

மன்று. தம்பியுடன் உடன்படிக்கை ஏற்பட்டது கேட்டு ஆறுதலடைந்த சிவாஜி இராஜகோட்டை போய்ச் சேர்ந்தனன். மகாராஷ்டிர வீரர்கள் வழியிலுள்ள நகரங்களை வசஞ்செய்து கொண்டே வேந்தனிடஞ் சென்று வணங்கினர். வலியற்றுப்போன விஜயபுரி தலையெடுக்கமாட்டாமல் வாளாவிருக்க லாயிற்று. தென் தேசம் சென்ற சிவாஜி வெற்றி மாலை சூடித் திரும்பியதையும், விஜயபுரிச் சேனையை வீழ்த்தியதையும் கேள்வியுற்ற அவுரங்கசீப் மன்னவன் அடைந்த துயரம் நவிலுந் தரமன்று.

---

## 15. சாம்பாஜியின் சிறுமை

ஒருங்கு சேர்ந்து கோவலகுண்டத்தை எதிர்க்கக் கருதிய விஜயபுரியும் மொகலாயவரசும் சின்னாளைக்கெல்லாம் ஒன்றோடொன்று மாறுபட்டு நிற்றலும், மொகலாய சேனை விஜயபுரியின்மீது கொதித் தெழலாயிற்று. துர்ப்பாக்கியமான அந்நாட்டின் மந்திரி மனமறுகி அவ்வேளையில் ஆதரிப்பார் சிவாஜியைத் தவிர வேறு ஒருவருமில்லையெனத் துணிந்து, "வீர வேந்தே! மொகலாயப் படைகள் விஜய புரியின் தலைநகரைக் குறுகிவிட்டன. இனி விஜயபுரியரசு நினதேயாகும்; விரைந்துவந்து தலைகொடுப்பாயாக," என்று தூதனுப்பினன். சிவாஜியும் அவ்விதமே தனது படைகளுடன் விஜயபுரி நோக்கிப் புறப்படுகையில், சாம்பாஜியின் துரோகச் செயல் எட்டலாயிற்று. உடனே ஹம்ஸாஜியை விஜயபுரிக்குத் துணைபுரிய அனுப்பிவிட்டு, பனகலக் கோட்டையைக் குறுகிய சிவாஜி எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக் கிடக்க நேர்ந்தது.

அறிவார் யார் நல்லார் பிறக்குங் குடி? அங்ஙனமே தீயார் பிறக்குங் குடியையும் யார் அறிவர்? நல்லாரின் வயிற்றில் தீயார் பிறத்தல் நான்முகன் செயல் போலும்! நானிலம் மெச்சும் நற்குணம் படைத்த சிவாஜியின் வயிற்றில் சாபத்தீடாகச் சாம்பாஜி பிறந்தனன். பிறந்த காலமுதல் பேராசிரியரை அமர்த்தி அவனுக்கு அறிவு ஊட்டியும் பயன்படவில்லை. இளமை முதல் பதட்டமும் பதைப்பும் சிற்றின்ப நுகர்ச்சியுமே சாம்பாஜியிடம் குடிகொள்ளலாயின. அவன் இளவரசுக்குரிய எழில் நலம் கொண்டிருந்தும், குணநலம் கொள்ளவில்லை. இராஜ தந்திரத்திலும் நிர்வாகத் திறமையிலும் அரசியலிலும் அவனைப் பழக்கச் சிவாஜி பட்டபாடுகள் வீணாயின. மைந்தனுக்கு இளவரசுப்பட்டஞ் சூட்ட விரும்பி அவன் பிரமோபதேசம் செய்து பூணூலும் போட்டனன். எனினும் சிறுமை நிலையையும் புன்மை வாழ்வையும் அக்குமரன் கைவிடவில்லை. ஒரு சமயம் சிவாஜியின் அந்தப்புரத்திலே நடந்த கௌரிபூஜைக்கு இராஜகோட்டையிலுள்ள மாதர் அனைவரும் அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆடையும் பொன்னும் அன்புடன் அளிக்கப் பெற்றன. அழைப்புக் கிணங்க வந்த மங்கையரில் ஒருத்தி மறையவர் குலத்தி லுதித்த கற்பரசி; அவள் அழகின் வடிவம். அம்மங்கை நல்லாளின் வனப்பில் சாம்பாஜி ஈடுபட்டு அவளைத் தனது அறைக்குத் தூக்கிச் சென்றான்.

அந்த அக்கிரமத்தைச் சிவாஜி வேந்தன் அறியவந்ததும், அம் மாதை விடுவித்து, தாங்கமுடியாத துயர் கொண்டு துடிதுடித்து, "இளவரசாக உள்ளவன் தீச்செயல் புரியலாகுமோ? குடிமக்கள் அனைவருக்கும் அர

சன் தந்தையன்றோ? மகனை ஒப்ப அம்மானை நடத்த வேண்டியிருக்க, சாம்பாஜி மானபங்கம் செய்தனனே! அப்பாவம் வீண்போமோ? குலத்துக்கும் அரசுக்கும் கேடன்றோ சூழும்? பிழைக்கேற்ற தண்டனை கொடுத்துத் தீரவேண்டும். அரசன் மகனென மன்னித்தல் அடாது. நீரும் மூன்று முறை பொறுக்கும் என்பர். ஒருமுறை பொறுத்துப் பார்ப்போம். மீண்டும் அப்பாதகன் தீச்செயல்புரியின், அவனை என் பிள்ளையென அழையேன்,'' என்று பலவாறு வருந்தி, அவனைப் பனகலக் கோட்டையிலே சிறையில் வைத்திருந்தனன். சின்னாள் சென்றதும் கோட்டைக்குள்ளே இங்கு மங்கும் உலாவச் சாம்பாஜிக்கு அனுமதி கிடைத்தது. சிறையில் கிடந்துழன்றும் சாம்பாஜி நன்மதி கொள்ளவில்லை. தந்தைக்கும் தீமை புரியவே தீக்குண மிகுந்த அத் தனயன் கருதி, மொகலாயருடன் போர்புரியுமாறு சிவாஜி செல்வதைக் கேள்வியுற்று ஒருநாள் தந்திரமாகத் தப்பி மொகலாயரின் பக்கம் போய்விட்டனன். மொகலாய சேனாபதியான டிலவர்கான் அது கண்டு, அவனை அன்புடன் அணைத்து ஆதரித்து ஆனந்திக்கலானான். சிவாஜியைச் சீரழித்து மகாராஷ்டிர வரசைக் குலைக்க அதுவே தருணமென மொகலாய வீரர் கருதி முனைந்து எழுந்தனர்.

உடனே டிலவர்கான், "வேந்தே! சாம்பாஜி நம்மிடம் சரண்புகுந்துளான். நானும் அன்புடன் வரவேற்று ஆதரித்து வருகின்றேன். இனிமேல் சிவாஜியின் சேனையில் இலகுவிலே பிளவு உண்டுபண்ணிவிடலாம். மகாராஷ்டிரப் பெருமக்களிலே சிலர் சாம்பாஜியைச் சேராமலிரார். மகாராஷ்டிர வரசு மங்கும் காலம் நெருங்கிவிட்டது. நமது

படைவகுப்பொன்றினுக்கு அம் மைந்தனைத் தலைவனாக்கி, மகாராஷ்டிரத்தின்மீது அனுப்ப எண்ணி யுள்ளேன்,'' என்று டில்லி பாதுஷாவுக்கு ஓலைவிடுத்தனன். அவுரங்கசீப் அதுகேட்டு, "சிவாஜியோ மகா தந்திரசாலி; தந்தையின் சதியை ஈடேற்றக் கருதி, சாம்பாஜி பாசாங்குபண்ணி வந்திருக்கக் கூடும். மொகலாய சேனையை மயக்கி மறைவான இடத்துக்கு இட்டுச் சென்று மாய்த்து விடவே இச் சூழ்ச்சி நடந்துளது போலும்!'' என்று அஞ்சி, டிலவர்கானது ஆலோசனைக்கு மனமொப்பவில்லை. பாதுஷாவினிடமிருந்து பதில் வருவதற்குள் மொகலாயப் படையொன்றின் தலைவனாகிப் பூபாலக்கோட்டையின் மீது போயினன் சாம்பாஜி.

பகைப்படையின் தலைமை வகித்துச் சாம்பாஜி வந்திருத்தல் கண்டு, அக்கோட்டைவீரர் கலக்கங்கொண்டு, "இளவரசன்மீது பீரங்கிகொண்டு குறிபார்க்கக்கூடுமோ? கோட்டையைத்தான் விட்டுவிட லாகுமோ? இருதலைக் கொள்ளி எறும்புபோல் அகப்பட்டுக் கொண்டோமே,'' என்று சிந்தாகுலங்கொண்டனர். இதற்குள் சாம்பாஜியும், "வீரர்காள்! உடனே கோட்டை எனக்குப் பணியவேண்டும். இன்றேல் அனர்த்தம் விளையும்,'' என்று கூறி அச்சுறுத்தினன். வீரரிலே பலர் அவ் வாசகங் கேட்டு அறிவிழந்து ஓடிப்போயினர். கோட்டையின் தளகர்த்தன் யாது செய்வான்? பீரங்கிப் படை அலறுவதாயின், எதிரே நிற்கும் சாம்பாஜி உடனே குண்டுபட்டுக் குப்புற விழநேரும். இளவரசைக் கொல்லின் வேந்தனது சீற்றத்துக்கு ஆளாக நேருமென்று நினைத்த அத்தளகர்த்தன் நள்ளிரவிலே ஓடிவிட்டனன். உடனே மொகலாயசேனை

அக்கோட்டையினுள்ளே புகுந்து, எஞ்சிநின்ற வீரரைச் சித்திரவதை செய்தது. சாம்பாஜி அக் கொடுமைகண்டு ஆட்சேபித்தும், கொலை நின்றபாடில்லை. தளகர்த்தன் ஓடிவிட்ட செய்திகேட்ட சிவாஜி, "வீரர்காள்! மைந்தன் சாம்பாஜி மதியிழந்து மொகலாயரைச் சேர்ந்துளான்; படையுடன் வரின், அவனையும் பகைவனென மதித்துப் போர் புரிதலே உங்கள் கடமை; தேசத்துக்கும் குலத்துக்கும் துரோகம் புரியும் ஒருவனை இளவரசனென எண்ணிப் பார்க்க அவசியமில்லை," என்று எல்லாக் கோட்டைகளுக்கும் கண்டிப்பான ஆணைபோக்கினன்.

தேனீயைப்போல் சிறிது சிறிதாக இளமை முதல் சேர்த்து வகுத்த தனது நல்லரசினுக்குத் தீய மைந்தனது துரோகச் செயலால் பேராபத்து நிகழ்ந்திருந்தும், ஆபத்துக் காலத்தில் விஜயபுரியினுக்கு உதவிபுரியும் கடமையைப் பெரிதாக நினைத்த சிவாஜி அவ்வரசினுக்குத் துணையாக ஹம்ஸாஜியை அனுப்பியதுடன், ஒரு குதிரைப் படையையும் அனுப்பினன். மற்றொரு பரிப்படையுடன் தானும் சென்று மொகலாயரைக் கலக்கக் கருதி, அதன் பின்புறத்தைத் தாக்காமல் பாதுஷாவின் நாடுகளிலே புகுந்து பல இடங்களைக் கொள்ளையாடிப் பெரும் பொருள் சேகரித்தனன். டிலவர்கான் அஃதறிந்தும் விஜயபுரியின் முற்றுகையைத் தளர்த்தவில்லை. அளவற்ற கொள்ளையுடன் சிவாஜி செல்வதைக் கண்டு மற்றொரு மொகலாய சேனை வந்து அவனை வழிமறிக்கலாயிற்று. அப்போரில் மகாராஷ்டிரரிலே பலர் சேதமாயினர். சிவாஜி அதுகண்டு தானே முன்னணியில் நின்று மொய்யமர் புரிந்தனன். மன்னவனது மனநிலையும் பெரும்

போரும் கண்ட மகாராஷ்டிரர் ஊர்க்கமுடன் சமர்புரியவே, மொகலாயர் முதுகு காட்டினர். உடனே சிவாஜி அப் பொருளுடன் தனது கோட்டையை நோக்கிச் செல்லுகை யில், இன்னொரு மொகலாய சேனை வந்துவிட்டது. கை யில் சிக்கிய பொருளைப் பாதுகாப்பதுடன் மீண்டும் பலரைப் பறிகொடுக்க மனமில்லாத சிவாஜி யாது செய்வ தெனத் தோன்றாமல் தியங்கினன். அச்சமயம் சாரண னொருவன் அரசனுக்கு ஆறுதல் கூறி, "அரசே! மலைச் சரிவுகளின் இடையே மறைவான வழியொன்றுளது. அவ் வழியே நாம் செல்லின், நெடுந்தூரம் வரையில் நாம் பகை வரின் கண்ணில் படாது செல்லலாம்," என்று சொல்லி அழைத்துச் சென்றனன். அம் மறைவழியில் சிவாஜியின் சேனை செல்லத் தலைப்பட்டது. துரத்திவந்த மொகலாய சேனை முதலில் விழித்து நின்றது. முடிவில் அம்மறை வழி மொகலாயருக்குப் புலப்படவே, அதன் மற்றொரு கோடியில் சென்று மகாராஷ்டிரரை மறிக்கக் கருதினன் அப்படைத்தலைவன். பகைப்படை வருவதற்குள் சிவாஜி பட்டா என்னும் கோட்டை சேர்ந்தனன். எனவே மொக லாய சேனை வெட்கித் திரும்ப நேர்ந்தது. அப்பால் சிவாஜி பட்டாவி னருகேயுள்ள மொகலாய நகரங்கள் பலவற்றைக் கைப்பற்றிக் களிப்புக் கொண்டனன்.

பனகலக் கோட்டையிலிருந்து சிவாஜி அனுப்பிய குதிரைப்படை விஜயபுரி சேர்ந்து டிலவர்கானது படை யைப் பின்பக்கமிருந்து அழிக்கத் தொடங்கிற்று. முன் னும், பின்னும் தாக்கப்படவே, டிலவர்கான் அம்முற்றுகை யைத் தளர்த்தி ஓடலாயினன். எடுத்த கருமத்தை இனிது முடிக்க இயலாமல் திரும்பிச் செல்ல நேர்ந்தது கண்டு,

டிலவர்கான் கடுங்கோபங்கொண்டு வழியேயுள்ள விஜயபுரி நகரங்களைப் பாழ்படுத்தினன்; ஆண்பெண் அடங்கலையும் அடிமைகளாகக் கவர்ந்து களித்தனன்; பல கிராமங்களை அவன் தீக்கு இரையாக்கினன். அப்பப்பா! மொகலாய சேனை இழைத்த கொடுமை இயம்புந் தரமன்று. அச்சேனையிலிருந்த சாம்பாஜி அக்கொடுமையைக் கண்டு குலைநடுங்கி மறுத்துரைத்தும் மொகலாயர் கேட்கவில்லை. விஜயபுரி நகரங்களை மட்டுமின்றி மகாராஷ்டிர நகரங்களிலும் டிலவர்கான் புகுந்து கொள்ளையும் கொலையும் புரியத் தொடங்கினன். சிவாஜியின் உயர் வீரர் அதுகண்டு சினந்தெழுந்து அவனைத் தாக்கவே மொகலாயர் மூலைக்கொருவராக ஓடத் தொடங்கினர். வாடிய முகமும் வதங்கிய மனமுங்கொண்டு டிலவர்கான் திரும்பியது கேட்டு, அவுரங்கசீப் மனம் பொங்கி அவனை இகழ்ந்து பேசினன்; அதன்பின் சாம்பாஜியைச் சிறைசெய்து ஆக்ரா நகருக்கு அனுப்பும் வண்ணம் ஆணை இட்டனன். விலங்கைவிட்டுத் தொழுவில் அகப்பட்டுக் கொண்டோமே யென்று சாம்பாஜி தப்பிச்சென்று சிவாஜியின் சீரிய பாதம் சேர்ந்தான். வந்த மைந்தனைத் தழுவிக் கொண்டு சிவாஜிவேந்தன் சுடச்சுடச் சொல்லிய புத்திமதி ஈதாகும்:—

'புதல்வ! மகாராஷ்டிரத்தின் பரமவைரிகளான மொகலாயரிடம் நீ சரண் புகுந்தது சிறுமையன்றோ? ஆண்டவன் அருளால் நீ உயிர் தப்பினையேயன்றி வேறில்லை. இளவரசன் என்பதை நீ எங்ஙனம் மறந்தனை? உனது தந்தையின் அரியணையில் அமரவும் அரசை யாளவும் உனக்கு விதியிருக்க, நீ மதிமோசம் போனதேன்? மானபிமானமற்று

டிலவர்கானிடம் நீ பதுங்கிக் கொண்டது பெருமையோ? அரசாளும் உரிமையும் உயர்வும் படைத்த நீ அவற்றை மறக்கத் துணிந்தது ஏனோ? குடிமக்களின் உடல், பொருள், ஆவி மூன்றையும் காப்பது உனது கடமை அன்றோ? எல்லாவற்றிற்கும் மேலாக, மங்கையர்தம் மானத்தை நீ காக்கவேண்டாமோ? வேலியே பயிரை அழிப்பது போல் அரசனே மக்களின் மானத்தைப் பறிப்பின், அவர்களுக்குக் கதி வேறு உளதோ? மாதரை மானபங்கம் செய்வதினும் மாபாவம் ஏதேனும் உண்டோ? வாலியும் இராவணனும் வாழ்விழந்து ஆவியும் அகன்றதேன்? அவர்களைக்காட்டிலும் நீ தவத்திலும் பலத்திலும் கல்வியிலும் திறமையிலும் சிறந்தவனோ? உன்னை நல்வழிக்குக் கொணரவேண்டியே வெறுங்காவல் தண்டனை விதித்தேன். எனினும் பெற்ற மனம் பித்து என்பர். உன்மாட்டுள்ள அன்பு என்னை விட்டகலுமோ? இதற்கு நீ எனக்குப் புரிந்த கைம்மாறு யாது? பகைவரின் பக்கம் சேர்ந்து என் மானமும், உனது மானமும் மகாராஷ்டிரர் மானமும் போகத் துரோகம் புரிந்தனை. இனியேனும் உனக்கு நற்புத்தி வருமா? நீ இந்த அரசை ஆளப் பிறந்தாயா? அழிக்கப் பிறந்தாயா? யான் மரிக்குமுன் அரசை வகிக்க உனக்கு ஆசை இருக்குமாயின், அதனை இரண்டாகப் பகிர்ந்து ஒன்றை உனக்கும் மற்றதை இராஜாராமனுக்கும் கொடுக்கக் கருதுகிறேன். யானோ துறவு பூண்டு இராமதாஸரிடம் சேவைசெய்து உயர் பதம் பெறச் செல்வேன். இராஜாராமனுக்கு நமது பிரதாபராவின் மகளை மணம் முடித்ததும் அரசைப் பகிர்ந்து தர ஆயத்தமாவேன்; இது சத்தியம்''

அங்ஙனம் சிவாஜி நன்மதி பகர்ந்த பின்னர், பனகலக் கோட்டையிலே சாம்பாஜியைத் தக்க பாதுகாப்பில் வைத்தனன். சாம்பாஜியின் செலவுக்காக மூன்று லட்சம் வராகன் வருவாயுள்ள நிலங்கள் அளிக்கப்பட்டன. மிக்க விசுவாசமுள்ள தளகர்த்தர் மூவர் காவல் புரிய நியமிக்கப் பெற்றனர்.

மொகலாயசேனை முதுகு கொடுத்துப் போனபின் விஜயபுரி வேந்தன் பெருங் களிப்புக் கொண்டு சீர்மிகப் படைத்த சிவாஜி மன்னவனுக்குச் சலாம் பல செய்து, "வெற்றி வேந்தே! நினது பெருங்குணமும் பெருந்தன்மையுமே என்னைப் பேராபத்தினின்றும் விடுவித்தன. ஆபத்துக் காலத்தில் அரிய நண்பனாக வந்து நீ உதவி புரிந்ததை நான் என்றும் மறவேன். உனக்கும் எனதரசுக்கும் அடிக்கடி மாறுபாடு நிகழ்ந்தும், உனது தந்தை ஷாஜியை எனது முன்னோர் உயிர் வாங்க முயன்றிருந்தும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் ஆபத்து வேளையில் தலை கொடுக்க வந்த உன்னை நான் என் சொல்லிப் புகழ்வேன்? தீமை புரிந்தார்க்கும் நன்மை புரிந்த உனது உயர்வே உயர்வு!" என்று நிருபம் விடுத்தனன். சிவாஜி ஏற்ற பதில் தந்து, "ஆபத்தில் உதவுவதே ஆரிய தருமமாகும்; இனியும் ஆபத்தில் உதவக் காத்திருக்கின்றேன்," என்று வாக்களித்தனன். அப்பால் இருவருக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. தென் தேசத்திலே ஜயித்த நாடனைத்தையும், தந்தையின் ஜாகீரையும் சிவாஜியே ஆண்டுவர விஜயபுரி வேந்தன் சம்மதித்தனன்.

சிவாஜிக்கும் விஜயபுரிக்கும் உண்டாகிய உடன்படிக்கை வெங்காஜிக்கு எட்டியது. அதன்படி தென்தேச

நாடுகள் சிவாஜிக்குச் சொந்தமாவதைக் கண்டு அவன் மனம்புழுங்கிக் கிடந்தனன். அதுமுதல் வெங்காஜி ஊண் உறக்கமின்றி உன்மத்தம்பிடித்தவனேபோல் இருக்க, தீபாபாயும் அனுமந்தனும் மிகவும் வருந்தி, அதனைச் சிவாஜிக்கு அறிவித்தனர். உடனே, உன்மத்தம் விடுத்து ஊக்கங் கொண்டு அரசியலை நடத்தி உயர்வுபெற முயலவேண்டு மென்று சிவாஜி சிறப்பான நிருபமொன்று விடுக்க, வெங்காஜி மனக்கலக்கம் தவிர்ந்து அரசியலில் கவனஞ் செலுத்தலாயினன்.

---

## 16. கடைநாள் காட்சி

ஒருநாள் டில்லியரசிலிருந்து அவுரங்கபாத் நகருக்கு அளவற்ற தனம் வருவதாகத் தூதுவர் வந்துரைத்தனர். தக்கிணத்திலே மீண்டும் படையெடுத்துச் செல்வதற்கு அத்தனம் பயனுகும் என நினைத்து, சிவாஜி சிறிதும் தாமதியாது சில வீரருடன் சென்று அப்பணத்தைப் பறித்துத் திரும்பினன். தொலைதூரம் விரைந்து சென்று திரும்பிவந்த வேகம் அவ் வேந்தனுக்குத் தீங்காய் முடிந்தது. முப்பதாண்டுகளாக இமைப்போதும் ஓய்வின்றி வல்லரசுகளுடன் கடும்போர் புரிந்து வந்த களைப்பும் சலிப்பும் அதனுடன் கூடிக்கொள்ளவே, அம்மன்னவன் படுநோய் கொண்டனன். நெஞ்சில் வலியும் நோயும் காணவே, அமைச்சரும் அன்பரும் மருத்துவ திலகங்களைத் தருவித்து மகாமூலிகையும் ஔஷதியும் கொடுத்துப் பார்த்தனர்; ஆலயங்களுக்கும் இஷ்டதெய்வங்களுக்கும் அபிஷேக ஆராதனை செய்தனர்; கொடுநோய் தீரின் காணிக்கை செலுத்துவதாக நோன்பு

கொண்டனர்; சோதிடநூல் வல்லாரை வருவித்து நாளுக்கும் கோளுக்கும் சாந்தி செய்து பார்த்தனர். ஆயினும் நோயோ நாளுக்கு நாள் வளர்ந்து முதிர்ந்தது.

கடைநாள் கிட்டியது கண்ட சிவாஜி, தனது மதியமைச்சரையும் மாபெருஞ் சுற்றத்தாரையும் அருகே வரவழைத்து, "அன்பர்காள்! விரைவில் கண்மூடி விமலனடி சேரப் போகின்றேன். இனி இச் சடலம் நில்லாது. அம்மையின் அருளையும் உங்கள் உதவியையும் முன்னிட்டு ஒரு கோடி வருமானமுள்ள பேரரசு கண்டு, அதனை நிலைநாட்டி யுள்ளேன். எண்பதாயிரம் வீரர்கொண்ட குதிரைப் படையினையும் வகுத்து வைத்துள்ளேன். தணியா வலியும், வாடாவீரமும், நிகரிலாத் தந்திரமுங் காட்டி இப் பேரரசைக் காக்கும் நன்மைந்தரைப் படைத்தேனில்லை. 'மூத்தது மோழை' என்ற வண்ணம் சாம்பாஜியோ சகசண்டியாகிவிட்டனன். அவனுக்கும் இராஜாராமனுக்குமாக நாட்டைப் பகிர்ந்து கொடுக்கலாம் என்றாலோ, சாம்பாஜி சம்மதிக்கவில்லை. நாட்டைப் பகிர்ந்து தரினும், பெருமக்களும் பெருவீரரும் ஒரு முகமாக நில்லாமல், சிலர் சாம்பாஜியையும், சிலர் இராஜாராமனையும் சார்ந்து நிற்கக்கூடும். அங்ஙனமாயின் அரசு வளர்வதற்குரிய வகையின்றி வீழ்தற்குரிய விளைவே நிரம்பியிருக்கும். ஆதலின், முறைமைக் கிணங்க மூத்த மைந்தனே அரியணையமர, இளையவன் அதற்கு அடங்கி வாழ்தல்வேண்டும். ஆனால் புதல்வர் இருவரும் அதற்கு இணங்குவரென எனக்குத் தோன்றவில்லை. எனது காலம் ஆனதும் சாம்பாஜியே அரசணைத்தையும் கைப்பற்றிக்கொள்வான். படைவீரர் பலரும் மூத்தமகனையே சார்ந்து நிற்பர். இளையவனது

லின் சேனுவீரர் இராஜாராமனை ஆதரியார். ஆனால் அமைச்சரோ இளையவனைத் தழுவி நிற்பரென நினைக்கிறேன். இதன் விளைவால் கட்சிப் பிரதிகட்சிகள் தோன்றும். சாம்பாஜியோ தனக்கு எதிராக உள்ள பெருமக்கள் அனைவரையும் சிறைசெய்து கொன்று குவிப்பன்; பிரபுக்கள் பலவகை அவமானத்துக்கு ஆளாவர். சாம்பாஜியின் ஆட்சியோ சீர்கேடாக முடியும். சாம்பாஜி கண்மூடியாகிக் காலங்கழித்துக் கோரம் விளைப்பான். அரசு அயோக்கியர் கையில் சிக்குண்டு உழலுமே! என் செய்வது? பெருமக்கள், பெருவீரர் முதலியோரின் துணையை நாடிநின்று சிலந்திவலைகட்டுவதுபோல் யான் இவ்வரசுக்கு அடிகோலி இதனை நன்கு நிலைநாட்டினேன். தகவுடைய பெரியாரை மூத்தவன் துணைகொள்ளின், எல்லாம் நலமாகும். இல்லாவிடின், அவுரங்கசீப் சமயம் பார்த்து விஜயபுரியையும் கோவலகுண்டத்தையும் வீழ்த்தி, மகாராஷ்டிரத்திலே புகுந்து சின்னபின்னஞ் செய்யமுயலுவன். சாம்பாஜிக்கு அப் பாதுஷாவின் படைவெள்ளத்தைத் தடுக்கும் பேராற்றல் இராது. ஒருவேளை இராஜாராமன் உயிருடனிருப்பின், பகைவரிடமிருந்து அரசைக் காக்க வழிபிறக்கலாம். எனக்கு வேறெதுவும் தோன்றவில்லை,'' என்று கூறிக் கரைந்தனன்.

அதுகேட்ட அனைவர் கண்களிலும் நீர் ததும்பியது; நெஞ்சமும் உருகியது. உடனே சிவாஜி, "அன்பர்காள்! உறங்குவதுபோலும் சாக்காடு. இந்த உலகில் யாரும் சிரஞ்சீவிகள் அல்லர். மனையாள், மக்கள், செல்வம், அனைத்தும் மாயையாம்; அவற்றை மெய்யென நம்பி நிற்போரே பரிவுகொண்டு பெரிதும் கலங்குவர்; நீங்கள் அனைவரும்

பெருவீர சிகாமணிகள். கலங்குவதில் யாது பயன்? ஆதலின் அருமுயற்சி புரிந்து அரசைக் காப்பதே உங்கள் கடமை. நீங்கள் ஒருமுகமாகக் கருமம் புரியவும் அவசியம் உளது. எனது நோயைத் தீர்க்க அரும்பாடு பட்டீர்கள். மானிட முயற்சி பயன்தரவில்லை. இனி அத்துறையில் முயலற்க. பொன்னுலகம் புகவே விரும்பிநிற்கின்றேன். ஆதலின் இனி இந்த அரசைக் காப்பதில் நீங்கள் சிந்தை செலுத்துங்கள். டில்லியரசை வேரறுத்து, கங்காநதியைக் கடந்து,பாரத பூமியனைத்தையும் வசப்படுத்தி, எங்கும் நீதிக்கொடி தூக்க எண்ணியிருந்தேன். எனது உயிரின் ஓட்டம் நிற்க, ஜீவசக்தி ஒடுங்குகின்றது. இனித் துயர் கொள்ளுதலில் பயனில்லை. பகுத்தறிவுகொண்டு மனத்தை வசப்படுத்தி மேல்நடப்பதைப் பார்ப்பதே உங்கட்கும் மேன்மை யாகும்,'' என்று ஆறுதல் கூறினன்.

சிறிது நேரத்தில் ஆவி அகலும் என்று கண்டதும், சிவாஜி தூய நீராடித் தான தருமங்கள் புரிந்தனன். கழுத்திலே உருத்திராட்சம் பூண்டும் கரத்திலே துளசிமாலை தரித்தும் அவன் தர்ப்பாசனத்தில் அமர, வேதவித்துக்களும் துறவிகளும் பரவாழ்வின் பெருமையை விளக்கிநின்றனர். உடனே உலகவிஷயம் அனைத்தையும் சிவாஜி மறந்து ஸ்ரீராம நாமத்தை ஜபிக்கலாயினன். பக்திமான்கள் அருகே யிருந்து இனிய கீதங்கள் பாடினர்; வேதியர் கீதோபதேசம் புரிந்தனர். எங்கும் அங்ஙனம் உயர் போதம் நிரம்பி நிற்க, 1680-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐந்தாம் தேதியில் அம்மன்னவன் பரத்திற் கலந்தனன். பெருமையும் பேரரசும் பெருவாழ்வும் நிரம்பி நிற்கையில் காலகதியடைந்த அக்கொற்றவன் அதனை ஒரு துன்ப

மாகக் கொண்டு துயருறவில்லை. ஆவி பிரியுங் காலத்திலே அவ் வேந்தனது திருமுகமும் மேனியும் பொலிவுகொண்டே விளங்கின. கண்மூடும் சமயத்தில் அம்மை பவானியின் காட்சியே அவன்முன் நின்றது. பண்டைநாளின் பார்த்திபரைப் போலவே புதல்வனுக்கு முடிசூட்டிவிட்டுத் துறவறம் பூண அவ்வேந்தன் எண்ணியிருந்தனன். ஆனல் அது கிட்டாது போயிற்று.

மாபெருந்தலைவன் மரித்தது கண்டு அமைச்சரும் அன்பரும் அடங்காத் துயர் கொண்டு அழுங்கினர். சுருங்கச் சொல்லின் சிவாஜியின் காலகதி கேட்டுக் கலங்கியழாதார் இல்லை. அவ்வேந்தன் ஆவி நீத்ததும், அமைச்சர் இராஜகோட்டையின் கதவுகளைச் சாத்தி அச்செய்தி பரவாவண்ணம் தடுத்தனர். ஈமக்கடன்கள் யாவும் அரசர்க்குரிய பான்மையில் வேதவிதிப்படி நிறைவேறின. மூன்றுவது மனைவியான புட்லிபாய் என்பாள் தனது கணவனுடல் தாங்கி உயர்பதவி பெற உடன்கட்டை யேறினள்.

சிவாஜி மன்னன் மணந்த மனைவியர் எழுவர். இளவரசான சாம்பாஜியை ஈன்றெடுத்தவள் பெயர் சாயாதேவி. சூரியாபாய் என்பாளோ இராஜாராமனது அன்னையாவள். உடன்கட்டை யேறின மூன்றுவது மனைவியாம் புட்லிபாய்க்குச் சந்ததியில்லை. நாலாவது மனைவியான சக்வர் பாய்க்கு ஒரு பெண்மகவே பிறந்தது. அம்மகளின் பெயர் கமலாஜீபாய். மற்ற மனைவியர் முறையே இலட்சுமீபாய், சுகுணபாய், குணவந்தபாய் எனப்படுவர். இலட்சுமிபாய்க்கும் குணவந்தபாய்க்கும் மக்கட்பேறு வாய்க்கவில்லை. சுகுண்பாய்க்கு இராஜகுமாரி என்னும் பெண் ஒன்றுண்டு.

சாம்பாஜி 1657-ஆம் ஆண்டில் பிறந்தவன். இராஜாராம் பிறந்த வருஷம் 1664. இராஜாராம் நன்னடக்கை பொருந்தியவன்; அரசுக்குரிய தகுதியுடையவன். இதனைச் சிவாஜி நன்கு அறிவன். சாயாபாய் 1659-ஆம் ஆண்டில் காலகதி எய்தினள். இல்வாழ்க்கையின் இனிய துணை என்பது அவளுக்கே தகும். அவள் ஆவி நீத்தபின்னர், சிவாஜியின் இல்லறம் இன்பத்திற்கு இடமாக இருக்கவில்லை. சூரியாபாயோ பேராசையும் சூழ்ச்சியும் பொருந்தியவள். தனது மைந்தன் இராஜாராமனுக்கே அரசுரிமை கிடைக்க வேண்டுமென அவள் பெருஞ்சூழ்ச்சி புரிந்தனள். அவளே சிவாஜிக்கு விஷமிட்டுவிட்டதாகவும் சிலர் சொல்வர். அமைச்சரில் பலரை அவள் தன்வசமாக்கிக் கொண்டாள். சாம்பாஜியின் சிறுமைகண்டு சிவாஜியும் வருந்தியதை உணர்ந்த மந்திரிமார், சூரியாபாயின் பக்கம் சேர்ந்து இராஜாராமை அரியணையில் அமர்த்தக் கருதினர். அச்சமயம் பனகலக்கோட்டையிலே சிறையில் கிடந்த சாம்பாஜியைக் கட்டிக் கொணரவும் அன்னூர் துணிந்தனர். அங்ஙனமே ஒரு படைவகுப்பு பனகலக்கோட்டைக்குச் சென்றது. சேனுபதியான ஹம்ஸாஜி பதினுயிரம் வீரருடன் இராயகோட்டையைக் காத்து நின்றனன். அமைச்சரின் கருத்தை அறிவிக்குமாறு பனகலக்கோட்டையின் தலைவனிடம் சென்ற தூதுவனை இளவரசன் வழிமறித்து நிறுத்தவே, சாம்பாஜிக்கு உண்மை புலப்படலாயிற்று. அஃதுணர்ந்ததும் கோட்டைக் காவலன் சாம்பாஜிக்கு அஞ்சி ஓடி விட்டனன். பனகலத்திற்குச் சென்ற படைவகுப்போ அக்கோட்டையை முற்றுகையிட்டு நிற்க, அதற்கிடையில் அமைச்சர் இராஜாராமை அரியணை

யில் அமர்த்தி அரசியலை நடத்திவரலாயினர். ஆயினும் அமைச்சருக்குள்ளே பிணக்கு நிகழ்ந்துவிட்டது. சேனாபதியை அந்தரங்கமான கருமங்களில் கலந்துகொள்ளாமல் போகவே, அவன் மனம் புழுங்கி நின்றனன். பனகலக் கோட்டைமீது சென்ற தளகர்த்தனே கோலாப்பூருக்கு ஓடிவிட்டான். உடனே சாம்பாஜி அப்படைஞரை வசப்படுத்திக்கொண்டு இராயகோட்டையின்மீது செல்லச் சமயம் பார்த்திருந்தனன். சாம்பாஜியின் கருத்தை யுணர்ந்த முதன்மந்திரி மௌரியபிங்களன் சாம்பாஜியுடன் போர்புரிய ஒரு பெரும்படையுடன் சென்றும் பயனில்லை. சாம்பாஜியைக் கண்டவுடனே, அம் முதன்மந்திரிக்கு நடுக்கம் எடுத்துவிட்டது. ஆதலின் அவன் சாம்பாஜியுடன் சேர்ந்துகொள்ள, சேனாபதியும் வந்து அவனுடன் கூடிக்கொண்டனன். அவ்விதம் பக்கபலம் கிட்டியவுடனே சாம்பாஜி இராயகோட்டை சென்று அதனை வசப்படுத்திக் கொண்டான். உடனே சூரியாபாய்க்கு உதவிபுரிந்த அமைச்சரும் பெருமக்களும் சாம்பாஜியிடம் சிறைப்பட்டனர். இராஜாராமும் சிறையில் கிடந்துழல நேர்ந்தது. அவன் தாய் சூரியாபாயைச் சாம்பாஜி வரவழைத்து, வாயில் வந்தவண்ணம் அவளை வைது, சித்திரவதை செய்தனன். அதிகாரிகளிலே அவளை ஆதரித்து நின்றோர் கொன்று குவிக்கப்பட்டனர். மற்றுஞ் சிலர் மலைக்கோட்டையினின்று கீழே தள்ளிவிடப்பட்டனர். அங்ஙனம் சொல்லொணுக் கொடுமை புரிந்து, 1680-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சாம்பாஜி சிம்மாசனம் ஏறினன்.

## 17. சிவாஜியின் குணவிசேஷம்

சிவாஜி சத்திரபதியின் போர்வீரப் பெருமையைக் குறித்து இதுகாறும் பேசிவந்தோம். அக் கோற்றவன் கொண்டிருந்த சமயப்பற்றும் புகழ்ச்சிக் குரியது. தனக் கென வாழாப் பிறர்க் குரியாளனாக விளங்கி ஆன்மஞான மெய்திப் பரத்திலும் பெருவாழ்வுகொள்ள இளமைமுதல் அவன் ஆவல்கொண்டிருந்தனன். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்பதுபோல், இளமையிலேயே அவ் இறைவனிடம் படிந்த சமயப்பற்றும் ஆன்மநலமும் வளர்ந் தோங்கி வரலாயின. பேரறிவும் பரம பக்தியுங்கொண்ட ஜீஜாபாயின் வயிற்றில் உதித்த புதல்வனிடம் சமயப் பற்று பிறவாதிருக்குமோ? அன்றியும் நகம்முளைத்த நாள் முதற்கொண்டே புராண, இதிகாச, காவிய, சரித்திரங் களில் காணும் பக்தர், முக்தர், வீரர், வேந்தர் முதலி யோரின் குணாதிசயங்களைக் கேட்டுவந்த ஆன்மா பரிபக் குவம் எய்திப் பரவசங்கொள்ளுதல் இயற்கையே. உலகில் தோன்றும் உயிர்களனைத்தும் ஒருதினம் அழிவது திண் ணம். ஆவிகொண்டபொழுதே உயர்பதம் தேடுதல் உத்த மர் கடன். ஆன்மஞானம் புகட்டக்கூடிய நல்லாசானை யடையக் கருதி அவன் செய்த முயற்சி சொல்லுந் தர மன்று. சிவாஜிமன்னவன் தோன்றிய காலத்தில் மகா ராஷ்டிரத்திலே பல மகான்கள் அவதரித்து, அனாதியான சனாதன தர்மத்தின் மாசுபோக்கி மகிமை பரப்பவேண்டி, ஊருக்கு உழைத்து உடலெடுத்த பயன்பெற நினைந்து, மனத்துறவுகொண்டு, இன் சொல்லே விளைநிலனாக, ஈதலே வித்தாக, வன்சொலாம் களை களைந்து, வாய்மை எரு

விட்டு, அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் காணவேண்டுமென யாவருக்கும் போதித்து வந்தனர். அங்ஙனம் பக்திமணம் பரப்பிய பெருமான்களில் துகாராம் சுவாமிகள் ஒருவர். அவரது கீர்த்தனங்களும் போதங்களும் பரவசமளித்துப் பரமானந்த மூட்டும். அப்பெரியார் சமயஞானத்தைப் போதிக்கும் சமயங்களில் எல்லாம், சிவாஜி அங்கே பிரசன்னமா யிருப்பான். ஒரு சமயம் துகாராம் சுவாமிகள் பூனா நகரிலே கீர்த்தன கோஷ்டியுடன் மாந்தருக்குத் தர்மோபதேசம் புரிந்து வந்தார். சிம்மகோட்டையிலிருந்த சிவாஜி இரவுதோறும் பூனா நகரம் சென்று அதனைச் செவிமடுத்து மறுதினம் அதிகாலையில் திரும்புவது வழக்கமாயிற்று. அவ் வேந்தனது பகைஞர் அதுவே சமயமெனக் கொண்டு, அவனைச் சிறைசெய்யக் காலமும் இடமும் கருதியிருந்தனர். ஒரு வணிகனது விடுதியிலே ஒரு நாள் இரவில் துகாராமின் போதங் கேட்டு வீரசிவாஜி பரவசங்கொண்டிருக்கையில், ஈராயிரம் பட்டாணிய வீரர் அந்நகரின் ஒரு புறத்தே பதுங்கியிருந்து அவ்விடுதியை வளைந்துகொண்டனர். நிரம்பியிருந்த ஜனத்திரளில் சிவாஜியை அடையாளங் கண்டுபிடிக்க அவ்வீரரால் இயலவில்லை. ஆதலின் கண்ணில் காணும் ஒவ்வொருவரையும் அவர்கள் சிறை செய்ய எண்ணினர். அஃதுணர்ந்து மக்களுக்குள்ளே பரபரப்பு ஏற்பட்டதும், "இன்று ஏகாதசி. ஈசனைத் துதிக்கும் சமயத்தில் இன்னுயிர் போயினும் நலமேயாம். வருவது வருக. முன்னவனது மொய்புகழைச் செவிமடுத்து முத்திபெற முனைவோம்," என்று துகாராம் கூறினர். அந்நிலையில் சபையை விட்டகல மனமில்லாத சிவாஜி, "ஈசனுளன்" என்றே எண்ணியிருந்

தனன். வேந்தனது தோழரிலே ஒருவன் சிவாஜியின் ஆடைகளை அணிந்து பரிமாவொன்றின் மீதேறி அந்நகரத்தை விட்டுக்கிளம்பினன். காவல் புரிந்து நின்ற பட்டாணியர் அவனையே சிவாஜியெனக்கொண்டு பின் தொடர்ந்தனர். சந்திரவெளிச்சம் இருக்கும் வரையில் பட்டாணியர் தொடர்ந்து சென்றும், நிலவொளி மங்கின உடனே அம்மாயச் சிவாஜியைக் காணமுடியவில்லை. அதி காலையிலே சிவாஜியோ தனது சிம்மகோட்டை போய்ச் சேர்ந்தனன். மற்றொருசமயம் அம் மகான் உலோகநகரிலே பேருரை நிகழ்த்தலானார். சிந்தைக்கும் செவிக்கும் இனிய நல்லுணவை நாடிநின்ற சிவாஜியும் அங்கே சென்றிருந் தனன். துறவின் பெருமையைக் குறித்து அப்பெரியார் பேசி நிற்கையில், "இக்காயம் ஒருநாள் அழிவுறும்; உலக இன்பம் நிலையற்றது. அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே; மக்களும் பெண்டிரும் மயானமட்டுமே. அப்பால் உடன் வருவார் யாருமிலர். நமது வினையொன்றே தொடர்ந்து வந்து பயனூட்டும். ஆதலின் சுகபோகம் துறந்து, ஆண்ட வனை யடையச் சேவைபுரிதலே சிறந்ததாகும். இதற்கு மனத்தகத்தே அழுக்கில்லாமல் காலங்கடத்த வேண்டும். மெய்த்துறவிக்கு வேந்தன் துரும்பாவான். அவனுக்கு ஆண்டவனும் ஏவல் புரியக் காத்து நிற்பன்," என்று கூறி னார். அவ்வுரை கேட்டதும் சிவாஜி தனது மாளிகை திரும்பாமல் வனத்திலே தனியிடமொன்றை நாடி மோன விரதம் பூண்டு மெய்ம்மறந்துவிட்டனன். அமைச்சரும் அன்பரும் வந்து வேண்டிக்கொண்டும் சிவாஜி செவி சாய்க்கவில்லை. ஜீஜாபாய் அஃதறிந்து பல்லக்கிலேறிச் சென்று, துகாராம் சுவாமிகளை அடைந்து, உற்றது முற்

றும் உரைத்தனள். அன்றிரவு சிவாஜி அங்கு வந்து சேர்தலும், சுவாமிகள் கர்மம், தர்மம் இரண்டையும் தெளிவுற விளக்கி, "மெய்யான துறவறம் காஷாயத்திலில்லை; மோனத்திலும் இல்லை. ஜனக மகாராஜன் வீட்டிலிருந்து நல்லரசு நடத்திக்கொண்டே மெய்த்துறவியாக விளங்கினன்; யாக்ஞவல்கியர் முதலிய முனிபுங்கவர் அவனது துறவுகண்டு புகழ்ந்து பேசியுளர். உலகனைத்தும் ஈசன் கோயிலாதலின் உயிர்களுக்கு உறுதி பயக்கும் அரசியலை விடுத்து, ஆரணியத்தில் அமர்ந்துவிடுதல் அழகன்று; ஆண்மையுமன்று. இல்லறத்தில் இருந்துகொண்டே தர்மத்தையும் கர்மத்தையும் செவ்வனே ஆற்றிவரின், அரும்புகழ் பெறலாகும். அம்பரீஷன், ஜனகன், தர்மன் முதலியோர் இராஜ ரிஷிகளாக விளங்கினர். ஆதலின் அரசனுயுள்ளோன் ஆண்டவனிடம் பக்தியும் விசுவாசமும் பூணவிரும்பின், அரசியலைக் கைவிட்டகல அவசியமில்லை," என்றருளினர். சிவாஜி அதுகேட்டதும் சித்தம் தெளிந்து அன்னையுடன் சென்று அரசைப் பெருக்குவதில் முனையலாயினன். அப்பெருமான் சிம்மகோட்டையிலேயே எந்நாளும் தங்கியிருக்க வேண்டுமென்று சிவாஜி விரும்பியும், தேசமெங்கும் தனது போதத்தைப் பரப்புவதே தனது கடமையென அம்மகான் கூறிவிட்டார். அவரிடம் தனக்குள்ள பக்திவிசுவாசத்தைக் காட்டவேண்டி, அவரது மைந்தனுக்கு மூன்று கிராமங்களை மானியமாக வழங்கினன் சிவாஜி. துகாராம் சுவாமியின் சந்ததியார் அக் கிராமங்களிற் கிடைக்கும் ஊதியத்தை இன்றும் துய்த்துக் களித்து வருகின்றனர்.

துகாராம் சுவாமிகளுக்குப் பின், இராமதாஸ் சுவாமி தோன்றினர். மகாராஷ்டிரத்தில் பரமன் பக்தியையும் உயர்வீரத்தையும் ஆன்மஞானத்தையும் போதித்த பெரியவர்களில் அவரும் ஒருவர். அவர் நாட்டிடையே தங்காமல் காட்டிடையே காலங்கழித்து வரலானர். அவர் தவஞ்செய்திருந்த இடம் நாடிச் சென்றன் சிவாஜி. அவன் கண்ணிற்கு இராமதாஸ் அகப்படவில்லை. இராமதாசர் அச்செய்தி உணர்ந்து, "விரிந்த அறிவும் சிறந்த வலியும் படைத்த மன்னவ! ஈசனது இன்னருள் என்றும் நின்னிடம் பொங்குக. சமயம் சமூகம் தேசம் மூன்றையும் மொய்ம்புடன் காக்க, நீ சமர்புரிதல் கண்டு மகிழ்வு எய்துகின்றேன். உனது கீர்த்தியும் வெற்றியும் வளர்ந்தோங்குக. இத்தனை நாள் நான் உனது நாட்டிலிருந்தும் இன்றளவும் நீ வந்து என்னைக் கண்டிலை. அரசியல் அலுவலில் அவகாசம் கிடைக்கவில்லை போலும்!" என்று பொருள்படும் பாவினைப் பாடி அனுப்பினர். அதுகண்டு களித்த சிவாஜி மன்னன், "ஞான குருவே! இதுவரையில் தங்களடி தரிசிக்காத பிழையை மன்னித்தல் வேண்டும். அப் பாக்கியம் பெற இருமுறை முயன்றும் பலிக்கவில்லை. அடியேனைப் புகழ்ந்துரைப்பதை யெல்லாம் ஆசி என்றே கொள்வேன். உடனே தங்களைக் கண்டு தரிசிக்க அவாக் கொண்டுளேன். அநுமதி தருவீர்களாக," என்று பதில் விடுத்தனன். மறுதினம் சிவாஜி தனது தோழருடன் புறப்பட்டு இராமதாஸ் எழுந்தருளியிருந்த சபல நகரம் போயினன். அவர் சிங்கன்வாடிக்குச் சென்றிருப்பதாகக்கேள்வியுற்று அங்குச் செல்லலானன். சிவாஜியை நோக்கி ஆலய அர்ச்சகர், "அரசே! உச்சிப்பொழுதாகிவிட்டது. ஆண்

டவனது பிரசாதம் கொஞ்ச மருந்தி மாலையில் சுவாமி களைக் காணச் செல்லலாம்,'' என்றனர். குருவாரத்திலே குருவைத்தேடி வந்து குருவைக் காணுமல் அன்னமருந்துவ தில்லை என்று சிவாஜி சொல்லி, சிங்கன்வாடி சேர்ந்து அவரைக் கண்டு அஷ்டாங்க தண்டனிட்டனன். இராம தாஸ் அதிசயித்து, “வீர! இப்பொழுதுதான் நினது நிரு பத்தைக் கையில் எடுத்தேன். அதே சமயம் உன்னையும் கண்டேன். இத்தனை நாள்காறும் நீ இங்கு வராத காரணம் என்ன?'' என்று வினவினர். சிவாஜி கைகட்டி வாய் புதைத்து நின்று, “குருநாத! பெரியாரைத் தரிசிக்கத்தக்க பாக்கியம் படைக்க வேண்டுமன்ருே? இன்றுதான் எனக்கு அது கிட்டியது. எளியேனது பிழையனைத்தும் பொறுத்து ஞானதீட்சை தந்தருளல் வேண்டும்,'' என்று கூறி மீண்டும் பாதம் பணிந்தனன். சிவாஜியின் அகத்தழகை முகத்திற்கண்டு களித்த சுவாமிகள் அங்ஙனமே ஞானுப தேசம் செய்தருளினர். உடனே சிவாஜி, “என்னை ஈடேற்ற வந்த ஞானபண்டித! உலக வாழ்க்கையில் உழன்று மிகவும் அலுத்துவிட்டேன்; இனி அமைதியுடன் வாழவே எனது மனம் விழைகின்றது. ஆதலின் சமூகத் தில் சேவைசெய்து காலங்கழிக்க அருள்புரிதல் வேண் டும்,'' என்றனன். சுவாமிகள் அதுகேட்டு, “அப்பனே! இதற்காகவா நீ இங்கு வந்தாய்? எடுத்த கருமம் இனிது நிறைவேற வேண்டாமோ? நாட்டையும் நரரையும் காக் கப் புறப்பட்ட நீ அதனை ஈடேற்ருமல் இறைவனடி சேர இயலாது. இன்னும் நீ உனது ஆற்றல்கொண்டு ஆற்ற வேண்டிய அரிய கருமங்கள் பலவுள. பகவத் கீதையினை நீ அறியாயோ? வீரனது வாழ்வைப் பார்த்தசாரதி

விளக்கிக் கூறியுள்ளான். சுத்த வீர புருஷனாக வாழாமல், துறவு பூண நாட்டங்கொள்ளுதல் நேர்மையன்று,'' எனப் போதித்தார். சிவாஜியும் அதுகேட்டு ஆசானை வணங்கி விடைபெற்றுச் சென்றனன். ஒரு சமயம் சிவாஜி சத்தாரா நகரில் தங்கியிருக்க, இராமதாஸ் தமது சீடர்களுடன் கீர்த்தனம் பாடிக்கொண்டு அந்நகரிலே வீடு வீடாகப் பிக்ஷை எடுத்து வந்தார். சிவாஜியின் அரண்மனை வாயிலிலே அக்கோஷ்டி நின்று கீர்த்தனங்கள் பாடியது. சுவாமிகளின் விஜயங் கேட்ட சிவாஜி விரைந்து சென்று, ஓர் ஓலைச் சுருளை அவரது கமண்டலத்தில் போட்டுக் கைகூப்பிக் காலில் வீழ்ந்து வணங்கினன். இராமதாஸ் ஆச்சரியங்கொண்டு, சீடனொருவன் முகமாக ஓலையின் வாசகங் கேட்டு, "அரசே! நீ எனக்கு நாட்டைத்தும் தந்துவிட்டனை. இனி என் செய்வாய்?'' என்று வினவினார். "குருவே தங்கள் இணையடி பணிந்து நின்று சீடனாய் வாழ்ந்து காலங்கழிப்பேன்,'' என்றனன் சிவாஜி. அதற்கு, "அப்பனே! ஆன்மாக்களின் மனக்கோயிலில் அமர்ந்து அருள்புரிதலே எனது கடமை. நீயோ சுத்த க்ஷத்திரியனாய் அரியணையில் அமர்ந்து, நீதிமுறை தவறாது ஆட்சி புரிதல் வேண்டும்,'' என்று சுவாமிகள் அருளினார். ஆயினும் தந்துவிட்ட தானப்பொருளை மீண்டும் அடைய சிவாஜி விரும்பவில்லை. "அங்ஙனமாயின் எனது பெயரால் அரசியலை நடத்துக!'' என்று இராமதாஸ் கட்டளையிட்டதும், சிவாஜி காவியுடையும் காஷாயக்கொடியுந் தாங்கி, இராமதாஸரின் பிரதிநிதியாக அரசியலை நடத்திவந்தனன். சிவாஜிக்கு இராமதாஸ் இட்ட கட்டளை, ஆண்டுதோறும் சிரவண மாதத்திலே மணலால் கோடி சிவலிங்கம் சமைத்

துப் பூசைபுரிதலும், அச் சமயங்களிலே வேதபாரகரான விப்பிரரை வருவித்து உரிய சம்மானம் வழங்கலும், மகாராஷ்டிர மக்கள் ஒருவரையொருவர் சந்திக்குங் காலையிலே 'ராம் ராம்' என்று சொல்லி வணங்கலுமே ஆகும். இம் மூன்றினையும் தழுவி சிவாஜி ஆயுளளவும் நடந்து வந்தனன். இந்துமதத் துறவிகளைக் கண்டு அவன் பக்தி விசுவாசம் கொண்டது போலவே, இஸ்லாம் மதத் துறவிகளிடமும் அன்பும் ஆதரவும் காட்டி வந்தனன். தண்டெடுத்துச் செல்லுங் காலங்களிலே, நடமாடும் கோயில்களான மக்களைத் துன்புறுத்த அவன் இசையவில்லை; ஒரு மசூதியையேனும் அம்மன்னவன் சீர் குலைத்ததாக எந்தச் சரித்திர ஆசிரியரும் இன்றளவும் சாற்றவில்லை.

சிவாஜி வேந்தனது குணவிசேஷங்கள் எண்ணிறந்தன. அம்மன்னவன், தாய்சொல்லைச் சிறிதும் தட்டி நடவாத தநயன்; அன்னையின் ஆசிபெற்றே வினைபுரியும் விழுமியோன்; தந்தைபால் பெரும் பக்தி விசுவாசம் பூண்ட புதல்வன்; ஷாஜியிடம் அரசை ஒப்படைக்கவே ஆர்வம் கொண்டவன்; மைந்தரிடம் பேரன்பும் பரிவும் பூண்டிருந்த தந்தை; எனினும் சிறுமைகொண்ட சாம்பாஜியைச் சிறைசெய்த பெரியோன்; மனைவியரைப் பேணி மகிழ்வித்து வந்த மகிழ்நன்; உறவினரிடம் உள்ளன்பு பூத்து உதவிய உத்தமன்; ஏழை எளியவரிடம் இரக்கமே காட்டிய இன்னருளாளன்; ஆபத்து வேளையிலும் அறிவு குன்றா ஆண்மகன்; படைமுகத்தில் பராக்கிரமமே புரிந்த போர்வீரன்; பகைவரின் அருந்திறலை அழித்த பெருவிறலோன்; அடைந்தோரை அணைத்துக் காக்கும் அன்புடையோன்; யுத்த தருமத்தில் இம்மியும் பிறழா

திருந்த பெருமான்; வாய்மையே பூஷணமாகத் தரித்திருந்த தூய்மையாளன்; விதியின்றேல் பழிவாங்கிப் பகை முடிக்கும் பெருவீரன்; பிற மாதரைப் பெற்ற தாயெனக் கருதிய பெருந்தகையாளன்.

சிவாஜி சத்திரபதி, தாய் நாட்டின் துயர் தணித்தான்; ஆரிய சமயத்தினைச் சீரிய நிலையில் அமைத்தான்; சிறை செய்யவந்த பகைவரைப் புறங்கண்டான்; டில்லி வல்லரசின் வீறழித்தான்; விஜயபுரி யரசை வணங்கச் செய்தான்; சுகபோக வாழ்வு விடுத்தான்; பரநலமே பெரிதென மதித்தான்; அரச வாழ்வைத் துரும்பெனவே கொண்டான்; இராமதாஸருக்கு அரசனைத்தையும் ஒருங்கே வழங்கினான்; அரிய அவுரங்கசீபையும் பிரமிக்கச் செய்தான்; தன்னந் தனியே நின்று தனியரசு கண்டான். எனினும் அவன் தருக்குக்கொள்ளாது அடக்கமே பூண்டு நின்றான்; சாகும் வரையில் சமர் முனையிலேயே காலங் கழித்தான்; கண் மூடும் வேளையிலும் கடவுளையே கருதி, மனத்துறவு பூண்டு மகிமை பெற்றான்.

இனி, அவன் சாமோபாயத்தில் அதிசமர்த்தன்; பேதோபாயத்தில் மிகப்பெரியன்; தானோபாயத்தில் தலை சிறந்தோன்; தண்டோபாயத்திலே தளர்விலாத் தலைவன்; ஒற்றர் மூலம் உற்ற தறிவோன்; ஒன்னலரின் உள்ளங் கவரும் உயர் சூரன்; தருமநூல் ஆய்ந்தோன்; அமைச்சருடன் ஆய்ந்து முறை வகுத்தோன்; பாவலரைப் போற்றினோன்; வேதியரை விரும்பிக் காத்தோன்; தாய் நாட்டின் நலமே நாடினோன்.

அன்றியும், அவன் காட்சிக்கு எளியன்; மாட்சிக்கு உரியோன்; ஈகையிற் சிறந்தோன்; ஊக்கம் உடையான்;

உற்சாக புருஷன்; தூயன்; விழுமியன்; வென்றியன்; நீதியன்; கீர்த்திமான்; முந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னும் புகழுடம்புடன் விளங்கும் புண்ணியன்!

Kesari Printing Works, Madras.